

# தொண்டைநாட்
# பாடல் பெற்ற
# சிவ தலங்கள்

பாலூர் கண்ணப்ப முதலியார்

Eswari

உ

# தொண்டைநாட்டுப்

# பாடல்பெற்ற சிவதலங்கள்

(இதில் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் விளக்கம், கல்வெட்டு குறிப்புகள், பல ஆராய்ச்சிக் கருத்துகள் உண்டு)

எழுதியவர் :

செந்தமிழ்ச்செல்வர், சைவ சமய சிரோமணி, பேராசிரியர்,
வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், புதுக் கல்லூரி,
சென்னை-14.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1.

1969

முதற் பதிப்பு—1969

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 5

அச்சிட்டோர் :
ரத்னம் கிளை அச்சகம்
65, திருப்பள்ளி தெரு
சென்னை. 1

# ஆசிரியர் முன்னுரை

திருநாவுக்கரசர் தம் அருள் வாக்கில்,

"கால்களால் பயனென்
கறைக்கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களால் பயனென்"

என்று அறிவுறுத்தி இருப்பதை உற்று நோக்கும்போது, இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களைக் கட்டாயமாகச் சென்று வணங்க வேண்டும் என்பது உறுதியாகிற தன்றோ? அங்ஙனம் செல்ல அவாவுடைய அன்பர்களுக்குத் துணைக் கருவியாக ஒரு நூல் இருக்கவேண்டும் என்னும் கருத்துக் கொண்டே தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவ தலங்கள் என்னும் பெயரில் இது வெளிவருவதாயிற்று.

தொண்டை நாட்டில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர்களால் பாடப் பெற்ற தலங்கள் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் முதல், திருவிரும்பை மாகாளம் கோவில் ஈருக முப்பத்திரண்டாகும். தொண்டை நாட்டில் முப்பத்திரண்டு தலங்கள்தாம் உள்ளனவோ என்று எண்ணவேண்டா. நூற்றுக் கணக்கான திருக்கோயில்கள் உண்டு. ஆனால், பாடல்பெற்ற திருக்கோயில்கட்குத் தனிப் பெருமை இருத்தலாலும், மக்களுக்கும் அத் திருக்கோயில்கட்கே சென்று வணங்கவேண்டு மென்னும் அவா எழுவதனாலும் அம் முப்பத்திரண்டு திருக்கோயில்களைப் பற்றிய வரலாறுகளும், அரிய குறிப்புகளுமே இந் நூலில் எழுதப்பட்டுள்ளன. இறைவரின் திருவருள் கூட்டி வைக்குமேல் ஏனைய நாட்டுப் பாடல் பெற்ற தல வரலாறுகளும் இம் முறையில் வெளிவரக்கூடும்.

இங்கு எடுத்து எழுதப்பட்ட தலங்கள் முழுமுதற் பரம்பொருளாம் முக்கண் மூர்த்தியின் தலங்களைப் பற்றியே என்றாலும், முப்பத்திரண்டு தலங்களுள் ஒரு தலத்தைப்பற்றிய வரலாற்றை எழுதும்போது, அத் தலத்திற்கு அண்மையில் திருமால் தலமோ, முருகன் கோயிலோ இருக்குமானால் அத் தலங்களைப் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் சிறிது எழுதப் பட்டுள்ளன

முருகப் பெருமான் தனிச் சிறப்புடன் எழுந்தருளியுள்ள தலங்களைப்பற்றி எழுதிய தோடன்றி, அவ்வத் தலத்தில் அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழும், தொண்டை நாட்டுச் சில தலங்களில் எழுந்தருளியுள்ள அப் பெருமான் மீது பாடி இருக்கும் திருப்புகழும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலில் வெறும் தலங்களைப் பற்றிய வரலாறுகளும், குறிப்புகளும் மட்டும் எழுதப் படவில்லை. "இத்தலங்களை அடைதற்குரிய வழி வகைகள் என்ன? இத்தலத்தின் வரலாறு யாது? இத் தலங்களைப் பற்றி யார் யார் பாடியுள்ளனர்?" என்பனபோன்ற பல அரிய வினாக்களுக்குரிய விடைகள் எழுதப்பட்டுள்ளன அவ்வப்பதிகங்களில் இருந்து சில பாடல்களும் முழுவடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய அருஞ்சொற் பொருளும் தரப்பட்டுள்ளது. அவ்வத் தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவரை நால்வரின் பாடல்களைக் கொண்டே துதிப்பதற்கு இவை பெருந் துணையாக அமையும் அல்லவோ!

இந்த அமைப்புகளுடன் இன்றி ஒவ்வொரு தலத்தின் மீது பாடப்பட்ட பதிகங்கள் எத்தனை உண்டோ, அத்தனை பதிகங்களில் அமைந்த அரும்பெரும் கருத்துகளும் எடுத்து எழுதப்பட்டுள்ளன இங்ஙனமெல்லாம் எழுதப்பட்டுள்ளதன் மூலம், அவ்வத் தலங்களின் இயற்கை அழகு, வளன், இலக்கியநயம், இறைவன் திருப்பெயர், இறைவியின் திருப்பெயர், அவ்வருளாளர்கள் மக்களுக்குச் செய்துள்ள அரிய உபதேசங்கள், தம்தம் நெஞ்சிற்கு அறிவுறுத்திய அறவுரைகள், அகப் பொருள்சுவை தழுவிய பாடல்கள் முதலானவற்றை நன்கு உணர்ந்து கொள்ளலாம். மேலும், நான்கு சைவ சமயாசாரியர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் போன்றவைகளும் அகச் சான்றுடன் இதில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இன்னோரன்ன அரும்பெரும் அமைப்புகளுடன் வெளி வரும் இந்நூலை பொதுமக்களும், சிறப்பாகச் சைவ அன்பர்களும் வாங்கிப்படித்துப் பயன்படுத்தி அடியேனை ஏனைய தலங்களைப் பற்றியும் எழுத ஆக்கமும், ஊக்கமும் அளிக்க அவர்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இதில் எடுத்து எழுதப்பட்ட தலங்களின் கல்வெட்டுகளால் நாம் என்னென்ன அறிகின்றோம் என்று

குறிப்பிட்டிருப்பதும், திருஞானசம்பந்தர் காலத்தில், சிவபெருமான் கோவில்களில் செந்தமிழ் மொழியிலும், வடமொழியிலும் அர்ச்சனைகள் நடைபெற்றன என்று எழுதப்பட்டிருப்பதும் இந்த நூலின் சிறப்பியல்புகளாகக் குறிப்பிடத்தக்கவை என்று கூறுவது மிகை ஆகாது.

இந்நூலுக்குத் திருவுளம் உவந்து பாராட்டுரை எழுதியருளிய காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவடிகளுக்கு என் பணிவன்போடு கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் எழுதிச் சிலவாண்டுகள் ஆகியும் இதனை வெளியிடும் வாய்ப்புப் பெறாது இருந்த நிலையில், அருள் உளமும், சைவசமயப் பற்றும் கொண்ட உயர் சைவத் திருவாளர் கே. இ. அருணசலம், எம் ஏ, பி. காம், (மானேஜர் தாராப்பூர் லோகநாத முதலியார் கம்பெனி) அவர்களை அண்மி இந்நூலை வெளியிடுமாறு வேண்டிக் கொண்ட போது, அவர்களும், அவர்களின் உறவினர்களான திருமதி கே. சரஸ்வதி, லோகநாதன், திரு. C. L. ராஜசேகரன், திரு. C. L. ரவிசந்திரன், திருமதி K. ராஜேஸ்வரி அருணசலம் ஆகியோரும் தங்கள் பொருள் செலவில் இதனை வெளியிட முன் வந்தமைக்கு, யான் என்ன கைம்மாறு செய்ய இயலும்? அவர்களுக்கெல்லாம் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதைத் தவிர்த்து வேறொன்றும் அறியேன். அவர்கள் யாவரும் நீடூழி வாழத் திருவருள் புரிய முக்கண் மூர்த்தியின் முளரித் தாள்களைப் போற்றுகின்றேன்.

இந்நூலையும் ஏனைய நூல்களையும் எழுத நல் அறிவையும், ஆற்றலையும் அளித்துக் கொண்டே இருக்கும் யான் வழிபடும் முழுமுதற் பரம்பொருளாம் அம்மை அப்பருடைய பொன்னார் திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

"அம்மை அப்பர் அகம்"
43, விசயவிக்னேசுவரர்
கோவில் தெரு,
சூளை, சென்னை-7.
23—1—'69.

இங்ஙனம்,

**பாலூர் கண்ணப்ப முதலியார்.**

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

காஞ்சி தொண்டைமண்டலம் ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளின்

## பாராட்டுரை

திரு. பேராசிரியர் புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L., அவர்கள் சைவத்தில் அழுந்திய உள்ளத்தவர். வழுக்கி வீழினும் சிவபிரான் திருப்பெயர் அல்லாமல் மற்றொன்றும் அறியாதவர். நீற்றினை நிறையப்பூசி, நித்தலும் நியமஞ் செய்துவக்கும் நெறிவழாதவர். சமய நூல்களிலும் இலக்கண இலக்கிய நூல்களிலும் புலமை மிக்கவர். சொல்லாற்றலும், எழுத்தாற்றலும் வாய்க்கப் பெற்றவர். இந்த உண்மைகளை இவருடைய சொற்பொழிவுகளைச் செவிமடுத்தவர்களும், இவருடைய நூல்களைப் படித்தவர்களும் நன்கு அறிவர். இவரது ஆராய்ச்சிப் புலமையினை, இவர் எழுதியுள்ள பொய்யடிமை இல்லாத புலவர் யார்? என்னும் நூலும், உரை எழுதும் சிறப்பினைச் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பெருவிளக்க உரை (800 பக்கம் கொண்டது) தமிழ் மந்திரம் உரை, ஈங்கோய் மலை எழுபது உரை, திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி உரை, திருவருட்பாவில் சில பகுதிகளுக்கு உரை ஆகியவை விளக்கிக்கொண்டிருக்கின்றன. இவருடைய இலக்கிய இலக்கணப் புலமைக்குத் தமிழ்நூல் வரலாறு, வள்ளுவர் கண்ட நாடு முதலான நூல்களே போதுமான சான்றாகும். இவர் பல்வேறு மலர்களுக்கு எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் கற்றவர்களால் நன்கு பாராட்டப்பட்டிருக்கின்றன. இவைகளே அன்றி இவர் இளைஞர் முதல் முதியோர்வரை படித்தற்கான பல்வேறு துறைகளிலும் பல நூல்கள் எழுதியவர். எவரையும், எதையும் வெறுத பொதுமைப் பண்பு வாய்ந்தவர். சைவத்திற்கும், தமிழுக்கும் வாழ்நாள் முழுதும் உழைத்து வருபவருமாகிய இப் பேரறிஞர் எழுதியுள்ள தொண்டை நாட்டுப் பாடல்பெற்ற சிவதலங்கள் என்னும் நூலைப் படித்துப்பார்த்தோம். இஃது ஒரு தனிச் சிறப்புடைய நூலே ஆகும்.

தல வரலாறுகளைப் பற்றிய வரலாற்று நூல்கள் பல வெளி வந்துள்ளன. அவற்றுள் அவ்வத் தலங்களைப் பற்றிய குறிப்புகளும், அத்தலங்களில் சமயாசாரியர்கள் பாடிய பாடல்

களில் ஒன்றிரண்டு மட்டும் இணைக்கப்பட்டிருக்கும். ஆனால் திரு. முதலியார் எழுதிய நூலில் ஒவ்வொரு தலங்களைப்பற்றிய அரிய குறிப்புகள் பலவும், கல்வெட்டுச் செய்திகளும் எழுதப் பட்டுள்ளன. இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள சிவதலங்களுக்கு அண்மையில், வைணவத் தலங்களும், முருகப்பெருமான் தலங்களும் இருப்பின், அவற்றைப்பற்றிய சிறு குறிப்புகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் தனிச்சிறப்பு அவ்வத் தலங்களில் பாடப் பட்டுள்ள பதிகம் எந்த யாப்பில் அடங்கவல்லது, அவ்வப் பதிகப் பண் இக்கால இராகத்திற்கு எந்த அளவுக்கு ஒத்து வருகின்றது, என்பன நன்கு எடுத்து விளக்கப்பட்டிருப்பதா கும். அவற்றிற்கு எடுத்துக் காட்டாக அப்பர், திருக்கச்சி ஏகம் பனைப் பற்றிப் பாடியுள்ள "கரவாடும்வன் நெஞ்சர்" என்று தொடங்கும் பதிகத்தைத் தரவு கொச்சகம் என்றும், இப் பதிகப் பண்ணாகிய காந்தாரத்தைச் சங்கராபரண ஜன்ய ராக மாகிய நவரோசு என்று ஒருவாறு கூறலாம்" என்றும் எழுதி இருப்பதைக் காட்டலாம். (பக்கம் 27)

பெரிய காஞ்சிபுரம் என்பது தொன்று தொட்டப் பெயரே என்பதை அப்பர் வாக்காகிய "பெருங்காஞ்சி என்னும் எம் பிஞ்ஞகனே" (பக். 32) என்பதை எடுத்துக்காட்டி நிறுவி யுள்ளார்.

மூவர் பாடல்கள் இலக்கியச் சுவையில் ஈடும் எடுப்பும் அற்ற நிலையில் விளங்கவல்லவை என்பதைச் சுந்தரரின் திருஓணகாந்தன்தளிப் பதிகத்தின் வாயிலாகவும், அப்பரது திருஒற்றியூர்ப் பதிகத்தின் வழியாகவும் எடுத்துக்காட்டி யுள்ளதை இந்நூலில் படித்து இன்புறலாம்.

ஒவ்வொரு தலத்துப் பதிகங்களில் பொதிந்துள்ள பொருள் செறிவுகளையெல்லாம் பகுத்துப் பகுத்துக் காட்டி விளக்கிச் செல்லும் போக்கையும் இயற்கை வளன், இறைவன் தன் இயல்பு, மக்கள் இயல்பு, இலக்கியச்சுவை, ஆகிய இன்னோரன்னவற்றையும் இந்நூல் முழுமையும் காணலாம். இந்தப் போக்கிலேயே ஏனைய நாட்டுப் பாடல்பெற்ற தலங் களையும் பாலூர் முதலியார் அவர்களே எழுதி வெளியிட அன்னார்க்கு அறிவும் ஆற்றலும் உடல் நலனும் பொருள் வளனும் உள்ளக்கிளர்ச்சியும் ஆயுள் நீடிப்பும் தந்தருள அம்பலவாணரின் திருவடிகளைப் போற்றுகின்றோம்.

# பொருள் அடக்கம்


| | தலப்பெயர்கள் : | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருக்கச்சி ஏகம்பம் | ... | 1 |
| 2. | திருக்கச்சி மேற்றளி | ... | 47 |
| 3. | திருஓணகாந்தன்தளி | ... | 53 |
| 4. | திருக்கச்சி அனேகதங்காவதம் | ... | 60 |
| 5. | திருக்கச்சி நெறிக்காரைக்காடு | ... | 64 |
| 6. | திருக்குறங்கணில்முட்டம் | ... | 67 |
| 7. | திருமாகறல் | ... | 70 |
| 8. | திருஓத்தூர் | ... | 76 |
| 9. | திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | ... | 82 |
| 10. | திருவல்லம் | ... | 86 |
| 11. | திருமால்பேறு | ... | 90 |
| 12. | திருவூறல் | ... | 103 |
| 13. | திருஇலம்பயங்கோட்டூர் | ... | 106 |
| 14. | திருவிற்கோலம் | ... | 112 |
| 15. | திருஆலங்காடு | ... | 114 |
| 16. | திருப்பாசூர் | ... | 140 |
| 17. | திருவெண்பாக்கம் | ... | 148 |
| 18. | திருக்கள்ளில் | ... | 156 |
| 19. | திருக்காளத்தி | ... | 159 |
| 20. | திருஒற்றியூர் | ... | 191 |
| 21. | திருவலிதாயம் | ... | 228 |
| 22. | திருமுல்லைவாயில் (வட) | ... | 234 |
| 23. | திருவேற்காடு | ... | 243 |
| 24. | திருமயிலாப்பூர் | ... | 250 |
| 25. | திருவான்மியூர் | ... | 264 |
| 26. | திருக்கச்சூர் ஆலக்கோயில் | ... | 276 |
| 27. | திருஇடைச்சுரம் | ... | 284 |
| 28. | திருக்கழுக்குன்றம் | ... | 290 |
| 29. | திருஅச்சிறுபாக்கம் | ... | 306 |
| 30. | திருவக்கரை | ... | 311 |
| 31. | திருஅரசிலி | ... | 316 |
| 32. | திருஇரும்பைமாகாளம் | ... | 319 |

திருச்சிற்றம்பலம்

# தொண்டைநாட்டுப் பாடல்பெற்ற சிவதலங்கள்

## தோற்றுவாய்

தமிழகம் சேர சோழ பாண்டிய நாடுகளைக் கொண்ட முப் பிரிவினை யுடையதாயினும், நான்காவது பிரிவாகிய தொண்டைநாடு என்னும் பகுப்பினையும் கொண்டது. இதனை ஔவையார் வாக்காகிய

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்நாடு முத்துடைத்துத் தெள்நீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து

என்னும் பாடல் நான்கு பிரிவுகளைக் கூறுதல் காண்க. இத்தகைய பிரிவுகளுள் ஒன்றான தொண்டை நாட்டில் பாடல் பெற்ற திருக்கோயில்கள் முப்பத்திரண்டு. அவற்றை இனி ஒன்றன்பின் ஒன்றாக விளக்கமுற அறிவோமாக.

ஈண்டுப் பாடல்பெற்ற திருக்கோயில்கள் என்பதன் குறிப்பு, சைவசமயாசாரியர்கள் நால்வர்களாலேனும் (அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர்) அல்லது இந் நால்வருள், ஒருவராலேனும் பாடப்பட்டு இருக்கும் பெருமைசான்ற தலங்கள் என்பதாகும். இனி ஒவ்வொரு தலங்களைப் பற்றிய

வேழம் – யானை. பூழியர்கோன் - பாண்டியன். சான்றோர் - அறிஞர். மலைநாடு - சேரநாடு.

சிறப்புகளையும் அவ்வத் தலங்களை அடையும் வழி வகைகளைப் பற்றியும் தனித்தனியே ஆய்வோமாக.

## 1. திருக்கச்சி ஏகம்பம்

ஏகம்பம் என்பது கோயிலின் பெயர். இக் கோயில் காஞ்சியம் பதியில் உள்ளது. (அதாவது காஞ்சிபுரம் ரயில் அடியிலிருந்து ஒரு கல் தொலைவில் உளது) ஆகவே, இது கச்சி ஏகம்பம் எனப்பட்டது. திரு அடைமொழி யாகும். கம்பம் என்பது நடுக்கம் என்னும் பொருளைத் தரும். இறைவியார் கயிலையில் இறைவரோடு வீற்றிருந்த போது, விளையாட்டாக இறைவரின் கண்களை மூடினர். எனவே உலகமே இருண்டது. இந்நிலையில் உலகுயிர்கள் படாதபாடு பட்டன. அதனால் இறைவியார்க்குப் பழிச்சொல் வந்துற்றது. அந்தப் பழிச்சொல்தீர, இறைவர் காஞ்சியம்பதிக்குச் சென்று தம்மைப் பூசிக்குமாறு கட்டளை பிறப்பித்தனர். அக் கட்டளைப்படி இறைவியார் காஞ்சியம்பதிக்கு எழுந்தருளி, இறைவரிடம் இருநாழி நெல் பெற்று முப்பத்திரண்டு அறங்களைச் செய்து கொண்டும், தவத்தை மேற்கொண்டும் இறைவரைப் பூசிக்கும் போது, அம்மையாரது உண்மை அன்பை அறிய இறைவர், தமது கங்கை ஆற்றைக் கம்பா நதியாக வருமாறும், தம்மை அடித்துக் கொண்டு போமாறும் பணிக்க, அவ்வாறே கங்கை, ஆறுக வருவதைக் கண்டு உமையாள் (காமாட்சி அம்மையார்,) கம்பித்து(நடுங்கி) இறைவரைத் தமது வளையல் தழும்பும், முலைத் தழும்பும் பதியுமாறு தழுவிக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின்போது இறைவியார் கம்பித்ததனால் இத்தலம் கம்பம் எனப்பட்டது.

இத்தலத்தின் இறைவர் ஏகாம்பரர் என்னும் பெயர் உடையவர். இதற்குக் காரணம் ஒற்றை மாமரத் தடியில் இங்குள்ள இறைவர் வீற்றிருப்

பதனல் என்க. ஏகாம்ரம் என்பதற்கு ஒற்றை மாமரம் என்பது பொருள். இறைவர் ஒற்றை மாமரத்தின் அடியில் எழுந்தருளி இருப்பதை இன்றும் கோயிலுக்குள் கண்டு களித்து இன்புறலாம்.

இம்மரத்தின் அருகில் ஏகாம்பரநாதரின் உற்சவ மூர்த்தியையும் (வீதிஉலா வரும் மூர்த்தி) கண்டு மகிழலாம். இங்கு இரண்டு நிலைக் கண்ணாடிகள் உற்சவ மூர்த்திக்கு வலப் பக்கமும் இடப் பக்கமும் வைக்கப் பட்டுள்ளன. உற்சவ மூர்த்திக்குக் கற்பூர ஒளி காட்டப்படும்போது, இரு பக்கத்துக் கண்ணாடியைப் பார்த்தால் பல தீப ஆராதனை காட்டுவதுபோல் காட்சிதரும். இதனை ஒவ்வொருவரும் பார்த்துக் களித்தல் வேண்டும். மாமரத்திற்கு மற்றொரு பக்கத்தில் ஏகாம்பர நாதரின் தேவியாரான ஏலவார்குழலி அம்மையாரின் உற்சவத் திருஉருவம் இருப்பதையும் காணலாம். ஏகாம்பர நாதர் கோவிலுக்குள் வேறு மூலட்டான அம்மையார் திருவுருவம் கிடையாது. ஏலவார் குழலியின் உற்சவ மூர்த்தமே மூலட்டான மூர்த்தமாகக் கொண்டு வணங்க வேண்டும். காஞ்சிபுரத்தில் எத்தனையோ சிவாலயங்கள் உண்டு. அவை அனைத்திலும் அம்மன் சந்நிதி இருக்காது. அனைத்திற்கும் அம்மன் சந்நிதி, ஊரில் தனித்த கோவிலாக விளங்கும் காமாட்சி அம்மையார் திருக்கோயில் ஒன்றே ஆகும்.

முத்திதரும் நகரங்கள் ஏழு என்பர். அவை மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, பூரி, துவாரகை என்பன. ஈண்டுக் குறிப்பிடப்பட்ட ஏழு தலங்களுள் ஆறு தலங்கள் வடநாட்டுத் தலங்கள். அவற்றுள் ஏழாவது தலமாக நமது தென் நாட்டிலுள்ள காஞ்சி இணைக்கப்பட் டுள்ளது. மேலும், ஏழனுள் இதுவே பெருஞ் சிறப்புடையது என்னும் கருத்தில் "முத்திதரும் நகர்

ஏழுள் முக்கியமாம் காஞ்சி'' என்று கூறப்பட்டு வருதலையும் காண்க. வடமொழியிலும் இந்நகரின் சிறப்பை "நகரேஷு காஞ்சி" என்று கூறப்படுகிறது.

காஞ்சிபுரம் பஞ்சபூத தலங்களுள் பிருதிவி தலமாகும். பிருதிவி என்பது மண். இன்றும் ஏகாம்பர நாதர், கருவறையில் (மூலட்டானத்தில்) புற்று வடிவாக இருக்கின்றனர். இத்தலம் மிகப் பெரியது. இங்குள்ள மூலட்டானப் பெருமானைத் திங்கட் கிழமை தோறும் கண்டு களிப்பது மிக்க சிறப்புடையதாகும். அதுபோது மூலட்டானப் பெருமான், இறைவியார் தம்மைத் தழுவும் கோலத்தில் காட்சி அளிப்பர்.

ஏகாம்பரநாதரைப் பாலூர் வாசிகள் சித்திரை மாதம் தேய்பிறை பஞ்சமி திதி அன்று வரவழைப்பதுண்டு. இவ்வாறு ஏகாம்பரநாதரும் காமாட்சி அம்மையாரும் தடைஇன்றிப் பாலூருக்கு வருவதற்கு நிரந்தரமான பண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏகாம்பரநாதர் காஞ்சியினின்றும் இரவு புறப்பட்டுப் பாலூர் கிராமத்தைச் சுற்றி வந்தபின், பாலாற்றங் கரையில் அமைந்துள்ள மண்டபத்தில் எழுந்தருளுவர். அங்கு திருமுழுக்கு, ஒப்பனை, ஒளி வழிபாடு, (அபிடேக அலங்கார ஆராதனைகள்) முடிந்த பின், மாலை நாதசுர இசை அரங்கம் நடந்த பிறகு, இரவு எட்டு ஒன்பது மணிக்கு மண்டபத்தை விட்டுக் கிளம்பி ஆற்று மணல் வெளிக்கு ஏகாம்பர நாதர் செல்வர். ஆற்றில் சதுரமாக வெட்டி நீர் சுரக்கச் செய்து வைத்திருப்பர். அந் நீரில் இறைவர் ஒன்பது சுற்று வந்து இடையில் உள்ள மணல் திடலில் தங்கி விடியற்காலம் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளுவர். இவ்விழா பாலூர் திருவூறல் விழா எனப்படும். விழா சிறப்பாக நடைபெறும். மக்கள் கூட்டம் பெருவாரியாகத் திரளும். இத்

தகைய திருவிழா திங்கட்கிழமையில் அமையு மாறல், ஏகாம்பரநாதர் எக்காரணங் கொண்டும் காஞ்சியிலிருந்து புறப்படமாட்டார். ஞாயிற்றுக் கிழமை வந்து காட்சி அளித்துச் செல்வர். அவர் திங்கள் அன்று காஞ்சியிலிருந்து புறப்படாமைக்குக் காரணம், தம்மைத் திங்கட்கிழமை வந்து வழிபடு பவர்கள் ஏமாறுமல் இருப்பதற்கு என்க.

காஞ்சி ஏகாம்பரநாதர், கோவிலுக்குள் பல இலிங்கங்கள் உள்ளன. அவற்றுள் ஓர் இலிங்கம் மிகப் பெரியது. அவ்விலங்கத்தில் ஆயிரத்தெட்டுச் சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. இதனையும் கண்டு களித்தல் வேண்டும். காஞ்சி ஏலவார் குழலி அம்மையின் திருக்கோயிலிற்கு அடுத்தாற்போல், அதாவது மாமரத்திற்குப் பக்கத்தே முருகனும் திரு மூர்த்தி காட்சி அளிப்பர். இதனையே கந்த புராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் "காஞ்சி மாவடிவைகும் செவ்வேள் மலரடி போற்றி" என்று போற்றி வணங்கி யுள்ளனர்.

ஏகாம்பரநாதர் கோவில் கோபுரம் மிகப் பெரியது அதன் மேல் உச்சிக்குச் சென்றால் சென்னைக் கலங்கரை விளக்கையும் (Light House) காணலாம். கோவிலின் நான்கு பக்கங்களிலும் கோபு ரங்கள் உண்டு. தென்திசை கோபுரம் போல ஏனையவை பெரியன அல்ல. மதிலும் பெரியது. கோபுர வாயிலின் இருபக்கங்களிலும் பெரிய வடிவில் கணபதியும், முருகரும் எழுந்தருளி இருப்பதையும் கண்டு வணங்கலாம். கோவிலுக்குப் போகிற வழியில் மண்டபங்கள் உள்ளன. கோயிலின் பெரிய கோபுர வாயிலில் நுழைந்ததும் இனிமையான காற்று வீசுவதை நன்கு உணர்ந்து, வெயிலில் வந்த இளைப்பைப் போக்கிக் கொள்ளலாம். ஏனைய இடங் களில் காற்று இல்லாதிருப்பினும், இங்கு நிச்சயமாகக்

காற்றைப் பெற்று இன்புறலாம். இதன் அருமையினைக் காளமேகப் புலவர்,

"அப்பா குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குழிநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியில் தவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கும் இனிது"

என்று புகழ்ந்து கூறுகின்றனர். காஞ்சியம்பதியில் அமைந்துள்ள ஏனைய சிறப்புகளையும் இப்பாடலில் குறிப்பிட்டிருப்பதையும் உற்று நோக்குக.

கோபுர வாயிலைக் கடந்து சென்றதும், இடக்கைப் பக்கம் ஒரு குளம் இருக்கக் காணலாம். அதனையே கம்பாநதி என்பர். அதற்குச் சிறிது தூரத்தில் பங்குனி உத்திரத்தில் ஏகாம்பரநாதர்க்கு நடக்கும் திருக்கல்யாண மண்டப மெத்தையைப் பார்க்கலாம். இந்தக் கல்யாண மண்டபத்திற்குப் பின்றல் ஆயிரக்கால் மண்டபம் பழுதுபட்ட நிலையில் இருப்பதையும் நோக்கலாம்.

இம் மண்டபத்தில் விகட சக்கர விநாயகர் கோவில் உளது, திருமால் தட்ச யாகத்தில் வீரபத்திரக் கடவுளின் வீராவேசத்தைக் கண்டு ஓடியபோது, தம் சக்கரத்தை மறந்து விட்டுச் சென்றார். அதனை வீரபத்திரர் பூண்டிருந்த தலை ஒன்று விழுங்கிவிட்டது. அதனைப் பெற்றுத் திருமாலுக்குத் தர, திருமாலின் சேனாதிபதியான விடுவசேனர் காஞ்சியை அடைந்து, சிவலிங்கத் தாபனம் செய்து பூசிக்க, வீரபத்திரர் தோன்றினர். அவரிடம் விடுவசேனர் தம் கருத்தைத் தெரிவிக்க அவர், "அஃது என்னிடம் இல்லை. அதனை என் தலை மாலையில் உள்ள ஒரு தலை விழுங்கிவிட்டது. அதனை எவ்வாறேனும் பெற்றுக்கொள்" என்று கூற, விடுவசேனர்

கோணங்கிக் கூத்து ஆடினுர். (அதாவது காலிரண்டையும், கை இரண்டையும் வளைத்து, வாயையும் கண்களையும் நெரித்து அசைத்து, பற்கள் வெளித் தோன்ற ஆடும் விகடக் கூத்து) இக்கூத்தைக் கண்ட சக்கரத்தை விழுங்கிய தலை சிரித்ததும் சக்கரம் வெளியில் வந்து விழுந்தது. அதனை விநாயகர் விழுங்கி விட்டனர். மீண்டும் விடுவசேனர் கோணக் கூத்து ஆடி விநாயகரைச் சிரிக்கவைத்த போது, அச் சக்கரம், வயிற்றிலிருந்து வாய் வழியே வந்து விழ, அதனை எடுத்துக் கொண்டு சென்று திருமாலுக்கு அளித்தனர். அவ்வாறு விகடக் கூத்தைக் கண்டு சக்கரத்தைக் கொடுத்ததனுல் விநாயகர் விகடச்சக்கர விநாயகர் எனப்பட்டார்.

இந்த உண்மையினைக் காஞ்சிப் புராணம்,

"ஏக்கறவான் அவன் இயற்றும் விகடநடம்
நெடும்போதெம் பெருமான் நோக்கி
மாக்கருணை சுரந்தருளி ஆழிஅவன்
தனக்களித்தான் வரத்தால் மிக்கீர்
போக்கறும்இக் காரணத்தால் அன்றுமுதல்
காஞ்சியின்அப் புழைக்கைத் தேவை
ஊக்கமுறும் திறல்விகட சக்கர
விநாயகன் என் றுலகம் கூறும்"

என்று கூறுகிறது. இவரையே காஞ்சிப்புராண ஆசிரியர் கச்சியப்பசிவாசாரியர் தம் நூலுக்குக் காப்புக் கடவுளாகக் கொண்டு "விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்" என்று பாடி வணங்கியுள்ளனர்.

---

ஏக்கறவான் - ஆசையால். மா - பெரிய. ஆழி - சக்கரம். போக்கு - குற்றம். புழை - சந்து. புழைக்கைத்தே - விநாயகர். திறல் - வன்மை.

ஏகாம்பர நாதருக்கு நடக்கும் பங்குனி உத்திரத் திருமணத்தில் பல ஏழைகள் கல்யாண மண்டபத்திற்கு எதிரே தம்தம் திருமணத்தை முடித்துக் கொள்வர்.

கோவிலின் உள்புற மதிலைக் கடந்து சென்றதும் ஒரு குளம் காணப்படும். இது நீராழி மண்டபத்துடன் திகழ்கிறது. இது சிவகங்கை எனப்படும். சுவாமிக்கு மயானேஸ்வரர் என்பதும் பெயர். இவரைப் பண்டாசூரன் பூசிக்க இயற்றிய யாக குண்டமே இதுபோது இங்குச் சிவகங்கைக் குளமாக உளது என்பர்.

கோவில் கொடிமரத்திற்கு அருகே ஒரு சிறு கோவில் உளது. அது திருக்கச்சிமயானம் எனப்படும். அதுபிரளய காலத்தில் (உலக முடிவில்) தேவர்களைச் சமிதை (சிறு சுள்ளி) யாகக் கொண்டு இறைவர் யாகம் செய்த தலமாகும். இது வைப்புத்தலம்.

காஞ்சிபுர ஏகாம்பரநாதர் கோவிலுக்குள் திருமால் உருவம் உளது. இஃது ஒரு சிறு கோவிலாக அமைந்துளது. இதனை வைணவர்கள் நிலாத் திங்கள் துண்டம் என்பர். இத் திருமாலின் பெயர் நிலாத் திங்கள் துண்டத்தான் என்றும், பிராட்டியார் திருப்பெயர் நேர் ஒருவர் இல்லா வல்லி என்றும் கூறப் பெறும். மேற்குப் பார்த்த திருமேனி நின்ற கோலத்தில் பெருமாள் காட்சி அளிக்கின்றனர். இப் பெருமானைத் திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளனர்.

*நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய்*
*நிலாத்திங்கள் துண்டத்தாய், நிறைந்தகச்சி*
*ஊரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்*
*உள்ளுவார் உள்ளத்தாய் உலகம் ஏத்தும்*

---

வரை-மலை. உள்ளுவார்-நினைவார். ஏத்தும்-போற்றும். நீரகம், ஊரகம், வெஃகா என்பன திருமால் கோவில்கள்.

காரகத்தாய் கார்வானத் துள்ளாய் கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் பேராதுஎன் நெஞ்சின் உள்ளாய்
பெருமான்உன் திருவடியே பேணினேனே.

—திருமங்கை ஆழ்வார்.

கச்சியம்பதியில் சங்கராசாரிய மடம் ஒன்று இருக்கிறது. இம்மடம் கங்கைகொண்டான் மண்டபத்தின் அருகில் உளது. கங்கை கொண்டான் மண்டபத்தில்தான் சின்ன காஞ்சிபுரத்தில் உள்ள வரதராசப்பெருமான் தம் பெருவிழாவின்போது வந்து தங்குவர். இதனைக் கங்கணு மண்டபம் என்பர்.

காஞ்சி ஏகாம்பரநாதர் பெருவிழா பங்குனியில் வெகு சிறப்பாக நடக்கும். இவ்விழாவில் கண்டு களிக்கவேண்டிய திருவிழாக் காட்சிகள் அதிகார நந்தி விழா, இரடபவாகன விழா, அறுபத்துமூவர் விழா, இராவணேஸ்வரன் வாகன விழா, வெள்ளிரத விழா, மாவடிசேவை விழா என்பன.

இவ்விழாக்களில் ஒரு நாள் ஏகாம்பரநாதர் தம் குடும்பத்துடன் சின்ன காஞ்சிபுரம் (வரதராசப் பெருமாள் திருக்கோயில் உள்ள இடம்) செல்வர். சென்று ஒரு மண்டபத்தில் தங்குவர். இரவு ஏழு, எட்டு மணிக்குமேல் விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் வரதராசர் கோவிலுக்குச் செல்வர். அதுபோது வரதராசப் பெருமாள் கோவில் அர்ச்சகர் தீபாராதனை மரியாதை செய்வர். பூசித்த பொருள்களை அக்கோவிலின் குளத்தில் விட்டு விடுவர் என்பர். இவ்வாறு செய்வதற்குக் காரணம், சைவத் தெய்வங்கட்குப் பயன் படுத்தப்

---

கார் - மேகம். காமரு - விரும்பப்படும். மன்னும் நிலைத்திருக்கும். பூ - அழகிய. ஊரகம், கார்வானம் என்பன திருமால் கோவில்கள்.

பட்டதை வைணவர்கள் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக என்பர்.

வரதராசப் பெருமான் தம் வைகாசி உற்சவத்தில் ஆறும் நாளும், எட்டாம் நாளும் யானை மீதும், குதிரை மீதும் புறப்பட்டு, ஏகாம்பரநாதர், கோவிலின் முன்பு வந்து யானையின் பின் பக்கத்தையும், குதிரையின் பின் பக்கத்தையும் காட்டிக் காட்டி முன்னும் பின்னும் போய் வருவர். இதனை ஏசல் விழா என்பர். ஏகாம்பரநாதருக்குத் திருமால் தமது தங்கையான பார்வதியை மணம் செய்து கொடுத்துள்ளார். அதனால் ஏகாம்பரநாதர் வரதருக்கு மைத்துனர் ஆயினர். அந்த மைத்துனருக்கு ஏசல் காட்டுவது போல இந்த நிகழ்ச்சி நடக்கிறது. இந்த நிகழ்ச்சியின் போது ஏகாம்பரநாதர் கோயில் குருக்கள் வரதருக்குத் தீபாராதனை முதலான உபசாரங்களைச் செய்வர். அப்படிச் செய்தவற்றை அவர்கள் பயன் படுத்துவர்.

காமாட்சியம்மையாரின் திருக்கல்யாணத்திற்குப் பிறகு கோ தரிசனம் (பசுக் காட்சி) நடைபெறும். அதனையும் கண்டு களிக்கலாம். பங்குனி உற்சவம் (திருவிழா) முடிந்த பின்பு, அவ் விழாவில் அர்ச்சகராய் இருந்தவர் கையில் மஞ்சள் கயிறு (காப்பு) அணிந்து விழா முடிகின்ற வரையில் விரதம் காத்து ஒழுகுவர். விழா முடிந்த பிறகு அவ்வர்ச்சகரை அலங்கரித்துப் பல்லக்கில் ஏற்றி மாடவீதி வலம் வரச்செய்வர். இது பட்டணப் பிரவேசம் எனப்படும்.

இங்குச் சர்வதீர்த்தக் குளம் என்னும் பெயரில் ஒரு பெரிய குளம் உளது. இது நீராட வசதியானது.

காஞ்சியிலுள்ள இறைவரைப் பிரம்ம, விஷ்ணு, ருத்திரர், பூசித்துள்ளனர். இவ்வாறு பூசிக்கப்பட்ட இலிங்கங்கள் வெள்ளைக் கம்பன், கள்ளக் கம்பன், நல்லகம்பன் எனப்படும். இவ்விலிங்கங்களைச் சுந்தரர்

இத்தலத்துப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளனர். இறைவியார் மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்டுத் தழுவிய காரணத்தால் தழுவக் குழைந்த கம்பர் என்னும் பெயரும் ஏகாம்பரநாதருக்கு உண்டு. மூலத்தானப் பெருமான் மணல் மூர்த்தி ஆதலின் அவருக்கு அபிடேகம் இல்லை. புனுகு சட்டம் மட்டும் சாத்தப்பெறும். ஆவுடையார்க்கு மட்டும் அபிடேகம் நடைபெறும். சிவலிங்கத்திற்குப் பின்புறம் இறைவியும் இறைவனும் மணக் கோலத்துடன் காட்சி அளிப்பதைக் காணலாம்.

காஞ்சிபுரம் முதன்மையான சத்தி பீடத்தலமாகும். சத்தியாவாள் ஈண்டுக் காமாட்சி அம்மையார். இவ்வம்மையார்க்கு ஊர் நடுவே ஒரு கோவில் உளது. இதனைக் காமக்கோட்டம் என்பர். இதுவும் பெரிய கோவில். கோவிலுக்குள் பெரிய குளமும் உளது. யாத்திரிகர்கள் தங்கிச் சமையல் செய்யக் குளத்தைச் சுற்றிப் பல அறைகள் போன்ற அமைப்புகள் உள்ளன. குளம் வழுக்கல் மிக உடையது. இக்கோவிலில் கள்வனூர் எனும் திருமால் கோவில் உளது.

காமாட்சி அம்மையார் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பார். வெள்ளிக்கிழமை இவ்வம்மையார் தரிசனம் மிக்க விசேடம் ஆகும். அன்னபூர்ணி அம்பிகையின் உருவத்தையும் இங்குக் கண்டு வணங்கலாம். சங்கராசாரியர் திருவுருவமும் இங்கு வழிபடுதற்கு உரியது. ஒரு காலத்தில் அம்பிகை உக்கிரம் கொண்டு இருந்தமையின், சங்கராசாரியர் மந்திரத் தாபனம் செய்து அம்பிகையைச் சாந்தமுறச் செய்தனராம். உற்சவ அம்பிகையார் வலப் பக்கமும், இடப்பக்கமும் அலைமகளையும் (இலக்குமியையும்) கலைமகளையும் (சரஸ்வதியையும்)கொண்டு திகழ்வதைக் காணலாம். கா என்னும் சொல் சரசு

வதியையும், மா என்னும் சொல் இலக்குமியையும் குறிக்கும். இது குறித்தே தேவியார் காமாட்சி எனப் பட்டனர். கா + மா + அட்சி என்னும் சொற்கள் காமாட்சி என்று ஆயது. அட்சி என்பது கண் ஆகும். இந்த உண்மையைத் திருவிளையாடற் புரா ணத்தில் பரஞ்சோதியார்,

"திருமகள் வயக்கண் வாக்கின் சேய்இழை
இடக்கண் ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப் பெறறுவான
செல்வம் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவள் அவள்உயிர்த்
துணைவன் காண
ஒருமூலை மறைந்து நாணி ஒசிந்தபூங்
கொம்பில் நின்ருள்"

என்றும், பெரியநாயகி அம்மைக் கலித்துறையில் சிவப்பிரகாச சுவாமிகள்,

"தண்ணூர் இதழி புனைவாள் விழிஇணை தம்மனைகள்
பண்ணு அழிக்கும் என்றேநின் திருமுகப் பங்கயத்தில்
கண்ணு யினர்உனக் கவ்அலை மாதும் கலைமகளும்
பெண்ணுர் அமுதனை யாய்குன்றை வாழும் பெரியம்மையே"

என்றும் பாடிப் போற்றினர்.

காமாட்சி அம்மையார் கோவிலுக்கு அடுத்தாற் போல் முருகன் கோவில் உளது. இங்குப் பூசை செய்துவந்த கச்சியப்ப சிவாசாரியாரே கந்தபுரா

---

வாக்கின் சேய் இழை - சரசுவதி, ஞானப் பெருமகள் - ஞானசக்தி, நுதல் - நெற்றி ஒசிந்த - துவண்ட. இதழி - கொன்றைப் பூ. அலைமாது - இலக்குமி. இதழி - கொன் றைப் பூ. புனைவான்- சூடிய சிவபெருமான். பங்கயம் - தாமரை.

ணத்தைப் பாடியவர். இங்குள்ள உற்சவ மூர்த்தியின் திருவுருவில்தான் வச்சிராயுதம் உளது. இத்தலத்தின்மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்கள் நாற்பத்துநான்கு உள. இத்தலம் குமரகோட்டம் எனப்படும். (கோட்டம் - கோவில்) "குமரகோட்டத் தமர்ந்த பெருமாளே" என்று அருணகிரியார் பாடி இருப்பதைக் காண்க. ஏகாம்பரநாதர் கோவிலும், காமாட்சி அம்மன் கோவிலும், இடையே குமரன் கோட்டமும் இருப்பது சோமாஸ்கந்தர் மூர்த்தம் போன்று அமைந்த அமைப்பாகும்.

அற்றைக் கிரைதேடி அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே —திருப்புகழ்.

இத்தலத்தில் பார்க்கவேண்டிய மற்றொரு சிவாலயம் கச்சபேஸ்வரர் திருக்கோயில் ஆகும். இஃது இராசவீதியில் உள்ளது. இது திருமால் ஆமை வடிவில் பூசித்த தலம். (கச்சபம் - ஆமை.) இந்தக் குறிப்பை ஆலயத்துள் காணலாம். கோவிலுக்குள் பெரிய குளம் உளது. இச் சிவாலயமே அன்றிச் சுரஹரி ஈஸ்வரர் கோவிலும் உளது. இப்பெருமான் காய்ச்சலை நீக்குபவர். மற்றும் பல தலங்களும் உள்ளன. இந்த உண்மையினை அப்பர் கச்சிப் பல தளியும் என்று கூறுதலால் அறியலாம். இத்தலத்தையும், கோவிலையும் மாணிக்க வாசகர் தேசம் எல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பம் செம்பொற்கோயில் என்று புகழ்ந்து கூறுகின்றார்.

---

அற்றைக்கு - அந்தந்த நாளுக்கு. அத்தம் - பொருள். பற்றை - கடவுள் அன்பை. வெற்பை - கிரவுஞ்ச மலையை. சீலா - ஒழுக்கமுடையவனே. போதா - ஞானதேசிகனே. கற்றுற்று - தியானித்து.

காஞ்சிபுரம் சோழன், கரிகால், பெருவளத்தான் காலத்தில் மிகச் செம்மையாக இருந்தது. நான்கு இராசவீதிகளும் இவன் காலத்தில் ஏற்பட்டன. இங்குள்ள ராச வீதிகளைப் போல எங்கும் காண்டல் அரிது. இங்கு, அரண்களைப் போல மதில்களை எழுப்பியவனும் இவனே. இது குறித்தே தேவாரப் பதிகங்கள் மதில்களை வெகுவாகச் சிறப்பிக்கின்றன. இதனால் இஃது எயில் (மதில்) கோட்டம் என்றும் கூறப்பட்டது. சங்க காலத்தில் இந்நகரம் கச்சிப் பேடு எனப்பட்டது. இந்நகரத்துப் புலவர்களாகக் கச்சிப்பேட்டு இளந்தச்சனார், காஞ்சிக் கொற்றனார் திகழ்ந்தனர். பெருந் தச்சனார், நன்னாகையார். இந்நகரைச் சார்ந்த சங்கப் புலவர்களே. கச்சியப்ப சிவாசாரியரும் இத்தலத்துப் புலவரே.

பௌத்தர்கட்கு இஃது இடமாகத் திகழ்ந்தது. இங்குள்ளவர்கள் கல்வி அறிவில் சிறந்தவர்கள் என்னும் கருத்தில் அப்பரும் "**கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர்**" என்று சிறப்பித்துள்ளனர். சங்க காலத்திற்குப் பிறகும் பல்லவர் காலத்திலும் இந்நகர் சிறப்புடன் இருந்தது என்பது பாரூர் பல்லவனூர் மதில் **காஞ்சிமாநகர் வாய்**" என்று பாடி இருப்பது கொண்டு தெளியலாம். இத்தலத்தில் சிவஞான முனிவர் தங்கிச் சைவ சமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் அரிய பல தொண்டுகளைச் செய்துள்ளனர். பல நூல்களையும் இயற்றியுள்ளனர். சிவஞான போத மாபாடியம் இங்குத்தான் எழுதப்பட்டது. இவரது மாணவர் கச்சியப்ப முனிவர் தமது சீடர் பலர்க்கும் இலக்கணம் போதித்த பதியும் இதுவே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது கண்பார்வையை திருஒற்றியூரில் இழந்து, பின் இத்தலத்தில் தான் இறைவனை வணங்கி ஒரு கண் பார்வையைப் பெற்றனர்.

இஃது ஐயடிகள் காடவர்கோன் அவதரித்த தலம். இவர் பல்லவர் மரபினர். தம் அரசைத் தம் மகனுக்கு அளித்துவிட்டுத் தலயாத்திரை செய்தவர். க்ஷேத்திர வெண்பா என்னும் நூலைப் பாடியவர். இது பதினோராம் திருமுறையில் ஒரு பகுதி.

சாக்கியர் என்பவரும் சிவனடியார். இவர் வேளாளர். பௌத்த சமயத்தில் சேர்ந்தவர். பின் சைவ நெறி புகுந்தார் என்றாலும், பௌத்த வேடத்தில் தான் இருந்தார். சிவலிங்கத்தை வழிபடாமல் உண்ணாதவர். இவர் சிவலிங்கத்தை வழிபடுவதில் ஒரு புதுவழி கண்டனர். பூவுக்குப் பதிலாகக் கல்லையே பூவாக எண்ணி இறைவர் மீது இட்டுப் பூசை செய்து இக் காஞ்சியில் முத்தி பெற்றனர். இறைவருக்குக் கல்லும், விருப்பம் ஆயிற்று என்பதை "அல்லாதார் கல் என்பார் அரனார்க் கஃதலராமால்" என்று சேக்கிழார் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

திருக்குறிப்புத் தொண்டரும் இப்பதியினரே. இவர் வண்ணார் மரபினர். சிவனடியார்களின் ஆடைகளை வெளுத்துத் தருபவர். ஒருநாள் இறைவரே அடியராக இவரிடம் வந்தனர். தொண்டர் அவர் பால் இருந்த கீழ் உடையை (கோவணத்தை) வெளுத்துத் தருவதாகக் கேட்டார். அவ்வாறே வந்த சிவனாரும் தந்தனர். தொண்டர் அதனை அன்று மாலைக்குள் வெளுத்துக் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் அன்று விடாமழை பெய்ததனால் கொடுக்க முடியவில்லை. அதன் பொருட்டுத் திருக்குறிப்புத் தொண்டர் தம் தலையைத் துணியை மோதும் கல்லில் மோதி உயிர்விட எண்ணினார். இறைவர் எங்கும் உள்ளவர் ஆதலின், அக்கல்லினின்றும் கையைத் தோற்றுவித்து அவர்தம் தலை கல்லில் மொத்துண்ணாவாறு தடுத்து அவருக்குத் திருவருள் புரிந்தனர். அவர் வழிபட்ட கோவில் ஆடிசன்பேட்

டையில் உளது. கச்சியம்பதி சிறந்த வியாபாரத் தலம். இங்கு நெசவுத் தொழில் சிறப்புடையது. காஞ்சிபுரம் பட்டுச் சேலை விசேடமானது. கர்னுடகச் சண்டையில், ஐதர்அலிப் போர் நடத்தியபோது சேனைகள் தங்குதற்கு இடமாக இருந்தது. ஐதர் காலத்தில் எறியப்பட்ட குண்டின் வடுவை இன்றும் கோபுரத்தில் காணலாம். இக்கோபுரம் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது.

ஐதர் இலிங்கம் என்னும் பெயரில் ஒரு லிங்கமும் உண்டு. இந்த லிங்கம் ஐதரை ஏமாற்ற வைக்கப் பட்ட இலிங்கமாம். அதாவது ஐதர் மூலட்டான இலிங்கத்தைப் பழுதுசெய்யக் கூடும் என்று ஓர் இலிங்கத்தைக் கோவிலுக்குமுன் வைத்துச் சுற்றிலும் சுவர் எழுப்பி அதுவே மூலட்டான லிங்கம் போலக் காட்டப் பட்டதாம்.

கல்யாண மண்டபம் பச்சையப்ப முதலியாரால் கட்டப்பட்டது. ஆயிரக்கால் மண்டபத்தில் காம தகன சிலையைப் பார்த்து நாம் களித்தல் வேண் டும். அகத்தீஸ்வர் மண்டபமும், சபாநாதர் மண்டபமும் சோழர்களால் கட்டப்பட்டன. இத் தலத்து நடராசர் சபை ஆகாச சபை எனப்படும். வாகன மண்டபம் விஜயநகரத்து அரசர்களால் கட்டப்பட்டது. காஞ்சிபுரத்தில் தொண்டை மண் டல ஆதீன 229-வது குருமகா சந்நிதானமாகச் சிவத்திருஞானப்பிரகாச தேசிக பரமாசாரியர் சுவாமி கள் அருள் செங்கோல் செலுத்தி வருகிறுர்கள்.

காஞ்சிபுரத்திற்குச் சென்ருல் வரதர் கோவி லுக்கு மேற்கே முக்கால் கல் தொலைவில் உள்ள அட்ட புயகரத் தலத்தையும், இத்தலத்திற்கு மேற்கே அரை கல் தொலைவில் உள்ள திருத்தண்காவையும், ஏகாம்பர நாதர் கோவிலுக்கு மேற்குத் திசையில் ஒரு பர்லாங்

கில் உள்ள பாண்டவர் நாதர் கோவிலையும், (திருப் பாடகம்) உலகளந்த பெருமாள் கோயிலையும் (திருவூரகம்) இத்தலத்துக்குள் இருக்கும் நீரகம், காரகம், கார்வானம் ஆகிய மூன்று சந்நிதிகளையும், தேரடிக்கு அருகில் உள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி) சந்நிதியாகிய திருவெஃகாவையும், காமாட்சி அம்மன் கோவிலுக்குள் இருக்கும் திருக்கள்வனூர் எனும் திருக்கோவிலையும், காமாட்சி அம்மன் கோவிலுக்கு வடகிழக்குத் திசையில் ஒருகல் தொலைவில் உள்ள திருப்பவள வண்ணம் என்னும் கோவிலையும், காஞ்சிபுரம் இரயில் நிலையத்திற்கு இரண்டு பர்லாங் தூரத்தில் உள்ள வைகுந்தப் பெருமாள் சந்நிதியையும் (பரமேசுவர விண்ணகரம்) கண்டு வணங்கலாம். இவை அனைத்தும் வைணவ ஆழ்வார்களால் பாடப்பட்ட பெருமைக்கு உரியவை.

## கச்சி ஏகம்பன் தலத்தைப்பற்றி அறியவரும் கல்வெட்டுச் செய்திகள்

இத்தலத்துக் கல்வெட்டுகளால் நாம் அறிவன: சமரலோகன் என்பவன் ஏகாம்பரநாதருக்கும் காமாட்சி அம்மையாருக்கும் பாண்டிய நாட்டில் உள்ள இரண்டு கிராமங்களை அளித்துள்ளனன். சாமந்தக போஜன் என்பவன் ஒரு கிராமத்தையும் தானம் செய்துள்ளான். ஏகாம்பரநாதர் கோயில் கீழ்க் கோபுரத்திற்கு அருகில் ஆலால சுந்தரன் மடம் ஒன்று இருந்தது. திருநாவலூர்க் கூடலுடையான் இதற்குத் தழுவக் குழைந்தான் நிலம் என்னும் பெயரில் நிலம் அளித்துள்ளான். ஈசான தேவி மடமும் இருந்தது. புதுப்பாக்கம், வேளையூர் திருவேகம்பம் உடைய நாயனார்க்கும், காமாட்சி அம்மையார்க்கும் முறையே தேவதானமாகக் கொடுக்கப்பட்டன.

காஞ்சியின் வெளி மதிலில் புத்தர் மகா நிர்வாண உருவம் சேர்ந்து அமைந்திருக்கிறது. முன் மண்டபத்தில் கரிகாலன் உருவம் உளது. ஆயிரக் கால் மண்டபத்தில் வடமொழி சுலோகம் ஒன்று காணப்படுகிறது.

அச்சுதராயன் என்பவன் காமாட்சி அம்மையார்க்குத் தன் வெற்றிக்கு அறிகுறியாக எட்டு ஊர்களை அளித்துள்ளான். விசேட பூசைக்கும் அமுதுபடி, கறி அமுது, இலை அமுது, அடைக்காய் அமுது (பாக்கு) திருப்பரி வட்டம், சாத்துப்படி, திருவிளக்கு, ஆகியவற்றிற்கு நிபந்தங்கள் விடப்பட்ட செய்திகள் அறியவருகின்றன. ஏகாம்பர நாதர்க்கு நுந்தா விளக்கு என்றும் எரிய ஏற்பாடு செய்யப்பட்டது. கல்வெட்டில் ஏகாம்பர நாதர், காஞ்சிபுரத்து உடையார், திருஏகம்ப உடைய நாயனார் எனப்பட்டார். கணபதி தேவன் என்பவனால் திரு அமுதுபடி, கறிஅமுது, திருப்பரிவட்டம், திருமேனிப் பூச்சு, கற்பூரம், பனிநீர் முதலியவற்றிற்கும், நம்பி மார்க்கும், திருப்பரிசாரகர்க்கும், திருமஞ்சனம் எடுப்பார்க்கும், திருப்பள்ளித்தாமம் தொடுப்பார்க்கும் நிபந்தங்கள் அமைக்கப்பட்டன. பால்பசு, சினைப்பசு, ஆடு, கிடாரி, ரிடபம் முதலியனவும் கொடுக்கப்பட்டன.

## இத்தலத்தைச் சார்ந்த நூல்கள் :

இத்தலத்திற்கு மூவர் முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடியுள்ள பதிகங்களே அன்றிச் சிவஞான முனிவர் எழுதிய காஞ்சிப் புராணமும், இவரது மாணவர் கச்சியப்ப முனிவர் பாடிய கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூதும், இரட்டையர்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவும், பட்டினத்தாரது திருவேகம்ப முடையார் திருவந்

தாதியும் (இவர் நம்பியாண்டார் நம்பிகட்கு முற் பட்டவர்) சிவஞான முனிவர் பாடிய கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகமும், திருவேகம்பர் கச்சி ஆனந்த ருத்திரேசுவரர் ஆனந்தக் களிப்பும், திருவேகம்பர் யமக அந்தாதியும், பூண்டி ரங்கநாத முதலியார் பாடிய கச்சிக் கலம்பகமும் உண்டு.

திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் நான்கும், அப்பர் பாடிய பதிகம் ஏழும், சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு பதிகங்கள் இத்தலத் திற்கு உள்ளன. மாணிக்கவாசகர் இத்தலத்திற் கெனத் தனிப்பட்ட பாடலைப் பாடிலரேனும், தம் திருவாசகத்தில் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள் ளார்.

**இத்தலத்துப் பதிகங்களின் மூலம் நாம் அறிவன :**

திருஞான சம்பந்தர் தம் முதல் திருமுறையில் கச்சி ஏகம்பநாதனைத் தொழுதால் துன்பம் நீங்கும் என்பதனை ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் குறிப்பிட் டுள்ளனர். முதல் திருப்பதிகத்தின் பண் மேகராகக் குறிஞ்சி. இப்பண் இக்காலத்து நீலாம்பரி போன்றது என ஒருவாறு கூறலாம். இப் பதிகப் பாடல்களை அறுசீர் விருத்தம் என்று கொள்ளலாம். அதாவது ஒவ்வொரு பாடலும் நான்கு சீர்களைக் கொண்டு ஒவ் வோர் அடியும் அறுசீர்களைப் பெற்று வருவது.

"ஏகம்பம் தொழுதேத்த இடர் கெடுமே"

"ஏகம்பம் ஏத்த இடர் கெடுமே"

"ஏகம்பத்துறை ஈசன் சேவடி ஏத்த இடர்கெடுமே"

"ஏகம்பம் தொழ வல்வினை மாய்ந்தறுமே"

என்னும் வரிகளில் இவ்வுண்மைகளைக் காண்க.

---

ஏகம்பம் - ஏகாம்பரநாதர் கோயில். ஏத்த - போற்ற. உறை - வாழும். சேவடி - சிவந்த பாதம்.

திருவேகம்பத்தை அடைந்தாலும், கண்டாலும் துன்பம் ஒழியும் என்பதையும்

" கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே "

" ஏகம்பம் காண இடர் கெடுமே "

என்று மொழிந்துள்ளார்.

காஞ்சிபுரத்தின் சிறப்பைக் கூறும்போது,

" கடிபொழில் கச்சி "

" குருந்த மல்லிகை கோங்குமாதவி நல்ல குராமரவம்
திருந்து பைம்பொழில் கச்சி "

"விண் அமர் நெடுமாடம் ஓங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பம் "

" மாலை வெண்மதி தோயும் மாமதில் கச்சிமா நகருள்
ஏலம் நாறிய சோலைசூழ் ஏகம்பம் "

" சேடர்சேர் கலிக்கச்சி ஏகம்பம்
மாகம்தோய் மணிமாடம் மாமதில் கச்சிமாநகர் "

" சேணுலாம் பொழில்கச்சி
ஏரினார் பொழில் சூழ்ந்த கச்சி "

என்று சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

காஞ்சிபுரம் நல்ல கொடையாளர்களைக் கொண்டது என்பதையும், "கரவில் வண்கையினர்கள் வாழ் கலிக் கச்சிமாநகர்" என்று சுட்டியுள்ளனர்.

---

கடி - வாசனை. பொழில் - சோலை. கச்சி - காஞ்சிபுரம். குருந்தம் முதலியன மலர்களின் பெயர்கள். விண் - ஆகாயம். திண்ணமாம் - உறுதியாம். மதி - சந்திரன். மா - பெரிய. ஏலம் - ஏலக்காய். நாறிய - மணம் வீசிய. சேடர் - எல்லாம் அழியத் தாம் அழியாது இருப்பவராகிய சிவபெருமான். கலி - ஒலி. சேண், மாகம் - ஆகாயம். ஏரின் ஆர் - அழகால் நிறைந்த. கரவு - வஞ்சகம். வண்கையினார் - கொடையாளர்.

இப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் மக்கட்கு அறிவுறுத்திய உபதேசம்,

"குண்டுபட் டமணாய் அவரோடும் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை அவைகொண்டு விரும்பேன்மின்"

என்பது.

இதில் சீர்காழிப்பதி, "காரினார் மணிமாடம் ஓங்கு கழுமல நல்நகர்"எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளதையும், இப்பதிகத்தைப் பாடுவதால் பெறும் பயனை "சீரினார் புகழ் ஓங்கி விண்ணவரோடும் சேர்பவரே" என்று கூறப்பட்டுள்ளதையும் அறிக.

இரண்டாவது திருமுறையிலும் பெரும்பாலும் ஏகம்பனைத் தொழுதால் வினை சேரா என்னும் கருத்தே பேசப்பட்டுள்ளது. இதனை உபதேச முறையிலும் கூறியுள்ளனர். இவ்வுண்மையினை,

" கச்சியே கம்பம் மேய கறைக்கண்டனை
நச்சியே தொழுமின் நும்மேல் வினைநையுமே"
" திருவேகம்பம் நீதியால் தொழுமின் நும்மேல்
[வினைநில்லாவே"

என்னும் வரிகளில் காண்க. மேலும் இக் கருத்தை வலி உறுத்த,

" ஏகம்பம் சென்று ஏய்க்கும் சிந்தையார் மேல்வினை
[சேராவே"
"ஏகம்பம் தொழுவாரே விழுமியார்மேல் வினைதுன்னாவே"

என்று அறிவித்திருப்பதையும் உற்று நோக்குக.

---

கூறை - ஆடை. மெய் - உடல். மிண்டர் - திண்ணியர். கறைக்கண்டன் - விடம் பொருந்திய கழுத்துடையவன். நச்சி - விரும்பி. நையும் - வாடும். ஏய்க்கும் - பொருந்தச் செய்யும். விழுமியார் - சிறந்தவர். துன்னா - அடையா

இரண்டாம் திருமுறைப் பதிகப் பண் இந்தளம். இதனை இக்காலத்து நாதநாமக்கிரியை என்னும் இராகத்தோடும், இலளித பஞ்சமி இராகத்தோடும் ஒருவாறு இணைக்கலாம். இப் பதிகத்தின் யாப்பைக் கலிவிருத்தப் பாவால் ஆனது என்னலாம். நான்கடிகளைக் கொண்டு, ஒவ்வோர் அடியும் பெரிதும் ஈர் அசைச் சீர்களைக் கொண்டு வருவது கலி விருத்தம்.

இவ் இரண்டாம் திருமுறையில் காஞ்சியம்பதி,

"ஏர்கொள்கச்சி, ஏரார்பூங்கச்சி"

"குன்றேய்க்கும் நெடுவெண்மாடக் கொடி கூடிப்போய்
மின்தேய்க்கும் முகில்கள் தோயும் வியன்கச்சியுள்
மன்று எய்க்கும் மல்குசீரால் மலி ஏகம்பம்"

"கலிக்கச்சியுள் புடையே பொன்மலரும் கம்பைக்
[கரையேகம்பம்"

"வழுவாமே மல்கு சீரால் வளர்ஏகம்பம்"

"தீதில் கச்சித் திருவேகம்பம்"

"அந்தண் பூங்கச்சி"

என்றெல்லாம் புகழப்பட்டுள்ளது.

திருஞான சம்பந்தருக்குத் திரு ஏகம்பன் மீது மிகுந்த பற்றுள்ளது என்பது, "திருஏகம்பம் உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே" "ஏகம்பம் உடையானை அல்லது உள்காது" என்று உணர்த்தி இருப்பதனால் அறிய வருகின்றது.

---

ஏர்-அழகு. ஆர்-பொருந்திய. பூ-அழகிய. ஏய்க்கும்-போல இருக்கும். மின் + தேய்க்கும். முகில்-மேகம். வியன்-பரந்த. மன்று -சபைகள். மல்கு - பெருகும். மலி - மிகுந்த. கலி - ஒலி. புடையே - பக்கத்தே. பொன் - பொன்நிறமான கொன்றை. கம்பை - கம்பாநதி. வழுவாமே - தவறுமல், எழில்-அழகு. தீது-தீமை. அம்தண்-குளிர்ச்சியும், அழகும். உறைவான் - வாழ்பவன். உள்காது-நினைக்காது. நெறி - வழி. பார் - பூமி. பூ - அழகிய. ஆரும் - பொருந்திய.

திருக்கச்சியை அடைந்தால் இன்பமாய நெறியை (சன்மார்க்கம்) அடையலாம் என்பதை,

"ஏரார் பூங்கச்சி ஏகம்பனை எம்மானைச்
சேராதார் இன்பமாய் அந் நெறி சேராரே

என்று அறிவித்துள்ளனர்.

இறைவன் சடையில் விளங்குவன நொச்சி, வன்னி, கொன்றை, மதி, கூவிளம் என்பன என்பதும் தெரிகிறது. மதி, சந்திரன். ஏனையவை மலர்கள்.

கச்சியம்பதி இசையும், நடனமும் நிறைந்த நகராய்த் திகழ்ந்தது என்பதை,

"பாராரும் முழவம் மொந்தை குழலி யாழ்ஒலி
சீரார் பாடல் ஆடல், சிதைவில்ல தோர்
ஏரார் பூங்கச்சி"

என்று உணர்த்தியுள்ளனர்.

திருஞான சம்பந்தர், திருவேகம்பம் அடைவாரைத் தம் சிரமேல் கொள்வார் என்பதையும், "திருஏகம்பம் மேயானை மேவுவார் என் தலை மேலாரே" என்று போற்றிப் புகழ்கின்றார்.

இப்பதிகத்தில் சீர்காழி, "கம்தண் பூங்காழி" என்று புகழப்பட்டுள்ளது. சம்பந்தர் தம் பாடலை "கலிக்கோவை' என்று அடிக்கடி கூறுவர். இங்கும் இதனைக் குறித்துள்ளனர். கலிக் கோவையாவது ஒலி மாலையாகும். மாலை ஈண்டுப் பாமாலை. இப் பதிகத்தின் பயன் பாடி ஆடப் பாவம் கெடும் என்பது.

மூன்றும் திருமுறையில் கச்சியைப் பற்றிய இரு பதிகங்கள் உள்ளன. முதல் பதிகம் திருஇருக்குக் குறள். இஃது ஒவ்வோர் அடியும் இருசீர்களைக்

---

முழவம்-மத்தளம். மொந்தை-கடம். குழல் - புல்லாங் குழல். யாழ்-வீணை. ஏர்-அழகு. சிதைவு-அழிவு. கம்-நீர்.

கொண்டு வருதலின் குறள் (குட்டையானது) என்றும், இருக்குவேதம்போன்று அரிய கருத்துகளைக் கொண்டிருத்தலின், திரு இருக்குக் குறள் என்றும் பெயர் பெற்றுள்ளது. இப் பதிகப் பண் கொல்லி. இதனை இக்காலத்து நவரோசு இராகம் என ஒருவாறு கருதலாம். இந்தப் பதிக யாப்பு வஞ்சித்துறை. அதாவது நான்கடிகளைக் கொண்டு, ஒவ்வோர் அடியும் இரு சீர்களைப் பெற்று வருவது.

இதில் அமைந்த பாடல்கள் மக்கட்கு உபதேசம் செய்யும் போக்கில் உள்ளன. இதனை "திருஏகம் பத்து ஒருவா என்ன மருவா வினையே" "திருஏகம்பம் விதியால் ஏத்தப் பதியாவாரே" "திருஏகம்பம் பலியால் போற்ற நலியா வினையே" "திருஏகம்பம் பரவா ஏத்த விரவா வினையே" "திருஏகம்பத்து உடையாய் என்ன அடையா வினையே" "நிலவே கம்பம் குலவா ஏத்தக் கலவா வினையே" "நெறியே கம்பம் குறியால் தொழுமே" "கச்சிச்செறிகொள் கம்பம் குறுகுவோமே" என்னும் வரிகளில் காண்க.

கச்சிப்பதி "கருவார் கச்சி, மதியார் கச்சி, வரமார் கச்சி, படம்ஆர் கச்சி, நலம் ஆர் கச்சி" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிகத்தைப் பாடப் புகழ் நச்சும். அதாவது புகழ்தானே விரும்பி வந்தடையும் என்பதாம்.

மற்றொரு பதிகம், திருஇயமகம் என்பது. இயமகம் என்பது மடக்கு என்னும் அணியைச் சார்ந்தது.

---

வினை - பாவங்கள், மருவா - வந்து சேரா. ஏத்த - போற்றினால். பதி ஆவார் - தலைவர் ஆவார். பலி - பூசைக்குரிய பொருள்கள். நலியா - துன்புறுத்தா. விரவா - வந்து சேரா. நிலவு-விளங்கும். குலவா-மகிழ்ந்து. செறி-நெருக்கம். கரு-எல்லாவற்றிற்கும் வித்தாகஇருக்கிற, மதி-அறிவுநிறைந்த. படம் - கொடி.

அதாவது ஒரு சொல்லோ ஒரு தொடரோ அடியோ, மீண்டும் மீண்டும் வரப்பெறுவது. அங்ஙனம் வந்தாலும், வெவ்வேறு பொருளைத் தந்து நிற்கும். உதாரணமாகக் காட்டவேண்டுமானல், இப்பதிகத்தின் முதல் பாட்டின் ஈற்றடியில் 'மதன்பட்டது **கம்பமே**, பரமற்கிடம் **கம்பமே**' என்பதைக் காட்டலாம், முதல் கம்பம் நடுக்கம் என்னும் பொருளது. இரண்டாவது கம்பம், திருஏகம்பம் என்பது. இங்ஙனம் சொல்லும் தொடரும் பதிகம் முழுதும் இரு பொருள் பட அமைந்திருப்பதைக் காணலாம்.

இப்பதிகம் அறுசீர் விருத்தம். அதாவது, நான் கடிகளைக் கொண்டு ஒவ்வோர் அடியும் ஆறுசீர்களைப் பெற்று வருவது. இப் பதிகப் பண் பழம் பஞ்சுரம். இதனை இக்காலத்துச் சங்கராபரணம் என ஒருவாறு கூறலாம்.

காஞ்சியம்பதி இப்பதிகத்தில், "கந்த மார்பொழில் சூழ் தருகம்பம்" எனப்பட்டது. இங்கு ஓடும் கம்பா நதியைப் பற்றிக் கூறும்போது, அஃது இன்னின்ன பொருள்களை அடித்துக்கொண்டு வரும் என்பதை "வெதிர்க ளோடகில் சந்தம் உருட்டியே, வேழமோடு அகில் சந்தம் உருட்டியே, அதிர ஆறு வரவு" என்று பாடியுள்ளனர்.

இறைவரது புகழைக் கற்காதவர் மனம் இரும்புத் தூண் போன்றது என்பதை "கற்றிலா மனம் கம்பம் இருப்பதே" என்று உணர்த்தியுள்ளனர். ஏழாவது பாட்டில் இறைவி இறைவனைத் தழுவி வழிபட்ட குறிப்புக் காணப்படுகிறது. இப்பதிகத்தைப் பாடப் பத்தி வரும்.

---

கந்தம்-வாசனை. ஆர்-பொருந்திய. பொழில் - சோலை. வெதிர் - மூங்கில். அகில்-அகில் கட்டை. சந்தம்-சந்தனம். வேழம் - யானை. நெறி - முறை இருப்பு - இரும்பு.

வரம்திகழும்அவுணர்மா நகர்மூன் றுடன்வாய்ந் தவியச்
சரந்துரந்தெரி செய்த தாழ்சடைச் சங்கரன் மேயஇடம்
குருந்தம் மல்லிகை கோங்கு மாதவி நல்ல குராமரவம்
திருந்து பைம்பொழில் கச்சி யேகம்பம் சேர இடர்கெடுமே.

—முதல் திருமுறை.

தூயானைத் தூயவாய் அம்மறை ஓதிய
வாயானை வாள்அரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு வேகம்பம்
மேயானை மேவுவார் என்தலை மேலாரே.

—இரண்டாம் திருமுறை.

வரம்ஆர்கச்சிப் புரம்ஏகம்பம்
பரவாஏத்த விரவாவினையே.

—மூன்றாம் திருமுறை.

" பாயும் மால்விடை மேல்ஒரு பாகனே
பாவை தன்உரு மேல்ஒரு பாகனே
தூய வானவர் வேதத் துவனியே
சோதி மால்எரி வேதத் துவனியே

---

அவுணர் - அரக்கர். மா - பெரிய. சரம் - அம்பு
துரந்து - விட்டு. பொழில் - சோலை. அவிய - அழிய.

தூயானை - பரிசுத்தனை. மறை - வேதம். மேயான்
பொருந்தியவன்.

வரம் - உயர்வு. ஆர் - பொருந்திய. புரம் - ஊர்
பரவா - துதித்து. ஏத்த - போற்ற. விரவா - அடையா

மால் - பெரிய. விடை - இரிடபம். பாகன்
செலுத்துபவன். பாவை - பார்வதி. பாகன் - பங்காளன்
வேதத் துவனி - வேத ஒலி. வேதத்து - வெம்மையானது
வனி - தீ எரி - நெருப்பு.

ஆயும் நின்பொருள் நுண்பொருள் ஆதியே
ஆல நீழல் நுண்பொருள் ஆதியே
காய வில்மதன் பட்டது கம்பமே
கண்ணு தல்பர மற்கிடம் கம்பமே''

—மூன்றும் திருமுறை.

திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் நான்காம் திருமுறையில் மூன்று உள்ளன. முதல் பதிகத்தில் அப்பர் பெருமானுர், கச்சிப் பெருமானைத் தம் மனத்துள் வைத்துப் போற்றியதை ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் குறித்துப் பாடியுள்ளனர். இதனை ''பெருமானை என் மனத்தே வைத்தேனே'' என்னும் வரியில் காண்க.

இப் பதிகப் பண் காந்தாரம். இதனைச் சங்கராபரணத்தின் ஜன்யராகமான நவரோசு என ஒருவாறு கூறலாம். இப் பதிகப் பாடல்கள் கொச்சகக் கலிப்பா ஆகும். அதாவது ஒவ்வொரு பாட்டும் நான்கடிகளைக் கொண்டு ஒவ்வோர் அடியும் பெரும்பாலும் மூவசைச்சீர்கள் நான்கைப் பெற்று வருவது.

திருநாவுக்கரசர் இறைவரைப் பற்றிப் பாடும் போது

''கரவாடும் வன்நெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமான்''

''வானோர்க்கும் ஏனோர்க்கும் பெருமான்''

---

ஆலம் - கல்லால விருட்சம். ஆதி - முதல் பொருள். ஆதி-ஆகின்றாய். காய-போர் புரியவந்த. மதன்-மன்மதன். பட்டது-அடைந்தது. கம்பம்-நடுக்கம். கம்பம்-திருஏகம்பம். கண்ணுதல் - நெற்றிக்கண்.

கரவு - வஞ்சகம்', கரவார்பால் - வஞ்சகம் இல்லாதவரிடம், விரவாடும் - கலந்திருக்கும். வானோர் - தேவர். ஏனோர் - மற்றையோர்.

"கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வன்"
"எப்போதும் இனியான்"
"தொண்டர்தாம் மலர்தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையான்"
"ஆயிரம்பேர் அம்மான்"
"தேசங்கள் தொழநின்ற திருமாலாம்
பூசனைப் பூசனைகள் உகப்பான்"
"வல்லார்கள் மனத்துறையும் மைந்தன்"
"துகள்ஏதும் இல்லான்"

என்றெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளார்.

இதில் திருமால் தேசங்கள் தொழ நின்ற திருமால் என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்க. ஈண்டுத் தேசங்கள் என்பன ஆழ்வார்கள் பாடியுள்ள திவ்ய தேசங்களே என்க. இத்தகைய பெருமைக்குரிய திருமாலும் நம் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றார் என்று கூறிச் சிவபெருமானின் உயர்வை உணர்த்தியதை உணர்ந்து இன்புறுக.

இப்பதிகம் கச்சி ஏகம்பத்தில் பாடப்பட்டது என்பதற்குரிய குறிப்பு ஒன்பதாவது பாட்டில் வரும், "மதில் கச்சி ஏகம்பம் மேயானை" என்னும் வரியால் மட்டும் அறிய வருகிறது. ஏனைய பாடல்களில் கச்சிக் குறிப்பு இல்லை.

அப்பர் இறைவனை எங்ஙனம் தம் மனத்தில் வைத்தனர் என்பதை "அப்போது மலர் தூவி ஐம்

---

கைப்போது-கையாகிய மலரில், இண்டை-முடிமாலை. உகப்பான் - விரும்புபவன். வல்லார்கள் - தொழ வல்லவர்கள். துகள் - குற்றம். உகப்பான் - விரும்புவான். அப்போது - அந்த வேளையில் மலர்ந்த. ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

புலனும் அகத்தடக்கி என் மனத்தே வைத்தேனே'
என்று கூறுமாற்ருல் தெளியலாம்.

கரவாடும் வன்நெஞ்சர்க் கரியானை கரவார்பால்
விரவாடும் பெருமானை விடைஏறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

—நான்காம் திருமுறை

இரண்டாவது பதிகத்தில் அப்பர் கச்சிப் பெருமானை எப்பொழுதும் சிந்தித்து எழுவதையும் உள்ளத்தால் உகக்கின்றதனையும் (மனத்தில் விரும்புவதை) அடிமை செய்யக் கருதித் திரிவதையும் குறிப்பிட்டுள்ளனர்.

இப் பதிகத்தின் தலைப்பில் திருநேரிசை என்றுளது. இதனைக் கொல்லிப்பண் என ஒருவாறு கூறலாம். இதை இக்காலத்து இராகத்தில் நலராசு என்பர் சிலர். இப்பதிகம் அறுசீர் விருத்தத்தால் ஆயது. அதாவது, நான்கடிகளைக் கொண்டு ஒவ்வோர் அடியும் ஆறு சீர்களைப் பெற்று வருவது.

கச்சிப் பெருமானைத் தலையினால் வணங்க வல்லவர்கள் தலைவர்க்குத் தலைவர் ஆவார் என்றும், கையினால் தொழவல்லார்கள் கடுவினை களைவர் என்றும், வருத்தி நின்று அடிமை செய்வார்கள் வல்வினையை மாய்ப்பர் என்றும் அறிவித்துள்ளனர்.

---

விடை - இரடபம். வித்தகன் - அறிவு வடிவினன். அங்கை - உள்ளங்கை. அகம் + கை. அகம் - மனம். முப்போது - காலை, பகல், மாலை வேளைகள்,

இறைவனுடைய இயல்புகள் எத்தகையன என்பதை உணர்த்தும்போது, ''அருவினை அகல நல்கும் அண்ணல்'' ''எண் திசையோரும் ஏத்த நின்ற ஏகம்பன்'' ''அருத்தியால் அன்புசெய்வார் அவர் அவர்க்கு அருள்கள் செய்தே எருத்தினை இசைய ஏறி ஏகம்பம் மேவினார்'' என்று உணர்த்தியுள்ளனர்.

அப்பர் உலக மக்கள் போக்கைத் தம்மேல் ஏற்றி உரைத்துள்ள கருத்து, ''வாழ்த்துமாறு அறிய மாட்டேன் மால்கொடு மயங்கினேனே'' என்பது.

கச்சிப்பதி இப்பதிகத்தில் ''அணிபொழில் கச்சி'' ''கருமுகில் தவழும்மாடக் கச்சி'' ''இடம்உடைக் கச்சி' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப் பதிகத்தில் திருக்கோலக்கா, திருத்துருத்தி. திருப்பழனம் ஆகிய தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஒருமுழம் உள்ள குட்டம் ஒன்பது துளை உடைத்தாய்
அரைமுழம் அதன் அகலம் அதனில்வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக் கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழும் மாடக் கச்சியே கம்பன் நீரே.

—நான்காம் திருமுறை

---

அருவினை - கொடிய பாவம். நல்கும் - திருஅருளைத் தரும். எண்திசை - எட்டுத் திசைகள். ஏத்த - போற்ற அருத்தி - உண்மை அன்பு. எருத்து - இரடபம்.

மால் - மயக்கம். அணி - அழகிய. பொழில் - சோலை. முகில் - மேகம். குட்டம் - குளம். ஒன்பது துளை - கண்துளை இரண்டு, மூக்குத்துளை இரண்டு, செவித்துளை இரண்டு, வாய்த்துளை ஒன்று, சிறுநீர் கழிக்கும் துளை ஒன்று, மலம் கழிக்கும் துளை ஒன்று ஆக ஒன்பது. ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகள். முழை - குகை.

சொல் வேந்தரின் மூன்றுவது பதிகம் திருவிருத்தம் ஆகும். திருவிருத்தம் என்பது இக்காலத்தில் கட்டளைக் கலித்துறை எனப்படும். கட்டளைக் கலித்துறையானது நான்கடிகளைக் கொண்டு, ஒவ்வோர் அடியிலும் ஐந்து சீர்கள் வரப்பெற்று, ஒவ்வோர் அடியின் சீர்களும் வெண்தளை தவறுமல், (அதாவது மாமுன் நிரை, விளமுன் நேர், காய்முன் நேர், வருவது) ஒவ்வோர் அடியின் ஈற்றுச் சீர் விளாங்காய் ஆகி, ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தால் முடிந்து, முதல் சீர் நேர் அசையில் தொடர்ந்தால் ஒவ்வோர் அடியிலும் பதினாறு எழுத்தையும், நிரை அசையில் தொடர்ந்தால், பதினேழு எழுத்தையும் பெற்று வரும். இதற்குப் பண் குறிக்கப்படவில்லை. இதனை ஓதுவார்கள், கொல்லிப் பண்ணில் பாடுவர், பழம் பஞ்சுரப் பண்ணிலும் பாடுவதுண்டு.

இந்தப் பதிகத்தில் அப்பர் சமணசமயம் புகுந்திருந்த குறிப்பும், மீண்டும் இறைவன் திருஅருளால் சைவசமயம் புகுந்த குறிப்பும் காணப்படுகின்றன. இக் கருத்துகளை,

அமணரோடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய்
ஏழை அமணொடு இசைவித்து எனைக்
கோத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்துஎன்னைக்
கோகுசெய்தாய்

என்னும் வரிகளில் காண்க. பிணிதீர்த்தாய் என்பது தமக்கு வந்த சூலை நோயைத் தீர்த்த குறிப்பாகும்.

---

அமணர் - சமணர். காதுவித்தாய் - போராடுமாறு செய்தாய். கட்டம் - கஷ்டம். பிணி - நோய்.

கொத்தை - குருடு. மூங்கர் - ஊமை. கோகு - இழிவு. பணி - தொண்டு.

இறைவர் எங்கும் நிறைந்தவர் எனினும், 'கழலடி போற்ருக் கயவர் நெஞ்சில் குய்யம் பெய்தாய்' என்று குறிப்பிட்டிருப்பது இங்கு அறிதற்குரியது. "குய்யம் பெய்தாய்" என்பது மறைப்பாய் இருப்பாய் என்பதாம்.

சில காலங்களுக்கு முன்பு ஏகாம்பரர் எழுந்தருளி யிருக்கும் காஞ்சிபுரம் பெரிய காஞ்சிபுரம் என்றும், வரதராசப் பெருமாள் எழுந்தருளி இருக்கும் காஞ்சிபுரம் சின்ன காஞ்சிபுரம் என்றும் எல்லோராலும் கூறப்பட்டு வந்தது. ஏகாம்பரர் வீற்றிருக்கும் காஞ்சிபுரம் பெரிய காஞ்சிபுரம் என்றே வழங்கப்பட்டது என்பது அப்பர் வாக்காலும் நன்கு உணரலாம். இதனைத் திருநாவுக்கரசர் 'பெரும்காஞ்சி எம் பிஞ்ஞகனே' (தலைக்கோலம் உடையவனே) என்று குறிப்பிடும் ஆற்றல் தெளியலாம். ஆனல், இதுபோது இவ்விரு காஞ்சியும் முறையே. சிவகாஞ்சி என்றும், விஷ்ணு காஞ்சி என்றும் கூறப்படுகின்றன.

இறைவன் அன்பர்க்கு எளியவன் என்பதையும், தேவர்கட்கு அரியவன் என்பதையும் ஐந்தாவது பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

> "உணர்வரியான், உள்குவார் வினையைக்
> கரைக்கும்எனக் கைதொழுவது அல்லால்,
> அமிர்தர்க்கும் அறிய ஒண்ணுன் எங்கள் ஏகம்பனே"

என்னும் வரிகளில் காண்க.

அப்பர் பெருமானுர் பிறர்க்கு இரங்கும் மனத்தினர் என்பது கீழ்வரும் இரண்டு பாடல்களால் நன்கு புலனுகின்றன.

---

1. உள்குவார் - நினைப்பவர். அமிர்தர் - தேவாமுதம் உண்ட தேவர்கள். ஒண்ணுன் - முடியாதவன்.

அரிஅயன் இந்திரன் சந்திரா தித்தர் அமரர்எல்லாம்
உரியநின் கொற்றக் கடைத்தலை யார்உணங் காக்கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை ஏகம்ப என்னே திருக்குறிப்பே.

பாம்பரைச் சேர்த்திப் படரும் சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத் தன்பர்கள் கூடிப்பல்நாள்
சாம்பலைப் பூசித் தரையில் புரண்டுநின் தாள்சரண்என்
றேம்பலிப் பார்கட் கிரங்குகண் டாய்கச்சி ஏகம்பனே.

இப்பாடல்களில் தேவர்கள் முதலானோர் இறைவன் திருக்கோயில் முன்பு வாடிப் புலம்பி நிற்றலையும், அன்பர்கள் "ஏகம்பனே சரண்" என்று புரண்டு கொண்டிருத்தலையும் அப்பர் குறிக்கின்றனர்.

அப்பர் தம்மை இறைவர் ஆட்கொண்டு ஏற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தி அதற்கு உலகமே சான்று என்பதையும் மொழிந்துள்ளனர். இதனை,

"ஏன்றுகொண் டாய்என்னை எம்பெரு மான்இனி அல்லம்
சான்றுகண் டாய்இவ் உலகம் எல்லாம்" [எனில்

என்னும் வரிகளில் காணலாம்.

அப்பர் இந்தப் பதிகத்தில் ஏகாம்பரரது காட்சிச் சிறப்பைக் குறிக்க வந்தபோது, அங்குக் கூடி இருந்தவர்களைக் குறிப்பிட்டுத் தாம் இந்த நெருக்கத்தில் எங்ஙனம் வணங்குவது என்பதை வெகு நயமுறப் பாடி அறிவித்துள்ளனர். இதனை,

---

அரி - விஷ்ணு. அயன் - பிரமன். ஆதித்தர் - சூரியர். அமரர் - தேவர். கொற்றம் - வெற்றி, வீரம். உணங்கா - வாடி. புரிதரு - சுருண்ட. புன்சடை - சிறுசடை. எரி - தீ. போகம்-சிவானந்த இன்பம். அரை-இடுப்பு. கூம்பல்-குவித்தல். கரதலம் - கை. ஏம்பல் - ஏங்குதல். சாம்பல் - திருநீறு. சான்று - சாட்சி.

உந்திநின் றார்உன்தன் ஓலக்கச் சூளைகள் வாய்தல்பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவர் ஈட்டம் பணிஅறிவான்
வந்துநின் றார்அய னும்திரு மாலும் மதில்கச்சியாம்
இந்தநின் றேம்இனி எங்ஙன மோவந் திறைஞ்சுவதே.

என்னும் பாடலில் காண்க.

ஆளுடைய அரசர் இறைவனை நோக்கி, "இறைவரே! திருமால் சக்கரம்பெற ஆயிரம் தாமரை கொண்டு வழிபட்டபோது, ஒரு மலரைக் குறையச் செய்து, அத் திருமாலின் கண்ணைத் தோண்டச் செய்தீரே! இஃதென்ன விளையாட்டோ" என்று வினவுவார் போலப் பாடியுள்ள பாடல் சுவை மிக்குடையது.

குறிக்கொண் டிருந்துசெந் தாமரை ஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறைஅழிப்பான்
கறைக்கண்ட நீஒரு பூக்குறை வித்துக்கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங்கூல் காஞ்சிஎம்
பிஞ்ஞகனே.

என்பது அப்பாடல்

---

உந்தி - தள்ளிக்கொண்டு. ஓலக்கச் சூளைகள் - சபா மண்டபத்தில் நடனம் புரியும் அரம்பையர்கள். வாய்தல் - கடைவாயில். துன்றி - நெருங்கி. வானவர் - தேவர்கள். ஈட்டம் - கூட்டம். பணி - வணங்கல். எங்ஙனம் - எப்படி. அயன் - பிரமன். இறைஞ்சுவது - வணங்குவது. வைகல் வைகல் - நாள் தோறும். குறி - சக்கரத்தைப் பெறும் குறிப்பு. இண்டை - தலைமாலை. நெறிப்பட்ட - ஒழுங்காக. நிறை - உறுதியை. கறைக்கண்ட, விடம் பொருந்திய கழுத்தை யுடையவனே. சூல்விப்பது - தோண்டச் செய்வது. வார் - நீண்ட. பிஞ்ஞகனே - தலைக்கோலம் அணிந்தவனே.

இறைவரிடம் தமக்குத் திருவருள் புரிந்து இரக்கம் காட்டவேண்டும் என்று வேண்டிய பாட்டு,

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்
திருஒற்றி யூராய் திருஆல வாயாய் திருஆரூராய் [தேன்
ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே.

என்பது.

சொல் வேந்தர் தமது பதிகத்தின் ஈற்றுப் பாடலில் பெரும்பாலும் இராவணனது செயலையும், அவனுக்கு இறைவன் செய்த மறக்கருணையை யேனும், அறக்கருணையினையேனும் குறித்துப் பாடுவது வழக்கம். ஆனால் இப்பதிகத்தில் இக்குறிப்புகள் ஒன்றும் இல்லை,

அப்பர் இத்தலத்தைப்பற்றி ஐந்தாம் திருமுறையில் பாடியுள்ள திருக்குறுந்தொகைப் பதிகங்கள் இரண்டு. திருக்குறுந்தொகைப் பாடல்கள் அனைத்தும் கலி விருத்தத்தால் ஆனவை. கலி விருத்தம் என்பது நான்கடிகளைக் கொண்டு, ஒவ்வோர் அடியிலும் பெரிதும் ஈர் அசைச்சீர்கள் நான்கு பெற்று வருவது. திருக்குறுந்தொகைப் பாடல்களுக்குப் பண் குறிக்கப்படவில்லை.

முதல் குறுந்தொகையில் முதல் பாடல் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்துள்ளது.

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டும் கண்டும் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாம்மலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே

என்னும் பாடலைக் காண்க.

---

அலந்து - திரிந்து. எய்த்து - இளைத்து. திருஆலவாய் - மதுரை. பண்டு - முன் பிறப்பில். வினை - பாவம். களித்தி - மகிழ்கின்றாய். இடுகு-குறுகிய. திறம் - பக்கம். தீம்-இனிய. பொழில் - சோலை.

உபதேச முறையில் அமைந்த பாடல்கள் மூன்று. இம் மூன்று குறுந்தொகைகளிலும் முறையே "கச்சியே கம்பனை தொழுமின்" என்றும், "நமை ஆளும் அவனைத் தொழுமின்" என்றும், "இடுகுநுண் இடை ஏந்திள மென்முலை, வடிவின் மாதர் திறம் மனம் வையன்மின்" என்றும் அருளுபதேசம் செய்துள்ளனர்.

கச்சியம்பதி காமாட்சி அம்மையாரால் வழிபடப் பட்ட குறிப்பு "இச்சையால் உமை நங்கை வழிபடத் தீம்பொழில் கச்சிஏ கம்பம்" என்னும் வரியால் புலனாகிறது. மேலும், "தடங்கண்ணினாள் கைதொழ" என்பதனாலும் தெரிய வருகிறது. இதில் கச்சிப்பதி "கொச்சையார் குறுகார்" என்று கூறப்பட்டுள்ளதைச் சிந்திக்கவும்.

இறைவர் இயல்புகளை இப்பதிகத்தில் அப்பர் நன்கு எடுத்து இயம்பியுள்ளனர்.

"ஊனில் ஆவி இயங்கி உலகெலாம்
தான்உ லாவிய தன்மையர்."

"தமைஆ ரும்அறி ஒண்ணாத் தகைமையர்"

"மருந்தி னோடுநல் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயஎம் புண்ணியன்
கருந்த டங்கண்ணி னாள்உமை கைதொழ
இருந்த வன்கச்சி ஏகம்பத் தெந்தையே"

---

கொச்சையார் - அறிவில்லாதவர். ஊனில் - உடலில். இயங்கி - நடமாடி. அறிஒண்ணா - அறியமுடியாத. தகைமையர் - தன்மையர். தடங்கண்ணி- விசாலாட்சி. எந்தையே - என் தந்தையே. (நம் செந்தமிழ்த் தொடராகிய தடங்கண்ணி என்பதை வடமொழியாளர் விசாலாட்சி என்று மொழி பெயர்த்துக்கொண்டு வழங்கி வருவதைக் காண்க.)

''மூக்கு வாய்செவி கண்உடல் ஆகிவந்
தாக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வராமே
காக்கும் நாயகன் கச்சிஏ கம்பனே''

''பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொ டாண்என்று பேசற் கரியவன்
வண்ணம் இல்லி வடிவுவே றாயவன்
கண்ணில் உள்மணி கச்சிஏ கம்பனே''

''ஒருவ னாய்உணர் வாய்உணர் வல்லதோர்
கருவுள் நாயகன் கச்சிஏ கம்பனே''

என்னும் குறுந்தொகைகளில் மேலே கூறிய உண்மையினை உணர்க.

இக்கச்சிப்பதிகத் திருக்குறுந்தொகையில் இராவணன் ஏகம்பனை நினைந்தே உய்ந்தனன் என்னும் குறிப்பை அழகுற நம் அப்பர் பெருமானார்,

''இலங்கை வேந்தன்இ ராவணன் சென்றுதன்
விலங்கலை எடுக் கவ்விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சிஏ கம்பவோ என்றலும்
நலம்கொள் செலவளித் தான்எங்கள் நாதனே''

என்று உணர்த்தியுள்ளனர்.

கச்சியம்பதியைப் பற்றிய இரண்டாவது திருக்குறுந்தொகைப் பதிகத்திலும் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் பாடல் ஒன்றும், உபதேச முறையில் அமைந்த பாடல்கள் எட்டும் உள்ளன. முதல் பாடல் இறைவனை நோக்கி, ''கச்சி ஏகம்ப! அடியவர்களாகிய நாங்கள் துன்பப்படுதல் கூடுமா?'' என்று வினவி,

---

ஐவர் - மூக்கு, வாய், காது, கண், உடம்பு ஆகிய ஐவர். வண்ணம் - தனக்கென அமைந்த ஒரு நிறம். பண் - பாட்டு விலங்கல் - கைலைமலை. செலவு - மீட்சி.

அதன் மூலம் அல்லல் படமாட்டோம் என்று உணர்த்திய திறனைக் காணலாம்.

"ஆலும் மாமயில் சாயல்நல் லாரொடும்
சால நீஉறும் மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணல்ஏ கம்பனார்
கோல மாமணிப் பாதமே கும்பிடே"

என்பது நெஞ்சிற்கு அறிவுறுத்தியது.

உபதேச முறையில் கூறுகையில் "கச்சி ஏகம் பன் நாக்கொடு ஏத்தி நயந்து தொழுதுமே" என்றும், "எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே" என்றும், "கச்சி ஏகம்பம் முறைமையால் சென்று முந்தித் தொழுதுமே" என்றும், "ஏகம்பம் சேர்ப்பதாக நாம் சென்றடைந் துய்துமே'; என்றும், "குறிப்பினால் சென்று கூடித் தொழுதுமே" என்றும், "ஏகம்பம் தருக்கதாக நாம் சார்ந்து தொழுதுமே" என்றும், "கச்சி யேகம்பம் மேவிய ஐயனைத் தொழுவார்க் கில்லை அல்லலே" என்றும், "கச்சி ஏகம்பம் பொருந் தச் சென்று புடை பட்டெழுதுமே" என்றும் கூறி யுள்ளனர்.

இப்பதிகத்தில் திருக்கச்சி, "எழிலார்கச்சி, பூம் பொழில்சூழ் கச்சி, கடிபொழில் ஏகம்பம்" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிகத்தில் இறைவனது நிலையினைக் கூற வந்தபோது,

---

ஆலும் - ஆடும். நல்லார் - பெண்கள். சால - மிகவும். உறும் - அடையும். மால் - மயக்கம். மிடற்று - கழுத்தை யுடைய. கோலம் - அழகிய. புடைபட்டு - பக்கத்தே சென்று. ஏத்தி - போற்றி. அல்லல் - துயர். தருக்கு - அருள் இறுமாப்பு. எழில்ஆர் - அழகு நிறைந்த. பொழில் - சோலை. கடி - வாசனை.

"அருந்தி றல்அம ரர்அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோ, டிருந்தவன்"

"பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்அமு தாயவன்"

"பொய் அனைத்தையும் விட்டவர் புந்தியுள், மெய்யன்"

"சிந்தை யுள்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி ஆய்அனல் ஆய்ப்புனல் வானம்ஆய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ளம் நிறைந்தஎம், எந்தை"

என்று பாடி அறிவித்துள்ளனர்.

நாம் மூப்பு, வெறுப்பு உணர்ச்சி முதலான நிலைகளை அடையுமுன் காஞ்சியை அடைந்து ஈடேற வேண்டும் என்பதை,

"மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
ஆர்ப்ப தன்முன் அணிஅம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழில் ஏகம்பம்
சேர்ப்ப தாகநாம் சென்றடைந் துய்துமே"

என்று உபதேசம் செய்துள்ளனர்.

அப்பர் பெருமான் கச்சியம்பதியைப் பற்றிப் பாடிய தாண்டகப் பதிகங்கள் இரண்டுள. தாண்டகம் என்பது பற்றிப் பல வகைக் கருத்துகள் உண்டு. அவற்றின் விரிவு இங்கு வேண்டா. சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறவேண்டுமானால், தாண்டகம்

---

அருந்திறல் - அரிய வன்மை. அமரர் - தேவர். அயன் - பிரமன். பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி, என்பன. புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. அறிப்புறும் - அறிவுறும். புந்தி - அறிவு. முனிவு - வெறுப்பு. ஆர்ப்பது - கட்டுவது. உறுத்து-வருத்தி. எந்தமை-எங்களை.

என்பதை ஆசிரிய விருத்தத்துள் அடக்கலாம். ஓர் அடியில் ஆறு சீர்கள் இருப்பின் குறுந்தாண்டகம் எனலாம். எட்டுச் சீர்கள் இருப்பின் நெடுந்தாண்டகம் என்னலாம். திருக்கச்சித் தாண்டகங்கள் இரண்டும் எண் சீரால் வந்தவை. அப்பர் பெருமான்தான் தாண்டகம் பாடுவதில் வல்லவர் என்னும் காரணத்தால், அவர் தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் என்று போற்றப்படுவர். இவரே முதல் முதல் தோத்திர வடிவில் தாண்டகம் பாடியவர். இத்தாண்டகங்களைச் சுத்தாங்கமாக அரிகாம்போதியில் ஓதுவார்கள் பாடிவருகின்றனர். சிலர் பண்முறையில் பியாகடை இசையிலும் பாடுவதும் உண்டு.

முதல் திருத்தாண்டகப் பதிகத்தின் ஒவ்வோர் பாட்டின் ஈறும் "அவன் ஏகம்பன்காண் என் எண்ணத்தானே" என்று முடியும். இதில் ஒரு தாண்டகம் முழுவடிவில் கிடைத்திலது.

இறைவனுடைய சிறப்பு இயல்புகளைக் குறிப்பிடும்போது "பணிந்து எழுவார் பாவமும் வினையும் போகத் துரந்தவன்" "மலர்தூவி நினைந்தெழுவார் உள்ளம் நீங்காது இருந்தவன்" "துணை என்று தொழுவார் உள்ளம் போற்றவன்" "சித்தம் ஆரத் திருவடியே உள்கி நினைந்து எழுவார் உள்ளம் ஏயவன்" "அடைவார் தங்கள் பற்றவன்" "பரவி நினைந்து எழுவார் தம்பால் கசிந்தவன்" "முழங்கி உரும் எனத் தோன்றும் மழையாய் மின்னி இடித்தவன்" "மனம் உருகி நினையாதார்க்கு வஞ்சன்" "அஞ்செழுத்து நினைவார்க்கு என்றும் மருந்தவன்" "விம்மா நின்று

---

துரந்தவன் - நீக்கியவன், போற்றவன் - காப்பவன், உள்கி - சிந்தித்து, உயவன் - பொருந்தியவன், பரவி - போற்றி. உரும் - இடி. அஞ்செழுத்து, நமசிவாய மந்திரம், விம்மா - தேம்பி.

அழுவார்கட்கு அளிப்பான்'' ''வான் பிணிகள் தீரும் வண்ணம் வானகமும், மண்ணகமும் மற்றும் ஆகிப் பரந்தவன்'' என்று எடுத்து இயம்பியுள்ளனர்.

இப் பதிகத்தில் திருவையாறு, திருவிடைமருதூர் தலங்கள் இணைத்துப் பாடப்பட்டுள்ளன. திருக்கச்சித் தலம் எழில் ஆரும் பொழில்கச்சி என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்துள்ள திருத்தாண்டகப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் கூட ''ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தானே'' என்றே முடிவுற்று மிளிர்கிறது.

இறைவனது இயல்பைச், சிறப்பு முறையில் ''ஓங்காரத்து ஒருவன்'', ''உணர்மெய்ஞ்ஞானம் விரித்தவன்'' ''வியன் உலகில் பல் உயிரை விதியினாலே தெரித்தவன்,'' ''சிறந்தடியார் சிந்தை செய்யும் பேரவன்'' ''பேராயிரங்கள் ஏத்தும் பெரியவன்'' ''வாதை உறும் பிணியைத் தீர்க்கும் மருந்தவன்'' ''சமயம் அவை ஆறினுக்கும் தலைவன்'' ''தானே ஆய இமையவன்'' ''தொண்டுபடு தொண்டர் துயர் தீர்ப்பான்''

> '' நேசன்காண் நேசர்க்கு நேசம் தன்பால்
> இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக்
> கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
> குடிகொண்ட குழகன் ''

என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளனர்.

---

வான் - வலிமை, பிணி - நோய் எழில் - அழகு, ஆரும் - நிறைந்த. பொழில் - சோலை. ஓங்காரம் - ஓம் எனும் பிரணவம், வியன் - பரந்த, குழகன் - அழகன். சிவனையும், விஷ்ணுவையும், சத்தியையும், கணபதியையும், முருகனையும், சூரியனையும், தனித்தனி வழிபடும் முறையில் சமயம் ஆறு ஆயின.

சிவபெருமானே தேவர்கள் உள்பட எல்லா உயிர்களையும் படைப்பவன். பிறர் படைக்கின்றனர் என்பது உபசாரமே அன்றி, உண்மை அன்று. பிரமனைப் படைத்தவன் திருமால் என்பது உலக வழக்கு. உண்மையில் பிரமனைப் படைத்தவன் சிவபெருமானே ஆவான். இந்த உண்மையினை அப்பர் பெருமானார், "மறையவனைப் பயந்தோன் காண்" என்று உணர்த்தியுள்ளதைக் காண்க. திருமழிசை ஆழ்வார்,

"நான்முகனை நாரா யணன்படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்"

என்று பாடி இருத்தல் ஆழ்வார் திருமால்மீது கொண்ட பெரும் பற்றினால் என்க. சிவபெருமான் பிரமனைப் படைத்தான் என்று கண்டபோது, அப்பிரமன் சங்கரனைப் படைத்தான் என்பதை ஏற்க முடியுமோ?

இரண்டாவது தாண்டகப் பதிகத்தில், திருவானைக்கா இறைவர், சிலந்திக்கு அருள் செய்து அதனைச் சோழ மன்னனாகச் செய்த குறிப்பை,

"பண்டுபல சருகால் பந்தர்
பயின்றநூல் சிலந்திக்குப் பாராள் செல்வம் ஈந்தவன்காண்"

என்று பாடிக் காட்டியுள்ளனர்.

இராவணனைக் காலால் இறைவர் அழுத்தினாரேனும், அவனது பாடல் கேட்டு இரக்கம் காட்டி, வாள் ஈந்ததை "அவன் தன் வாயில் இன்னிசை கேட்டு இலங்கு ஒளிவாள் ஈந்தோன் கச்சி ஏகம்பன்" என்று பாடியுள்ளனர்.

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டாங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்க்கும் தேவன் தான்காண்
திசைஅனைத்தும் தொழுதேத்தக் கலைமான் கையில்

பொறுத்தான்காண் புகல்இடத்தை நலிய வந்த
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள் நால்அஞ்
சிறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன்என் எண்ணத் தானே.

முந்தைகாண் மூவரினும் முதல்ஆ னான்காண்
மூஇலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவன்அவன்காண் செங்கண்மால் விடைஒன் றேறும்
எந்தைகாண் எழில்ஆரும் பொழில்ஆர் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே.

அப்பர் பெருமானுடைய திருத்தாண்டகங்கள் தமிழால் அர்ச்சனை செய்யக்கூடும் என்பதை அறிவிக்கும் முறையில் அமைந்துள்ளன. வடமொழியின் அர்ச்சனைகள் இறைவன் திருப்பெயர்களைக் கூறி நம என்று முடிவு பெறுகின்றன. அதேபோலத் தமிழ் மந்திரங்களாம் திருத்தாண்டகங்களும் இறைவனுடைய திருப்பெயர்களைக் கூறிக் காண், கண்டாய், போற்றி, போலும், என்று முடிவுறுகின்றன. திருஞான சம்பந்தர், இறைவன் திருவடியிகளில் வடமொழி அர்ச்சனையும், தென்மொழி அர்ச்சனையும் செய்யப்பட்டதை "வடசொலும் தென்சொலும் தாள் நீழல் சேர" என்று அறிவுறுத்தி இருத்தல் காண்க.

---

செறுத்தான் - அடக்கினான். நலிய - வருத்த. நால் ஐந்து - இருபது. முந்தை - எல்லார்க்கும் முற்பட்டவன். தாதை - தந்தை. மால் - திருமால், விடை - இடபம். இறுத்தான் - நசுக்கினான், மூவர் - பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், தண்கடமாமுகத்தினான் - குளிர்ந்த மதம் பொழியும் யானை முகமுடைய கணபதி. எந்தை - எம்தந்தை.

ஈண்டு அப்பர் ஏகாம்பரநாதரைக் கூற்று வணைக் குமைத்த கோன் காண் என்று போற்றிப் புகழ்ந்து பாடுகிறார். இப்படி ஒவ்வொன்றாக இறைவனுடைய திருப்பெயர்களைச் சொல்லி ஒவ்வொரு மலரை இட்டு அர்ச்சனை நடத்தலாம் அன்றோ? இவ்வாறு "தாண்டக மூலமும், மாணிக்கவாசகர் பாடிய போற்றித் திருவகவல் மூலமும் அர்ச்சனை நடத்துக" என்று அர்ச்சகரைக் கேட்டால் அவர், தம்மை இம்முறையில் தயார் செய்துகொண்டு தமிழில் அர்ச்சனை செய்ய முன் வருவர். கேளாதது நம் தவறு. இனியாகிலும் நம் அன்பர்கள் கோயில் அர்ச்சகர்களைத் தமிழால் அர்ச்சனை நடத்தக் கேட்பார்களாக. அப்படி அவர்கள் நடத்த இணங்க வில்லை என்றால், கோயில் மண்டபத்தில், குளக் கரையில், ஓர் ஊதுபத்தியைக் கொளுத்திக்கொண்டு, மலர்களைப் பறித்து வைத்துக்கொண்டு, இறைவனது ஒவ்வொரு திருப்பெயரைச் சொல்லி ஒவ்வொரு மலர் இட்டு அர்ச்சனை நடத்தவும்.

சுந்தரர் இத்தலத்தைப் பற்றிப் பாடிய பதிகம் அவரது வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியை நன்கு உணர்த்துவதாகும். அதாவது சுந்தரர், இழந்த கண்பார்வையைப் பெற்ற குறிப்பை அறிவிப்பதாகும். இதனை இப்பதிகப் பாடல்களின் ஈறுதோறும் "கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே" என்று கூறி இருப்பது கொண்டு உணரலாம். இத் தலத்து இறைவியின் பெயர் ஏலவார் குழலி என்பதை "ஏலவார் குழலாள் உமை நங்கை" என்று இப் பதிகத்தில் வரும் வரியால் அறியலாம். மேலும், இப் பதிகம் இறைவி இப்பெயருடன் ஏகம்பனை வழிபட்டதையும் அழகுடன் "உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப்பட்ட காலகாலன் கம்பன் எம்மான்"

---

ஏலம் - மயிர்ச்சாந்து. வார் - நீண்ட. குழல் - கூந்தல். ஏத்தி - போற்றி. காலகாலன் - இயமனுக்கும் இயமன்.

என்றும், "அற்றம் இல்புகழாள் உமை நங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற கற்றைவார் சடைக் கம்பன்" என்றும், "வரிகொள் வெள் வளையாள் உமை நங்கை மருவி ஏத்தி வழிபடப்பெற்ற பெரிய கம்பன்" என்றும், "கெண்டையம் தடம் கண் உமை நங்கை கெழுமியேத்தி வழிபடப்பெற்ற கண்ட நஞ்சுடைக் கம்பன்" என்றும், "எல்லையில் புகழாள் உமை நங்கை" என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற நல்ல கம்பன்" என்றும், "மங்கை நங்கை மலைமகள் கண்டு மருவி ஏத்தி வழிபடப்பெற்ற கம்பன்" என்றும், "எண்ணில் தொல் புகழாள் உமை நங்கை" என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற கண்ணு மூன்றுடைய கம்பன்" என்றும், "அந்த மில் புகழாள் உமை நங்கை ஆதரித்து வழிபடப் பெற்ற கந்தவார் சடைக் கம்பன்" என்றும், "பரந்த தொல் புகழாள் உமை நங்கை பரவி ஏத்தி வழிபடப் பெற்ற கரங்கள் எட்டுடைக் கம்பன்" என்றும் பாடிக் காட்டுகின்றது.

இப்பதிகத்தில் இறைவி இறைவனை, வழிபட்ட முறையும், வழிபட்டபோது இறைவன் செய்த திருவிளையாட்டையும் மிக அழகுற,

"எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளம் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி ஓடித் தழுவவெ ளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே"

---

அற்றம் - அழிவு, மருவி - அணுகி. தடம் - விசாலமான. கெழுமி - அணுகி. பரவி - போற்றி. எம்மான் - எம்பெருமான். கந்தம் - வாசனை. எள்கல் - இகழ்தல். இமையவர் கோன் - தேவர் தலைவன் (சிவபெருமான்). உள்கி - நினைந்து. உகந்து-விரும்பி. நின்றவா-நின்றதை. வெருட்டிட-பயமுறுத்த. வெருவி - அஞ்சி. வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற இறைவி.

என்று பாடி இருப்பதையும் காண்க. இக்காட்சியைத் திருக்காஞ்சியில் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் கருவறையில் (மூலட்டானத்தில்) காணலாம்.

இப்பதிகத்தில் சுந்தரர் இறைவனைப் பற்றிப் புகழ்ந்து கூறுகையில்,

"அமரர் தொழுதேத்தும் சீலம்தான் பெரிதும் உடையான்"

"சிந்திப்பார் அவர்கள் சிந்தையுள்ளான்"

"உற்றவர்க்கு உதவும் பெருமான்"

"பற்றினார்க்கு என்றும் பற்றவன்"

"பாவிப்பார் மனம் பாவிக் கொண்டான்"

"அல்லல் தீர்த்து அருள் செய்யவல்லான்"

"சாமவேதம் பெரிதும் உகப்பான்"

"நண்ணினார்க்கு என்றும் நல்லவன்"

"சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன்"

"பந்தித்தவினை பற்றறுப்பான்"

"பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவான்"

என்று கூறியுள்ளனர்.

இப்பதிகத்தில் வரும் நல்ல கம்பர், உருத்திரனால் பூசிக்கப்பட்டவர். கள்ளக் கம்பர், திருமாலால் பூசிக்கப்பட்டவர்.

சுந்தரர் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ள பதிகம் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். இதன் பண் தக்கேசி. இப்பண்ணை இக்காலத்துக் காம்போதி இராகத்தோடு ஒருவாறு ஒப்பிடலாம்.

---

சீலம் - ஒழுக்கம். உற்றவர் - வந்தடைந்தவர். பரவி - துதித்து. அல்லல் - துயர். உகப்பான் - விரும்புபவன். நண்ணினார் - நெருங்கியவர். பந்தித்த - கட்டிய.

## 2. திருக்கச்சி மேற்றளி

இத்தலம் திருக்கச்சி ஏகம்பத்திற்குத் தென் மேற்கே கல் சாலையில் ஏறக்குறைய ஒரு கல் தொலைவில் உள்ளது. இத் தலம் ஸ்ரீகாஞ்சிமேற்றளி, திருமேற்றளி என்றும் வழங்கப்பெறும். பதிகத்தில் திருமேற்றளி என்றே உளது. இத்தலம் திருக்கச்சி யின் மேற்கே இருத்தலின், திருக்கச்சி மேற்றளி (மேல் + தளி-கோவில்) என்ற பெயரைப் பெற்றுளது.

இத்தலத்தில் திருமால் சிவசாரூப்பியம் (வடிவம்) பெறத் தவம் புரிந்தனர், அந்நிலையில் திருஞான சம்பந்தர் இங்கு எழுந்தருளித் திருமேல்தளி நாதர் மீது பதிகம் பாடினார். அப்பதிகத்தைக் கேட்ட திருமால் உருகிச் சிவலிங்க வடிவாயினார். ஆகவே, திருமால் தாம் விரும்பியவாறு சிவசாரூப்பியம் பெற்றனர். அதாவது சிவலிங்க வடிவம் ஆயினர். இச் சிவசாரூப்பிய இலிங்கமே ஓத உருகீசர் என்ற திருப்பெயருடையது. இவ்விலிங்கம் உள்ளதும் ஒரு சிவ சந்நிதி. திருமேல்தளி நாதர் சந்நிதி, மற்றொரு சந்நிதி. ஆக இரண்டு சந்நிதிகள் இங்கு உள. திருஞான சம்பந்தர் பதிகம் பாடினார் என்பது செவி மரபே அன்றி, அவர் பாடிய பதிகம் கிடைத்திலது. திருஞான சம்பந்தர் பாடத் திருமால் உருகிச் சிவ சாரூப்பியம் அடைந்தனர் என்பதற்குச் சான்று பெரிய புராணத்திலும் இல்லை. ஆனால், காஞ்சி புராணத்தில் வரும்

> "தோட்ட லங்கலான் தொழப்புகும் முத்தமிழ் விரகர்
> பாட்ட லங்கலால் பரஞ்சுடர் திருஉருப் பெற்றான்"

என்னும் பாடல்தான் இதற்குச் சான்று.

---

அலங்கல் - மாலை முத்தமிழ் விரகர் - இயல், இசை, நாடகத் தமிழில் அறிவு நிறைந்த திருஞான சம்பந்தர்.

திருமேல்தளி நாதர் கோயிலுக்கும், திருமால் சிவ சாரூபம் பெற்ற உருவமான ஓத உருகீசுவரர் கோவிலுக்கும் கிழக்குத் திருவீதியில் திருஞான சம்பந்தர் கோவில் உளது. திருஞான சம்பந்தர் பாடிய பாடலைக் கேட்ட முத்தீசர் சந்நிதியும் உண்டு. ஆனால் சம்பந்தர் பாடிய பதிகம் கிடைத்திலது. திருஞான சம்பந்தருக்குப் பிள்ளையார் என்னும் பெயரும் உண்டு. இப் பிள்ளையார் இங்கு எழுந்தருளியதால் இவ்விடம் பிள்ளையார் பாளையம், பிள்ளைப் பாளையம் என்று வழங்கப்படுவதாயிற்று. இங்குச் செங்குந்த முதலிமார் மரபினர் மிகுதியாக உள்ளனர். காஞ்சிக்குச் சென்றால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம் என்பதை நேரில் கண்டு உண்மையினை உணரலாம். தறியை ஓட்டும் போது காலால் அசைத்து ஓட்டுதலின் அதுவே ஈண்டுக் காலாட்டுதல் என்று கூறப்பட்டது. இத்தலத்து இறைவர் திருமேல்தளி நாதர், தேவியார் காமாட்சி அம்மையார் (திருமேற்றளிநாயகி என்றும் கூறுவர்) தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம். இத்தலத்திற்கு அப்பர் பெருமான் பாடியுள்ள திருநேரிசைப் பதிகம் ஒன்றும், சுந்தரர் பாடியிள்ள பதிகம் ஒன்றும் ஆக இரண்டே பதிகங்கள் உள்ளன.

இத்தலத்துக் கல்வெட்டுகளின் மூலம் இறைவர் திருப்பெயர் திருமேல்தளி உடைய நாயனார் என்பதும், திருக்கோயில் திருமேல்தளித் திருக்கோயில் என்பதும் அறிய வருகின்றன. மேலும், கல்வெட்டுகளால் அறிய வருவன, ஒவ்வொரு தறிக்கும் ஐந்தரைப் பணம் செங்குந்தரிடமிருந்து பெற்றுத் திருக்கோயில் தினசரி வழிபாட்டிற்கும் விளக்கிற்கும் பயன் படுத்தப்பட்டது என்பதும், கோயிலைச் சார்ந்து ஒரு மடம் இருந்தது என்பதும், திருவேகம்பன் என்னும் பெயரில் ஒரு தெரு இருந்தது என்பதும் ஏகாம்பரநாதர் கோயில் பழுது

பார்த்தற்கு இரண்டு ஊர்களின் வரிப் பணம் ஒதுக்கப்பட்டது என்பதும், சந்திரகிரியில் அப்பராச உடையார் என்னும் கவிஞர் இருந்தார் என்பதும் ஆகும். இத்தலம் முன்பு சமண ஆலயமாக இருந்து, பின்பு சைவ ஆலயமாக மாறியது என்று கூறும் செவிமரபு செய்தியும் உண்டு.

அப்பர் பாடியுள்ள இத்தலத்துத் திருப்பதிகத்தின் வழி நாம் அறிவன பின் வருவன: இத்தலத்துத் திருப்பதிகம் திருநேரிசை. இதன் இலக்கணமும் பண்ணும் முன்பு குறிக்கப்பட்டுள்ளன. ஆண்டுக் காண்க.

இப்பதிகத்தில் கச்சிமேல்தளி "பாடல் ஆடல் இலங்குமேல்தளி" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. முருகனைப் பற்றிய குறிப்பு இரண்டாவது பாட்டில் "நல் கடம்பன்" (நல்ல கடம்ப மலர்மாலை அணிந்த முருகன்) என்ற தொடராலும் விளங்குகிறது. எட்டாவது பாட்டில் வரும் "சேந்தனை மகனாக் கொண்டார்" என்னும் வரியாலும் அறியவருகிறது. முருகனை "நல் கடம்பன்" என்று அப்பர் பாராட்டும் முறையைக் காண்க. ஈண்டுச் சேந்தன் ஆவான் செந்நிறத்தனை முருகன். இறைவர்க்குத் திருமாலிடத்தில் மகிழ்ச்சி உண்டு என்பதை "மாயன் தன்னை மகிழ்ந்தனர்" என்னும் வரியால் தெரிந்து கொள்ளலாம். சிவபெருமானுர் மதுரையில் கௌரியின் பொருட்டு விருத்த குமார பாலர் ஆயினுர். கிழவனுகவும், பின் வாலிபனுவும், அதன்பின் குழந்தையாகவும் கௌரிக்குக் காட்சி தந்தனர். இந்தக் குறிப்பு "விருத்த ராகும் பாலனுர்" என்னும் வரி உணர்த்தி நிற்கிறது. இறைவன் உயிர் இனங்கட்குத் தலைவர் என்பது பசுபதீ என்னும் பெயர் தோற்றுவிக்கிறது. ஈண்டுப் பசு என்பது உயிர்களையே குறிக்கும்.

சிவபெருமான் இருக்கும் இடத்தை அப்பர் "பண்ணிடைப் பாடி ஆடும் பத்தர்கள் சித்தம் கொண்டார்" என்னும் அடியில் குறிப்பிடுகிறார். இறைவர் எண்ணாகவும், எழுத்தாகவும் உள்ளார் என்பதை "எண்ணிடை யெழுத்தும் ஆனார்" என்னும் தொடர் அறிவிக்கிறது, இறைவர் திருமாலைத் தம் பாகத்தில் கொண்டுள்ளார் என்னும் குறிப்பு, "மண்ணினை உண்ட மாயன் தன்னையோர் பாகங் கொண்டார்" என்னும் தொடரில் காணப்படுகிறது.

"செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாக்
கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரைஇ லாத காஞ்சிமா நகர்தன் உள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேல் தளிய னாரே"

காஞ்சி இயற்கை அழகுடையது என்பதை, "அணிபொழில் கச்சி" (அழகிய சோலைகள் நிறைந்த காஞ்சி) என்பதாலும், கல்விச் செல்வம் நிறைந்தது என்பதை, "கல்வியைக் கரையிலாத காஞ்சி மா நகர்" என்பதாலும் தெரிந்து கொள்ளலாம்.

இத் தலத்துச் சுந்தரர் பதிகத்தைக் கலிநிலைத் துறை என்னலாம். அதாவது, இஃது ஒவ்வோர் அடியும் ஐந்து ஐந்து சீர்களைப் பெற்று வருவது. இந்த ஐந்து சீர்கள் கட்டளைக் கலித்துறை போல வெண்டளை பெற்றிரா. இப்பதிகப் பண் நட்ட ராகம். இதனைப் பந்துவராளி இசை போன்றது என்னலாம்.

சுந்தரர் இத்தலத்துப் பதிகத்தில் இறைவரை நோக்கி "உன்னை அல்லால் இனி ஏத்த மாட்டேனே" என்று உறுதியுடன் கூறுகின்றார். இதனை

---

செல்வி - உமாதேவி. கண்ணி - மாலை. எல்லியை - சூரியனை. இலங்கு - விளங்கு.

ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அமைத்துப் பாடு கின்ருர். இத்துடன் இன்றி "உனையே நினைந்திருந் தேன்" என்றும் பாடுகின்ருர். இறைவர் தம் உளம் புகுந்து போகா நிலையினையும் "வந்தாய் போய் அறியாய் மனமே புகுந்து நின்ற சிந்தாய்" என்று பாடிக் காட்டி யுள்ளார்.

இவர் இறைவரைக் கேட்பது பிறவாமையே என்பதை,

"ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்"

என்னும் வரியால் உணரலாம்.

சிவபெருமான் சுந்தரர்பால் பெரிதும் அன்புடை யார் என்பது, அவர் நினையாத போதும் அவர் சுந்தரர் உள்ளத்தில் புகுந்ததனுல் புலனுகிறது. இதனைச் சுந்தரர்,

"மோருந் தோர்ஒருகால் நினையாதி ருந்தாலும்
வேருவந்தென் உள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே"

என்று பாடியுள்ளனர். சுந்தரர் துன்பம் இன்றி இன்பமாக வாழ்ந்ததை,

"உற்ருர் சுற்றம்எனும் அது விட்டு நுன்அடைந்தேன்
எற்ருல் என்குறைவென் இடரைத்து றந்தொழிந்தேன்"

என்று பாடி உணர்த்தி யுள்ளனர்.

சுந்தரர் தம் பெற்ருேரை இழந்து நின்ற நிலையில் இப்பதிகத்தைப் பாடியுள்ளனர் என்பது,

"எம்மான் எம்மனைஎன் றவர் இட்டி றந்தொழிந்தார்
மெய்ம்மால் ஆயினதீர்த் தருள் செய்யும் மெய்ப்பொருளே"

என்று பாடுதலால் தெரிகிறது.

---

மோருந்து - தனித்து. ஆள் + தான் = ஆட்டான். எம்மான் - தந்தை. அனை - தாய். எற்ருல் - எதனுல்.

திருமேற்றளியைப்பற்றிக் கூறுகையில்,

"சேட்டார் மாளிகைசூழ் திருமேல்தளி"
"சேருர் தண்கழனித் திருமேல்தளி"
"செய்யார் பைங்கமலத் திருமேல்தளி"
"திரைஆர் தண்கழனித் திருமேல்தளி"
"சிலைஆர் மாமதில்சூழ் திருமேல்தளி"
"சீரும் புறவில் திருமேல்தளி"

என்று பாடி உணர்த்தியுள்ளார்.

இறைவனைப்பற்றிக் குறிப்பிடும்போது "நொந்தா ஒண்சுடரே", "மெய்ப்பொருளே" என்று பலவாறு விளித்துள்ளனர் சுந்தரர்.

காஞ்சிபுரம் பல்லவனது தலைநகரம் என்றதனை யும் மதில்கள் சூழ்ந்த காஞ்சி என்பதையும்,

"பாரூர் பல்லவனூர் மதில்காஞ்சி மாநகர்"

என்னும் வரும் வரி அறிவிக்கின்றது.

இப்பதிகத்தை முற்றிலும் பாடுபவர் பெறும் பயன் இன்னது என்பது,

"ஆரூரன்அடியான் அடித்தொண்டன்ஆரூரன் சொன்ன
சீரூர் பாடல் வல்லார் சிவலோகம் சேர்வாரே"

என்னும் வரிகளால் தெரிய வருகின்றது.

இறைவரை நாம் நினைத்தால் இறைவர் நம் உடலில் புகுவர். இதனைச் சுந்தரர் தம்மேல் வைத்துப் பாடுகையில்,

" நானேல் உன்அடியே நினைந்தேன்நினைதலுமே
ஊனேர் இவ்வுடலம் புகுந்தாய் என் ஒண்சுடரே "

என்று பாடியுள்ளனர்.

---

சேடு - பெருமை. செய் - வயல். திரை - அலை. சிலை - கல். புறவு - இடம். ஊன் - தசை. ஏர் - அழகு.

நம் ஆரூரர் இறைவரை உயிர் உள்ள அளவும் மறவாதவர் என்பதை "உன்னை அல்லால் உரையேன் நா அதனால் உடலில் உயிர் உள்ளளவும்" என்று உறுதியுடன் கூறுகின்றார். இறைவரை நினைந்தால் துன்பம் ஒழியும் என்பதையும் சுந்தரர்,

"நிலையா நின் அடியே நினைந் தேன் நினைதலுமே
தலைவா நின்நினையப் பணித் தாய்ச லம்ஒழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ் திரு மேல்த ளிஉறையும்
மலையே உன்னைஅல்லால் மகிழ்ந் தேத்த மாட்டேனே"

என்று பாடி அறிவித்துள்ளார்.

---

## 3. திருவோணகாந்தன்தளி

இத்தலம் திருஏகாம்பரநாதர் கோவிலுக்கு மேற்கே, சர்வதீர்த்தக் குளத்திலிருந்து சிறிது வட மேற்கே, நாலு பர்லாங்கு தூரத்தில் உளது. இத் தலம் ஓணன், காந்தன் என்னும் இரு அசுரர்கள் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. தளி என்னும் சொல் கோயில் என்னும் பொருளது. இவ் வசுரர்கள் தனித்தனிப் பூசித்த சிவ லிங்கங்கள் இங்கு உண்டு. ஆலயம் ஒன்றே என்றாலும், இரண்டு சிவலிங்கங்களுக்குத் தனித்தனி மூலட் டானங்கள் உண்டு. இறைவர் முறையே ஓணேஸ் வரர், காந்தேஸ்வரர் என்றும், தேவியார் காமாட்சி அம்மையார் என்றும் அழைக்கப் பெறுவர். இதற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றே உளது.

இப்பதிகம் எண்சீர் விருத்தத்தால் ஆனது. ஒவ்வோர் அடியிலும் எட்டுச் சீர்கள் இருப்பதைக் காண்க. இப்பதிகத்தின் பண் இந்தளம். இப் பண்ணை இக் காலத்தில் இலளித பஞ்சமியிலும், நாதநாமக் கிரியையிலும் பாடுகின்றனர்.

---

பணித்தாய் - கட்டளை இட்டாய். சலம் - துன்பம். சிலை - கல். மா - பெரிய. ஏத்த - போற்ற.

இத்தலத்து இறைவரைச் சுந்தரர் பாடிப் பொன் பெற்றவர். இதனைப் பெரிய புராணம்,

"ஓண காந்தன் தளிமேவும் ஒருவர் தம்மை உரிமையுடன்
பேணி அமைந்த தோழமையால் பெருகும் அடிமைத்
திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி நெய்யும் பாலும் கலைவிளங்கும்
யாணர்ப் பதிகம் எடுத்தேத்தி எண்ணில் நிதிபெற்
றினிதிருந்தார்".

என்று எடுத்து இயம்புதல் காணலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகத்தின் வழி நாம் அறிவன : இப்பதிகம் "கலை விளங்கும் யாணர்ப் பதிகம்" எனச் சேக்கிழரால் போற்றப்பட்டுள்ளது. இப்பதிகம் இறைவரைத் தமக்குப் பொன் அருள வேண்டும் என்று சுந்தரர் வேண்டினர் என்னும் குறிப்பைத் தன்னகத்தே கொண்டுளது. இதனை முதல் பாட்டிலேயே நன்கு அறிவிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

"நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசனை செய்யல் உற்றார்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழல்அடி தொழு துய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட ஆடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறென் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளிஉ ளீரே".

என்னும் பாடலைக் காண்க.

---

பேணி - போற்றி, யாணர் - வளமை, அழகு, பதிகம் - பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்டது, நிதி - செல்வம், ஏத்தி - போற்றி, நித்தல் - தினமும், கழல் - வீரத் தண்டை, காணம் - பொன். ஐவர் - பஞ்சேந்திரியங்கள். (மெய், வாய், கண், மூக்கு, செவி) உய்யும் ஆறு - பிழைக்கும் வழி.

இரண்டாவது பாடலில் சுந்தரர், இறைவர் தம் தோழர் என்னும் முறையில், சாகசப் பேச்சுகளைப் பாடி இறைவரது குடும்பத்தையே ஏசுவது போலப் பாடுகிறார். அதாவது "தலையில் கங்காதேவி இருந்து கொண்டு, சககளத்தியாம் உமாதேவிக்குப் பயந்து பேசாமல் இருக்கிறாள். கணபதி பெருவயிறன். முருகன் சிறுவன். இறைவியோ, உம்மை ஒழிந்து அடியவரை ஆளுவாள் அல்லள். ஆகவே, உங்களுக்குத் தொண்டு செய்து யாது பயன்? எனவே தொண்டு செய்ய மாட்டோம்" என்பதாம். இக் கருத்துகள் அடங்கிய பாடலே,

"திங்கள் தங்கு சடைகள் மேலோர்
திரைகள் வந்து புரள விசும்
கங்கை யாளேல் வாய்தி றவ்வாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யால்கோன் தட்டி ஆளாள்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளிஉ ளீரே"

என்பது.

சுந்தரர் இங்குச் சென்று பதிகம் பாடும்போது பதிகத்தின்மீது இருந்த வேட்கையினால், பாடலைக் கேட்டுக் கொண்டு இறைவர் சும்மா இருந்தனர். இதனை உணர்ந்த நம்பி ஆரூரர்,

"வல்ல தெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப தென்நீர்

திங்கள் - சந்திரன். திரை - அலை, அம் - அழகிய, தலைவன் - கணவன், கோன்தட்டி ஆளாள் - கணவனது ஆணையைக் கடந்து ஆட்கொள்ள மாட்டாள், ஆட்செய்தல் - தொண்டுசெய்தல்.

பல்லை உக்க படுத லையில்
பகல் எலாம் போய்ப் பலிதி ரிந்திங்
கொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓண காந்தன் தளிஉ ளீரே"

"கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறைப டாமே
ஆடிப் பாடி அழுது நெக்கங்
கன்பு டையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும்
சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றும் தாரீர்
ஓண காந்தன் தளிஉ ளீரே".

"பொய்ம்மை யாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்
மேலை நாள்ஒன் றிடவும் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை அன்றே எம்பெரு மான்
ஓண காந்தன் தளிஉ ளீரே"

என்று பாடித் தமக்குத் திருவருள்புரியத் தூண்டினர்.

இறைவர் சிறப்புடைய மனையாளையும், ஊரையும் பெற்றிருந்தும் கூடப் பிச்சை எடுத்தல் ஏனோ என்பதை,

---

உக்க - நீங்கிய, படுதலை - அழிந்த பிரமன் தலை ஓடு, பலி - பிச்சை, ஒல்லை - விரைவில். பாணி - தாளம், நெக்கு - உருகி, ஓரீர் - உணரமாட்டீர், எய்த்தாலும் - இளைத்தாலும், பற்று - ஆதரவு, போது - பொழுது, இடவும் கில்லீர் - கொடுக்கவும் இல்லை, ஓதிர் - சொல்லவில்லை, உம்மை - முன் பிறப்பில், புரம் - வெளி, அகம் - உள்,

"வாரிரும்குழல் வாள்நெடுங்கண்
மலைமகள்மது விம்மு கொன்றைத்
தாரிரும்தட மார்பும் நீங்காத்
தையலாள்உல குய்ய வைத்த
காரிரும்பொழில் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே
ஓண காந்தன் தளிஉளீரே".

என்று பாடி வினவினர்.

முன்பு இரண்டாம் பாட்டில், இன்னின்ன காரணங்களால் உமக்கு ஆள் செய்ய முடியாது என்று பாடிய இவர், ஒரு பாட்டில் உம்மிடம் அன்புடையவர்கள் உம்மால் என்ன பெற முடியும்? உம்மிடம் பெறத்தக்க பொருள்கள் உம்மிடம் இல்லையே என்று இகழ்வது போலப் புகழ்வாராய்,

"வாரம் ஆகித் திருவடிக்குப்
பணிசெய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம் பாம்பு வாழ்வ தாரூர்
ஒற்றி ஊரேல் உம்ம தன்று
தாரம் ஆகக் கங்கை யாளைச்
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓண காந்தன் தளிஉளீரே".

என்று நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளனர்.

---

வாரிரும் குழல் - நீண்ட கரிய கூந்தல், வாள் - ஒளி, மதுவிம்மு - இன்பம் பொங்கும், தார் இரும் - மாலை அணிந்த பெரிய, தடம் - அகன்ற, காரிரும் பொழில் - கரிய பெரிய சோலை, காமக்கோட்டம் - காமாட்சியம்மன் கோயில். வாரம் - அன்பு. இங்கு ஆரூர் என்பது, திருவாரூர் என்ற பொருளையும், ஆருடைய ஊர்? உம்முடைய ஊர் அன்று என்னும் பொருளையும் கொண்டுளது. ஒற்றியூர் என்பது திருஒற்றி ஊர் என்னும் பொருளையும், உரிமை அடமானம் வைக்கப் பட்ட ஊர் என்னும் பொருளையும் ஈண்டுப் பெற்றுளது.

இப்பாடலில் ஒற்றியூர் என்பது திருஒற்றியூர் என்றும், உரிமை அடமானமாக வைக்கப்பட்ட ஊர் என்றும் இரண்டு பொருள்தரும் நிலையில் நகைச் சுவை அமைய, பாடி இருப்பதைக் கீழ்வரும் பாடலி லும் காண்க.

> "பெற்ற போழ்தும் பெருத போழ்தும்
> பேணி உய்கழல் ஏத்து வார்கள்
> மற்ருேர் பற்றிலர் என்றி ரங்கி
> மதிஉ டையவர் செய்கை செய்யீர்
> அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
> ஆவத் காலத் தடிகேள் உம்மை
> ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
> ஓண காந்தன் தளிஉ ளீரே".

இதிலும் நகைச்சுவை இருப்பதை ஊன்றி நோக்குக.

இப் பதிகத்தில் "இறைவா! நான் ஊக்கக் குறைவு உடையவன். காமம், குரோதம், லோபம், மதம் உடையவன். ஆகவே, உம்மை நெருங்க அஞ்சுகின்றேன். ஆனல், உம் திருவடிகளை நினைந்து உய்வேன்" என்னும் குறிப்பினையும்,

> "வலையம் வைத்த கூற்றம் மீவான்
> வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
> சிலைஅ மைத்த சிந்தை யாலே
> திருவ டிதொழு துய்யின் அல்லால்

---

பேணி - போற்றி. ஏத்துவார் - வாழ்த்திப் போற்றுவார். கழல்-திருவடி. அற்றபோழ்தும்-ஒன்றும் இல்லாத போதும். அலந்தபோழ்தும் - வழிகாணுது திரிந்தபோதும். ஆவத் காலம் - ஆபத்துக் காலம். வலையம் - வலை (பாசக்கயிறு). கூற்றம்-இயமன் மீவான்-வானத்தின் மீது. சிலை அமைத்த- கல்போல அமைத்த, உய்யின் - பிழைப்பின்.

கலைஅமைத்த காமச் செற்றக்
குரோத லோபம் மதவர் ஊடை
உலைஅமைத்திங் கொன்ற மாட்டேன்
ஓண காந்தன் தளிஉளீரே ".

என்று பாடி அறிவித்துள்ளார்.

இப்பதிகத்தில் இறைவர் திருநாவலூராரது திருமணத்தில் ஆவணம் காட்டி (அடிமை ஓலை) அடிமை கொண்ட குறிப்புக் குறிக்கப்பட்டுள்ளது. அதனை "ஆவணம் செய்து ஆளும் கொண்ட வரை துகில் லொடு பட்டு வீக்கிக் கோவணம் மேல் கொண்ட வேடம்" என்று ஈற்றுப் பாடலில் வருவது கொண்டு தெளிக.

அடியவர்கள் பண்பைப் பகரும்போது சுந்தரர்,

" பெற்ற போதும் பெறுத போழ்தும்
பேணி உம்கழல் ஏத்து வார்கள்
மற்ருேர் பற்றிலர் ".

என்று குறிப்பிடுகின்ருர்.

இறைவனும் இறைவியும் இன்புற்றிருக்கும் நிலையினை,

" வார்இருங்குழல் வாள்நெடுங்கண்
மலைமகள் மது விம்மு கொன்றைத்
தார்இரும்தடமார்பு நீங்காத் தையலாள்

என்று பாடி மகிழ்கின்ருர்.

காஞ்சியம்பதி "கார் இரும்பொழில் கச்சிமூதூர்" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது மேகம்

---

கலை - நூல். செற்றம் - வெறுப்பு. குரோதம் - பகைமை, லோபம் - கஞ்சபுத்தி, மதவர் - மதம். ஐ - ஐம்பொறிகள், உலை - உலைக்களம் அமைத்து. ஊடு + ஐ எனப் பிரிக்க. ஊடு - சேர்ந்து.

வந்து படியும் கரிய சோலை சூழ்ந்த காஞ்சிபுரமாகிய பழைய ஊர் என்பது.

இப்பதிகத்தைப் பாடுபவர் பாவம் தீரப் பெறுவர் என்பது, "பாவண தமிழ் பத்தும் வல்லார் பறையும் தாம் செய்த பாவம் தானே" என்ற அடியினுல் பெறப்படுகிறது.

இன்னோரன்ன இலக்கியச் சுவையும், வளமும், அழகும் இப்பதிகத்தில் பொருந்தி இருத்தலின், சேக்கிழார் பெருமானுர் இதனை "கலை விளங்கும் யாணர்ப் பதிகம்" என்று குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொருத்தம் தானே!

---

## 4. திருக்கச்சி அனேகதங்காவதம்

இத்தலம் காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலுக்குத் தென்மேற்கே, புத்தேறித் தெருவுக்கு மேற்கே கழனி வெளியில் உள்ளது. காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது என்றும் கூறலாம். இத்தலத்தில் விநாயகர் அனேகபேச்சுரன் என்னும் பெயரால் ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டனர். இத்தலத்தை வணங்குபவரது பேற்றைக் காஞ்சிப் புராணம்,

விநாய கப்பிரான் அருச்சனை புரியவீற் றிருக்கும்
அனேக பேசனை அனேகதங் காவதத் திறைஞ்சின்
இனை வெந்துயர்ப் பிறவிதீர்ந் தென்ஆள் உடையான்
தனது வெள்ளியம் கயிலையில் சார்ந்துவை குவரால்

என்று கூறுகிறது.

---

பாவணம் - பாவடிவாகிய. பறையும் - நீங்கும். துகில் - ஆடை. வரை-எல்லை, வீக்கி-கட்டி. இறைஞ்சின் - வணங்கினுல். இனை - கொடிய. வைகுவர் - தங்கி இருப்பவர்.

இத் தலத்தைக் குபேரனும், முருகப் பெருமானும் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். இங்குள்ள இறைவர் அனேகதங்காவதேஸ்வரர் ஆவார். ஆனால் கல்வெட்டின் மூலம் அணையதங்க உடைய நாயனார் என்று அறிகிறோம். இறைவியின் பெயர் காமாட்சி அம்மை. முதல் குலோத்துங்கன் இத்தலத்திற்கு இரண்டு வேலி நிலம் கொடுத்துள்ளான். இந்நிலம் கைலாசநாதர் கோவிலுக்கு வடக்கே உளது. இக் கோயில் அதிகாரிகள் கோயிலுக்குரிய கைக்கோளர் கட்கு 1400 குழி நிலம் கொடுத்ததும் கல்வெட்டினால் அறிய வருகின்றது. தீர்த்தம் தாணு தீர்த்தம்.

மேலும் கல்வெட்டினால் அறியப்படும் செய்திகள் : முதல் குலோத்துங்கன் திருக்கோயிலுக்கு மேலும் மூன்று வேலி நிலங்கள் இத்தலத்திற்குக் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. அந்நிலம் தாமர்க் கோட்டத்துத் தாமர் நாட்டுத் தாமரில் உள்ளது. கைலாசநாதர் கோயில் சர்வதீர்த்தக் குளத்துக்கு அருகில் இருக்கிறது. இக் கோவிலில் உள்ள நில அறையைச் சுற்றி வருவது ஒரு விசேடம் ஆகும். பாவமும் நீங்கும் என்பர். கைலாசநாதர் கோயில் ராஜசிம்மேஸ்வரம் என்றும் பெயர் பெறும்.

இத்தலத்திற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப்பதிகம் எழுசீர் விருத்தத்தால் ஆனது. ஒவ்வோர் அடியிலும் ஏழு சீர்கள் இருப்பதைக் காண்க. இப்பதிகப் பண் இந்தளம். இப்பண் இக் காலத்தில் நாதநாமக்கிரியையிலும், இலளித பஞ்சமியிலும் பாடப்பட்டு வருகிறது.

இப் பதிகத்தின்மூலம் நாம் அறிவன : இப்பதிகத்தின் மூன்றும் பாடலில் இத்தலத்தின் மாண்பு "மலர்க்கொடிகளில் குயில் கூவும் இடம், மயில்கள் ஆடும் இடம், துன்பம் கொண்ட வினையைத் தீர்க்கும் இடம், அழகிற்கும் செல்வத்திற்கும் இருப்பிடம்"

என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பாட்டிலும், பயிலப் புகுவார் சித்தம் ஒரு நெறி வைத்த இடம் என்றும்,

"திருவான் அடிக்கே வைத்த மனத்தவர்
பத்தர் மனம்கொள வைத்த இடம்"

என்றும் புகழப்பட்டுள்ளது. திருவான் என்போன் திருவாளனாகிய சிவபெருமான்.

ஆறுவது பாட்டிலும், ஏழாவது பாட்டிலும், பத்தாவது பாட்டிலும் முறையே,

"தண்டம் உடைத்தரு மன்தமர் என்தம
ரைச்செயும் வன்துயர் தீர்க்கும்இடம்
பிண்டம் உடைப்பிற வித்தலை நின்று
நினைப்பவர் ஆக்கையை நீக்கும்இடம்"

என்றும்,

"கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழு
தேத்தும் இடம்கதி ரோன்ஒளியால்
விட்ட இடம்விடை ஊர்தி இடம்குயில்
பேடைதன் சேவலோ டாடும்இடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர்ஒரு
மாதவி யோடு மணம்புணரும்
அட்டப் புயங்கப் பிரான் திடம்கலிக்
கச்சி அனேகங் காவதமே

என்றும்,

---

பயில - வாழ. சித்தம் - மனத்தை. ஒருநெறி - ஒருவழி. திருவான் - திருவாளன். தண்டம் - தண்டாயுதம். தருமன் - இயம தருமன். தமர் - யமபடர்கள். என் தமர் - என் சுற்றத்தாராம் சிவனடியார்கள். பிண்டம் - உடம்பு. ஆக்கையை - உடலை (பிறப்பை). ஏத்தும் போற்றும். கதிரோன் - சூரியன் விடை ஊர்தி - இரடபத்தில் ஏறிவரும் சிவபெருமான். அட்டப் புயங்கப் பெருமான்-எட்டுக் கைகளை யுடைய சிவ பெருமான். மட்டு - தேன். மாதவி - மாதவி என்னும் மலர்க்கொடி. புணரும் - சேரும்.

"வீடு பெறப்பல ஊழிகள் நின்று
நினைக்கும் இடம்வினை தீரும்இடம்
பீடு பெறப்பெரி யோர் திடம்கொண்டு
மேவினர் தங்களைக் காக்கும் இடம்"

என்றும் இத்தலத்தின் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எட்டாவது செய்யுளில் இயற்கை வளம்

"குளிர்மாதவி மவ்வல்
குராவகு ளம்குருக் கத்திபுன்னை
அல்லி யிடைப்பெடை வண்டுறங் கும்கலிக்
கச்சி அனேகதங் காவதம்

என்று பாடிக் காட்டப் பட்டுள்ளது.

பேயின் தோற்றம், "குறுநடைக் குழிகண் பகுவாய பேய்" என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

இப்பதிகத்தைப் பாடுவதன் பயன், சிவயோகத்தை அடைவர் என்பது.

"கொடிகள் இடைக் குயில் கூவும் இடம்மயில்
ஆலும் இடம் மழுவா ளுடைய
கடிகொள் புனல்சடை கொண்ட நுதல்கறைக்
கண்டன் இடம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள் வினைப்பகை தீரும் இடம்திரு
ஆகும் இடம் திரு மார்பகலத்
தடிகள் இடம்அழல் வண்ணன் இடம்கலிக்
கச்சி யனேகதங் காவதமே"

---

மவ்வல்-மல்லிகை. குரா-குராமலர். வகுளம்-மகிழம்பூ. அல்லி - பூவின் இதழ். வீடு - மோட்சம். பீடு - பெருமை. வினை - பாவம். கலி - ஆரவாரம். குறுநடை - சிறுநடை. பகுவாய் - பிளந்தவாய். ஆலும் - ஆடும். கடி - விளக்கம். புனல் - கங்கைநீர். நுதல்-நெற்றி. கறை - விஷம். செடி- துன்பம். திரு - செல்வம். அடிகள் - தலைவன். அழல் வண்ணன்-நெருப்புப் போன்ற செந்நிறத்தனை சிவபெருமான்.

## 5. திருக்கச்சிநெறிக்காரைக்காடு

இத்தலம் காஞ்சிபுரம் ஆட்ஸன்பேட்டைக் கடைத் தெருவின் வடகிழக்கில் உள்ள வேப்பங் குளத்திற்கு வடக்கே உள்ளது. இக்கோவில் சித்திர புரம் என்றும் கூறப்பெறும். இதுபோது இக்கோவில் திருக்காலிச்சுரம் அல்லது திருக்காலீசுரர் கோவில் என்று வழங்கப்படுகிறது. இவ்விடம் முன்பு காரை என்னும் மரங்கள் நிறைந்த காடாக இருந்தமையின், கச்சிநெறிக் காரைக்காடு என்னும் பெயரைப் பெற்றது. இந்திரனும் புதனும் இங்குப் பூசித்துப் பேறு பெற்றனர்.

இங்குள்ள இறைவர் சத்திய வாத நாதேசுவரர், காரைத்திருநாதர் என்றும், தேவியார் காமாட்சி அம்மையார் என்றும் அழைக்கப் பெறுவர். கல்வெட்டின் மூலம் இறைவர் திருக்காரைக் காடுடையார் எனப்படுவார். தேவியார் காரைக்குடி அம்மை எனப் படுவார். இங்குள்ள தீர்த்தங்கள் இந்திர தீர்த்தம், காரை தீர்த்தம், சத்திய தீர்த்தம் என்பன. இத்தலத் திற்குத் தெற்கே உள்ள வேப்பங்குளம் பெயரளவில் வேப்பங் குளமே யாலும், நல்ல நீரையுடையது.

காஞ்சிப் புராணத்தில் இத்தலம் சத்திய விரதம் எனப்படும். இறைவர் சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத்திய சங்கற்பர், சத்திய காமர் எனப் படுவர். இங்குள்ள சத்திய தீர்த்தத்தில் மூழ்கியவர் கள் முத்தி அடைவர்; வேண்டியதைப் பெறுவர். இந்திரபுரம் என்றும் இத்தலத்தைக் கூறுவர். இங் குள்ள தீர்த்தத்தில் புதன்கிழமைதோறும் மூழ்கின், பெரும் பயன் உண்டு. இத்தலத்தின் மாண்பை அப்புராணம்,

அற்றைநாள் முதல்அச் சூழல் இந்திர புரமாம் அங்கண்
கற்றைவார் சடையீர் ஓர்கால் கண்ணுறப் பெற்ருேர் தாமும்
வெற்றிவேல் காலன் தன்பால் விரவிடார் கருவில் எய்தார்
இற்றிதன் பெருமை முற்றும் யாவரே இயம்ப வல்லார்"

என்று கூறுகிறது.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப்பதிகம் கொச்சகக் கலிப் பாவால் அமைந்தது. காய்ச் சீர்களாம் மூவகைச் சீர்களை ஒவ்வோர் அடியும் பெற்று, நான்கு அடிகளில் முடிவது கொச்சகக் கலி எனப்படும். இப் பதிகப் பண் பஞ்சமம். இக்காலத்தில் ஆகிரி இராகத்தோடு இதனை ஒருவாறு ஒப்பிடலாம்.

இத்தலத்து இறைவரைத் தேவர்கள் மலர் இட்டு வழிபடுவர் என்பதை "பல்மலர்கள் கொண்டடிக் கீழ் வாஞேர்கள் பணிந்து இறைஞ்ச" என்னும் வரியால் உணரலாம்.

இப்பதிகத்தில் கூறும் உபதேசம், "சமண பௌத்தர்கள் கூறுவன மெய்யல்ல; அவர்கள் உரை வழி நிற்கவேண்டா' என்பது, "குண்டாடிச் சமண் படுவார் கூறைதனை மெய்போர்த்து மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய் அல்ல" என்ற அடியினைக் காண்க.

காஞ்சியம்பதியும் திருக்கச்சி நெறிக் காரைக் காடும் கீழ் வருமாறு சிறப்பிக்கப்பட்டுள்ளன.

---

அற்றை- அந்த, சூழல்-இடம், அங்கண் - அந்த இடம், காலன் - இயமன், தன்பால் - தன்னிடம், விரவிடார் - சேரார், கருவில் - தாயின் கர்ப்பத்தில், எய்தார் - அடையார். இற்று- இத்தகையது, கூறை - ஆடை, மெய் - உடம்பு, மிண்டாடி- வலிய உரைகளைப் பேசி.

"கார்அணவு மணிமாடம் கடைநவின்ற கலிக்கச்சி"
" நீர்அணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காடு "
" தேரூரும் நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீருரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காடு "
" சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காடு "
" ஆழ்கிடங்கும் சூழ்வயலும் அதில்புல்கி அழகமரும்
நீள்மறுகில் கலிக்கச்சி நெறிக்காரைக் காடு "
" கண்ணுரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காடு "

இவ்வரிகளில் "தேர் ஊரும் நெடுவீதி நீள் மறுகு" (நீண்ட தெருக்கள்) என்று வரும் தொடரின் உண்மை நிலையினை இன்றும் காஞ்சியில் நேரில் காணலாம்.

திருஞான சம்பந்தர் தம்மைத் தமிழ் ஞான சம்பந்தர் என்று கூறிக் கொள்ளுதலை உணரவும். அவர் தம்பதியைக் "குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த சீர்காழி" என்று வர்ணித்துள்ளனர். இப்பதிகத்தைப் பாட வல்லவர் பரலோகத்தில் இன்பம் ஆர்ந்திருப்பர்.

" புற்றிடைவாள் அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொழியா அலைபுனலோ டிளமதியம் ஏந்துசடைப்
பெற்றுடையார் ஒருபாகம் பெண்ணுடையார் கண்அமரும்
நெற்றியினர் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே ".

—மூன்றும் திருமுறை

கார் - மேகத்தை, அணவும் - தொடும், மணி - அழகிய மாடம் - மாளிகைகள். கடை நவின்ற - ஊழிக்காலத்து, பிரளய காலத்து என்று கூறக்கூடிய, கலி - ஒலி, அணவு - பொருந்திய, சிறை நவின்ற - சிறகுகள் பொருந்திய, தீம் - இனிய, கதுவும் - உறிஞ்சிக் குடிக்கும், புல்கி - சேர்ந்து. மறுகு - வீதி, கண் - பரந்த இடம், ஆரும் - அமைந்த, கிடங்கு - அகழி, வாள் - கூரிய பற்களையுடைய, மதம் - வாசனை, மத்தம் - ஊமத்தம்பூ, எற்று - மோதுதல், புனல் - நீர், மதியம் - சந்திரன்.

# 6. திருக்குரங்கணில் முட்டம்

இத்தலம் காஞ்சிபுரத்திற்குத் தெற்கே மண் சாலையில் பாலாற்றின் தென் கரையில் உள்ளது. இத்தலத்தை அடையப் பஸ் (உந்து வண்டி) வசதி உண்டு. இத்தலத்தில் வாலியாகிய குரங்கும், அணி லும், காக்கையும் பூசித்துப் பேறு பெற்றுள்ளன. இக் காரணத்தால் இத்தலம், குரங்கு அணில் முட்டம் என்னும் பெயரைப் பெற்றது. காக்கை முட்டம் என்னும் சொல்லால் உணர்த்தப்பட்டிருப்பதைக் காண்க. வாலி பூசித்த சிறப்பால் இறைவர் வாலீஸ் வரர் என்னும் பெயருடன் துலங்குகின்றுர். இறை வியாரின் திருப்பெயர், இறையார்வளை அம்மை என்பது. முன்கையில் வளையல் அணிந்த அம்மையார் என்பது இப் பெயரின் பொருள். இதனைத் திருஞான சம்பந்தர் தம் பதிகத்தில் ''இறையார் வளையாளை ஓர் பாகத் தடக்கி' என்று பாடிக் குறித்துள்ளனர். இங்குக் காக்கை மடுவு என்னும் பெயரிய மடு ஒன்று உண்டு. இது காக்கை தன் மூக்கினுல் கீறியதால் இப்பெயர் பெற்றது என்பர். குரங்கும், அணிலும், காக்கையும் பூசித்தன என்பதைக் குறிக்க ஆலயத் தின் நுழைவாயிலில் இம்மூன்றின் உருவங்களும் செய்து அமைக்கப்பட்டுள்ளன. கோயில் செம்மை யாக இல்லை. பாழ் அடைந்து காணப்படுகிறது. பாம்பு புற்றுகள் கோயிலுள் மிகுதி. முக்காலப்பூசை இல்லை. ஒரு வேளை பூசைதான் நடக்கிறது. இங்கு வாலி தீர்த்தம், நள கங்கை என்னும் பெயரில் இரண்டு தீர்த்தங்கள் உண்டு. இக்கோயில் கட்டட அமைப்பை நோக்கின் பல்லவர் காலக் கட்டட அமைப்புப் போன்றது என்னலாம்.

இத் தலத்துக் கல் வெட்டில் இறைவர் குரங் கணில் முட்ட நாயனுர் எனவும், கொய்யா மலரீசுவர

தேவர் எனவும் குறிக்கப்பட்டுள்ளனர். இத்தலத்துப் பூசைக்காகக் கிருஷ்ணதேவ மகாராயர், ராஷ்டிர கூடக்கன்னரத்தேவர் கிராமத்தையும், நிலத்தையும் அளித்திருக்கின்றுர்கள் என்பதும் கல்வெட்டுகளால் அறிய வருகின்றன.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப்பதிகம் கலிவிருத்தத்தால் ஆயது. பெரிதும் ஓர் அடிக்கு ஈர் அசைச் சீர்கள் நான்கைப்பெற்று நான்கடிகளில் முடிவதே கலி விருத்தம் ஆகும். இப் பதிகப் பண் தக்க ராகம். இதனை ஒருவாறு காம்போதி போன்றது என்னலாம்.

இத் தலத்தின் இயற்கை அழகை,

"கழுநீர் குவளை மலரக் கயல் பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்"

"குடைஆர் புனல்மல் குகுரங் கணில்முட்டம்"

"கோலம் பொழில்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்"

"கலவம் மயில்கா முறுபே டையொடாடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்"

என்று சிறப்பிக்கும் ஆற்றல் உணரலாம்.

ஆளுடைய பிள்ளையார் இத்தலத்து இறைவரை நினைந்து பற்று அறுத்ததை,

"குரங்கணில் முட்டம்,
நிலவும் பெருமான் அடிநித் தம்நினைந்தே
பலவும் பயன்உள் ளனபற்றும் ஒழிந்தோம்"

என்று உணர்த்தியுள்ளனர்.

---

கழுநீர் - ஆம்பல் மலர். குடை - குளித்தற்குரிய நீர், ஆர் - பொருந்திய, புனல் - நீர், மல்கு-பெருகிய. கோலம் - அழகு, பொழில் - சோலை, கலவம் - தோகை, காமுறு - விரும்பும்.

சம்மந்தர் இறைவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, பிரமனும் திருமாலும் அறியாது திகைக்கப் பின் போற்ற ஆர் அழல் குறியாய் நின்றவன்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

இத்தலத்தைக் கண்டு வணங்கியவர் பெறும் பேற்றையும் இப்பதிகம் வற்புறுத்துகிறது. யார் தொழுகின்றனரோ அவர்கள் துன்புறுர் என்பதைக் "குரங்கணில் முட்டம் தொழும் நீர்மையர் தீதுறு துன்பம் இலரே" என்னும் அடி புலப்படுத்துகின்றது. இத் துடன் இன்றி யார் கையால் தொழுகின்றுர்களோ, அவர்கள் தீவினைகளைக் கண்டறியார் என்பதை, "குரங்கணில் முட்டம் கையால் தொழுவார் வினை காண்டல் அரிதே" என்னும் அடி உணர்த்திக் கொண்டிருக் கின்றது. மேலும், "குரங்கணில் முட்டம் நெறியால் தொழுவார் வினை தீர்க்கிலாவே" என்று கூறி முறைப்படி வணங்குவார் தீவினைகள் பறந்தோடும் என்றும் கூறுகிறது. அரிய உபதேசமும் இப்பதிகத்தில் உண்டு. அதாவது, "சமண பௌத்தர்களின் மொழி களைக் கொள்ளாதீர். சந்திர சேகரன் திருவடிகளைச் சேர்வதுதான் முறைமை" என்பது,

> "கழுவார் துவர்ஆ டைகலந் துமெய்போர்க்கும்
> வழுவாச் சமண்சாக் கியர்வாக் கவைகொள்ளேல்

என்று கூறுமாற்ருல் உணர்க.

ஆளுடைப்பிள்ளையார்தாம் பிறந்த சீர்காழியின் மதில் சிறப்பைக் "கல்லார் மதில்" என்று கூறிக் களிக்கிருர். இப்பதிகத்தை யார் செவிக்கு இனி தாகப் பாட வல்லார்களோ, அவர்கட்கு இனி ஒரு தாயின் வயிற்றில் பிறக்காத நிலையில் மோட்ச

---

துவர் ஆடை - காவி உடை. மெய் - உடல். வழுவா - தம் சமயநெறியில் தவருத. சாக்கியர் - பௌத்தர். சமண் - சமணர்.

இன்பம் கிடைக்கும் என்கிறார். "சொல்லார் தமிழ் மாலை செவிக்கினிதாக வல்லார்க் கெளிதாம் பிறவா வகை வீடே" என்ற அடியினைக் காண்க.

"விழுநீர் மழுவாள் படைஅண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பம்இலரே".

—முதல் திருமுறை.

## 7. திருமாகறல்

இத்தலம் குரங்கணில் முட்டத்திலிருந்து தென் கிழக்கே மண்சாலையில் ஆறு கல் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு ஓடும் சேயாற்றின் வடகரையில் அமைந்துள்ளது என்னலாம். காஞ்சிலிருந்து தெற்கில் பதினைந்து கல்லில் உளது என்றும் கூறலாம். இங்குப்போகப் பஸ் வசதி உண்டு. கோயில் அழகானது. தூய்மையாகவும் இருக்கிறது. தேவேந்திரனால் பூசிக்கப் பெற்றது. இவன் பொருட்டு இறைவர் நண்டு வளையிலிருந்து தோன்றிக் காட்சி அளித்தனர். இத்தலத்தைச் சோமவாரத்தில் கண்டு வணங்கினால் மிக்க பயன் ஏற்படும். பிள்ளைப் பேற்றைப் பெற விரும்புவோர், கோவிலைக் காலால் சுற்றாது தம் அங்கத்தால் உருண்டு உருண்டு வலம் வந்து விரும்பியதைப் பெற்று இன்புறுவர். இங்குள்ள தீர்த்தங்கள் அக்கினி தீர்த்தம், நவ்வி தீர்த்தம், அடைக்கல தீர்த்தம் என்பன.

---

விழு - பெருமை, விழுப்பம் என்பது ஈண்டு விழு என நின்றது. நீர்மையர் - தன்மையர். படை - ஆயுதம். கழுநீர் - ஆம்பல் மலர். உறு - வந்து சேரும்.

இத்தலத்தில் வாழ்ந்த கார்த்திகேய முதலியார் என்பவர் நல்ல தமிழ் அறிவும், மொழி, நூல் புலமையும் உடையவர். அவர் தமிழில் மொழி நூல் என்னும் பெயரில் ஒரு நூல் எழுதி யுள்ளனர். இதுவே முதல் முதல் தமிழில் எழுந்த மொழி நூல்.

இத்தலத்து இறைவர் அடைக்கலம் காத்த நாதர், அகத்தீசர், மங்கல மகரந்த ஈஸ்வரர் என்றும், இறைவியார் புவன நாயகி என்றும் குறிக்கப் பெறுவர்கள். விநாயகப் பெருமான் பெயர் பொய்யாப் பிள்ளையார் என்பது. இத்தலத்திலுள்ள அக்கினி தீர்த்தத்தில் மூழ்கினுல் யமலோக பயம் ஏற்படாது. சிவ லோகத்தில் இன்பமாக வாழலாம்.

இங்குள்ள சிவலிங்க உருவம் சுயம்பு வடிவம் ஆகும். இவ்வடிவில் உடும்பு வடிவம் காணப் படுகிறது.

இத்தலத்தில் திருமாலீஸ்வரர் ஆலயம் என்னும் பெயரில் ஒரு சிவாலயமும் உண்டு. இங்குள்ள கல் வெட்டுகளின் மூலம், இறைவர் ஆளுடையார், அகத்தீச்சரம் உடையார், மாகறல் உடைய நாயனுர் என்று குறிக்கப் பட்டுள்ளனர். மாகறல் பட்டியர் போயன் காமன் வரதன் என்பவன் புதியனவாகத் திருவீதிகளையும் திருமட விளாகத்தையும் அமைத்தனன்.

இத் தலத்தில் திருமேற்கோயில் என்னும் பெருமாள் கோயில் உளது. இஃது இதுபோது வைகுந்தப்பெருமாள் கோவில் என்று கூறப்படுகிறது. தாயார் சந்நிதியும் உண்டு. இத் தலத்துக் கல் வெட்டால் இங்குள்ள முருகன் கோவிலை அண்டம் பாக்கம் கிழான்காழன் என்பவன் கட்டினுன் என்பது தெரிகிறது.

இத் தலத்துக்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப் பதிகம் ஆறு சீர்களைக்

கொண்ட ஆசிரிய விருத்த யாப்பினுல் அமைந்தது. இதில் சந்த அமைப்புப் பொருந்தி உளது என்பதைப் பாடும்போதே அறிந்து கொள்ளலாம். ஆகவே இது திரு இராகம் எனும் பெயரைப் பெற்றது. இப் பதிகப் பண் சாதாரி. இதனை இக்காலத்துப் பந்துவ ராளி இசை என ஒருவாறு கூறலாம்.

இத் தலத்து இறைவருடைய திருவடிகளை அடைபவர்கள் பெரும் பயனை,

"அண்ணல் அடிசேர்பவர்கள் தீவினைகள் தீரும் உடனே"

"பெருமான் அடியை ஏத்த வினை அகலும் மிகவே"

"நீறு புனைவான் அடியை ஏத்த வினை மறையும் உடனே"

"நாதன் அடியாரை நலியா வினைகளே"

"உன்னும் அவர் தொல் வினைகள் ஒல்க
உயர் வானுலகம் ஏறல் எளிதே"

"ஐயன் அடி சேர்பவரை அஞ்சி
அடையா வினைகள் அகலும் மிகவே"

"ஈசன்என ஏத்தவினை நிற்றல்இலை போகும் உடனே"

"பெருமான் ஆயபுகழ் ஏத்தும் அடி யார்கள் வினை
ஆயினவும் அகல்வ எளிதே"

"விடை ஊர்தியுடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே"

என்றெல்லாம் சம்பந்தர் பாடி அறிவித்துள்ளனர்.

தோணிபுரத் தோன்றலார் இத் தலத்தின் இயற்கை அழகையும் ஊரின் சிறப்பையும் இனிதின் உணர்த்தும் முறையில்,

---

ஏத்த - போற்ற, வினை - பாவம், நீறு - விபூதி, புனைவான் - பூசியுள்ள சிவபெருமான், மறையும் - நீங்கும், நலியா - துன்புறுத்தா, உன்னும் - நினைக்கும், ஒல்க - ஒழிய, விடை - இடபம், ஊர்தி - வாகனம்.

" விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறல் "

" கலையின்ஒலி மங்கையர்கள் பாடல்ஒலி
ஆடல்கவின் எய்தி அழகார்
மலையின்நிகர் மாடம்உயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறல் "

" காலையொடு துந்துமிகள் சங்குகுழல்
யாழ்முழவு காம ருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்திமகிழ் மாகறல் "

" இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில் மெய்யு ளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடிமகிழ் மாகறல் "

" துஞ்சுநறு நீலம்இருள் நீங்கஒளி
தோன்றும்மது வார்க கழனிவாய்
மஞ்சமலி பூம்பொழிலின் மயில்கள்நடம்
ஆடல்மலி மாகறல் "

---

விங்கு - இஞ்சி, கடைசியர்கள் - உழத்தியர்கள், அரவம் - ஓசை, மங்குல் - மேகம், மலி - மிக்க, மாடம் - மாளிகைகள், பொழில் - சோலை, கவின் - அழகு, எய்தி; பொருந்தி; துந்துபி - தேவலோக வாத்தியம், குழல் - புல்லாங்குழல், முழவு - மத்தளம், காமருவுசீர் - அழகும் சிறப்பும். இங்கு-இஞ்சி, கதிர்-ஒளி, உந்தி - தம்கை கொண்டு தள்ளி, எழில் - அழகிய, மெய் - உடல், உள்உடனே - தோற்றப் பொலிவுடனே, மன்னு - நிலைத்த, துஞ்சும் - குவியும், நறு - வாசனையுள்ள, மது - தேன், வார் - ஒழுகும், கழனிவாய் - வயலில், மஞ்சம் - மேகம், மலி - மிக்க.

" மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடி உடனாய்
இன்னவகை யால்இனிதி றைஞ்சிஇமை
யோரில்எழு மாகறல் "

" தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வனபொன் மாட மிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறல் "

" தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு
நீர்குவளை தோன்ற மதுஉண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறல் "

" மடைகொள்புனல் ஓடுவயல் கூடுபொழில் மாகறல் "

என்று பாடிக் காட்டியுள்ளனர்.

இப் பதிகத்தில் மக்களுக்கு உபதேசம் செய்யும் முறையில் அமைந்த பாடலும் உண்டு. அப்பாடல்,

" இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடிமகிழ் மாக றலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்கள்அணி
செஞ்சடையி னான்அடி யையே
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி
பாடுநு கராஎ ழுமினே " —மூன்றாம் திருமுறை

என்பது.

---

மன்னு - நிலைத்த. மறையோர்கள் - வேதம் உணர்ந்தவர்கள், படிவம் - தவவேடம், இறைஞ்சி - வணங்கி, இமையோரில் - தேவர்களைப் போல, தூசு துகில் - துணிக்கொடி, தூய - சுத்தமாக, மாசு - குற்றம், மிக - இல்லாத, மலி - திரள்கின்ற, நெய்தல், கழுநீர், குவளை என்பன மலர்களின் தனித்தனிப் பெயர்கள், மது - தேன். பண் - இசை, முரலும் - பாடும், புனல் - நீர், கொங்கு - தேன், நுகரா - வழிபாடு செய்ய. திங்கள் - சந்திரன்.

பாலருவாயர், சமண சாக்கியர்களைப்பற்றி ஒவ்வொரு பதிகத்தின் பத்தாவது பாட்டில் குறித்துப் பாடுவது வழக்கம். ஆனால், இப் பதிகத்தில் அக் குறிப்பு இல்லை.

சீர்காழிப்பதி நீண்ட கதவுகளையுடைய மாடங்களை யுடையது, மணம் வீசும் வீதிகளை யுடையது எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. "கடைகொள் நெடு மாடம் மிக ஓங்கு கமழ் காழி வீதி மலி" எனும் வரியைக் காண்க.

இப் பதிகத்தை நன்கு உணர்பவர்கள் வினைகளின் வலி குறையும். சீர்காழிச் செம்மலார் இறைவர் திருஅடிகளை அடையவே பரவிப் போற்ற வல்லவர் என்று பாடிய குறிப்பும் ஈற்றுப் பாடலில் உண்டு.

" வெய்யவினை நெறிகள்செல வந்தணையும்
மேல்வினைகள் வீட்டல் உறுவீர்
மைகொள்விரி கானல்மது வார்கழனி
மாகறல்உ ளான்எழில் அதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனி அழகார்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடை
யாவினைகள் அகலும் மிகவே"

—மூன்றும் திருமுறை

---

வெய்ய - கொடிய, வினை நெறி - பாவ வழி, வீட்டல் - ஒழித்தல், மைகொள் - மேகம் படிந்த, கானல் - ஆற்றங்கரைச் சோலை, மது - தேன், வார் - ஒழுகும், எழில் அது - அழகு, ஆர் - பொருந்திய, கரி - யானை.

## 8. திருவோத்தூர்

ஓத்து என்னும் சொல்லுக்கு வேதம் என்பது பொருள். இதன் பொருளைத் திருவள்ளுவர் "மறப்பி னும் ஓத்துக் கொளல் ஆகும் பார்ப்பான் பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்" என்னும் குறட்பாவில் பொருத்திக் காட்டி இருத்தலைக் காண்க. அதாவது "மறந்து விட்டாலும் ஓத்தை (வேதத்தை) நினைவிற் குக் கொண்டு வரலாம். ஆனால் பிராம்மணர்கள் தம் பிறப்பு ஒழுக்கத்திலிருந்து தவறுவார்களா னால் கெடுவர்" என்பது இக் குறளின் பொருள். இத் தலத்தில் இறைவர், தேவர்கட்கும், முனிவர் கட்கும் வேதத்தை ஓதுவித்துத் திருவருள் புரிந்தமை யினால் இத் தலம், திருஓத்தூர் என்னும் பெய ரைப் பெற்றது. இதுபோது திருவத்தூர் என்று இதனைக் கூறுவர். இதற்குத் திருவந்திபுரம் என்னும் பெயரும், திருவேதிபுரம் என்னும் பெயரும் உண்டு. இத் தலத்தில் சிதம்பரரேஸ்வரர் என்னும் பெயரில் ஒரு கோவிலும் உளது. இத் தலம் காஞ்சிபுரத்திற்கு மேற்கே பதினெட்டுக் கல் தொலைவில் இருக்கிறது. அச்சிறுபாக்கம் இரயில் அடியிலிருந்து வடமேற்கே பதினெட்டுக் கல் சென்றாலும் இத் தலத்தை அடைய லாம். இத் தலத்தை அடையப் பஸ் (பேர் உந்து வண்டி) வசதி உண்டு. திருமாகறலிருந்து தென் மேற்கே மண் சாலையில் பதினைந்து கல் தூரத்தில் சேயாற்றங் கரையின் வடக்கே அமைந்துளது. இக் கோயில் பெரியது, கோபுரமும், பெரியது. ஆதி கேசவப் பெருமாள் சந்நிதி கோயிலுக்குள் உளது.

இத் தலத்து இறைவர் வேதநாதேஸ்வரர். இறைவியார் இளமுலை நாயகி. தீர்த்தம் வேத தீர்த்தம் எனப்படும். இத்தலத்து இறைவரைச் சூரி யன் பூசித்து ஒற்றைச் சக்கரத் தேரைப் பெற்றனன்.

சமணர்கள் பாம்புகளை ஏவியபோது, இறைவர் பாம்பாட்டியாக வந்து, அப்பாம்புகளை ஆட்டி அடக்கினுர் என்றும் கூறுவர். இது, முருகப்பெருமான் இறைவரை வழிபட்டுத் தரையில் கீறியதும் நீர்வரப் பெறும் வேலைப் பெற்ற தலமும் ஆகும், திருமால் வழிபட்டுப் பிருகு முனிவரால்பெற்ற சாபத்தைப் போக்கிக் கொண்ட தலமும் இதுவே. இஃது இலக்குமி, கல்யாணி மகரிஷியின் சாபத்தால் பெண் மான் உருவம் பெற்றதனை, இங்குள்ள இறைவரைப் பூசித்து அவ்வுருவத்தை நீக்கிக் கொண்ட அரும்பதி. தை மாதம் இங்குப் பெரிய திருவிழா நடைபெறும். தை மாத ரதசப்தமியில் இங்கு நடக்கும் தேர்விழா சிறப்புடையது.

இத் தலத்துக் கல் வெட்டின் மூலம் இறைவர் ஓத்தூர் உடைய நாயனுர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். மேலும் இங்குள்ள கல் வெட்டுகளால் கோயில் தினசரி வழிபாட்டிற்கும், நிவேதனத்துக்கும், பூந்தோட்டத்திற்கும், அர்ச்சகருக்கும் நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன என்பதும் அறிய வருகின்றது. விளக்கிடுவதற்காகப் பசுக்கள் வாங்கி விடப்பட்டன. மூன்ரும் குலோத்துங்க மன்னன் இறைவனுக்குப் பொன் அணிகளைத் தந்துள்ளனன். இங்குக் கேதாரி நாதர் என்னும் பெயரில் ஒரு மடம் இருந்ததாகத் தெரியவருகிறது.

திருஞான சம்பந்தர் இங்கு வந்தபோது சிவனடியார் ஒருவர் தாம்வைத்த பனை, ஆண் பனையாக ஆனமையின், அவரை வணங்கி, "பெருமானே! சமணர்கள் 'இத்தலத்தில் உள்ள பனைகள் ஆண் பனைகளாக இருக்கின்றன. அவைகள் பெண் பனைகளாக மாறிக் காய்களைத் தரக் கூடாதா?' என்று கூறி எங்களை ஏளனம் செய்கின்றனர். இந்த இழிசொல் நீங்க வழி செய்யவேண்டும்" என்று

வேண்டத் திருஞானசம்பந்தர் "பூத்தேர்ந்து" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் திருக்கடைக் காப்பாம் ஈற்றுப் பாடலை,

"குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
செருப்பு கலியுள் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே"

என்று பாடினார். இப்பாட்டின் முதல் அடியின் பொருள் ஆண் பனைகள் குரும்பைகளை (பனங் காய்களை)த் தரும் திருவோத்தூர் என்பது. இங்ஙனம் பாடிய அளவில் ஆண் பனைகள் உடனே பனங் குலைகளுடன் காட்சி அளித்தன. இக் காட்சியினைக் கண்டு சைவப் பெருமக்கள் மகிழ்ந்தனர். சமணர் கள் வெட்கித் தலை குனிந்தனர். ஆனால், சம்பந்தர் காலத்தில் இருந்த அப்பனைகள் இதுபோது அக் கோவிலில் இல்லை. பனை இருந்தது என்பதைக் குறிக்க ஆலயத்துள் கல்லினால் பனைமரம் செய்யப் பட்டு வைக்கப்பட்டுள்ளது. கல்லால் அமைத்த இப்பனைக்குப் பூசையும் உண்டு. அப்பனையின் தோற்றம் பாதி ஆணும், பாதி பெண்ணுமாகக் காணப்படுகிறது.

சம்பந்தர் இத்தலத்துப் பதிகத்தில் இறைவியின் திருப்பெயரை இரண்டாம் பாடலில், "இடையீர் போகா இளமுலையாள்" என்று குறிப்பிட்டுள்ளனர். இடையீர் போகா என்பதன் பொருள், இரு முலை களுக்கு இடையே ஈர்க்குக்கூடப் போகா அவ்வளவு நெருக்கமான" என்பது.

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப்பதிக யாப்பை ஆசிரியத்

ஈன் - தரும். செறு - வயல். புகலி என்பது சீர்காழிக்கு ஒரு பெயர். வீடு - விடுதலை ஆதும், அடிகளை - சிவபெருமானை.

துறையுள் அடக்கலாம். இதற்குக் காரணம் முதல் அடியும் மூன்ருவது அடியும் நான்கு சீர்களைக் கொண்டு, இரண்டாவது அடியும், நான்காவது அடியும் மூன்று மூன்று சீர்களைப் பெற்றிருப்பதால் என்க. இவ்வாறு இடை இடையே சீர்கள் குறைந்து வரும் பாட்டை ஆசிரியத் துறையில் அடக்குவது யாப்பிலக்கண மரபு. இப்பதிகப் பண், பழந்தக்க ராகம். இதனை இக்காலத்து, ஆரபி இசையில் அடக்கலாம். திருஞான சம்பந்தர் இப்பதிகத்தின் முதல் பாட்டில் இறைவரை மலர் கொண்டு எல்லோரும் வழிபடுகின்றனர் என்னும் குறிப்பை,

" பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன் அடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங்கால் "

என்று பாடியுள்ளனர். ஆனல், இறைவர் பொய்யாகப் பேசுபவர் தன்மையினை நினையார் என்பதையும் " உள்வேர் போல நொடிமையி ளர்திறம் " என்னும் வரியில் உணர்த்தி யுள்ளனர். அடியார்களின் தீவினைப் போக்க வல்லவர் என்பதை " அடியார் வினை ஒட்டிடரே " என்று பாடி உணர்த்தி உள்ளார். மேலும் ஆடிப் பாடுபவர்கள் அழையாத போதும் அருள் செய்யும் தன்மையர் என்பதை,

" பிழையா வண்ணங்கள் பாடிநின் ருடுவார்
அழையா மேஅருள் நல்குமே "

என்று அறிவித்துள்ளனர். திருஓத்தூர் என்ருலே வினைபோகும் என்னும் குறிப்பை "ஓத்தூர் என்ருர் மேல்வினை ஏகும் " என்பர்.

---

ஆயன - ஆராய்ந்தவைகளை. உம - உங்களுடைய. ஏத்தாதார் - போற்ருதார், உள்வேர்போல - நினைப்பீர்போலும். (இப்படிக் கூறுவதனுல் நினையார் என்பது பொருளாகிறது) நொடிமையினர் - பொய்யாகப் பேசுபவர். திறம் - தன்மை. வண்ணம் - இசைப்பாடல்கள். நல்கும் - தரும்.

திருஓத்தூர் வளத்தைப் பற்றிப் பாடுகையில், "ஒள் வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர்' என்று பாடியுள்ளனர்.

இறைவனை வேண்டிக் கொள்ளும் முறையில்,

"மிக்கார் வந்து விரும்பிப் பலிஇடத்
தக்கார் தம்மக்க ளீர்என்
றுட்கா தார்உள ரோதிரு ஓத்தூர்
நக்கீ ரேஅருள் நல்குமே"

"தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்
தோதா தார்உள ரோதிரு ஓத்தூர்
ஆதீ ரேஅருள் நல்குமே"

என்று வேண்டுதல் புரிகின்றனர்.

இப்பதிகத்தை விரும்புபவர்கள் வினைகள் நீங்கும் என்றும் கூறியுள்ளனர்.

இத்தலத்து முருகப் பெருமான்மீது அருணகிரி நாதர் பாடியுள்ள திருப்புகழ் ஒன்றே உளது.

"தவர்வாள் தோமரம் சூலம் தரியாக் காதிய சூருந்
தணியாச் சாகரம் ஏழுங் கிரிஏழும்
சருகாக் காய்கதிர் வேலும் பொருகால் சேவலும் நீலம்
தரிகூத் தாடிய மாவும் தினைகாவல்

---

பலி இடத் தக்கார் - பிச்சை இடத் தக்கவர், உட்காதார் - அஞ்சாதார், நக்கீர் - மகிழ்ந்திருப்பவரே, தாது - மகரந்தப் பொடி, தயங்கு -விளங்கும். ஆதீரே - மூலப் பொருளாய் உள்ளவரே, தவர் - வில், வாள் + தோமரம், தோமரம் - தண்டாயுதம், தரியா - தாங்கி, காதிய - கொலைகளைச் செய்த, சாகரம் - கடல், சருகா - சருகுபோல உலர்ந்து, பொரு - சண்டை செய்ய வல்ல, மாவும் - மயிலாம் குதிரையும்.

துவர்வாய்க் கானவர் மானும் சுரநாட் டாள்ஒரு தேனும்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே
துணையாய்க் காவல்செய் வாய்என் றுணராப் பாவிகள்
தொலையாப் பாடலை யானும் புகல்வேனோ [பாலும்
பவமாய்த் தாண்அது ஆகும் பனைகாய்த் தேமணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் படிவேதம்
படியாப் பாதகர் பாய்அன்றி உடாப் பேதைகள் கேசம்
பறிகோப் பாளிகள் யாரும் கழுஏறச்
சிவமாய்த் தேன்அமு தூறும் திருவாக் கால்ஒளி சேர்வெண்
திருநீற் றால்அமர் ஆடும் சிறியோனே
செழுநீர்ச் சேய்நதி ஆரம் கொழியாக் கோமளம் வீசும்
திருவோத் தூர்தனில் மேவும் பெருமாளே ''

---

துவர்-பவளம், கானவர் மான்-வேடர் பெண்ணும் வள்ளியம்மையார், சுரர் நாட்டாள் ஒரு தேன் - தேவலோகத்தில் வளர்ந்த தேன்போன்ற இனிய தெய்வயானை, பாவிகள்பால் - பாவிகளிடத்தில், பவம் மாய்த்து-பிறப்பை ஒழித்து, தே-தேன், பார்மிசை - நிலத்தில். உடா - உடுத்ாத, கேசம் - தலைமயிர், கோப்பாளிகள் - சமணர்கள், அமர் ஆடும் - வாதப் போர் செய்யும், சேய்நதி - செய்யாறு, ஆரம் - முத்து, கோமளம் - அழகு, மாய்த்து + ஆண் எனப் பிரிக்க. இத் திருப்புகழில் முருகனே திருஞான சம்பந்தராக வந்தார் என்னும் குறிப்பு இருத்தலைக் காண்க. சிறியோனே என்பதன் பொருள் திருஞான சம்பந்தராக வந்த பாலசுப்ரமணியனே என்பது. இந்த உண்மை ''பவம் மாய்த்து ஆண் அது ஆகும்பனை காய்த்தே மணம் நாறும் பழமாய்ப் பார்மிசை வீழும்படி'' என்னும் வரிகளால் புலனாகிறது. இதில் இத் தலத்தில் திருஞானசம்பந்தர் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றிய வரலாறு இருக்கிறது.

## 9. திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

இத்தலம் வன்பாக்கம் என்னும் கிராமத்தை அடுத்து உள்ளது. பனை மரத்தைத் தல விருட்சமாகக் கொண்டது. இக் காரணம் கொண்டே இது திருவன்பார்த்தான் பனங்காட்டூர் என்னும் பெயரைப் பெற்றுளது. இக்காலத்தில் இது திருப்பனங்காடு என்று கூறப்படுகிறது. இத்தலத்தை அகத்தியர், புலத்தியர் ஆகிய இருவரும் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர்.

முனிவர்கள் இருவர் பூசித்த தலமாதலின் இரண்டு கோயில்கள் இங்கு உண்டு. ஒன்று தாளபுரீஸ்வரர் திருக்கோயில். இக்கோவில் பெருமானையே அகத்தியர் வழிபட்டனர். தாளபுரீஸ்வரர் பனங்காட்டு நாதர் என்றும் கூறப்பெறுவர். (தாளம் - பனை) இக்கோவிலின் தேவியார் பெயர் அமிர்தவல்லி அம்மாள் என்பது. தூல கோமளபதாம்பாள் என்றும் கூறப் பெறுவர். இத் தலமே பாடல்பெற்ற தலம். இத் தலவிருட்சமே பனை. தீர்த்தங்கள் ஓடாக்கங்கை, ஜடாக்கங்கை என்பன. இவைகளே அன்றி அப்பர் தீர்த்தம், சம்பந்தர் தீர்த்தம், சுந்தரர் தீர்த்தம் என்னும் பெயரில் மூன்று தீர்த்தங்களும் உண்டு.

இத்தலத்துக்கு வடக்கே உள்ள கோவில் இறைவராம் கிருபாநாதேசுவரர், புலத்தியரால் பூசிக்கப் பட்டவர். இங்குள்ள தேவியார் கிருபா நாயகி எனப் படுவார்.

இத்தலத்து இறைவரைச் சிபிச் சக்கரவர்த்தி பூசித்துள்ளனன். இங்குள்ள இறைவர்க்குச் சித்திரை மாதம் சூரிய பூசை நடைபெறுகிறது. அதாவது சூரியனது ஒளி இறைவர்மீது நேரே படியும்.

இங்குள்ள இறைவர்க்குப் பனம்பழம் நிவேதம் செய்யப்படுவது ஒரு தனிச் சிறப்பு. கோயில் பழமையானது.

வன்பாக்கம் கிராமத்தில் மற்றும் ஒரு சிவாலயம் உண்டு. அங்கு எழுந்தருளியுள்ளஇறைவர் ராமசாமி ஈசுவரர் என்றும், இறைவியார் பஞ்சின் மெல்லடி அம்மையார் என்றும் கூறப் பெறுவர்.

இத்தலத்தைக் காஞ்சிபுரத்திலிருக்து தெற்கே நான்கு கல் சென்று, ஐயன் குளத்தை அடைந்து, மேற்கே திரும்பி, ஆர்க்காடு வழியே நான்கு கல் நடந்து, வடக்கே திரும்பி முக்கால் மைல் தூரம் சென்றால் இக் கோவிலை அடையலாம். இடையே பாலாறு, வேகவதி ஆகிய இரு ஆறுகளைக் கடக்க வேண்டும். இதுபோது இங்குச் செல்ல நேர் பஸ் வசதி உண்டு.

இத்தலத்துக் கல்வெட்டில் இறைவர் பெயர், திருப்பனங்காடு உடையார், ஆளுடையார், திருப்பனங்காடு உடைய நாயனார், அன்புடைய நாயனார் என்று குறிக்கப் பட்டுள்ளது.

மண்டபத்தின் தென் சுவரில் உள்ள கல்வெட்டு, இக்கோயிலில் தட்சணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரமன், துர்கை இவர்களின் திருவுருவங்களை எழுந்தருளச் செய்த விளக்கங்களை அறிவிக்கிறது.

கி. பி. 1391ல் இங்குப் பஞ்சம் வந்த குறிப்பும் கல் வெட்டால் அறிய வருகிறது. குளம் உடைப்பெடுத்து நிலங்கள் தரிசாய்ப் போயின், அதன் பொருட்டுக் கோயிலார், கோயில் நிலங்களை விற்று அவ்வுடைப்பை அடைத்துள்ளனர். திருக்கண்ணப்ப நாயனார் பரம்பரை வேடுவர்கள் இக்கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்த குறிப்பும் காணப்படுகிறது.

இத்தலத்தின் மீது சுந்தரர் ஒரு பதிகம் பாடியுள்ளனர். அப்பதிகம் தரவு கொச்சக யாப்பால் அமைந்தது. ஓர் அடிக்கு மூவசைச் சீர்கள் அமைந்த நான்கு சீர்களைக் கொண்டு, நான்கடிகளுடன் வருவதே தரவுகொச்சகம் எனப்படும். இப்பதிகப் பண் சீகாமரம். இதனை இக்காலத்து நாதநாமக் கிரியை இசை போன்றது என ஒருவாறு கூறலாம்.

சுந்தரர் இறைவர் பண்பைப் பகரும்போது,

"கோணுதார் மனத்தான், உருகில் உள் உறைவான்"
"வரம்முன்னம் அருள் செய்வான்"
"வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலி"
"வேதத்தின் பொருளான், அடையில் அன்புடையான்"
"குற்றம் இல்குணத்தான், உரம் என்னும் பொருளான்"

என்று பகர்ந்துள்ளார்.

இத்தலத்து இயற்கை அழகைப் புனைந்து பேசுகையில்,

"மடையில்வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்"
"மயிலார்சோலைகள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்"
"மஞ்சுற்ற மணிமாடம் வன்பார்த்தான் பனங்காட்டூர்"
"பாருரும் பனங்காட்டூர்"

என்று சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

சுந்தரர் இப்பதிகத்தின் வழி, மக்களுக்கு உபதேசிப்பார் போலக் "கங்கை தரித்தானைச் சாராதார் சாரவு என்னே ? "உணராதார் உணர்வு என்னே?"

---

உரம் - ஞானவன்னம், உறைவான் - வாழ்பவன். மடை - நீர்மடை. ஆர் - நிறைந்த. மஞ்சு - மேகம். மணி - அழகிய. மாடம் - மாளிகைகள். பார் - உலகில். ஊரும் - புகழ் நிறைந்து இருக்கும்.

"பேசாதார் பேச்சு என்னே?" "பரவாதார் பரவென்னே?" "அறியாதார் அறிவென்னே?" "நினையாதார் நினைவென்னே?" "குழையாதார் குழைவென்னே?" என்று வினவி, இறைவனைச் சார்தல் வேண்டும், உணர்தல் வேண்டும், போற்றிப் பணிதல் வேண்டும், அறிதல் வேண்டும், நினைதல் வேண்டும், உருகுதல் வேண்டும், அடிமை நிலையைப் பயிலுதல் வேண்டும்" என்று அறிவுறுத்துவாராயினர்.

சுந்தரர் திருவாரூர் இறைவர் திருப்பெயரைச் சென்னியில் வைத்துப் போற்றுபவர் என்பதை "சீரூரும் திருவாரூர் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்" என்று கூறிக் கொள்கின்றனர். அப்பெருமானுடைய திருவடித் தொண்டர்கட்கும் தாம் தொண்டன் என்றும் குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.

இப்பதிகத்தின் ஈற்றுப் பாடலில் சுந்தரர் தம் பணிவுதோன்ற தம் அருமைத் திருவாக்கை "அடியன் சொல்" என்றும் "அடிநாய் சொல்" என்றும் கூறிக் கொள்கின்றார். இப்பதிகத்தைச் சொல்பவர்கள் வானுலகில் உயர்ந்து வாழ்வர் என்றும் பயன் கூறி முடிக்கின்றனர்.

"வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சில்சீர் அடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே",

---

சார்வு - அடைவு, பரவாதார் - வணங்காதவர், பரவு - வணக்கம், குழையாதார் - உருகாதவர்,

சீர் அடியாள் - உமாதேவி, உகந்த - விரும்பிய, மஞ்சு - மேகம், உகந்தான் - விரும்பியவன்.

## 10. திருவல்லம்

இத்தலம் இதுபோது திருவலம் என்று கூறப்படுகிறது. இதனை வில்வாரண்ய க்ஷேத்திரம் என்றும் கூறுவர். இத்தலத்து இறைவரைத் தீக்காலி என்னும் அசுரன் பூசித்துள்ளான். அதனால் இது தீக்காலி வல்லம் என்றும் கூறப்படும். நவக்கிரகங்களும் இத்தலத்துக் கடவுளை வழிபட்டுள்ளன. வல்லாளன் என்னும் அரசனும் பூசித்துள்ளான். கோயில் பெரியது. கோபுரங்கள் உண்டு. திருவல்லம் இரயில் அடியில் இருந்து வடகிழக்கே கல் சாலையில் ஒன்றரை மைல் தூரத்தில் இக்கோயில் உளது. இங்குள்ள இறைவர் வல்லநாதர் என்றும், இறைவியார் வல்லாம்பிகை என்றும் கூறப்பெறுவர். இறைவர் வல்லநாதேஸ்வரர் என்றும் கூறப் பெறுவர். இங்குள்ள தீர்த்தங்கள் கௌரி தீர்த்தம், சிவகெங்கை, நீவா நதி, வச்சிரதீர்த்தம், என்பன. இந்த வச்சிர தீர்த்தம் இந்திரன் அகலிகையுடன் சேர்ந்து இன்புற்ற பாபம் நீங்க அவனால் உண்டாக்கப்பட்டது. அதில் அவன் மூழ்கித் தன் பாவத்தைப் போக்கிக் கொண்டனன். இது சனக மகாராசனுக்கு இறைவர் காட்சி கொடுத்த தலமும் ஆகும். இங்குள்ள நந்தி கிழக்குப் பார்த்திருக்கும். இறைவர் மூலட்டானம் மேற்கு நோக்கி இருக்கும். இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது.

அப்பதிகம் கலிவிருத்த யாப்பால் அமைந்தது. அதாவது ஓர் அடிக்கு ஈரசைச் சீர்கள் நான்கு கொண்டு, இவ்வாறு நான்கடிகளுடன் வருவது. இதன் பண் வியாழக் குறிஞ்சி. இவ் இசையை இக்காலத்துச் சௌராஷ்டிர இசை என ஒருவாறு கூறலாம்.

இத்தலத்தில் வில்வநாதேசுவரர் ஆலயம் என்னும் பெயரில் மற்றும் ஓர் ஆலயம் உண்டு. இக் கோவிலுக்குள் நடுவேஸ்வரர் என்னும் பெயரிய மற்றும் ஓர் சிவாலயமும் உண்டு. இத்தலத்தில் பல கல்வெட்டுகள் உள. இக்கல்வெட்டுகளால் குக்க னூர் கிராம வருவாய்த் திருவல்லத்திற்குக் கொடுக் கப்பட்டது என்பதும், பொன்படு குட்டத்து நிலங் கள் விளக்கிற்காகவும், படையலுக்காகவும் கொடுக் கப்பட்டன என்பதும் அறியப்படுகின்றன.

இத்தலத்து இறைவர் "தாயவன் உலகுக்கு" "தன் ஒப்பில்லாத தூயவன், சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன்". "கொய்தவம் மலர் அடி கூடுவார் தம், மைதவழ் திருமகள் வணங்க வைப்பவன்" (அதாவது இறைவர் தம் திருவடியை அழகிய மலர் இட்டு வணங்குவர் கட்கு இலக்குமி வணங்கிப் பணி கேட்கும் அளவுக்கு அருள் செய்வர் என்பது) "பெரியவர், சிறியவர் சிந்தைசெய்ய அறியவன்" என்றெல்லாம் சிறப்பிக் கப்படுகிறார்.

திருவல்லம் திருஞானசம்பந்தரால் "வளநகர்" என்றும் "கற்றவர் திருவல்லம்" என்றும் புகழப் பட்டுள்ளது.

> "கொய்த அம் மலர் அடி கூடு வார்தம்
> மைதவழ் திருமகள் வணங்க வைத்துப்
> பெய்தவன் பெருமழை உலகம் உய்யச்
> செய்த வன் உறை விடம்திரு வல்லமே"
>
> —முதல் திருமுறை.

திருவல்லத் தலத்திலிருந்து ஆறு கல் சென்றால் முருகன் கோயிலை அடையலாம். பஸ் போக்கு

அம் - அழகிய, உய்ய - பிழைக்க, உறைவிடம் - இருப்பிடம்.

வரவு உண்டு. இம் முருகன் கோவில் மலைமேல் உளது. மலைக்குப் போகப் படிகள் உண்டு. இது வள்ளியை மணம் புரிந்த தலம். ஆகவே இது வள்ளிமலை எனப்படும். மேலே வள்ளி ஆய லோட்டிய மண்டபம் உளது. சுனைகள் உண்டு. இவற்றுள் மஞ்சள் நீர் சுனை என்பதும் ஒன்று. கல்லால் அமைந்த யானை உருவத்தை அங்குக் காணலாம், மலை அடிவாரத்தில் திருக்குளம் இருக்கிறது. இம்மலைக்கு அருணகிரியார் பாடிய பதினோரு திருப்புகழ்கள் உண்டு. அவற்றுள் ஒன்று,

" அல்லிவிழி யாலும் முல்லை நகையாலும்
அல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளஇனி தாகி நள்ளிரவு போலும்
உள்ளவினை ஆரத் தனமாரும்
இல்லும் இளையோரும் மெல்லஅய லாக
வல்எருமை மாயச் சமனோரும்
எள்ளினை தாவி கொள்ளைகொளும் நாளில்
உய்யஒரு நீபொன் கழல்தாராய்
தொல்லைமறை தேடி இல்லைஎனும் நாதர்
சொல்லும்உப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடும் புள்ளிஉழை நாண
வெள்ளிவனம் மீதுற் றுறைவோனே

என்பது.

---

அல்லி - தாமரை இதழ், நகை - பல், சமனோர் - எமன், உழை - மான், வல்லசுரர் வல் + அசுரர், கொடிய அரக்கர்; சுரர் - தேவர், வல்லை - விரைவில், வடி - கூரிய, வள்ளி - வள்ளிக்கொடி, வினை - செய்கை, ஆர - நிறைய, தனமார் - கொங்கையை உடைய வேசியர், இல் - மனைவி, உய்ய - ஈடேற.

வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவும்
வள்ளிமணவாளப் பெருமாளே ”

திருவல்லத்து முருகன் மீது அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ் ஒன்று உளது.

நசையொடு தோலும் தசைதுறு நீரும்
நடுநடு வேஎன் புறுகீலும்
நலமுறு வேய்ஒன் றிட இரு கால்நன்
றுறநடை யாகும் குடிலூடே
விசையுறு காலம் புலன்நெறி யேவெங்
கனல்உயிர் வேழம் திரியாதே
விழுமடி யார்முன் பழுதற வேள்கந்
தனும்என ஓதும் விறல்தாராய்
இசைஉற வேஅன் றசைவற ஊதும்
எழில்அரி வேலும் எனையாள்என்
றிடர்கெடு மூலம் தொடர்வுடன் ஓதும்
இடம்இமை யாமுன் வரும்மாயன்
திசைமுக னும் திசைபுவி வானும்
திரிதர வாழும் சிவன்மூதூர்
தெரிவையார் தாம்வந் தருநடம் ஆடும்
திருவலம் மேவும் பெருமாளே ”

---

நசை - ஈரம், தசை - மாமிசம், குடில் - உடம்பு, புலன் நெறி - ஐம்புலன்களின் வழி, வேழம் - யானை, விறல் - வன்மை, எழில் - அழகிய, புவி - பூமி, தெரிவையர் - வானுலகப் பெண்கள்.

## 11. திருமால்பேறு

இத்தலத்து இறைவரைத் திருமால் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இத்தலம் திருமால்பேறு என்னும் பெயரைப் பெற்றது. அரிசக்ரபுரம் என்றும், திருமால்பூர் என்றும் இதனைக் கூறுவர். இத்தலத்தைத் திருமால் வழிபட்டனர் என்பதைத் திருஞான சம்பந்தர் இத்தலத்தைப் பாடிய பாடலில் "மன்னி மாலொடு சோமன் பணிசெயும்" என்று பாடியுள்ள அடியால் உணரலாம். சோமன் என்பதற்குச் சந்திரன் என்பது பொருள். இதனால் சந்திரனும் இத்தலத்துப் பெருமானைப் போற்றியுள்ளான் என்பது தெரிகிறது. திருமால் இங்குள்ள இறைவரைப் பூசித்தமைக்குக் காரணம், திருமால் பகைவனோடு போர்புரியும் பொருட்டு, சிவபெருமானிடம் இருந்த சக்கரத்தைப் பெறவே என்க. இதனை "பொரும் ஆற்றின் படை வேண்டி நல் பூம்புனல் வரும் ஆற்றின் மலர் கொண்டு வழிபடும் கருமாற்கு இன்னருள் செய் துளார்" என்று அப்பர் பாடியுள்ள பாட்டால் அறிய லாம்.

திருமால் சக்கரத்தைப் பெற ஆயிரம், தாமரை மலர்கொண்டு பூசித்தார், அப்போது ஒரு மலர் குறையத் தாமரை மலர் போன்ற தமது கண்ணைப் பிடுங்கி அதனைத் திருவடியிலிட்டு வணங்கினார். இதனால் இறைவர் இவருக்குப் பத்மாட்சன், என்னும் பெயரையும் சூட்டினர். பதுமாட்சன் என்பது தாமரைக் கண்ணன் என்று பொருள்படும்.

இத்தலத்தின் மூலட்டான இலிங்கத்தின் திரு முன் திருமால் கும்பிடும் கையினராய் எதிரில் நின்ற கோலத்தில் இருப்பதை இன்றும் காணலாம்.

---

பொரும் - சண்டையிடும், ஆற்றின் - நெறியில், படை - சக்ராயுதம், புனல் - நீர், வினை - பாவம்.

"இத்தலத்தை யார் கண்டு வணங்குகின்றார் களோ, அவர்கள் பாவம் தீரவேண்டு"மென்று திருமால் இறைவரை வேண்ட "அவ்வாறே ஆகுக" என்று அருள் செய்த தலம். இங்கு நந்தியம் பெருமான் நின்ற வண்ணம் உளர். திருக்குளம் கீழ்க் கோபுரத்தருகே உளது. இத்தலத்து விருட்சம் வில்வம். இதனையும் கோவிலுக்குள் காணலாம். இத்தலம் செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கத்தில் அமைந்த திருமால்பூர் இரயில் அடியிலிருந்து மூன்று கல் தொலைவில் உளது.

இங்குள்ள இறைவர் திருப்பெயர் மால்வணங் கீசர் என்றும், மணிகண்டேஸ்வரர் என்றும் கூறப் பெறுவர். தேவியார் திருப்பெயர்கள் அஞ்சனாட்சி அம்மை, கருணை நாயகி என்பன. இங்குள்ள இறைவர் தீண்டாத் திருமேனியுடையார். அவருக்குக் குவளை மலர் சாத்தப்பெற்றுத் திருமுழுக்கு நடைபெறுகிறது. இங்குள்ள தீர்த்தம், அரிதீர்த்தம் பாலாறு என்பன.

கல் வெட்டுகளின் மூலம் இறைவர் திருமால் பேறுடையார், உத்தம சோழேஸ்வரமுடையார், அவிமுகத்தீஸ்வரர் என்னும் பெயர்களைப் பெற்றவர் என்பது தெரிகிறது. அக்னீஸ்வரர் கோயில் ஒன்று இருக்க வேண்டும் என்பதும் தெரிகிறது. கண்டரா தித்தர் ஐம்பெரு குழு அமைத்து நிலங்களைக் கவனித்துக் கொள்ளவும் படையலுக்கு நெல் கொடுக்கவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். விராட அரசன் அனையமான் மண்டலாதித்தன் திருமால் பேறுடையார் கோயிலைக் கட்டவும், சுற்று மண்டபம் முற்றுப் பெறவும் தானம் செய்துள்ளான். உத்தம சோழேசுவரம் உடையார் உருவம் செய்யச் சேதிராயன் நிலத்தைத் தானம் கொடுத்திருக்கிறான்.

இங்கு ஒரு விஷ்ணு கோவில் உளது. அப் பெருமான் திருப்பெயர் கோவிந்தபதியில் நின்றருளிய பெருமான் அடிகள் என்பது.

இத்திருமால்பேறு தலத்திற்குரிய பதிகங்கள் ஆறு. அவற்றுள் திருஞான சம்பந்தர் பதிகங்கள் இரண்டு. திருநாவுக்கரசருடைய பதிகங்கள் திருவிருத்தம் ஒன்றும், திருக்குறுந்தொகை இரண்டும், திருத்தாண்டகம் ஒன்றும் ஆக நான்கு.

திருஞான சம்பந்தரின் இத்தலத்தின் முதல் திருப்பதிகம் ஆசிரியத் தாழிசையால் ஆனது. இதன் இலக்கணத்தைத் திருஓத்தூர் பதிகத்தில் காண்க. இப் பதிகப்பண்ணின் பெயரையும் இக் கால இசையின் பெயரையும் கூடத் திருஓத்தூர் பதிகத்தில் பார்க்கவும். முதல் திருமுறையில் காணும் இரண்டாவது பதிகம் வஞ்சி விருத்தத்துள் அடங்கும். காரணம் ஓர் அடிக்கு மும்மூன்று சீர்கள் நான் கடிகளிலும் பெற்று வருவதனுல் என்க. பண் வியாழக்குறிஞ்சி. இசை இக்காலத்து சௌராஷ்ட்ரம். திருநாவுக்கரசர் பாடியுள்ள திருவிருத்தம் இக்காலத்தில் கட்டளைக் கலித்துறை போன்றது. அதாவது ஓர் அடிக்கு ஐந்து சீர்களைப் பெற்று நான்கடிகளால் வருவது. இதில் வெண்டளை கெடாது. ஒவ்வோர் அடியின் ஈற்றுச்சீர் விளங்காயாக இருக்கும். ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தால் முடியும். ஓர் அடியில் முதல் சீர் நேர் அசையில் தொடங்கிளுல் பதினுறு எழுத்தும் நிரை அசையில் தொடங்கிளுல் பதினேழ் எழுத்தும் அமைந்திருக்கும். திருக்குறுந் தொகைப் பதிகங்கள் கலிவிருத்தத்தால் ஆனவை. இதன் இலக்கணமும் பண்ணின் பெயரும் இக்கால இசையும் திருஓத்தூர்ப் பதிகத்தில் கூறப்பட்டன.

திருத்தாண்டக இலக்கணமும் திருவேகம்பத் தாண்டகத்தில் விளக்கப்பட்டது.

திருஞானசம்பந்தர் "ஊறியார்" என்று தொடங்கிப் பாடியுள்ள பதிகத்தை மொழி மாலை என்று சேக்கிழார் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

இத்தலத்தைச் சம்பந்தர் "சேறு சேர் வயல் மீன் திருமால் பேறு", "மடையார் நீர் மல்கு மன்னிய மால் பேறு", "திரை ஆர் பாலியின் தென் கரை மால் பேறு" "தேசம் மல்கிய தென் திருமால் பேறு" என்று முதல் பதிகத்தில் புகழ்ந்துள்ளனர். "வள நகர் மாற்பேறு" என்று இரண்டாம் பதிகத்தில் சிறப்பித்துள்ளனர்.

திருமால் பேறு அடியவர்களாலும் தேவர்களாலும் வழிபாடு செய்யப் பெற்றது என்பதை,

"உளம் உள்கியே தொடையார் மாமலர் கொண்டிருபோதும் அடைவார்"

"அடியார்கள் வணங்குவர்"

"சால மாமலர் கொண்டு சரண் என்று
மேலையார்கள் விரும்புவர்"

"உரையாதார் இல்லை ஒன்றுநின் தன்மையைப்
பரவாதார் இல்லை நாள்களும்"

---

மடை - நீர் மதகு, மல்கு - பெருகுதல், மன்னிய - நிலைத்த, திரை-அலை, பாலி-பாலாறு, தேசம்-ஒளி. மல்கிய-மிக்க. உள்கி-நினைத்து. தொடை-மாலை, ஆர் - பொருந்திய, மா - சிறந்த, இருபோது - காலையும் மாலையும், சால - மிகவும், சரண் - அடைக்கலம், மேலையார்கள் - மேன்மக்கள், பரவாதார் - போற்றுதவர்,

" மாறிலா மணியே என்று வானவர்
ஏறவே மிக ஏத்துவர் "

என்று முதல் திருமுறையில் கூறும் வரிகளில் காண்க.

இத்தலம் திருமால், சந்திரன் ஆகியோரால் வழிபாடு செய்யப்பட்டது என்பதையும்,

" மாலினுர் வழிபாடு செய்மால் பேறு
மன்னி மாலொடு சோமன் பணிசெயும் "

என்றும் திருஞான சம்பந்தர் பதிகத்தில் வருதல் கொண்டு தெளியலாம்.

இத்தலத்து இறைவரை வணங்கினுல் பாவம் கெடும்; வினை நீங்கும் என்னும் கருத்தை "மால் பேற்று அடிகளைப் பரவிடக் கெடும் பாவமே". "மால் பேற்று அடிகளைப் பரவுவார் வினைபாறுமே" என்றும் பாலருவாயார் பாடியுள்ளனர்.

மக்களுக்கு உபதேச முறையில் கூறுகையில்,

" தூசு போர்த்துழல் வார்கையில் துற்றுணும்
நீசர் தம்உரை கொள்ளேல்உம்
தேசம் மல்கிய தென்திரு மால்பேற்றின்
ஈசன் என்றெடுத் தேத்துமே "

—முதல் திருமுறை.

என்று கூறியுள்ளனர்.

" உரையாதார் இல்லை ஒன்றும் நின் தன்மையைப்
பரவாதார் இல்லை நாள்களும்
திரையார் பாலியின் தென்கரை மால்பேற்
றரையா னேஅருள் நல்கிடே "

—முதல் திருமுறை.

---

வானவர் - தேவர், ஏத்துவர்-போற்றுவர், சோமன் - சந்திரன், வினை - தீவினை, பாறும்-ஒழியும். தூசு - அழுக்கு. துற்று - உணவு. நீசர் - சமணர். அரையான் - அரசன், நல்கிடு - கொடு.

திருஞான சம்பந்தரது மற்ெருரு பதிகத்தின் வழி நாம் அறிவன:

இறைவர் குருந்த மரத்தடியில் இருப்பவர் என்று திருஞான சம்பந்தர் கூறுவர். இதனுல் மாணிக்க வாசகர்க்குப் பின்பட்டவர் திருஞான சம்பந்தர் என்பது பெறப்படுதல் காண்க. மாணிக்க வாசகர் பொருட்டே இறைவர் குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளினுர்.

ஈண்டு இறைவியார் கருந்தட மலர்க்கண்ணி என்று கூறப்படுகின்ருர், இதனுல் தடங்கண்ணி என்பது இறைவியின் திருப்பெயர் என்பது தெரிகிறது. இதனை வடமொழியாளர்கள் விசாலாட்சி என்று கூறி மகிழ்வர்.

தேவர்களும், அரக்கர்களும், முனிவர்களும், பூலோக வாசிகளும் வணங்கும் நல்மால்பேறு என்றும் இத்தலம் சிறப்பிக்கப் பட்டுள்ளது. இதனை 'விண்ணவர், தானவர் முனிவரொடு, மண்ணவர் வணங்கும் நல் மால்பேறு'' என்னும் வரிகளில் காணலாம்.

திருஞான சம்பந்தர் தமது திருக்கடைக் காப்புச் செய்யுளில் தம்மை "அந்தம் இல் ஞானசம்பந்தன்" என்று கூறிக் கொள்கின்றனர். அதற்குக் காரணம் தம் வாக்கும், தம் பெயரும் நில உலகில் என்றும் நிலைத்திருக்கும் என்னும் உறுதியால் என்க. அந்தமில் என்பதன் பொருள் அழிவில்லாத என்பது. அவரது பாடல் அழியாது என்று மேலே அவரே குறிப்பிடுவதால் உரை பொருத்தமே என்பது அறிய வருகின்றது. இப்பதிகப் பாடல்களைச் சந்தமுடன் (இசையுடன்) பாடவல்லார் இறைவன் திருவடிப் பேற்றை அடைவர். இப்பதிகத்தின் ஏழாவது பாடல் கிடைத்திலது,

"பெண்ணின்நல் லாளை ஓர் பாகம் வைத்துக்
கண்ணினால் காமனைக் காய்ந்தவன் தன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் பணங்குநல் மாற்பேறே

—முதல் திருமுறை

இப்பாடல் ஒரு நயமான கருத்தைத் தன்னகத்தே கொண்டுளது. அதாவது இறைவர் உமை அம்மையைப் பாகத்தில் கொண்டிருந்தும் மன்மதனை எரித்தனர் என்பது. இதன் கருத்து மன்மதன் குறும்பு இறைவர்பால் செல்லாது என்பது.

அப்பர் இத்தலத்து இறைவர் மீது பாடியுள்ள திருவிருத்தங்கள் இரண்டு. இவ்விருத்தங்களின் வழி இறைவர் திருவடிகள் தொண்டர்களால் போற்றப்படும், துதிக்கப்படும் தன்மையின என்றும், அன்புகாட்டினால் குருடர்களுக்குக் கோல்போல் முன் வந்து வழி காட்டுவன என்றும், இறைவியினால் வருடப் படுவன என்றும் கூறப்பட்டிருப்பதை உணரலாம். ஆகவே, இவ்விரு திருவிருத்தங்களும் இறைவருடைய திருவடிகளைப் புகழும் பாடல்கள் என்னலாம். இக்கருத்துகளைக் கீழ்வரும் பாடல்களில் காண்க.

"மாணிக் குயிர்பெறக் கூற்றை உதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன பேர்த்தும் அஃதே
மாணிக்கம் ஆவன மால்பே றுடையான் மலர் அடியே".

நல்லாள் - உமை அம்மை, காய்ந்தவன் - அழித்தவன், தானவர் - அரக்கர். மாணிக்கு - மார்க்கண்டேயனுக்கு கூற்றை - இயமனை, நிலம் இரந்தவன் - நிலத்தைக் கேட்ட வாமனனும் திருமால், பேணி - போற்றி, பரவ - வணங்க, பேர்த்தும் - மீண்டும்.

"கருடத் தனிப்பாகன் காண்டற் கரியன காதல்செய்யில்
குருடர்க்கு முன்னே குடிகொண் டிருப்பன கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம லக்கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான் மலரடியே".

—திருவிருத்தம். நான்காம் திருமுறை.

திருக்குறுந்தொகையின் வழி இத்தலத்தைப் பற்றி நாம் அறிவன: இத் திருப்பதிகத்தில் திருமால் பேற்றை வணங்கினால் பாவம், துயர், வினை முதலானவை நீங்கும் என்பன போன்ற கருத்துகள் உள்ளன.

'காண்தகு, திருமால் பேறு தொழவினை தேயுமே'
'திருமால்பேறு ஏலத்தான் தொழுவார்க்கிடர் இல்லையே'
'மால்பேறு பணிவண்ணத் தவர்க்கில்லையாம் பாவமே'
'மால்பேறு கைதொழுவார்கள் மன்னுவர் பொன் உலகத்திலே
'மால்பேறு கண்டு கை தொழத்தீரும் கவலையே'
'திருமால்பேறு, பாடுவார் பெறுவார் பரலோகமே'
'மால்பேறு அருத்தியால் தொழுவார்க்கில்லை அல்லலே'

என்னும் வரிகளைக் காண்க.

இத்தலம் திருமால் அருள்பெற்ற தலம் என்னும் குறிப்பையும் அப்பர் பெருமானார்,

'கருமாற் கின்அருள் செய்தவன்'
'குற்றம்இல் மாலுக்குஆர் அருள் செய்தவன்'

---

கருடத் தனிப்பாகன்-திருமால், கோலம்-அழகு, மல்கு-பெருகு, செருடக்கடிமலர் - நிருதிமென்மலர், செல்வி - பார்வதி. ஈண்டு உமாதேவியின் திருக்கால் நிருதி மென் மலரினும் மென்மையானது என்று கூறப்பட்டுள்ளது. ஏல - பொருந்த, பணி - வணங்கும், மன்னுவர் - நிலைத்திருப்பர், பொன்னுலகு - தேவலோகம், அருத்தி - அன்பு, ஆர் - நிறைந்த,

'அணிவண் ணத்தவர் கொண்டடி அர்ச்சித்த
மணிவண் ணற்கருள் செய்தவன்'

என்று பாடி அறிவித்துள்ளார்.

திருமால் இத்தலத்துப் பெருமானை அர்ச்சித்து வழி பட்டமைக்குக் காரணம் சக்கரம் பெறுவதற்காகவே ஆகும். இதனை அப்ப மூர்த்திகள்,

"பொருமாற் றின்படை வேண்டிநல் பூம்புனல்
வரும்ஆற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்அருள் செய்தவன் காண்தகு
திருமால் பேறு தொழவினை தேயுமே"

என்றும்,

"துணிவண் ணச்சுடர் ஆழிகொள் வான்எண்ணி
அணிவண் ணத்தவர் கொண்டடி அர்ச்சித்த
மணிவண் ணற்கருள் செய்தவன் மால்பேறு
பணிவண் ணத்தவர்க் கில்லையாம் பாவமே"

என்றும் பாடியுள்ளனர்.

உபதேச முறையில் உரைத்த பாடல்கள் இரண்டுள. அவையே,

"தீதவை செய்து தீவினை வீழாதே
காதல் செய்து கருத்தினில் நின்றநல்
மாதவர் பயில்மால் பேறு கைதொழப்
போது மின்வினை ஆயின போகுமே"

"பண்டை வல்வினை பற்றறுக் கும்வகை
உண்டு சொல்லுவன் கேண்மின் ஒளிகிளர்
வண்டு சேர்பொழில் சூழ்திரு மால்பேறு
கண்டு கைதொழத் தீரும் கவலையே"

என்பன.

---

அணிவண்ணம் - அழகிய நிறம். பொரும் - சண்டை செய்யும், ஆற்றின்-வழியில், படை-சக்கரப்படை, புனல்-நீர், துணி-வெட்டும், வண்ணம்-தன்மை, ஆழி-சக்கரம், போதுமின் - செல்லுங்கள், பண்டை - முன்னைய, பொழில் - சோலை,

இறைவனது தண் அருள் எத்தகையது என்பதை உணர்த்தும்போது,

" மழுவ லான்திரு நாமம் மகிழ்ந்துரைத்
தழுவ லார்களுக் கன்புசெய் தின்பொடும்
வழுவி லாஅருள் செய்தவன் ."

என்று உணர்த்தியுள்ளனர்.

அப்பர் பெருமான், யார் ஒருவர் திருமால் பேற்றைத் தொழுகிருர்களோ, அவர்கள் எந்தமை ஆளுடையார்கள் என்று தம் பணிவு தோன்ற மொழிந்துள்ளார். திருமால் பேறு,

" மாதவர் பயில் மால்பேறு "
" வார்கொள் நல்முரச‌ம் அறை அவ் அறை "
வார்கொள் பைம்பொழில் மால்பேறு "
" கிளர்வண்டு சேர்பொழில் மால்பேறு "
" மாடம் நீடுயரும் திருமால் பேறு "

என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது.

திருநாவுக்கரசரது மற்றும் ஒரு திருக்குறுந்தொகை வழி நாம் அறிவன: இக்குறுந்தொகைப் பதிகத்தில் எட்டே பாடல்கள் உள்ளன. அவைகள் நெஞ்சிற்கு அறிவுறுத்துவனவாகவும், உபதேச மொழிகள் அமைந்தவையாகவும் இருக்கின்றன.

" சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும்குல மும்கொண் டென் செய்வீர்
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மால் பேறரே "

---

நாமம் - திருப்பெயர், வழுவிலா - தவருத, வார் - தோல்வார், அறை - ஒலிக்கும், சழக்கர்காள் - அறிவற்றவர்களே, பாத்திரம் - வணங்கப்படுதற்குரியவர், மாத்திரை - நொடிப் பொழுதில், அஞ்செழுத்து - சிவாய நம எனும் ஐந்தெழுத்து மந்திரம்.

"இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாண்
அருந்த வம்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்தும் ஆகுவர் மன்னுமால் பேறரே"

"சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழல் ஏத்தினால்
கூற்றைத் நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொன் ஆவர்மால் பேறரே"

"ஈட்டும் மாநிதி சால இழக்கினும்
வீட்டும் காலன் விராய்அ ழைக்கினும்
காட்டில் மாநடம் ஆடுவாய் காஎனில்
வாட்டம் தீர்க்கவும் வல்லர்மால் பேறரே"

என்பது உபதேச முறையில் அமைந்த பாக்கள். நெஞ்சிற்கு அறிவிறுத்திய பாடல்,

"அச்சம் இல்லைநெஞ் சேஅரன் நாமங்கள்
நிச்ச லும்நினை யாய்வினை போய்அறக்
கச்ச மாவிடம் உண்டகண் டானை
வைச்ச மாநிதி ஆவர்மால் பேறரே.

என்பது.

இறைவர் அருள் செய்யும் இயல்பை அறிவிக்கும்போது,

---

துரப்பது-விலக்குவது, சாற்றி-அறியும்படி சொல்லி, தரணியீர் - உலகத்தவர்களே, ஏற்றின் - இடபத்தின், கழல் - வீரத்தண்டை அணிந்த பாதம், ஏத்தினால்-போற்றினால், கூற்றை-இயம பயத்தை, மா - பெரிய, நிதி - செல்வம், சால - மிகவும், வீட்டும் - அழிக்கும், காலன் - இயமன், கா - காப்பாற்றுக, அரன் - சிவபெருமான், நாமங்கள் - பெயர்கள், நிச்சலும் - தினமும், கச்ச - கசந்த, வைச்ச - சேர்த்துவைத்த.

"ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவர்அவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மால் பேறரே"

என்றும்,

"ஐய னேஅர னேஎன் றரற்றினல்
உய்ய லாம்உல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மால் பேறரே"

என்றும் உணர்த்தி உள்ளனர்.

திருமால்பேறு என்று கூறினும் 'அந்தம் இல்லதோர் இன்பம் அணுகும்' என்றும் மொழிந்துள்ளனர். திருமால் பேற்றின் இயற்கை அழகை, "மந்தி பாய் பொழில் சூழும் மால் பேறு" என்பர்.

இத்தலத்து அப்பரது திருத்தாண்டகம் இறைவருடைய இயல்புகளை எடுத்து இயம்புகிறது. 'பல்லுயிர்க்கும் பரிவோன், 'இரக்கம் காட்ட வல்லவன்' 'அடியார் தங்கட்கு ஆராத இன் அமுது' 'கருதுவார் மனத்தான்' 'மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவான்' 'ஓங்காரத்து ஒருவன், பிறவாதான்' 'நினையாதாரை நினையான்' 'நினைவோரை, நினைவோன்' 'வணங்குவார் மனத்தான்' 'பரிவோர் நெஞ்சில் உற்றானை' என்னும் தொடர்களைக் காண்க.

---

மாது - உமை, அரற்றினல் - வாய்விட்டு உரத்த குரலில் கூப்பிட்டால், உய்யலாம் - பிழைக்கலாம், பேணுவர் - போற்றுவர், செய்ய - சிவந்த, வையம் - உலகம், அந்தம் - முடிவு, மந்தி - பெண்குரங்கு, பொழில் - சோலை, பரிவோன் - இரக்கம் காட்டுபவன்.

இறைவரது கருணையின் தன்மையை அப்பர்,

"குறையாத உவகைக் கண்ணீர்
ஆருத ஆனந்தத் தடியார் செய்த
அனுசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும்
சீருத பெருமான்"

என்று அருளிச் செய்துள்ளனர்.

இது திருமால்பேற்றுத் திருப்பதிகம் ஆயினும், இதில் திருவேகம்பம், திருமறைக்காடு, திருஒற்றியூர், திருக்காளத்தி ஆகிய தலப் பெயர்களும் காணப் படுகின்றன. இந்தாண்டகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் "திருமேல் பேற்று எம் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன் நானே" என்னும் முடிபு உளது.

"பிறப்பானைப் பிறவாத பெருமை யானைப்
பெரியானை அரியானைப் பெண்ஆண் ஆய
நிறத்தானை நின்மலனை நினையா தாரை
நினையானை நினைவோரை நினைவோன் தன்னை
அறத்தானை அறவோனை ஐயன் தன்னை
அண்ணல்தனை நண்ணரிய அமரர் ஏத்தும்
திறத்தானைத் திகழ்ஒளியைத் திருமால் பேற்றெம்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே"

---

சீருத - கோபியாத. பிறப்பானை - ஒரு தாயர் வயிற்றில் பிறவாமல் அன்பர்கட்கு அருள் செய்ய வேண்டி அங்கங்குத் தோன்றுபவனை. நின்மலன் - குற்றம் அற்றவன், நண்ணரிய - நெருங்க முடியாத. அமரர் - தேவர், ஏத்தும் - போற்றும்.

# 12. திருவூறல்

இத் தலம் தக்கோலம் இரயில் அடியிலிருந்து நாலு கல் தொலைவில் இருக்கிறது. வண்டி போக்கு வரவு உண்டு. இக் கோவிலுக்குள் உள்ள ஒரு நதியின் வாயிலிருந்து தண்ணீர் வந்த வண்ணமாக இருக்கும். இந்நந்தி கோவில் மதிலோரத்தின் கிழக்கே இருக்கும் கங்காதரர் சந்நிதியின் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. இதனை இதுபோதும் கோவிலுக்குள் சென்றால் காணலாம். இறைவருடைய திருவடிகளிலும் தண்ணீர் சுரக்கின்றது. இக் காரணத்தைக் கொண்டே (அதாவது நீர் ஊற்றெடுத்து வரும் காரணத்தால்) இது திருவூறல் என்னும் பெயரைக் கொண்டுள்ளது. உள்ளே இருக்கும் நந்தியின் வாயிலிருந்து வரும் நீரை வெளியில் குழாயின் மூலம் வெளிவருமாறு செய்து வெளியில் ஒரு நந்தி உருவை அமைத்து அதன் வாயிலில் நீர் வருமாறு செய்து நீரைத் தேக்கி அதில் மக்கள் குளிக்க வசதி செய்துள்ளனர், இந்த இடம் நந்தி மடு எனப்படும். இந் நந்தி மடுவில் நீராடுதல் விசேடமாகும். கோயிலின் மேற்புரம் மலைச்சரிவில் ஓர் இயற்கை ஊற்று உளது. இதிலிருந்து வரும் தண்ணீரே கோவில் நந்தியின் வாயினின்று வந்து கொண்டிருக்கிறது. அது சிற்பியின் நுண்ணறிவு திறனால் அமைந்த கைத்திறன்.

இது சம்வர்த்த முனிவர் பூசித்த தலம். உமை அம்மையாரும் வழிபட்ட கோவில். இந்திரன், இயமன், சூரியன், சந்திரன் பாண்டவர்களும் வழி பட்டுள்ளனர். இங்குள்ள இறைவர் ஜலநாதேஸ் வரர், உமாபதீஸ்வரர் என்றும், இறைவியார் உமை அம்மை, கிரிஜல கன்னிகாம்பா என்றும் அழைக்கப் பெறுவர். இங்குள்ள தீர்த்தம் பார்வதி தீர்த்தம்.

இது பின்னால் விஜயநகர மன்னர்களால் நந்தி தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. இங்கு விருத்த க்ஷீரம் என்னும் குசத்தலை ஆறு ஓடுகிறது.

திருவூறல் உள்ள கிராமம் தக்கோலம். இந்தக் கிராமம் சரித்திரப் புகழ் வாய்ந்தது. இங்குச் சோழ மன்னனும் இராசாதித்தனுக்கும் புதிய கங்க அரசனை இரண்டாம் பூதுகனுக்கும் போர் நடந்துள்ளது. அந்த இடம் இதுபோது பெரிய மணல் வெளியாக இருக்கிறது.

இங்குள்ள கல்வெட்டின் மூலம் இறைவர் ஜல நந்தீஸ்வரர் என்று குறிக்கப்பட்டுள்ளனர். இத் தலத்திற்குப் பற்பலர் வெள்ளிப் பாத்திரங்களையும், பசுக்களையும், நிலங்களையும் தானம் செய்துள்ளார்கள் என்பதும் தெரிகிறது. துர்க்கை சிலைக்கு விளக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. மற்றும் சிலர், பொன்னும், பணமும், ஆடுகளும், நெல்லும் அளித்துள்ளனர்.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்றே உளது. இப் பதிகத்தை ஒருவாறு ஆசிரியத் துறையில் அடக்கலாம். இதற்குக் காரணம் ஒவ்வொரு பாடலின் நான்கு அடிகளும் ஒத்த சீர்களைப் பெறாமல், முதல் அடியும் மூன்றாவது அடியும் ஐந்தைந்து சீர்களையும் இரண்டாவது அடியும் நான்காவது அடியும் நான்கு சீர்களையும் பெற்றிருப்பதனால் எண்க. இதன் பண் வியாழக் குறிஞ்சி. இதனை இக்காலச் சௌராஷ்டிர இராகம் என ஒருவாறு கூறலாம். இப்பதிகத்தால் அறிவன: திருஞான சம்பந்தர் இப்பதிகத்தில் மக்களைத் தம்முடன் இணைத்து, "திருஊறலை உள்குதும்" என்று ஒவ்வொரு பாடலிலும் அமைத்து அழைத்து உபதேசம் செய்கின்றார். இறைவரைப் பற்றிப் பேசுகையில்,

---

உள்குதும் - நினைப்போம்.

" நம்மை ஊனம் அறுத்த பிரான் "
" நம்மை உய்யும் வகை புரிந்தான் "
" தன்னை உன்ன வினை கெடுப்பான் "
" பாரின் மிசை அடியார் பலர்வந்து இறைஞ்ச
மகிழ்ந்தாகம் ஊரும் அரவசைத்தான் "

என்று கூறியுள்ளார்.

சண்டேசுர நாயனாரைப் பற்றிய குறிப்பு இப்பதிகத்தில் உண்டு.

" எண்திசை யோர்மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழ அளித்தான் "

என்னும் வரிகளைக் காண்க.

இத் தலத்தின் இயற்கை அழகு,

" தேறல் இரும்பொழிலும் திகழ்செங்கயல்
பாய்வயலும் சூழ்ந்த ஊறல் "
" கொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர்
நிலநாளும் நயனம்
ஒத்தல ரும்கழனித் திருஊறல் "
" வான மதிதடவும் வளர்சோலைகள்
சூழ்ந்தழகார் திருஊறல் "
" கொண்டல்கள் தங்குபொழில்
குளிர் பொய்கைகள் சூழ்ந்து "
" தென்னென வண்டினங்கள் செறியார்பொழில்
சூழ்ந்தழகார் திருவூறல் "

என்று பாடப்பட்டுள்ளது.

---

ஊனம்-குற்றம், உய்யும்-பிழைக்கும், உன்ன - நினைக்க. பாரின் மிசை-பூமியில், இறைஞ்ச-வணங்க, எண்திசையோர்-எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள், எழில் - அழகிய, போனகமும்-உணவும், பண்டு-முன்பு, சண்டி-சண்டேசுரர், பொழில்-சோலை, இலகும்-விளங்கும், மதி-சந்திரன், கொண்டல் - மேகம், செறி - அடர்த்தி, நயனம் - கண். தென் என என்பது வண்டின் ஓசை.

இத் தலத்தை மாதர் பலர் வந்து வணங்கிச் செல்வர். இதனை "மை, அணி கண் மடவார் பலர் வந்து இறைஞ்ச" என்னும் வரியில் காணலாம்.

சம்பந்தர் தமது சீர்காழியைக் குறிப்பிடும்போது காந்தள் மலர் மலரும் காட்டினையுடையது என்றும், கொடிகள் பறக்கும் மாடங்களையுடையது என்றும் பாடுகின்றார். இப்பதிகப் பாடலைப் படிக்க வல்லவர்கள் பரலோகத்தில் இருப்பர் என்றும் கூறுகின்றார். இவ்வுண்மைகளை "கோடல் இரும்புறவின் கொடி மாடம்" என்றும், "பாடல்கள் பத்தும் வல்லார் பரலோகத் திருப்பாரே" என்றும் வருதல் கொண்டு உணர்க.

"நெய் அணி மூவிலைவேல் நிறைவெண் மழுவும்
அனலும் அன்று
கை அணி கொள்கையினான் கடவுள் இடம்வினவில்
மைஅணி கண்மடவார் பலர்வந் திறைஞ்ச மன்னிநம்மை
உய்யும் வகைபுரிந்தான் திருவூறலை உள்குதுமே"

—முதல் திருமுறை

---

## 13. திருஇலம்பையங்கோட்டூர்

இத் தலம் அரம்பை முதலான தேவலோக மாதர்களால் பூசிக்கப்பட்டது. ஆகவே அரம்பையங் கோட்டூர் என்று இருக்க வேண்டியது இலம்பையங் கோட்டூர் என மருவியது. சந்திரன், தேவகன்னியர்களும் பூசித்த தலம். சுவாமிக்கு ஒரு கால பூசையே நடக்கிறது. இவ்வூரில் கிறித்தவர்கள் மிகுதி. நாம் இறைவரை வணங்க வேண்டுமானால் கூவத்திலிருந்து பூசை செய்யப் போகும் குருக்களுடன் சென்று உடனே அவருடன் திரும்புவது நல்லது.

---

மூவிலை வேல் - சூலம், இறைஞ்ச - வணங்க, மன்னி - வீற்றிருந்து, உய்யும் - ஈடேறும்.

இத் தலத்தைக் கடம்பத்தூர் இரயில் அடியி லிருந்து எட்டுக்கல் சென்று கூவத்தை அடைந்து, அவ்வூர் ஏரியில் தண்ணீர் இல்லாதபோது ஏரிக்குள் ஒரு கல் நடந்தால் அடையலாம். இன்றேல் ஏரிகரை வழியே சுற்றிச்செல்ல வேண்டும். தக்கோ லத்திலிருந்து மேற்கே இரண்டு கல் கடந்தாலும் இத்தலத்தை அடையலாம்.

இங்குள்ள இறைவர் சந்திரசேகரர், தேவ நாயகர் என்றும், தேவியார் கோலேந்து முலை அம்மை என்றும் கூறப்பெறுவர். இங்குள்ள தீர்த்தம் சந்திர தீர்த்தம். கல்வெட்டின் மூலம் இத் தலத்து இறைவர் இலம்பையங் கோட்டூர் உடைய நாயனார் என அறிகிறோம். மேலும் விளக்கிற்கு நெல், பொன், ஆடுகள், நிலங்கள் முதலியன கொடுக்கப்பட்ட செய்திகளும் தெரிய வருகின்றன.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இந்பதிகத்தை எண்சீர் விருத்தத்தால் அமைந்த எண்சீர் விருத்தம் என் னலாம். ஒவ்வோர் அடியும் எட்டுச் சீர்களைக் கொண்டு வந்திருப்பதைக் காண்க. இப் பதிகப் பண் குறிஞ்சி. இதனை அரிகாம்போதி இராகம் என்று கூறுவர். இப்பதிகம் அகப் பொருள் துறை அமைந்த பதிகம் ஆகும். அதாவது திருஞான சம்பந்தர் தம்மை இறைவர் மீது காமம் உற்ற தலைவியாக நினைந்து பாடிய பாவனையில் அமைந் துள்ளது என்பதாம். இதில் அமைந்த அகப்பொருள் துறை, காமம் மிக்க கழிபடர் கிளவி எனப்படும். இதன் பொருள், தலைவி காமம் மிக்கமையின் பெருந் துயர் உற்றுக் கூறிய மொழிகள் என்பதாம்.

இதன் பேரின்பப் பொருள், சிவத்தோடு இடைவிடாமல் இருத்தலாகிய இணைந்த பாவனை

யில், பிரிந்து இருக்கின்ற ஆன்மா, இணைந்த காலத்து ஏற்பட்ட சிவானந்த அனுபவத்தால் உண்டாகிய ஒளி குறைய, அதனை எண்ணி "ஆன்ம நாயகியை வந்தேற்றுக் கொண்ட தேவரீர், இப்படி இடையே பிரிவு நேரச் செய்யலாமா" என்று வருந்திக் கூறுவது என்பது. மேலும், இப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் பாடுவன அனைத்தும், தம் வாக்கு அன்று. இறைவன் வாக்கே என்பதை ஒவ்வொரு பாடலிலும் "எனதுரை தனதுரை யாக" என்று வற்புறுத்திக் கூறியுள்ளனர். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும், தாம் காதல் மிகுதியும் கொண்ட காரணத்தால் இறைவர் தம் அழகினைக் கொள்ளை கொண்டார் என்பதையும் "என் எழில் நலம் கோள்வது இயல்பே" என்றும் பாடி யுள்ளனர். இப்பதிகத்தில் திரு இலம்பையங் கோட்டூர் இயற்கை வர்ணனை இனிதாக இயம்பப் பட்டுள்ளது. இப்பதிகத்தின் மூன்றுவது பாடலில் வரும் "பாலனும் விருத்தனும்" எனும் தொடர் திருவிளையாடல் புராணத்தில் வரும் விருத்த குமார பாலரான படல வரலாற்றை நினைப்பிக்கிறது.

இத்தலத்துப் பதிகத்தில் சீபர்ப்பதமலை, திருப்பூந்துருத்தி, திருமால் பேறு, திருமறைக்காடு, திருநெய்த்தானம், திருநின்றியூர், திருக்கழிப்பாலை, கச்சியேகம்பம், திருஒற்றியூர், திருஅண்ணுமலை ஆகிய திருத்தலங்களையும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இத்தலத்துப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் "என்னதுரை தனதுரையாக" என்று குறிப்பிட்டிருப்பதை உற்று நோக்குகையில், திருஞானசம்பந்தர் வாக்குகள் அனைத்தும் இறைவர் வாக்கு என்பது புலப்படுகிறது அன்றே!

இறைவர், தம்மை யார் தம் மனத்தில் நினைந்து வழிபடுகின்றுர்களோ, அவர்களின் சென்னியில்

விளங்குபவன், நினைப்பவர் மனத்துளான் என்று கூறப்பட்டுள்ளது உற்று நோக்குதற்கு உரியது.

இப்பதிகத்தில் இயற்கை அழகு பாடப்பட்டிருக்கும் போக்கை,

" கலையினார் மடப்பிணை துணையொடும் துயிலக்
கானல்அம் பெடைபுல்கிக் கணமயில் ஆலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர் "

" கருமலர்க் கவிழ்சுனை நீண்மலர்க் குவளை
கதிர்முலை இளையவர் மதிமுகத் துலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர் "

" நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலம்நா றும்பொழில் இலம்பையங் கோட்டூர் "

" குளம்புறக் கலைதுள மலைகளும் சிலம்பக்
கொழுங்கொடி எழுந்தெங்கும் கூவிளம் கொள்ள
இளம்பிறை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர் "

---

கலையின் ஆர் - கலைமானோடு கூடிய, மடப்பிணை - இளைய பெண்மான், கானல் - சோலையில், அம் - அழகிய, பெடை - பெண்மயில், புல்கி - தழுவி, கணம் - கூட்டமாக, ஆலும் - அகவும், பொழில் - சோலை, கழுமலர் - கருநெய்தல் பூ, கதிர் - ஒளி, இளையவர் - பெண்கள், மதி - சந்திரன், இருமலர் - பெரியமலர், பண் செய்ய - இசை செய்ய, தாது - மகரந்தப் பொடிகளை, விண்டு - மலர்த்தி, ஏலம் - ஏலக்காய் மணம், உற - பொருந்த, துள - துள்ள, சிலம்ப - ஒலிக்க, கூவிளம் - வில்வமரம்.

"கானமான் வெருவுறக் கருவிரல் ஊகம்
கடுவனோ டுகளும் கல்கடும் சாரல்
ஏனம்மான் உழிதரும் இலம்பையங் கோட்டூர்"

"புனமெலாம் அருவிகள் இருவிசேர் முத்தம்
பொன்னொடு மணிகொழித் தீண்டிவந் தெங்கும்
இனமெலாம் அடைகரை இலம்பையங் கோட்டூர்"

"பாருளார் பாடலோ டாடல் அருத
பண்முரன் றம்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்"

"வாருலாம் நல்லன மாக்களும் சார
வாரணம் உழிதரும் மல்லலம் கானல்
ஏருலாம் பொழில்அணி இலம்பையங் கோட்டூர்"

"வளமழை எனக்கழை வளர்துளி சோர
மாசுணம் உழிதரு மணிஅணி மாலை
இளமழை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்"

"கருஞ்சுனை முல்லைநல் பொன்அடை வேங்கை
களிமுக வண்டொடு தேன்இனம் முரலும்
இருஞ்சுனை மல்கிய இலம்பையங் கோட்டூர்"

என்னும் அடிகளைக் காணின், உணர்ந்து கொள்ளலாம்.

---

வெருவுற - நடுங்க, ஊகம் - பெண் குரங்கு, கடுவன் - ஆண் குரங்கு, ஏனம் - பன்றி, உழிதரும் - திரியும், இருவி - தினையை அறுத்த பிறகு நின்றதாள், ஈண்டி - நெருங்கி, அருத - நீங்காத, பண் - இசை, முரன்று - ஒலித்து, ஏர் - அழகு, எழுச்சி, பொழில் - சோலை, மாக்கள் - விலங்குகள் வாரணம் - யானை, மல்லல் - வளப்பம், கானல் - சோலை, கழை - மூங்கில், மாசுணம் - மலைப்பாம்பு, பொன் - பொன் நிறமான வேங்கைப் பூ, வேங்கை - வேங்கை மரம், முரலும்- ஒலிக்கும், இருஞ்சுனை - பெரியசுனை, மல்கிய - மிகுந்த.

சீர்காழி மணம் மிக்கது என்றும், கடல் ஒலி, ஓதம் மிக்க கானலும் கழிகளும் உடையது என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் நான்கு வேதங்களை ஓதியவர் என்பதும் நல்ல தமிழ்க்கு இனிய துணையானவர் என்பதும் ஈற்றுப் பாடலால் அறிய வருகின்றன. இப்பதிகத்தை இசையுடன் ஓதுபவர் வெந்துயர் கெடுவர் விண்ணவருடன் கூடுவர். வீட்டின்பம் உற்று இன்புறுவர்.

" கந்தனை மலிகனை கடல்ஒலி ஓதம்
 கானல்அம் கழிவளர் கழுமலம் என்னும்
நந்தியார் உறைபதி நான்மறை நாவன்
 நற்றமிழ்க் கின்துணை ஞானசம் பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்
 இசையொடு கூடிய பத்தும்வல் லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும்
 வீடுபெற் றிம்மையின் வீடெளி தாமே"

என்னும் பாடலில் மேற்கூறிய உண்மைகளைக் காணலாம்.

" நீருளான் தீயுளான் அந்தரத் துள்ளான்
 நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊருளான் எனதுரை தனதுரை ஆக
 ஒற்றைவெள் ஏறுகந் தேறிய ஒருவன்
பாருளார் பாடலோ டாடல் அறுத
 பண்முரன் றஞ்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
 இருக்கையாப் பேணிஎன் எழில்கொள்வ தியல்பே"

—முதல் திருமுறை

---

கந்தனை - மணம், மலி - மிக்க, ஓதம் - அலை, கானல் - கடற்கரைச் சோலை, கழுமலம் - சீர்காழி, நந்தியார் - சிவ பெருமான், உறை - வாழும், வீடு - மோட்சம், இம்மை - இப் பிறப்பில், அந்தரம் - ஆகாயம், ஏத்தும் - போற்றும், ஏறு - இரிடபம், உகந்து - விரும்பி, பார் - பூமி, இருக்கை - இருப் பிடம், பேணி - போற்றி.

## 14. திருவில்கோலம்

இறைவர் திரிபுரம் எரித்தபோது வில்லேந்திய கோலத்துடன் துலங்கினர். அக்கோலத்துடன் இங்கு வீற்றிருத்தலின் இத்தலம் இப்பெயர் பெற்றது. இத் தலம் கூவம் என்றும் கூறப் பெறுகிறது. ஆனல் பதிகத்தில் கூவரம் என்று கூறப்பட்டுள்ளது. தேரின் கூவரம் (ஏர்க்கால்) உடைந்த காரணத்தால் கூவம் எனப் பெயர் பெற்றதாகக் காரணம் கூறுவர். திரிபுரதகனக் குறிப்பு இப்பதிகத்தில் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. இக் குறிப்பு இரண்டாவது, நான்காவது, ஆருவது, ஏழாவது, ஒன்பதாவது பாடல்களில் காணப்படுதலை அறிக. இறைவர் திரிபுராந்தகேசுவர் என்று கூறப்பெறுவர். தேவியார் திரிபுராந்தக நாயகி ஆவார். இத் தலத்து இறைவர் தீண்டாத திருமேனியுடையவர். பெருமழை, மழை இன்மை, போர் இவை நிகழ இருக்கும்போது இறைவர் தம் திருமேனியில் பல்வேறு நிறம் தோன்ற விளங்குவர். இதனைக் கொண்டே திருஞான சம்பந்தர் இறைவரைத் தம் பதிகத்தில் மூன்ரும் பாடலில் "ஐயன் நல் அதிசயன்" என்று புகழ்ந்து கூறியுள்ளார். இறைவர்க்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு என்பதை இத்தல புராணம் அறிவிக்கிறது.

இத் தலத்தைக் கடம்பத்தூர் இரயில் அடியிலிருந்து தென்மேற்கே ஐந்து, ஆறு கல் சென்ருல் அடையலாம். பஸ் வசதியும் உண்டு. கோயிலுக்குக் கிழக்கே திருக்குளம் உளது. ஊற்று நீரே இறைவரின் முழுக்குக்குப் பயன்படுகிறது. இத்தீர்த்தத்தைக் கொண்டு வரவேண்டிய கடப்பாடு உடையவர் வைணவப் பிராம்மணர் ஆவார். (திருக்கழுக்குன்றத்து இறைவர்க்கும் திருமஞ்சன நீர் முதலியவற்றை வைணவப் பிராம்மணர்தாம் கொண்டுவர வேண்டியவர்.)

இத் தலத்து இறைவனாரைக் காளியும், இந்திரனும் பூசித்துள்ளனர். தீர்த்தங்கள் ஆவிற் கோல தீர்த்தம்; கூபாக்கினி தீர்த்தம் என்பன. இத் தலத்திற்குத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய தல புராணம் உண்டு.

கல் வெட்டால் அறிய வருவன கீழ்வருவன: இத் தலத்து இறைவியாரின் திருப்பெயர் பைஅரவு, அல்குல் அம்மையார் என்பது. இவ்வம்மையாரின் வெள்ளிக்கிழமை வழிபாட்டிற்கு இம்மடி சென்னம்ம நாயகரும், விற்கோல ஊராரும் நிவந்தம் அளித்துள்ளனர்.

இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகம் ஒன்றே உளது. இப் பதிகம் கலி விருத்தத்தால் ஆயது. இதில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அடிக்கு ஈர் அசைச் சீர்கள் நான்கு நான்கு பெற்று வருவதனால் இப் பெயர் பெற்றது. இப் பதிகப் பண் காந்தாரம் பஞ்சமம். இதனை இக்காலத்துக் கேதாரகௌள இசையில் அடக்கலாம். இப்பதிகத்தின் எட்டாம் பாட்டுச் சிதைந்து போயிற்று. இப்பதிகத்தால் நாம் அறிவன:

இப் பதிகத்தில் இறைவர் நல் அதிசயன், முந்தினான், நேசர்க்குப் பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும் சீர்மையினான் என்று சிறப்பிக்கப் பட்டுள்ளார். இத்தலம்,

"கொந்துலாம் மலர்ப்பொழில் கூகம்"

"வளர்பொழில் கூகம்"

"சேடன செழுமதில் திருவில் கோலம்"

எனப் புகழப்பட்டுள்ளது.

---

கொந்து - கொத்து, பொழில் - சோலை, கூகம் - திருக் கூவம் (திருவிற் கோலம்) சேடன - எல்லாம் அழியத் தான் மட்டும் மிச்சமாய் இருப்பவனை சிவபெருமானுடைய.

இப் பதிகத்தைப் பாட வல்லார்க்குப் பாவம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

திருஞான சம்பந்தர் தம்மைத் தமிழ் ஞான சம்பந்தர் என்று கூறிக்கொள்கின்றனர்.

தமிழின் சிறப்பைக் கூறுமிடத்து யாரும் நாட வல்ல தமிழ் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*" சீர்மையில் சமணொடு சீவ ரக்கையர்*
*நீர்மைஇல் உரைகள்கொள் ளாத நேசர்க்குப்*
*பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்*
*சீர்மையி னுன்இடம் திருவில் கோலமே "*

—மூன்றும் திருமுறை

## 15. திருவாலங்காடு

இத்தலம் வடமொழியில் வடாரண்யம் என்று கூறப்பெறும். வடம் என்பது ஆலமரம், ஆரண்யம் என்பது காடு. நடராசர் நடனம் புரியும் சபைகள் பல ஆயினும், சிறப்பாகக் கூறப்படுவன ஐந்து. முதலாவது பொற் சபை, இது சிதம்பரத்தில் உள்ளது. இரண்டாவது வெள்ளி அம்பலம், இதனை மதுரையில் காணலாம். மூன்ருவது தாம்பர சபை (செம்பு), இது திருநெல்வேலியில் உள்ளது. நான்காவது சபை சித்திர சபை. இது குற்ருலத்தில் இருக்கிறது. ஐந்தாவது இரத்தின சபை. இதனை மணிமன்று என்றும் கூறுவர். இது திருவாலங் காட்டில் இருக்கிறது. இந்த இரத்தின சபையில்தான்

---

*சீவரக்கையர்* - பௌத்த துறவிகள், *சீவரம்* - பவுத்தர் உடுக்கும் காவி ஆடை; *கையர்* - வெறுக்கத் தக்கவர், *நீர்மை* - தன்மை, *பார்* - பூமியில், *மலி* - மிக்க, *பரிந்து* - இரக்கம் காட்டி, *நல்கிடும்* - தரும்.

நடராசப் பெருமான் காளியம்மையோடு நடனம் புரிந்தனர். இங்கு இவர் புரிந்த தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம். அதாவது ஒரு காலை மேலே தலை அளவுக்குத் தூக்கி ஆடும் நடனம். இம்மூர்த்தி எட்டுத் திருக்கால்களுடன் இங்குப் பொலிகின்றார். இவ்வாறு காலைத் தூக்கி ஆட இயலாமல் காளி தோற்றனள். நடராசப் பெருமான் இவ்வாறு காலைத் தூக்கி ஆடியதற்குக் காரணம் காளியை நடனத்தில் தோற்கடிக்க மட்டும் அன்று; வேறு ஒரு காரணத்தினாலும் ஆகும். அதாவது அவரது காது குண்டலம் ஆடும்போது கீழே விழுந்து விட்டது. அதனைக் கையால் எடுக்காமல் நடனம் புரிவது போலவே கால் விரலால் எடுத்துத் தம் காதில் அணிந்து கொண்டனர். இந்த அற்புத நிகழ்ச்சியை யாரும் அறிந்திலர். பின்னர் நடனம் எல்லாம் ஓய்ந்த போது, இறைவர் அங்கிருந்த திருமால், பிரமன், இந்திரன், முதலான தேவர்களை நோக்கி, "அன்பர்களே! இங்கு நடந்த நடனத்தில் நிதழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை அறிவீரோ?" என்று வினவ, அவர்கள் "நாங்கன் ஒன்றையும் அறியோம்" என்று கூற, அதுபோது கூத்தப் பெருமான் "நீங்கள் மயிலாப்பூருக்குச் சென்று திருவள்ளுவரைச் சந்தித்துக் கேட்பின், அவர் விளக்குவார்" என்று கட்டளை இட்டனர். உடனே தேவர்கள் திருவள்ளுவரை அடைந்து வினவிய போது, அவர், நீங்களெல்லாம் இறைவர் நடனம் புரிகையில் அருகில் இருந்தீர்கள். உங்களுக்குத் தெரியாமலா நூலை வாய் எச்சில் கொண்டு விரலால் நெருடும் ஏழையாகிய யான் குண்டலத்தைக் காலால் எடுத்துக் காதில் அணிந்து கொண்ட இறைவன் திருக்கூத்தின் மாண்பை உணர முடியும்?" என்று தெரியாதது போலக் கூறி, உண்மையையும் உரைத்து விட்டனர். இந்தக் கருத்துடைய பாட்டே,

"பூவில் அயனும் புரந்தரனும் பொற்பமைந்த
தாவி அளந்தோனும் தாம்இருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை அறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து"

என்பது.

இறைவர் காளியின் பொருட்டு நடனம் புரிந்தனர் என்பதைத் திருநாவுக்கரசர் "ஆடினார் காளி காண ஆலங்காட் டடிகளாரே" என்று இத் தலத்துப் பதிகத்தில் பாடி இருப்பதைக் காணலாம்.

இத்தலத்தின் மாண்பை அறிந்து காரைக்கால் அம்மையார் தம் காலால் மிதித்தற்கும் அஞ்சித் தம் தலையால் நடந்தே கூத்தப்பிரானைக் கண்டு வணங்கிப் போற்றியுள்ளனர். இதனைச் சேக்கிழார்,

"செப்பரும் பெருமை அன்பால் திகழ்திரு ஆலங் காடாம்
நற்பதி தலையி னாலே நடந்துபுக் கடைந்தார் அன்றே"

என்று அறிவித்திருப்பதும் காண்க.

திருஞான சம்பந்தரும் அம்மையார் தலையாலே நடந்தபதி என்று உளம் கொண்டு, ஆலயத்திற்குள் செல்லாமல், திருவாலங் காட்டுக்கு அண்மையதான ஓர் ஊரில் தங்கினார். இதனையும் சேக்கிழார்,

"இம்மையிலே புவியுள்ளார் யாரும் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை ஆளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மைஅப்பர் திருவாலங் காடாம் என்று

---

அயன் - பிரமன். புரந்தரன் - இந்திரன். பொற்பு - அழகு. உளந்தோன் - உலகை அளந்த திருமால். நெருடும் - தடவும். இழை - நூலிழை. குழை - காது குண்டலம். நக்கும் - காலால் எடுத்து காதிலணியும். பிஞ்ஞகன் - சிவபெருமான். இம்மையில் - இப்பிறப்பில். புவி - பூமி. அம்மை - காரைக்காலம்மையார்.

தம்முடைய வர்மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பைவரும் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அன்றிரவு பள்ளி கொள்வார்''

என்று பாடி அறிவித்துள்ளனர்.

சுந்தரரும் ஆலயத்திற்குள் செல்லாமல் தூரத்தில் இருந்தே பாடினர் என்பதையும் சேக்கிழார்,

''அங்கணர்தம் பதிஅதனை அகன்றுபோய் அன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ் பழையனூர் உழையெய்தித்
தங்குவார் அம்மைதிருத் தலையாலே வலம்கொள்ளும்
திங்கள்முடி யார்ஆடும் திருவாலங் காட்டின்அயல்''

''முன்நின்று தொழுதேத்தி முத்தாஎன் றெடுத்தருளப்
பன்னும்இசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவார்''

என்று குறித்துள்ளனர்.

காரைக்கால் அம்மையார், ''அரவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க'' என்று விண்ணப்பித்துக் கொண்டதற்கு இணங்க, ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தியின் அருகு தொழுத வண்ணம் இருப்பதை இன்றும் நேரில் கண்டு களிக்கலாம். பதஞ்சலி முனிவர் கார்க்கோடகன் என்னும் பெயரிலும், வியாக்கரபாத முனிவர், முஞ்சிகேசர் என்னும் பெயரிலும் இறைவரது நடனத்தைக் கண்டு களித்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

---

உடையவர் - அடிமையாகக்கொண்ட சிவபெருமான். சண்பை வரு சிகாமணியார் - திருஞானசம்பந்தர். சண்பை என்பது சீர்காழிக்குரிய பெயர்களில் ஒன்று. மாடு - பக்கம் அங்கணர் - சிவபெருமான். (அழகிய கண்ணுடையவர்) பதி-ஊர். பங்கயம்-தாமரை. தடம் - குளம். பணை - வயல். உழை - பக்கத்தில். திங்கள் - சந்திரன். அள்ளல் - சேறு. அம் - அழகிய, அடிகள் - இறைவரே, தலைவரே. பழனை - பழையனூர். அத்தா - தந்தையே. ஏத்தி - போற்றி.

இத்தலம் பழையூர் வட ஆரண்யம் என்றும் கூறப்பெறும். பழையூர் என்பது பழையனூர். திருவாலங்காடுதான் பாடல்பெற்ற தலம். ஆனுல், பழையனூர் கிராமம் இதனுடன் இணைத்துப் பாடப்பட்டுள்ளது. "பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே" என்று திருஞானசம்பந்தரும், "அள்ளல் அம் பழனை மேய ஆலங்காட் டடிகளாரே" என்று அப்பரும், "பழையனூர் மேய அத்தா ஆலங் காடா" என்று சுந்தரரும் பாடுதல் காண்க.

இத்தலத்தைத் தேவேந்திரன் ஆதிசேடன், சுனந்தர் முதலியோர் பூசித்துள்ளனர். இத்தலத்தில் முத்தி தீர்த்தம், குக தீர்த்தம், என இரண்டு தீர்த்தங்கள் உள. ஆல விருட்சம், பலா விருட்சம் தல விருட்சங்கள். இத் தலத்து இறைவர் சிங்கப் பெருமான், ஊர்த்துவ தாண்டேஸ்வரர் எனும் பெயர் உடையவர். தேவர் சிங்கப் பெருமான் என்னும் பெயரைச் சுந்தரர் தம் பதிகத்தில் "சிவனே! தேவர் சிங்கமே" என்று பாடியும் உள்ளனர். தேவி யார் வண்டார் குழலி அம்மை என்னும் பெயரினர்.

இத்தலத்தில் பங்குனி உத்தர விழாவும், மார்க்கழி திருவாதிரை விழாவும், ஆனித் திரு மஞ்சன விழாவும் சிறப்புடையன. சில்லாண்டுக ளாகப் பங்குனி சுவாதி நட்சத்திரத்தன்று காரைக் கால் அம்மையார் திருவிழா பெருஞ் சிறப்புடன் நடைபெறுகிறது.

இத்தலம் திருவாலங்காடு இரயில் அடியி லிருந்து வடகிழக்கே மூன்று கல் தொலைவில் உளது.

இத்தலத்துக் கல்வெட்டினுல் இறைவர் பெயர் திருவாலங்காடு உடைய நாயனுர் என்பது தெரி கிறது. இத்தலத்து இறைவியார் கல்வெட்டின் மூலம் வண்டார் குழலி நாச்சியார் எனவும், பிரம ராம்பாள் எனவும் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

நடராசப் பெருமான் திருவரங்கில் அந்தமுற நிமிர்ந்தருளிய நாயனுர் என்ற பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இப்பெருமானுக்கு வத்ஸராசன் என்பவன் விளக்கெரிக்க நிலம் அளித்துள்ளனன். இங்குள்ள மண்டபம் ஒன்று, மூன்ரும் குலோத் துங்கன் காலத்து அம்மை அப்பன் பழி அஞ்சிய பல்லவாராயன் என்பவனுல் கட்டப்பட்டது. இவ் வூரில் உள்ள தென்னையும், பனையும் சான்ருர் களால் கள் இறக்கப்படாதவை என்னும் குறிப்புக் காணப்படுகிறது. இது கொண்டே மதுவிலக்குக் குறிப்பு அக்காலத்திலும் நடைமுறையில் இருந்ததை அறிந்து மகிழ்வோமாக. பழையனூரைக் கங்கை கொண்ட சோழனும் இராசேந்திர சோழன் திரு வாலங் காடுடைய மகா தேவருக்குத் தானமாகக் கொடுத்துள்ளனன்.

பழையனூர் என்பது திருவாலங்காட்டுத் தலத் திற்கு ஒரு கல் தொலைவில் உளது. இங்கு இறைவர் பங்குனி உத்தரத்தின் போதும், மார்கழித் திருவா திரையின் போதும் எழுந்தருளுவர். இங்கும் ஒரு சிவாலயம் உண்டு. இத் தலத்து வேளாளர்கள் தனிச் சிறப்புக்கு உரியவர்கள். இவர்கள் சொன்ன சொல்லைக் தட்டாதவர்கள் என்பதை நிலை நிறுத்த எழுபது வேளாளர்கள் தீக்குழியில் இறங்கி உயிர் விட்டதை அறிந்து உண்மையை உணரலாம். இவர் கள் தீக்குளித்த குழி இன்னும் பழையனூரில் உண்டு. அங்குத் தீக்குளித்தல் போன்ற உருவ அமைப்பையும் இன்றும் காணலாம்.

தீக் குளித்தமைக் குரிய காரணம் பின் வருமாறு: ஒரு செட்டி மகன் தன் மனைவியை விடுத்து வேறு ஒருத்தியைக் காதலித்தனன். அதனுல் தன் மனைவியைக் கொன்று விட்டனன். இவனைப் பழி வாங்க எண்ணிய அவள் பேய் வடிவம் கொண்டு

நீலி என்னும் பெயருடன் ஒரு சத்திரத்தில் ஒரு குழந்தையுடன் தங்கி இருந்தனள். ஒரு நாள் தன்னைக் கொன்ற கணவன் அவ்வழியே வந்தனன். அதுபோது அவனை வழி மடக்கி "என்னை இம்மாலையில் தனியே விட்டுப் போவது சரியன்று" என்று கூறித் தடுத்தாள். அவன் அவளைப் பேய் என்று உணர்ந்து அவளைத் தள்ளிவிட்டு மேலே நடந்தான். அந்தச் சமயம் பழையனூர் வேளாளர்கள் அவ்வழியே வந்தனர். அவர்கள் இருவர்களின் உரையாடல்களையும் கேட்டு நீலியின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்துச் செட்டி மகனை நோக்கி, "நீ இவளோடு இங்குத் தங்குக. இவளால் உன் உயிர்க்கு ஆபத்து நேர்ந்தால், நாங்கள் எழுபது பேரும் எங்கள் உயிரைக் கொடுப்போம்" என்றனர். அவர்கள் பேச்சைக் கேட்டு வணிகன் அன்று இரவு அவளுடன் தங்கினான். அப்பேய் அவனை அறைந்து கொன்று மறைந்தது. வேளாளர்கள் காலையில் வந்து பார்த்தனர். வணிகன் இறந்து கிடப்பதைக் கண்டனர். ஆகவே சொன்ன சொல்லைத் தட்டாது தீக்குழி அமைத்துத் தீ எழுப்பி அதில் இறங்கி இறந்தனர். இதனை சம்பந்தர் தம் திருப்பதிகத்தில்,

> "வஞ்சப்படுத் தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
> டஞ்சும் பழையனூர் ஆலங்காட் டெம் அடிகளே"

என்று பாடிக் குறிப்பிட்டுள்ளனர்.

திருவாலங்காட்டுத் தலத்திற்குக் காரைக்கால் அம்மையார் பாடியுள்ள பதிகங்கள் இரண்டும், திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசை, திருத்தாண்டகம் ஆகிய இரு பதிகங்களும், சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் ஆக ஆறு உண்டு.

---

ஒருத்தி - நீலி. வாணாள் - வாழ்நாள்.

காரைக்கால் இம்மையார் மூவர் முதலிகட்கு (அப்பர், சம்பந்தர், சுந்தரர்) முன்பே பதிகம் பாடிய பெருமைக்கு உரியவர் ஆதலின், அவ்வம்மையார் பதிகங்கள் இரண்டும் மூத்த திருப்பதிகங்கள் எனப் பட்டன. மூத்த முதல் திருப்பதிகம் எண்சீர் விருத் தத்தால் ஆகிய எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். ஒவ்வோர் பாட்டின் அடியிலும் நான்கு நான்கு சீர்கள் இருப்பதைக் காணலாம். இதற்குரிய பண் நட்டபாடை. இதனை இக்காலத்து நாட்டை இராகம் எனக் கூறலாம். ஒரு சிலர் நாட்டைக் குறிஞ்சி என்றும் கூறுவர்.

முதல் மூத்த திருப்பதிகத்தில் அம்மையார் பெரிதும், ஏன்? முழுமையும் சுடுகாட்டின் வர்ணனை யைப் பேய்களின் செயல்களைச் சித்திரித்துப் பாடி யுள்ளனர். தமிழில் உள்ள பரணி என்னும் நூலைப் பாடுதற்கு இப்பதிகம் கருவாய் அமைந்தது என்று கூறினும், அது மிகை ஆகாது. அத்தகைய சுடுகாட்டில்தான் எங்கள் இறைவன் மனம் உவந்து ஆடுபவன் என்றும், அவனது இடம் திருவாலங் காடு என்றும் கூறியுள்ளனர். "அங்கம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள் அப்பன் இடம் திருஆலங் காடே" என்று பாடி இருத்தலைக் காண்க.

இனி அவ்வம்மையார் சுடலையினையும் பேய்களை யும் எவ்வாறு வர்ணித்துள்ளார் என்பதைப் பார்ப்போ மாக. தொங்கும் முலையும், குண்டு கண்ணும், வெண் பல்லும், குழிந்த வயிறும், மேலே தூக்கிய நரம்பும் சிவந்த தலை முடியும், நீண்ட பல்லும், உயர்ந்த கணுக்காலும் உடைய பேய் தங்கி அலறும் பொலிவு அழிந்த காடு என்றும்,

கள்ளிச் செடியின் பிளவில் காலை நீட்டி, எரியும் கொள்ளிக் கட்டையை எடுத்து அதில் இருக்கும் கரியை மையாகக் கொண்டு தம் கண்களில் பூசிக்

கொண்டு, வெடு வெடு என்று சிரித்து, அங்கு வரும் மிருகங்களைப் பார்த்துப் பயந்து, துள்ளி விழுந்து, பிணத் தீ சுட்டிட, அதனால் முகமும் உடம்பு துவண்டு, அங்குள்ள புழுதிகொண்டு தீயை அணைக்கும் இடம் என்றும்,

வாகை மரங்கள் விரிந்து அவற்றின் வெண்ணெற்று (பழங்கள்) ஒலிக்க, இருள்மிக்க நடு இரவில், கூகை, ஆண் தலைப் பறவை முதலியன பாட, ஆந்தை கிளைகளில் குதித்து ஓட, ஈகைக்கொடி படரும் கள்ளிச்செடியின் நிழலில் இருக்கும் பிணப் படுக்கையும் புதைக்கும் இடங்களும் உடைய சுடலை என்றும்,

அங்கு இறந்தார் பொருட்டு அமைத்த சோற்றை நரி உண்ண, இக்காட்சியை இதுவரையில் கண்டதில்லை என்று கைகளைத் தட்டிக்கொண்டு கோபங்கொண்டு பேய்கள் ஓடும் இடம் என்றும்,

ஒரு பேய் பிணத் தசையை நன்கு விழுங்கி, தலை மாலைகளை அணிந்து, தன் பிள்ளைக்குக் காளி என்று பெயரிட்டுச் சீராக வளர்த்துக் குழந்தை மேல் படிந்த புழுதியைத் துடைத்து, முலை கொடுத்துப் பால் ஊட்டிச் செல்ல, அங்ஙனம் சென்ற பேய் வராததைக் கண்டு, குழந்தைப் பேய் அழுது பின் ஓய்ந்து உறங்கும் சுடலை என்றும்,

மென்மையான பாதமும் நீண்ட நகமும், பருந்து போன்ற காலுமுடைய பேய் பருந்து, கூகை, கண்டை, ஆந்தை, நரிகள், அணங்கு நிறைந்த சுடலை என்றும், பேய்கள் பிட்டத்தைத் தட்டிக் கொண்டு பிணத்தைப் புரட்டி ஆடும் சுடலை என்றும்,

கொள்ளிவாய்ப் பேய், துள்ளிக் குதித்து, ஆடி எரியும் பிணத்தை இழுத்து அப்பிணத்தின் தசையைத் தின்னும் இடம் என்றும், நரிகள் குதித்தாடும் இடம் என்றும்,

எங்கும் திரிந்தவர் இறந்து பிணமானதும், அவர்களைச் சுடலையில் கொணர்ந்தபோது, அப் பிணங்களைச் சூழப் பேய் இருக்கும் இடம், என்றும், பேய்கள் கூடி ஒன்றினை ஒன்று அடித்துக்கொண்டு ஆரவாரம் செய்து, பரவி நின்று விகடப் பாடல் களைப் பாடி ஆட, பக்கத்தே நரிகள் யாழ் வாசிக்கும் இடம் என்றும் வர்ணித்துள்ளனர். நரி ஊளையிடு தலை யாழ் வாசிப்பது போன்றிருந்தது எனக் கூறி யிருப்பது புகழ்வதுபோல இகழ்வதாகும்.

இறைவர் இங்கு நடனம் ஆடும் சிறப்பைத் தாழ்சடை எட்டுத் திசைகளிலும் வீசி அங்கம் குளிர்ந்து அனலில் ஆடுகின்ருன் என்றும், மண்டல மாக நின்றும் உள்ளாளம் என்னும் பாட்டைப் பாடி யும் திருவடியை வீசியும் மேல் உலகம் முட்ட ஆடுகின்ருன் என்றும், கழல் ஒலியும் சிலம்பு ஒலியும் ஒலிக்கவும், காலை வலம் இடமாகச் சுழற்றியும் நரிகள் துள்ள நடனம் புரிகின்ருன் என்றும், பேய்க் கணங்கள் சூழக் காடு, கடல், மலை, மண், விண் சுழலவும், அனலைக் கையில் ஏந்தி ஆடுகின்ருன் என்றும், இசைத்தாளமும் இசைக் கருவிகளும் பொருந்த ஆடுகின்ருன் என்றும், பிணம் சுடும் தீயே விளக்காகக் கொண்டு, தேவர்கள் முழக்கும் மத்தள ஓசையும் திகைக்கும்படி சிலம்பு ஒலிக்க அந்தி வேளையில் ஆடுகின்ருன் என்றும் பாடி யுள்ளனர்.

இப்பதிகத்தில் இறைவர் எங்கள் அப்பன், அரவப் புயங்கள், ஆலங்காட்டு அடிகள் என்று குறிக்கப்பட்டுள்ளார்.

இப்பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் குரல், துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி என் னும் தமிழ் இசைப்பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்க. கொக்கரை, தக்கை, தகுணிதம், துந்துபி,

தாளம், வீணை, மத்தளம், கரடிகை, வன்கை மென் தோல், உடுக்கை, குடமுழா, மொந்தை ஆகிய இசைக் கருவிகளும் குறிக்கப்பட்டுள்ளதையும் உணர்க.

இப் பதிகத்தின் ஈற்றுப் பாடல் வழி காரைக்கால் அம்மையார் பேய் வடிவம் கொண்ட பின்பே இப் பதிகத்தைப் பாடினர் என்னும் குறிப்பு இருப்பதைக் "காரைக்கால் பேய் செப்பிய செந்தமிழ்" என்னும் தொடரால் தெரிய வருகிறது. இத் தொடர் அம்மையார் வாக்கு ஆதலால், அம்மையார் பேய் வடிவு கொண்டனர் என்பது உண்மை என அறுதி இட்டு உறுதிப்படுத்தலாம் அன்றோ? இப் பதிகத்தைப் பாட வல்லார் சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவார்.

"கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந் திருபற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி யுலறு காட்டில்
தாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்தன லாடு மெங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே"

"விழுது நிணத்தை விழுங்கி யிட்டு
வெண்தலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி என்று
பேரிட்டுச் சீருடைத் தாவ ளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொ டுத்துப்
போயின தாயை வரவு காணா
தழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்பன் இடம்திரு ஆலங் காடே"

—காரைக்கால் அம்மையார் முதல் மூத்த திருப்பதிகம்.

---

கொங்கை - முலை. திரங்கி - சுருங்கி. பங்கி - தலைமயிர். பரடு - குடிப்பு. விழுது - கொழுப்பு. நிணம் - தசை. விரவு - சேர. கழுது - பேய்.

காரைக்காலம்மையாரின் இரண்டாவது மூத்த திருப்பதிகம் அறுசீர்க் கழிநெடில் அடி ஆசிரிய விருத்தம். ஒவ்வொரு பாட்டின் அடிகளும் ஆறு சீர்களைக் கொண்டு திகழ்வதை உற்று நோக்கவும். இதில் சந்தம் அமைந்திருப்பதைக் காண்க. பாட்டைப் படிக்கும்போது சந்தம் துள்ளுவதை உணரலாம். இப்பதிகப் பண் இந்தளம். இதனை இக்கால இசைகளில் இலளித பஞ்சமியிலும், நாதநாமக்கிரியையிலும் ஒருவாறு அடக்கலாம். இப் பதிகத்திலும் சுடலையின் வர்ணனையே பேசப்பட்டுள்ளது. இந்தச் சுடலையில் இறைவர் ஆடுதல் புகழப்பட்டுள்ளது. இறைவர் பேய்கள் முழவம் (மத்தளம்) வாசிக்கக் கூளி, (இதுவும் ஒருவகைப் பேய்) பாட ஆடுகின்றார் என்றும், அனலைக் கையில் ஏந்தி ஆடுகின்றார் என்றும், பித்த வேடங் கொண்டு ஆடுகின்றார் என்றும், கூளிக் கூட்டம், புல்லாங் குழல் வாசிக்க, தேவர்கள் மத்தள ஓசை இசைக்க ஆடுகின்றான் என்றும், மாலை அந்திப்பொழுதில் ஆடுகின்றான் என்றும், மலைமகளாம் உமையார் கண்டு மருளும்படி ஆடுகின்றான் என்றும், இசை பாட உடுக்கையும் பறையும் ஒலிக்க ஆடுகின்றான் என்றும், சடைகள் தாழ ஆடுகின்றான் என்றும் பாடப்பட்டுள்ளதைக் காண்க.

இறைவர் குழகன், (இளையன்) அழகன், பெருமான், பரமன், மாயன், விமலன், அடிகள் என்று குறிக்கப்பட்டுள்ளனர்.

சுடலைக்காட்டில் எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி ஆகிய மரங்கள் பரந்துள்ளன என்றும், பிணங்கள் பரவி இருந்தன என்றும் வர்ணிக்கப் பட்டிருப்பதை அறியவும்.

பறைபோன்ற கண்களையுடைய பேய்கள் பிணக் குடர்களை எடுத்துச் செல்லும். சுட்ட பிணங்களின்

தசை தீயில் உருக்கி நிலம் எல்லாம் நனையும். பேய்கள் துணங்கை என்னும் கூத்தை ஆடும்; பிணங்களைத் தின்று மகிழ்ந்து இருக்கும். இவற்றை எல்லாம் நோக்கப் பார்ப்பவர்களுக்கு அச்சத்தை விளைவிக்கும். பறவைகள் செத்த பிணங்களின் தலையைத் துளைக்கும். அத் தலைகளை நரிகள் கவர்ந்து செல்லும். ஆந்தைகள் அந் நரிகளைத் தம் சிறகால் அடிக்கும். ஊமக் கோட்டான் பிறர் அஞ்ச விழித்துப் பார்க்கும். நரிகள் எங்கும் நடந்து பிணங்களைத் தம் விரலால் பிளக்கும். ஒரு பேய் செத்த பிணத்தைப் பிணம் என்று அறியாமல், சுட்டிக் காட்டிக் கத்தி உறுமி, அதன்மீது நெருப்பை வீசி, அப் பிணத்தைத் தாண்டிக் கடந்து போய், வயிற்றில் அடித்துக் கொள்ள அவ்வோசை கேட்டுப் பல பேய்கள் விலகி ஓடும். முள்ளிச் செடிகள் தீந்து இருக்கும். முளரிச் செடி (முள் செடி) கருகி இருக்கும், மூளைகள் சிதறிக் கிடக்கும், கள்ளிச் செடிகள் வற்றி இருக்கும். எங்கும் வெள்ளிடமாக இருக்கும். வளைந்த வாள் போன்ற பற்களையுடைய கூகைப் பறவை மூளையையும், பிணத்தையையும், விழுங்கி ஒலித்துக் கொண்டிருக்கும். ஒரு பேய் தனக்கு உண்ணும் பொருள் ஒன்றும் கிடைக்காமை யால் சிந்தனையில் ஆழ்ந்து உறங்கும், மூங்கில்கள் நன்கு வளர்ந்து முத்துகளைச் சிந்தும். மெலிந்த உருவும், உலர்ந்த கூந்தலும், பருத்த அலறும் வாயும் உடைய பேய்கள் கூடிப் பிணங்களை உண்ணும். அருகில் உள்ள சோலைகளில் ஆண் குரங்குகள் துள்ளிக் கொண்டிருக்கும். மூங்கில்கள் வளர்ந்து கொண்டிருக்கும். கழுகும், பேயும், பிணங் களின் தலையும், புகையும் நிறைந்திருக்கும். குண் டான வயிறுடைய குறியதும், சிறியதும், நெடியது மான பேய்கள் நிறைந்திருக்கும். இண்டைக் கொடிகள் மிக்கிருக்கும், இருள் சூழ்ந்திருக்கும்.

ஒரு பேய் தன் குழந்தையைப் பயமுறுத்தித் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கும். இவ்வாறெல்லாம் இந்தச்சுடலை இப்பதிகத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் அம்மையார் தம்மை "கனல் வாய் எயிற்று (பல்)க் காரைக்கால் பேய்" என்று கூறிக் கொள்கின்றனர். மேலும் இப் பதிகத்தின் வழி அம்மையார் பெயர் காரைக்காலம்மையார் என்பதும் தெரிய வருகிறது. இவ் அகச் சான்றால், அம்மையார் பேய் வடிவு கொண்டதை உறுதிப் படுத்தலாம். இந்தப் பதிகப் பாடலைப் பாடி ஆடினால் பாவம் போகும் என்னும் பயனும் கூறப் பட்டுள்ளது.

"செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று [விரல்கூட்டிக்
கத்தி யுறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் இரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே"

"நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்கும் சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே"

"குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கல் பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ் மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்என் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே"

—காரைக்கால் அம்மையார் இரண்டாவது மூத்த திருப்பதிகம்

---

இரிந்து - சிதறி. நட்டம் - நடனம். நொந்தி - அழிந்து. சுடலை - சுடுகாடு. நுகரும் - உண்ணும். புழுக்கு - சோறு. அமரர் - தேவர். முழவு - மத்தளம். வழுவாமே - தவறாமல். அந்தி - மாலை. நிருத்தம் - நடனம். குண்டை - குறுகித் தடித்தது. பிறங்கு - விளங்கும். இண்டு - இண்டங்கொடி. குழவி - குழந்தை. எரி வாய் - கொள்ளிவாய் எயிறு - பல். வெருட்டி - பயமுறுத்தி. மிண்டி - நெருங்கி. விமலன் - சிவபெருமான்.

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் கலிநிலைத் துறையாகும். இதில் வரும் பாட்டு ஒவ்வொன்றும் ஒவ்வோர் அடியிலும் ஐந்தைந்து சீர்களைக் கொண்டிருப்பதனால்தான் இது கலி நிலைத் துறை ஆயிற்று. இதன் பண் தக்க ராகம். இதனை ஒருவாறு காம்போதி இசை என்னலாம். இப்பதி கத்தின் வழி நாம் அறிவன கீழ் வருவன :

திருஞான சம்பந்தர் திருவாலங்காட்டிற்குச் சென்றபோது இது காரைக்கால் அம்மையார் திருத்தலையில் நடந்த தலம் என்று நினைவு வந்ததும், இத் தலத்தைத் தம் காலால் மிதிக்க அஞ்சி, இத் தலத்தின் அருகில் இருந்த ஒரு பதியில் தங்கி விட்டனர். ஆலங்காட்டப்பர் தம் அன்பன் ஆலங் காட்டுத் தலத்திற்கு வராமல் போயினனே என்று அருள் உளம்கொண்டு திருஞான சம்பந்தர் உறங் கும்போது, அவர் கனவில் "என்னைப் பாடுதற்கு மறந்தனையோ" என்று அறிவிக்க, தோண்புரத் தோன்றலார் துணுக்குற்று எழுந்து இறைவர் திரு வருளை வியந்து பதிகம் பாடலுற்றார். தமக்கு இறை வர் கனவில் போந்து திருவாலங்காட்டைப் பாடாமல் அயர்ந்தது குறித்து நினைவுபடுத்தியதைத் தமது முதல் பாடலில் அமைத்துப்பாடியும் இருக்கின்றனர். அப்பாடல்,

"துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங் காட்டெம் அடிகளே"

என்பது.

---

துஞ்ச - உறங்கும்போது. வழுவி - தவறி. முனை - முன்னைய. ஒருத்தி - நீலி.

இப் பாட்டின் ஈற்றின் இரு அடிகளில் அமைந்த கதைக் குறிப்பினை இத் தலத்தைப் பற்றிய செய்திகளைக் கூறிய இடத்துக் காண்க.

இறைவர் தன்மைகள் திருஞான சம்பந்தரது பதிகத்தில் 'கேடும் பிறவியும் ஆக்கினார், கேடிலா வீடுமாநெறி விளம்பினார்'' என்று பேசப்பட்டுள்ளன.

இத் தலத்தைச் சிறப்பிக்கும்போது,

''வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழயனூர் ஆலங் காட்டெம் அடிகளே''

''காடும் சுடலையும் கைக்கொண்டு எல்லிக் கணப்பேயோடு
ஆடும் பழயனூர் ஆலங்காடு''

''கொந்தண் பொழில்சோலை அரவில் தோன்றிக் [கோடல்பூத்து
அந்தண் பழயனூர் ஆலங்காடு''

''கோலம் பொழில்சோலைப் பெடையோடாடி மடமஞ்சை
ஆலும் பழையனூர் ஆலங்காடு''

''கார்கொள் கொடிமுல்லை குருந்தம் ஏறிக் கருந்தேன் [மொய்த்து
ஆர்க்கும் பழயனூர் ஆலங்காடு''

''பெடைவண் டறையும் பழயனூர் ஆலங்காடு''

---

ஒருத்தி - நீலி என்பவள். எல்லி - இரவில். கணம் - கூட்டம். அரவு - பாம்பு. கோடல் - செங்காந்தள் மலர். இது பூத்தபோது பாம்பு படம் எடுத்தது போன்று காணப்படும். அம் - அழகு. கொந்தண் - கொத்துகள் நெருங்கிய குளிர்ந்த. கோலம் - அழகு. மடமஞ்சை - இளைய மயில். ஆலும் - அகவும். கார் - கார்காலத்தில் மலரும். குருந்தம் - குருந்த மரம். தேன் - வண்டுகள். ஆர்க்கும் - ஒலிக்கும். அறையும் - ஒலிக்கும்.

"வணங்கும் சிறுத்தொண்டர் வைகல் ஏத்தும்
அணங்கும் பழயனூர் ஆலங்காடு" [வாழ்த்தும்கேட்டு

"பிணையும் சிறுமதியும் கலையும் எல்லாம் கங்குல் சேர்ந்து
அணையும் பழையனூர் ஆலங்காடு"

"குழும் கொடிமுல்லைப் புறவம் சேர நறவம்பூத்து
அவிழும் பழையனூர் ஆலங்காடு"

"புகலும் வழிபாடு வல்லார்க்கென்றும் தீயபோய்
அகலும் பழையனூர் ஆலங்காடு"

என்று சிறப்பித்துள்ளனர். இங்கு "வணங்கும் சிறுத்தொண்டர்" என்று கூறப்பட்டிருப்பதனால் ஒரு வேளை சிறுத்தொண்ட நாயனார் வந்து இத்தலத்தை வணங்கியுள்ளாரோ என்று எண்ண இடம் இருக்கிறது. இஃது ஆய்தற்கு உரியது. சிறுத்தொண்டர் என்பதற்கு, அடியார் முன்பு அடங்கும் பணிவில் சிறிய தொண்டர் எனப் பொருள் காணில் இவ் ஐயம் எழுதற்கு இடம் இல்லாமல் போகும்.

ஈற்றுப் பாடலில் சண்பை (சீர்காழி) சந்தன மரத்தின் மணம் கமழும் என்றும், இப்பதிகப் பாடலைப் பாடவல்லவர் எங்குச் சென்றாலும் பரிசுத்தமாகத் திகழ்வர் என்றும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இதனைச் "சந்தம் கமழ் மறுகில் சண்பை" என்றும் "பாடல் இவை வல்லார் சேர்ந்த இடம் எல்லாம் தீர்த்தம் ஆகச் சேர்வாரே" என்றும் வரும் வரிகளால் அறியலாம்.

---

வைகல் - தினமும். ஏத்தும் - போற்றும். அணங்கும்- தெய்வத் தன்மை மிகும். பிணை - பெண் மான். மறி - மான் குட்டி. கலை - ஆண் மான். கங்குல் - இரவில். புறவம் - முல்லைக் காடு. நறவம் - முல்லைப்பூ. புகலும் - கூறும். சாந்தம் - சந்தனம். தீர்த்தம் - சுத்தம்.

திருவாலங் காட்டைக் கூறும்போது ஒவ்வொரு பாடலிலும் பழையனூர் ஆலங்காடு என்று கூறப் பட்டதைக் கவனிக்கவும். இதனால் திருவாலங்காடு பழையனூரைச் சார்ந்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இங்குக் கூறப்பட்ட வர்ணனைகள் பழையனூரைச் சார்ந்தது என்று கொண்டாலும் தவறில்லை. இப்பதிகத்தில் சமண பௌத்தக் குறிப்பு இல்லை.

"ஈர்க்கும் புனல்சூடி இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம்பூண் டாடி வேடம் பயின்றரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தம் ஏறிக் கருந்தேன் [மொய்த்
தார்க்கும் பழையனூர் ஆலங் காட்டெம் அடிகளே".

—முதல் திருமுறை

திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசையின் வாயிலாக நாம் அறிவன: அப்பர் பெருமான் இத்தலத்தின் மீது பாடியுள்ள திருநேரிசை, அறு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இது சந்த விருத்தம். ஒவ்வொரு பாட்டின் ஒவ்வோர் அடியும் ஆறுசீர்களைக் கொண்டிருத்தலைக் காண்க. இதன் பண் கொல்லிப் பண். இதனை இக்கால நவரோசு இசையோடு ஒப்பிடலாம். அப்பர் பெருமானுர் இறைவரை, "விரும்புவார்க்கு எளியர்" "உள் உளே உருகி நின்றங்கு உகப்பவர்க்கு அன்பர்" "கள்ளமே வினைகள் எல்லாம் கரிசு அறுத்திடுவர்"

---

ஈர்க்கும் - இழுத்துச் செல்லும். புனல் - கங்கை நீர். திங்கள் - சந்திரன். அரவம் - பாம்பு. கார் - கார்காலம். குருந்தம் - குருந்தமரம். தேன் - வண்டு. ஆர்க்கும் - ஒலிக்கும். அடிகள் - ஆசாரியர், இறைவர். உகப்பவர் - விரும்புபவர். கரிசு - குற்றம்.

"பார்த்தனோடு அமர் பொருது பத்திமை காண்பர்" "கோளுடைப் பிறவி தீர்ப்பர்" "குணங்களை உகப்பர்" "பெருமையை உடையர்" "அற்றங்கள் அறிவர்." "பத்தர் தம் பாவம் தீர்க்கும் அத்தனார்" என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளனர்.

இறைவர் இங்குக் காளியின் பொருட்டு ஊர்த்துவத் தாண்டவம் புரிந்தனர் என்பதையும் "ஆடினார் காளி காண ஆலங்காட் டடிகளாரே" என்று பாடி அறிவித்துள்ளனர்.

இத்தலத்தை அப்பர் வர்ணித்துப் பாடுகையில்,

"அள்ளல்அம் பழனை மேய ஆலங்காடு"

"மந்தமாம் பொழில்பழனை ஆலங்காடு"

"பண்ணினார் முழவம் ஓவாப் பைம்பொழில் [பழனைமேய ஆலங்காடு"

"குளிர்பொழில் பழனைமேய ஆலங்காடு"

"தீர்த்தமாம் பழனைமேய ஆலங்காடு"

"பாட்டினார் முழவம் ஓவாப் பைம்பொழில் [பழனைமேய ஆலங்காடு"

"பைம்பொழில் பழனைமேய ஆலங்காடு"

என்று பாடி வர்ணித்துள்ளனர்.

---

பார்த்தன் - அர்ச்சுனன். சமர் - சண்டை. கோள் - துன்பம். அற்றங்கள் - அவர் அவர் செய்யும் பாவங்கள். பத்திமை - அன்புடைமை. அத்தனார் - தந்தையார். அள்ளல் - சேறு. பழனை - பழையனூர். அம் - அழகு. மந்தம் - தென்றல் காற்று. பொழில் - சோலை. பண் - இசை. ஆர் - பொருந்திய. முழவம் - மத்தள ஓசை. ஓவா - நீங்காத. தீர்த்தமாம் - பரிசுத்தமாம்.

"பார்த்தனோ டமர்பொருது பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவாய் அம்பு கோத்துக் குணங்களை அறிவர் போலும்
பேர்த்துமோர் ஆவ நாழி அம்பொடும் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே."

—திருநேரிசை

அப்பர் பெருமான் இத்தலத்தின் மீது ஒரு தாண்டகப் பதிகம் பாடியுள்ளனர். இதில் இறைவர்,

"திருவாலங் காடுறையும் செல்வர், ஒன்று உலகனைத்தினும் ஆனார், ஊழிதோ றூழி உயர்ந்தார், நின்றாகி எங்கும் நிமிர்ந்தார், சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார், வானோர் வணங்கப் படுவர், சரண் என்று இருப்பார்கட்கு அன்பர், பலபலவும் வேடங்கள் ஆனார், அளவில் பெருமை உடையார், பூஉற்ற நாற்றமாய் நின்றார், புனிதப் பொருளாகி நின்றார், பாவுற்ற பாடல் உகப்பார், தேவுற்ற அடிபரவ நின்றார், மாறிலா மேனி உடையார், தேறினார் சித்தத்து இருந்தார், சொல்லும் பொருளெலாம் ஆனார், தோத்திரமும் சாத்திரமும் ஆனார், பல உரைக்கும் பாவெலாம் ஆனார், செல்லும் நெறிகாட்ட வல்லார், தொண்டாய்ப் பணிவார்க்கு அணியார், பண்டான இசைபாட நின்றார், மிக்கோர்கள் ஏத்தும் குணத்தார், பண் இயலும் பாடல் உகப்பார், தீராத வல்வினை நோய் தீர்ப்பார், சீலத்தார் ஏத்தும் திறத்தார்" என்று புகழப்பட்டுள்ளார்.

---

பார்த்தன் - அர்சுனன். அமர் - சண்டை. பொருது - செய்து. பத்திமை - தொண்டு. ஆவநாழி - அம்பறுத்தூணி. தீர்த்தம்-தூய்மை. வானோர் - தேவர். சரண் - அடைக்கலம். புனிதம் - சுத்தமான. தே - தெய்வத்தன்மை. பரவ - போற்ற. அணியார் - அருகில் இருப்பவர். உகப்பர் - விரும்புவர். சீலம் - ஒழுக்கம். ஏத்தும் - போற்றும்.

இத்தலத்து இறைவரை இலக்குமி வழிபட்டனள் என்பதை "செய்யாள் வழிபட நின்றூர்" என்று இவர் குறிப்பிடுவதால் அறிய வருகிறது.

இப்பதிகத்தில் திருவையாறு, திருவாரூர், திருஆனைக்கா, திருச்சிற்றம்பலம் (சிதம்பரம்) திருக்கயிலாயம், திருஏகம்பம், திருஒற்றியூர் தலங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

அப்பர், திருவாலங்காட்டு இறைவரைப் பாடல் தோறும் செல்வர் என்றே சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

அப்பர் பழையனூரைப் பழனை என்றே குறிப்பிட்டுள்ளனர். அப் பழனை அழகியது என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது.

ஒன்றாகி உலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ ஆகாசம் ஆனார் தாமே
கொன்றாடும் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருஆலங் காடுறையும் செல்வர் தாமே.

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியும் சந்தியும் ஆனார் தாமே
சொல்லும் பொருள்எலாம் ஆனார் தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே
பல்லுரைக்கும் பாவெலாம் ஆனார் தாமே
பழனைப் பதியா உடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருஆலங் காடுறையும் செல்வர் தாமே.

—திருத்தாண்டகம்

வளி - காற்று. கூற்று - இயமன். கோலம் - அழகு. அல் - இரவு. பா - பாட்டு. பழனை - பழையனூர். நெறி - வழி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ள பதிகம் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். ஒவ்வோர் பாட்டின் ஒவ்வோர் அடியிலும் ஆறு ஆறு சீர்கள் இருப்பதைக் காண்க. இப்பதிகப் பண் பழம்பஞ்சுரம். இதனை இக்காலச் சங்கராபரண இசை என ஒருவாறு கூறலாம். இப்பதிகத்தின் மூலம் நாம் அறிவன: சுந்தரர் தம் கண்பார்வையை இழந்து திருவாரூர் நோக்கிப் புறப்பட்டு வரும் வழியில், திருவாலங்காட்டை அடைந்து பாடும்போது, தாம் அடியார்க்கு அடியனாக இருந்தும், கண் ஒளி மங்கச் செய்தனரே இறைவர் என்னும் வருத்தத்தால் இத்தலப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் "ஆலங்காடா, உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே" என்று உருக்கமாகப் பாடியுள்ளனர்.

சுந்தரர், இறைவரை "முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமை பங்கா, சித்தா, சித்தி திறம் காட்டும் காட்ட சிவனே, பத்தர் பலர் போற்றும் பரமா. அத்தா, எனை ஆண்ட மெய்யா, மெய்யர் மெய்ப்பொருளே, தூண்டா விளக்கின் நற்சோதி, தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய், பண்டாழ் வினைகள் அவை தீர்க்கும் பரமா, கண்ணாய் உலகம் காக்கின்ற கருத்தா, தழலாய் நின்ற தத்துவன், பாழாம் வினைகள் அளவை தீர்க்கும் பரமா, ஏழ், ஏழ்படி கால் எமை ஆண்ட பெம்மான் என்று புகழ்ந்துள்ளார்.

சுந்தரர் தம் நிலையைப் பற்றிக் கூறும்போது பொய் பேசி, வீணே திரிந்தவன் என்றும், அப்படித் திரிந்த தன்னை இறைவர் வந்து ஆட்கொள்ளப்

---

முத்தா - மோட்சத்திற்குக் காரணனே. அத்தா - தந்தையே. தத்துவன் - உண்மைப் பொருளாய் உள்ளவன். படிகால் - தலைமுறை பெம்மான் - பெருமையில் சிறந்தவன. பாண்டு - முன்பு.

பட்ட வாய்ப்புப் பெற்றவன் என்றும், தம் பதிகத்தில் கூறுகிருர். தாம் பெண்களின் கண் வலையில் சிக்கி அறிவழிந்து நின்று திருவடி மறந்தவர் என்றும் குறிப்புட்டுள்ளனர். இக் கருத்துகளை,

"பொய்யே செய்து புறம்புறமே திரிவேன்"

"மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையில் பட்டு மதிமயங்கி அறிவே அழிந்தேன்"

"வேலங்காடு தடங்கண்ணார் வலையுள் பட்டுன் நெறி மறந்து மாலங்காடி மறந்தொழிந்தேனே"

என வரும் வரிகளில் காண்க.

பழையனூர், "பண்ணார் இசைகள் அவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்" என்றும், "பல்மாமலர்கள் அவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்" என்றும் புகழப்பட்டுள்ளது.

சுந்தரரை இறைவர் தடுத்தாட் கொண்ட குறிப்பு இப் பதிகத்தில் வரும்,

"மெய்யே வந்திங் கெனையாண்ட மெய்யா"

என்னும் வரி அறிவிக்கிறது. இதனால் இறைவர் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட செய்தி உறுதியாகிறது. மேலும் சுந்தரர் சங்கிலியார் கண் வலையில் சிக்கி மயங்கினர் என்பது,

"மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி அறிவே அழிந்தேன்"

என்னும் வரிகளாலும்,

---

புறம்புறமே - வெளியே. மறி - மான். ஒண்கண் - ஒளி பொருந்திய கண்கள். மடநல்லார் - இளம் பெண்கள். மதி - அறிவு. தடம் - விசாலம். கண்ணார் - கண்களையுடைய பெண்கள். மால் - மயக்கம். ஆடி - திரிந்து. வேலங்காடு தடங்கனார் - வேல்போல் கூரிய பார்வையுடைய விசாலமான கண்களைப் பெற்ற பெண்கள். வேல் + அங்கு + ஆடு = வேலங்காடு எனப்பிரிக்க. ஏத்தும் - போற்றும்.

"வேலங் காடு தடங்கண்ணார் வலையுட் பட்டுன் நெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன்"

என்னும் வரிகளாலும் புலனாகின்றது.

சுந்தரர் குடும்பம், ஏழ் ஏழ் தலைமுறையாகத் திருவாரூர்த் தியாகேசருக்கு அடிமை என்னும் குறிப்பு, இப் பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் வரும், "எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழ்ஏழ் படிகால் எமை ஆண்ட பெம்மான்" என்னும் அடிகளைக் கொண்டு உணர்ந்து கொள்ளலாம்.

சுந்தரர் தம் அடக்கம் தோன்ற இறைவனது அடிமைத் திறத்தை வேண்டி இருப்பவர் என்றும், சிறுவன் என்றும், இறைவனும் சித்தரிடம் உள்ளத்தை வைத்தவர் என்றும் கூறிக் கொள்கின்றனர். இதனை,

"அத்தன் ஆலங் காடன்தன் அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன்"

என்னும் வரிகளால் உணர்ந்து கொள்ளலாம்.

தமிழை ஒண்தமிழ் என்று சிறப்பிக்கின்றார். இப் பதிகப் பாடல் பத்தையும் பாடி ஆடுபவர் இறைவர் திருவடி போற்றும் பேற்றைப் பெறுவர் என்றும் கூறியுள்ளனர்.

"ஒண்தமிழ்கள், பத்தும் பாடி ஆடுவார் பரமன் அடியே
பணிவாரே"

என்னும் வரிகளைக் காண்க.

---

எம்மான் - என் தந்தை. மூத்தப்பன் - பாட்டன்.
படிகால் - தலைமுறை.

"முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர் மேய
அத்தா ஆலங் காடாஉன் னடியார்க் கடியேன் ஆவேனே."

"வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அண்டா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.

—ஏழாந் திருமுறை.

இத் தலத்து முருகன் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் நான்கு. அவற்றுள் ஒன்று. கீழ்வருவன :

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி இடையூடே
பொறிபுலன் ஈரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகல்வழி நாலை ந் தாக்கி வருகாயம்

---

முத்தி - மோட்சம். அத்தா - தந்தையே. சித்தி - அறிவு. தேவர் சிங்கம் என்பது இறைவர் பெயர். ஆர் - பொருந்திய. குழலி - கூந்தலையுடைய பார்வதி (வண்டார் குழலி, இத்தலத்துத் தேவியாரின் பெயர்) விண்டார் - பகைவர். புரங்கள் - மூன்று கோட்டைகள். எரிசெய்த - தீக்கு இரை ஆக்கிய. விடையாய் - இடபத்தை உடையவனே. பண்டு ஆழ் - முன் பிறவியில் அழுந்திய அண்டா - தேவனே.

புவி - பூமி, மண். புனல் - நீர். கால் - காற்று. சிகி- நெருப்பு. பொறி - ஐம்பொறி. உடல், வாய், கண், மூக்கு, செவி. புலன் - ஐம்புலன். தொட்டுணர்ச்சி, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. ஈரைந்து - பத்துக் கருவிகள். காயம் - சரீரம்.

பவவினை நூறுங் காட்டிச் சுவமதி தானுஞ் சூட்டிப்
பசுபதி பாசங் காட்டிப் புலமாய்ப்
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்திப்
பரகதி தானுங் காட்டி அருள்வாயே
சிவமய ஞானங் கேட்கத் தவமுநி வோரும் பார்க்கத்
திருநடம் ஆடுங் கூத்தர் முருகோனே
திருவளர் மார்பன் போற்றத் திசைமுக னும் போற்றச்
செகமொடு வானங் காக்க மயிலேறிக்
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கிக்
குதர்வடி வேலங் கோட்டுங் குமரேசா
குவலயம் யாவும் போற்றப் பழனையில் ஆலங் காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே.

—திருப்புகழ்

---

நூறும் - பொடி பட்டு அழிதல்; சுவமதி - நல்லறிவு. ஏத்தி - வாழ்த்தி. புலம் - அறிவு. குதர் - பிளக்கும். படிமிசை - உலகில். திருவளர் மார்பன் - திருமால். திரு - இலக்குமி. குவடு - கிரௌஞ்ச மலை. சூதம் - மாமரம். குறமகள் - வள்ளி நாயகி. வடி - கூர்மையான. குவலயம் - உலகம். பழனை - பழையனூர். மானும் பூட்டி - குதிரை பூட்டி. நான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். புகல் - சொல்லப்படுகிற. மதி - அறிவு. வழி - துவாரம். நாலைந்து - ஒன்பது. (கண்துளை இரண்டு, மூக்குத்துளை இரண்டு, ஒலித்துளை இரண்டு, சிறுநீர்த் துளை ஒன்று, மலத்துளை ஒன்று. ஆக ஒன்பது துளைகள் மக்கள் சரீரத்தில் உண்டு. இவை பெருந்துளைகள். சிறு துளைகள் ஆயிரக் கணக்கில் உண்டு.)

## 16. திருப்பாசூர்

பாசு என்னும் சொல்லுக்கு மூங்கில் என்பது பொருள். இம் மூங்கில் இத் தலத்து விருட்சமாக இருத்தலாலும், இம் மூங்கிலில் இத் தலத்து இறைவர் முளைத்தமையாலும் இத் தலம் பாசூர் என்னும் பெயரைப் பெற்றது. மேலும், இவ்வூர் நீர்வளம் நிலவளம் காரணமாகப் பசுமையோடு இருத்தலின் பாசூர் என்று பெயர் பெற்றது என்று கூறுதலும் உண்டு. இங்குள்ள இறைவரைச் சந்திரன் வழிபட்டு அருள் பெற்றுள்ளான். இதனை அப்பர் பெருமான் இத் தலத்துத் திருக்குறுந்தொகை முதற் செய்யுளில்,

முந்தி மூஎயில் எய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடும் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேஅருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே.

என்று குறிப்பிடுதல் காண்க.

குறும்பர் அரசனுக்கும் கரிகால் சோழனுக்கும் பகை உண்டாயது. அந் நிலையில் சமணர்கள் குறும்பர் மன்னன் சார்பில் நின்று தமது மந்திர சத்தியால் பாம்பை உண்டாக்கிக் கரிகாலன் மீது ஏவினர். அதுபோது கரிகாலன் இறைவரிடம் முறையிடப் பாசூர் மேய பரஞ்சுடர் அப் பாம்பைத் தம் கையால் எடுத்து ஆட்டி அடக்கினர். இந்தக் குறிப்பையும் திருநாவுக்கரசர் இத்தலத்தின் மீது பாடிய திருத்தாண்டகத்தில், நாலாவது பாடலில் "பட அரவு அது ஒன்று ஆட்டிப் பாசூர் மேய பரஞ்சுடர்" என்று பாடி அறிவித்துள்ளனர்.

---

மூஎயில் - மூன்று கோட்டைகள். எய்த - அம்பு செலுத்தி அழித்த. அந்திக்கோன் - மாலையில் தோன்றும் சந்திரன். பந்தி - கற்றையான. அடிகள் - இறைவர்.

இத் தலத்து இறைவர் பாசூர் நாதேஸ்வரர், பாசுபதேஸ்வரர், வாகீஸ்வரர் என்றும், தேவியார் பசுபதி நாயகி அம்மை, சுயம்புவல்லி என்றும் குறிப்பிடப் படுவர். தீர்த்தம் சோழ தீர்த்தம். இங்கு வைகாசியில் பெருவிழா நடைபெறும். இத் தலத்தை உச்சிக் காலப் பூசையில் தரிசித்தல் விசேடம். காரணம், ஏனைய தலங்களின் கலைகள் இங்கு அதுபோது வந்து கூடுகின்றன என்பது. இக்குறிப்பு "பாகப் பொழுதெலாம் பாசூர் தங்கி" எனும் அப்பர் வாக்கால் தெரிய வருகிறது.

இத் தலத்துக் கல் வெட்டால் அறிய வருவன: இராச ராசன் பூசைக்காக நாற்பத்தேழு பொன் காசு தந்துள்ளனன். விளக்கிற்காக முப்பத்திரண்டு பசுவும், முரச வாத்தியத்திற்காக ஓர் எருதும் கொடுக்கப் பட்டன. குலோத்துங்கன் காலத்தில் ஒரு மாது திரு ஆபரணத்திற்காக முப்பது பொன் காசும், நாள் ஒன்றுக்கு இரண்டு படி அரிசியும் தந்துள்ளனள். காலிங்கராயன் என்பான் பத்து விளக்குகளின் பொருட்டு எழுபத் தெட்டுப் பொன் காசுகள் கொடுத்துள்ளான். ஒருவன் ஒரு தோட்டத்தையும் கோவிலுக்கு அளித்துள்ளான். இத் தலத்தைத் திருவள்ளூர் இரயில், (திருஎவ்வளூர் என்பதே சரியான சொல்) அடியிலிருந்து வடக்கே இரண்டு கல் சென்று அங்கிருந்து மேற்கே இரண்டு கல் கடந்தால் அடையலாம். இதுபோது இங்குச் செல்லப் பஸ் போக்கு வரவு உண்டு.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பாடிய இரு பதிகங்களும் (ஒன்று குறுந்தொகை, மற்றொன்று திருத்தாண்டகம்) ஆக மூன்று பதிகங்கள் உண்டு.

திருஞானசம்பந்தர் பதிகம் கலிநிலைத் துறையாகும். அதாவது ஓர் அடிக்கு ஐந்து சீர்களைக் கொண்டு அமையும் பாடல் என்க, இதனைப் பதிகப்

பாடலில் காண்க. இப் பதிகப் பண் காந்தாரம். இதனை இக்கால நவரோசு என்னும் இசையின் சாயல் என்பர்.

திருஞான சம்பந்தர் இறைவர் தம்மில் ஒன்றி பிரியாது இருத்தலை,

> "சிந்தை இடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
> வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்"

என்று பாடி உணர்த்தி யுள்ளார். இத்துடன் இன்றி "சேடச் செல்வர் சிந்தையுள் என்றும் பிரியாதார்" என்றும் பாடியுள்ளனர். இறைவர் தம்மை யார் ஒருவர் "மைந்தா மணாளா" என்று கூறிப் போற்றுகிறார்களோ அவர்களைக் கண்டு மகிழும் இயல்பினர். இந்த அளவில் மட்டும் இறைவர் ஆனந்தம் உறுபவர் அல்லர். உலகில் நடமாடும் பொழுதெல்லாம் பெம்மான் என்று கூறுவார்க்கு அருளும் செய்ய வல்லவர். இக் கருத்துகளைப் "பேரும் பொழுதும், பெயரும் பொழுதும் பெம்மான்என்று, ஆரும் தனையும், அடியார் ஏத்த அருள்செய்வார்" என்றும், "கையால் தொழுது தலை சாய்த்துள்ளம் கசிவார்கண் மெய்யார் குறையும், துயரும், தீர்க்கும் விகிர்தனார்" என்றும், "தம்மைத் தொழுவார்கள் மால்கொண் டோட மையல் தீர்ப்பார்" என்றும் "கழல்உன்னி எண்ணும் தனையும் அடியார் ஏத்த அருள் செய்வார், உள்நின்றுருக, உவகைதருவார்" என்றும். "தம்மையே பேசிப் பிதற்றப் பெருமை தருவார்" என்றும் திருஞான சம்பந்தர் இறைவரது கருணையின் மாண்பைக் கனிந்து பாடியுள்ளனர்.

---

தலையின் மிசையார் - தலைமேல் உள்ளவர். வைகும் போழ்து - தங்கும் போது. ஏத்த - போற்ற. மெய் - உடம்பில். ஆர் - நிறைந்த. விகிர்தனார் - அனாதிமல முத்தர். சேடர் - சிவனார், எல்லாம் அழியத்தாம் மட்டும் அழியாமல் இருப்பவர். மால் - அன்பு. உன்னி - நினைத்து. உவகை - மகிழ்ச்சி.

திருப்பாசூரின் வளனை,

"பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூர்"
"பாரின் மிசைஆர் பாடல் ஓவாப் பாசூர்"
"பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூர்"
"பைங்கால் முல்லை பல்அரும் பீனும் பாசூர்"
"பாடல் குயில்கள் பயில்பூஞ் சோலைப் பாசூர்"
"பால்வெண் மதிதோய் மாடம் சூழ்ந்த பாசூர்"
"பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூர்"
"பாசித் தடமும் வயலும் சூழ்ந்த பாசூர்"
"பகுவாய் நாரை ஆரல் ஆரும் பாசூர்"
"பாவைக் குரவம் பயில்பூஞ் சோலைப் பாசூர்"
"தேனும் வண்டும் இன்னிசை பாடும் திருப்பாசூர்"

என்று சம்பந்தப் பெருமான் இனிது பாடியுள்ளனர்.

திருஞான சம்பந்தர் ஞானம் உணர்ந்தவர் என்பதையும், இப் பதிகப் பாடல்களைப் பாட வல்லவர் எந்தவித தவறும் இலராய்த் தேவ உலகில் இருப்பர் என்பதையும் ஈற்றுப் பாடல் தெரிவிக்கிறது. இதனை "ஞானம் உணர்வான் காழி ஞானசம்பந்தன் என்றும், "பாடல் இவை வல்லார் ஊனம் இலராய் உம்பர் வானத் துறைவாரே" என்றும் கூறப்பட்டிருப்பது கொண்டு தெளிக.

---

மாதவி-மாதவி என்னும் பூங்கொடி. பாரின்மிசை-பூமியில். ஓவா - நீங்கா. கோடல் - செங்காந்தள் மலர். இது மலர்ந்தால் பாம்பு படம் எடுத்து ஆடுவது போல் இருக்கும். ஆதலின், "பை (படம்) வாய் நாகம் கோடல்" என்றனர். பை - படம். ஈனும் - மலரும். கால் - காம்பு. பை - பசிய. முல்லை பற்களுக்கு உவமை ஆதலின், "பைங்கால் முல்லை பல் அரும்பு ஈனும்" என்றனர். தடம் - குளம். பகுவாய் - பிளந்தவாய்- ஆரல் - ஆரல் மீன். ஆரும் - உண்ணும். பாவைக் குரவம் - பதுமை (பொம்மை) போல மலரும் குரவம்பூ.

"கையால் தொழுது தலைசாய்த் துள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விகிர்தனூர்
நெய்யா டுதலஞ் சுடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே"

—இரண்டாம் திருமுறை

அப்பர் இத் தலத்து இறைவர் மீது பாடியுள்ள கலிவிருத்தத்தால் ஆய திருக்குறுந்தொகை இறைவரைப்பற்றி அறிவிக்கையில், "முதல்வனூர், சிந்திப்பார் வினை தீர்த்திடும் செல்வனூர், தொடர்ந்த வல்வினை போக்கிடும் சோதியார்" என்று புகழ்ந்துள்ளார்.

இப் பதிகத்தில் அகப் பொருளைத் தழுவிய பாடல்கள் நான்கு உள்ளன.

"மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கையர் ஆகி இருப்பவர்
துட்ட ரேல்அறி யேன்இவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியார் பாசூர் அடிகளே"

என்னும் பாட்டில், "இறைவர் பார்வதி தேவிபால் பெரிதும் ஆசை யுடையவராய் இருக்கின்றார் என்பதை அறியாது, இவர்பால் வேட்கை கொண்டனள் என் தலைவி. இவரது சூழ்ச்சியைத் தெரிந்திலள். இவர் துட்டராக இருப்பாராயின் அதனை அறியேன்" என்று தோழி கூறுவதாக இருக்கும் கருத்தைக் காண்க.

ஒரு பாட்டில் 'இவர் "என்னிடம் பலி ஏற்க வந்து என்னை மையல் செய்து தம் ஊரின் பெயரைச்

---

மெய்யார் - உடம்பில் பொருந்திய. விமலனூர் - சிவபெருமான். அஞ்சு - நெய், பால், தயிர், கோமயம், கோஜலம் (பஞ்சகவ்வியம்) கோடல் - வெண்காந்தள். நிலாவும் - விளங்கும். ஈனும் - மலரும். மட்டு - தேன். மலர்நெடுங் கண்ணி - மலர்போன்ற கண்ணுடைய உமையம்மை. மலர் நெடுங் கண்ணி என்பது இத்தலத்து இறைவியாரின் பெயராக இருக்கலாம் என்று கருத இடம் உள்ளது.

சொல்லிப் போயினர். அதனை அறியாமல் திகைக்கின்றேன்'' என்று தலைவி கூறுவதாக கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

மற்றொரு பாட்டில் எட்டி எட்டிப் பார்த்து வீட்டில் புகுந்தவர் விரும்பிச் செய்வன இன்ன என அறியேனே'' என்று தலைவி கூறியதாகப் பாடியுள்ளனர்.

வேறு ஒரு பாட்டில் "என்னை மயக்கி என் கற்பை அழித்தனர். அவரோ வேதம் உணர்ந்தவராய்க் காணப்படுகின்றார். ஆனால் நீதி இல்லாதவர்'' என்று தலைவி பழித்துப் பேசுவது போலப் பாடியுள்ளனர். அப் பாடல்,

> "வேதம் ஓதிவந் தில்புகுந் தார் அவர்
> காதில் வெண்குழை வைத்த கபாலியார்
> நீதி ஒன்றறி யார்நிறை கொண்டனர்
> பாதி வெண்பிறைப் பாசூர் அடிகளே''

என்பது.

> "மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்
> தொடர்ந்த வல்வினை போக்கிடும் சோதியார்
> கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
> படர்ந்த நாகத்தர் பாசூர் அடிகளே''

—திருக்குறுந்தொகை.

இனி, இத் தலத்துத் திருத்தாண்டகத்தின் வழி நாம் அறிவனவற்றைக் காண்போமாக. இத் தாண்டகத்தை எண்சீர் விருத்தத்தில் அடக்கலாம். இத் தாண்டகத்தில் அப்பர் பெருமான் "பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே'' என்று ஒவ்வொரு பாட்டின் ஈறுதோறும் அமைத்துப் பாடியுள்ளனர். இத்தலத்து இறைவர் தேவர்களால் வணங்கப் படுவதை "காதலால் வானவர்கள் போற்றி

இல் - வீடு. நிறை - கற்பு. குழை - குண்டலம். மடந்தை பார்வதி. காலன் - இயமன். வானவர்கள் - தேவர்கள்.

என்று கடிமலர்கள் அவை தூவி ஏத்த நின்ற பாசூர் மேய பரஞ்சுடர்'' என்ற அடியாலும் "வண்டு படு மது மலர்கள் தூவி நின்று வானவர்கள் தானவர்கள் வணங்கி ஏந்தும்'' என்று அறிவித்துள்ளனர். தானவர்களையும் சேர்த்துக் கூறி இருப்பதால் அரக்கர்களும் இத்தலத்து இறைவரைப் போற்றி வழிப்பட்டுள்ளனர் என்பது தெரிகிறது. இறைவரே எல்லாப் பொருள்கட்கும் வித்தாவர், மழை ஆவர் என்னும் கருத்துகள் "விரிகின்ற பொருட்கெல்லாம் வித்தும் ஆகிக் கொண்டல் ஆகி'' என்னும் வரியால் தெரிய வருகிறது. இறைவர் ஒப்பற்றவர் ஆதலை "இணை ஒருவர் தாம் அல்லால் யாரும் இல்லார்'' என்னும் வரி உணர்த்துகிறது. இறைவர் இசைக்கு இரக்கம் காட்டுபவர் என்பதை "இசை கேட்டு இரக்கம் கொண்ட பாந்தள் அணி சடைமுடி எம்பாசூர் மேய பரஞ்சுடர்'' என்னும் வரியால் அறிய வருகிறது.

இப் பதிகத்தில் காஞ்சி, திருஒற்றியூர், திரு இடை மருதூர் ஆகிய தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. திருவாலங்காட்டையும் நமக்கு நினைவு படுத்துவார் போல "ஆடினார் பெருங் கூத்துக் காளி காண'' என்னும் வரிகொண்டு உணர்த்தியுள்ளனர்.

ஒன்பதாவது பாடலில் இறைவர், சிலந்தி தமக்கு தன் வாயின் நூலால் பந்தர் இட்டு வெயில் படாதிருக்கச் செய்த காரணத்தால் அதனை அடுத்த பிறப்பில் கோச் செங்கட் சோழனைப் பிறக்கச் செய்து சோழ நாட்டை ஆளச் செய்த கருணையையும், வெள்ளை யானை பூசித்து மோட்சம் பெற்றதையும் குறிப்பிட்டுப் பாடி யுள்ளனர். இவை இரண்டும் தொண்டுசெய்த தலம் திருவானைக்கா ஆகும்.

---

கடி-வாசனை. ஏத்த-போற்ற. மது-தேன். தானவர்கள்-அரக்கர்கள். கொண்டல் - மழை.

"புத்தியினால் சிலந்தியும்தன் வாயின் நூலால்
புதுப்பந்தர் அதுஇழைத்துச் சருகால் வேய்ந்த
சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ஆனை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்அமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் வியந்த வாறே"

என்னும் தாண்டகத்தில் மேற்சொன்ன இருவரலாறு களும் அடங்கி யுள்ளதைக் காண்க.

திருப்பாசூர் அப்பர் பெருமானாரால் விண்ணுலகும், மண்ணுலகமும் போற்றும் தலம் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. அப்பர் பெருமான் இத் தலத்து இறைவரைப் பாசூர் மேய பரஞ்சுடர் என்று போற்றி அத்தகைய பரஞ்சுடரை நான் கண்டு உய்ந்தேன் என்றும் பாடிப் பரவசம் உற்றுள்ளனர்.

"இணைஒருவர் தாம்அல்லால் யாரும் இல்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவர்க்கும் ஆதி தேவர்
அருமந்த நன்மைஎலாம் அடியார்க் கீவர்
தணல்முழுகு பொடிஆடும் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலின் அளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனைஎம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே"

—திருத்தாண்டகம்.

---

வேய்ந்த - மூடிய. சிறப்பு - இறைவனுக்குக் கோவில் கட்டுவதாகிய சிறப்பு கோச்செங்கட் சோழன் சிவபெருமானுக்கு எழுபது கோவில்களைக் கட்டியுள்ளான். புகப்பெய்தார்- புகும்படி செய்தார். திறல் - வன்மை. வித்தகம் - ஞானம். விள்ளா-நீங்காத விரவியவா-கலந்தவாறு. வீடு மோட்சம். இணை - நிகர். இடைமருது-திருவிடை மருதூர். ஏகம்பம்- காஞ்புரத்துத் திருவேகம்பத்தலம். அருமந்த - அருமையான. தணல் - தீ முழுகுபொடி - திருநீறு. செக்கர் - சிவப்பு. தத்துவன் - உண்மைப் பொருளானவன். சாந்து - சந்தனம். அளறு - குழம்பு. பணை - பருத்த.

## 17. திருவெண்பாக்கம்

இது பதிகத்தில் வெண்கோயில் என்று குறிக்கப் பட்டுள்ளது "வெண்கோயில் இங்கு இருந்தாயோ?" என்று சுந்தரர் தாம் பாடிய பதிகத்தில் குறிப்பிடு தலைக் காணவும். திருவுளம்பூதூர் என்றும் இத் தலத்தை மக்கள் கூறுவர். திருவிளம்பூர் என்றும் சொல்வதுண்டு, சுந்தரர் "கோயில் உளாயோ?" என்று வருந்திக் கேட்டபோது இறைவர், "உளோம் போகீர்" என்று கூறியதாகச் சுந்தரர் தம் பதிகத்தில் பாடுதலின், இத் தலம் திருவுளம்பூதூர் என்று கராணக் குறி ஆயதோ என்று எண்ணவேண்டி இருக்கிறது.

இத்தலத்து இறைவர் வெண்பாக்கநாதர். இறைவியார் கனிவாய்மொழி அம்மை. இங்குள்ள தீர்த்தம் கைலாய தீர்த்தம். இத்தலம் சுந்தரர் காலத்தில் இருந்த இடத்திலேயே இருந்தது. ஆனல், அரசாங்கத்தார் இத்தலத்தை ஏரிக்குள் மூழ்குமாறு செய்து விட்டனர். குடிநீர் வசதி செய்ய நீர்த் தேக்கம் அமைக்கப் பூண்டி ரிசர்வாயர் கட்டிய காலத்திலிருந்து இத்தலம் அந்த ரிசர்வாய்க் குள் மூழ்கிக் கிடக்கிறது. இத்தலத்திலிருந்து விக்கிரகங்களை அங்கிருந்து கொண்டு வந்து விட் டனர். அங்குள்ள நீரத் தேக்கத்தின் கரையினின்று பார்த்தால் கோவிலின் மதிலும் கோபுரமும் நீரில் மூழ்கிக் காட்சி தருவதைக் காணலாம்.

இறைவர் சுந்தரருக்கு ஊன்று கோல் அளித்த தனல் ஊன்றீசர் என்றும் அழைக்கப் பெறுவர். இறைவியார், சுந்தரர் காஞ்சியம்பதி வரையில் செல்லும் அளவும், மின்னல் போலத் தோன்றி ஒளி காட்டிச் சென்றமையின் மின்னல் ஒளி அம்மை என்றும் கூறப் பெறுவர். இத்தலத்து விருட்சம் இலந்தை மரம்.

இத்தலம் திருவள்ளூருக்கு (திருஎவ்வுள்ளூர்) ஏழு கல் தொலைவில் உளது. இதுபோது இத்தல முள்ள இடத்திற்குச் செல்லப் பஸ் வசதி உண்டு.

இத் தலத்திற்கு ஒன்றரை கல் தொலைவில் மற்றும் ஒரு சிவாலயம் உளது. அங்குள்ள இறைவர் கைகாட்டிய நாதர். இறைவியார் பரமேஸ்வரி.

இத் தலம் சுந்தரருடைய வரலாற்றுத் தொடர் புடையது. சுந்தரர் திருஒற்றியூர் வந்துற்றுச் சங்கிலியாரை மணந்தனர். மணக்கும்போது "நான் திருஒற்றியூரை விட்டுப் பிரியேன்" என்று சத்தியம் செய்தனர். ஆனால் தமக்குத் திருவாரூர்த் தியாக ருடைய நினைவு வரவே, தம் சத்தியத்தைத் தவறித் திருஒற்றியூர் எல்லையைக் கடந்தனர். உடனே அவரது இரு கண்களின் பார்வை மறைந்தது. அதனால் வருந்திப் புறப்பட்டுத் திருவெண்பாக்கம் வந்தனர். வந்து இறைவர் தமக்குத் தோழர் ஆதலின், அந்த உரிமையில் இறைவா என் கண்ணைக் கெடுத்தும் கோவிலில் இருக்கிறாயா என்று வினா வினார். இறைவர் சத்தியவான் ஆதலின், அவர் கேட்ட வினாவிற்கு விடையாக "உளோம் நீர் வந்த வழியே திரும்பிப் போம்" என்று கூறினார். ஆனால் கோவிலில் ஓர் ஊன்று கோலை வைத்தருளினார். சுந்தரர் கண்ணைக் கெடுத்த தெய்வம் ஊன்று கோலைக் கொடுத்தது என்று எண்ணிக் கோபத் துடன் அதனை வீசி எறிந்தனர். அக் கொம்பு நந்தி யின் காதைச் சிதைத்தது. இந் நந்தி இவ்வாறு காதை இழந்து இதுபோதும் நீரில் மூழ்கி யுள்ளது. நந்தி தேவருக்கு அருகே சுந்தரர் ஊன்று கோலுடன் விளங்கும் உருவம் உளது. சுந்தரர், இறைவர் தமக்குக் கோல் கொடுத்ததையும், உளோம் போகீர் என்றதையும் வருத்தத்துடன்,

"மானன்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்கள்எல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி உளோம்போகீர் என்றானே"

என்று பாடுதல் காண்க.

இதன் பொருள் "மான்போலும் கண்களையுடைய சங்கிலி நாய்ச்சியாரை மணம் முடித்து அவளால் நான் பெறக் கூடிய பயன்களை எல்லாம் பெற அருள் செய்தீர். இதை உலகம் எல்லாம் சொல்லுமே. அப்படி அருள் செய்த நீங்கள், நான் கண் இழந்த வருத்தத்தால் கோயிலில் உள்ளீரோ என்று கேட்டபோது, நீங்கள் எனக்கு ஊன்றுகோல் அளித்து 'உள்ளோம் போமின்' என்று கூறுகின்றீரே. இது முறையோ?" என்பது. இறைவர் உளோம் போகீர் என்று கூறிவிட்டுத் தாமும் இறைவியுமாக வயலில் களை பிடுங்கச் சென்று விட்டனர் என்று ஒரு செவி மரபு செய்தி கூறப்படுகிறது.

இத் தலத்தைப் பற்றிச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப் பதிகம் தரவு கொச்சகப் பாட்டாகும். காரணம் ஒவ்வோர் அடியும் மூவசைச் சீர்கள் நான்கைப் பெற்றிருப்பதனால் என்க. இப் பதிகப் பண் சிகாமரம் ஆகும். இதனை இக்காலத்து நாதநாமக் கிரியை இசையில் அடக்கலாம். இப்பதிகத்தில் சுந்தரருடைய வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியும் அடங்கி உள்ளன. முன்பு சுந்தரர்க்கு இறைவர் ஊன்று கோல் தந்ததைப் பார்த்தோம். முதல் பாட்டில் சுந்தரர் தாம் சத்தியம் பிழைத்த காரணத்தால் தான், தம் கண் பார்வையை இறைவர் கெடுத்தார் என்பதை,

---

மான்திகழும் - மான் போலும் கண்களைக் கொண்டு விளங்கும். சங்கிலி - சங்கிலி நாச்சியார். ஈன்றவனே - படைத்தவனே.

"பிழைஉளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழிஅதனைப் பாராதே படலம்என் கண் மறைப்பித்தாய்"

என்று குறிப்பிடுகின்றனர்.

சுந்தரர், இறைவர் தம் தோழர் என்ற உரிமையினுல் பிழையையும் பொறுப்பர் என்ற உறுதியினுல் சொன்ன சொல்லைத் தவறுதலாகிய குற்றம் செய்ததை நயமுடன் கூறி இருப்பதைக் காண்க. நயத்துக்குச் சுந்தரனுர் அல்லரோ? தம் கண் பார்வையை மறைத்ததை ஆருவது பாடலில் "கண் மணியை மறைப் பித்தாய்" என்று கூறிக் கதறுகின்ருர்.

இறைவர், சுந்தரரின் வரலாற்று நிகழ்ச்சியில் மற்றும் ஒரு திருவிளையாடல் புரிந்ததையும் ஒன்பதாவது செய்யுளில் குறிப்பிடுகின்ருர்.

சுந்தரர் இறைவரைச் சங்கிலியாரை மணம் முடிக்க வேண்டினுர். இறைவர் இவ் வேண்டுகோட்கு இணங்கிச் சங்கிலியாரை அடைந்து சுந்தரர் கருத்தைத் தெரிவித்தனர். அவ்வம்மையாரும் இசைந்து, திருஒற்றியூர் எல்லையை விட்டு அவர் போவதில்லை என்று கோவிலில் சத்தியம் செய்து கொடுத்தால், தாம் மணந்துகொள்வதாக இறைவரிடம் அறிவித்தனர். அந்த நிபந்தனையை இறைவரீர் சுந்தரருக்குக் கூறச் சுந்தரர் இறைவரை "இறைவா நீர் கோயிலில் இருக்கவேண்டா. மூலட்டானத்திற்கு வெளியில் இருக்கும் மகிழ மரத்தடியில் இருந்தால் நான் கோயிலில், வந்து சத்தியம் செய்து விடுகின்றேன்" என்று வேண்டிக் கொண்டார். அவ்வாறே இருப்பதாக இறைவரும் வாக்களித்துத் தாம் மகிழ மரத்தடியில் இருக்கப் போவதையும் சங்கிலியாரிடமும் கூறிவிட்டனர். சங்கிலியாருக்கு இறைவர் கூறியதைச் சுந்தரர் அறியார். இந்த நிலையில் சங்கிலியார் சுந்தரரை மகிழ மரத்தடியிலேயே, சத்தியம் செய்யக்

கூற, அந் நிலையில் வேறு வழியின்றிச் சுந்தரர் மகிழ மரத்தடியில் சத்தியம் செய்துவிட்டனர். இக் காட்சி இன்றும் திருஒற்றியூரில் மாசி மாதப் பெரு விழாவில் மிகச் சிறப்புடன் மகிழடி சேவை என்னும் பெயரில் நடைபெறுகிறது. மக்கள் மகிழடி சேவை என்று சொல்ல அறியாமல், மொழுவடி சேவை என்று மொழிகின்றனர். இந்த நிகழ்ச்சியைத் தான் உருக்கமுடன் சுந்தரர் தமது பதிகத்தில் ஒன்பதாவது பாடலில்,

"பொன்னவிலும் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இருஎன்று
சொன்னஎனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே"

என்று பாடுகிறார். ஈண்டுப் பொன் நவிலும் கொன்றை என்றது பொன் போலும் நிறமுடைய கொன்றை மலரையே ஆகும். சூளுறவு என்பது சத்தியம்.

இப் பாடலின் ஈற்றடியில் சுந்தரர் இறைவர் தம்மைப் பகைவர் போல உளோம் போகீர் என்று கூறிக் கதறி இருப்பதுதான் உள்ளத்தை உருக்க வல்லது. ஒன்னலர் என்பதன் பொருள் பகைவர் என்பது.

இப் பதிகம் முழுவதும் உருக்க உணர்ச்சியையே தரவல்லது. தம்மைப் பற்றிக் கூறும்போது "நான் தலை கால் தெரியாமல் நடந்து உன்னையே சரணாகக் கொண்டு இருந்தேனே! அப்படி இருந்தும், இவன் நம் அடியான். நம்மையே அடைந்து வழிபடுபவன் என்றும் பாராமல் உளோம் போகீர் என்றானே" என்றும், "இன்ன செயல் புரிவது என்று அறியாதவனாய் இருந்தும், உனது திருவடிகளே அடைக்கலம் என்று இருந்தேனே. நான் பொய் அடியனாக இருந்

தாலும், தவறு செய்தால் நீ பொறுக்க வேண்டாவோ? நான் ஈடேற அருள் செய்யவல்லவன் அல்லனோ நீ? நான் பாம்பணிநாத பரமா என்று அழைத்து இங்குள்ளாயோ என்று வினவியபோது உளோம் போகீர் என்றானே'' என்றும், ''இறைவியோடு நீர் இங்கு இருந்தீரே என்று நான் கேட்டதும் உளோம் போகீர் என்றானே'' என்றும், அடியேன் உங்களை வெறுப்புடன் கேளாமல், சிறப்புடன்தானே இங்கு இருந்தீரோ என்று வினவினேன்! அப்படி வினவியும் உளோம் போகீர் என்றானே'' என்றும், ''என் கண் ஒளியை மறைப்பித்தாய் நீ இங்கு இருந்தாயோ என்று வினவியபோது உளோம் போகீர் என்றானே'' என்றும் பாடி யாவரையும் உருக வைத்துள்ளனர்.

இக் கருத்துகள் அடங்கிய வரிகளும் பாடல்களுமே கீழ் வருவன :

''குழைவிரவு வடிகாதா கோயிலுளா யோஎன்ன
உழையுடையான் உள்இருந்து ளோம்போகீர் என்றானே''

''இடையறியேன் தலை அறியேன் எம்பெருமான் சரணம்
[என்பேன்
நடையுடையன் நம்அடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன்
[புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான் உளோம்போகீர்
[என்றானே''

---

குழை - காது குண்டலம். விரவு - பொருந்திய. வடி - தொங்கும். உழை - மான். சரணம் - அடைக்கலம். விடை - எருது. நீற்றன் - திருநீறு அணிந்த சிவபெருமான்.

"செய்வினையொன் றறியாதேன் திருவடியே சரண்என்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ
[வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம்போகீர் என்றானே"

"நம்பிஇங்கே இருந்தாயே என்றுநான் கேட்டலுமே
உம்பர்தனித் துணைஎனக்கு ளோம்போகீர் என்றானே"

"துன்னிஇரு பால்அடியார் தொழுதேத்த அடியேனும்
உன்னதமாய்க் கேட்டலுமே உளோம்போகீர் என்றானே"

"கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தா யோஎன்ன
ஒண்ணுதலின் பெருமான்தான் உளோம்போகீர் என்றானே"

"கார்நிலவும் மணிமிடற்றீர் ஈங்கிருந்தீ ரோஎன்ன
ஊரரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றானே"

"பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டால்போல் உளோம்போகீர் என்றானே"

---

பை - படம். பரிந்து - இரக்கத்துடன். உய்ய - ஈடேற. உம்பர்-தேவர்கள். தனி - ஒப்பற்ற. துன்னி - நெருங்கி. இருபால்-இரண்டு பக்கம். ஏத்த - போற்ற. உன்னதமாய் - உயர்ந்த முறையில். ஒண்ணுதலி - ஒளிபொருந்திய நெற்றியுடைய உமாதேவர். கார் - கரிய மேகம்போல. நிலவும் - விளங்கும். மணி-நீலமணி. மிடற்றீர-கழுத்தையுடையவரே. ஊர் - ஊர்ந்துசெல்லும். அரவம் - பாம்பு. அரைக்கு - இடுப்பில். அசைத்தான் - கட்டியிருக்கும் சிவபெருமான். ஒன்னலர் - பகைவர்.

இப் பதிகத்தில் இறைவரைப் பற்றி "உய்ய அருள் செய்ய வல்லான்", "உம்பர் தனித்துணை" "பார் நிலவும் மறையோரும், பத்தர்களும் பணி செய்யத் தார்நிலவு நறுங்கொன்றைச் சடையன்" "உலகமெலாம் நின்றவன்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

திருவெண்பாக்கம் அழகிய சோலைகளை யுடையது என ஈற்றுச் செய்யுள் கூறுகிறது. சுந்தரர் தம்மைத் திருவாரூர் இறைவன் பெயரைத் தம் முடிமேல் வைத்து அன்புடன் போற்றுபவர் என்பதையும் குறிக்கின்றனர். இப்பதிகத்தைப் பாடுபவர் கட்குத் துன்பம் வராது என்றும் கூறி முடிக்கின்றனர். இக் கருத்துகள் எல்லாம்,

> "ஏராரும் பொழில்நிலவு வெண்பாக்கம் இடம்கொண்ட
> காராரும் மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடும்
> சீராரும் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
> ஆரூரன் தமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே"

என்னும் பாட்டில் பொருந்தி இருத்தலைக் காண்க.

---

உய்ய - பிழைக்க. உம்பர் - தேவர். தனி - ஒப்பற்ற. பார்-பூமி. மறையோர்-பிராம்மணர்கள். நறும்-மணமுள்ள. ஏர் - அழகு. ஆரும் - நிறைந்த. பொழில் - சோலை. நிலவு - விளங்கும். கார் - கருமை, மிடறு - கழுத்து. ஆரூரன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 18. திருக்கள்ளில்

இத்தலம் இதுபோது திருக்கள்ளம் என்று கூறப்படுகிறது. விருகு முனிவர் பூசித்த தலம். இறைவர் இவருக்குத் தட்சணாமூர்த்தி வடிவில் காட்சி தந்தனர். இங்குள்ள இறைவர் சிவானந்தேஸ்வரர் என்றும், தேவியார் ஆனந்தவல்லி அம்மையார் என்றும் அழைக்கப் பெறுவர். இங்குள்ள தீர்த்தம் நந்தி தீர்த்தம் எனப்படும்.

இத்தலம் தின்னனூர் இரயில் அடியிலிருந்து பதின்மூன்று கல் தொலைவில் உளது. வழியில் குசஸ்தல ஆற்றைக் கடக்க வேண்டும். இவ் வாற்றின் வட கரையின் ஆறு கல் தொலைவில் பொன்னேரி ஸ்டேஷனிலிருந்து தென் மேற்குப் பன்னிரண்டு கல் கடந்தாலும் இத்தலத்தை அடை யலாம். சென்னையிலிருந்து புழலேரியை அடைந்து வடக்கே சென்று மூன்று கல் தொலைவில் உள்ள அத்திப்பேட்டுச் சத்திரத்தை அடைந்து அங்கிருந்து ஆறு கல் சென்றாலும் இக் கோயிலை அடையலாம். சென்னைத் தங்கசாலை சென்று பெரிய பாளையம் நாகலாபுரம் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கன்னிப் புத்தூரில் இறங்கி இரண்டு கல் சென்றாலும் இக் கோவிலை அடையலாம்.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இப்பதிகம் கலிவிருத்தத்தால் ஆனது. பண் வியாழக்குறிஞ்சி. இதனைச் சௌராஷ்டிர இராகம் போன்றது என்னலாம். இத் தலத்துப் பதிகம் இறைவரைப் பற்றிக் கூறுகையில் "நிறை பெற்ற அடியார்கள் நெஞ்சுளான்" என்று புகழ்கிறது. மேலும் "மலனைய தீர்த்தெய்தும் மாதவத் தோர்க்கே" என்றும் உணர்த்துகிறது.

இத்தலத்து இறைவரை நினைத்தால் உயர்வு அடைதல் உறுதி என்பது "உள்ளுமேல் உயர் வெய்தல் ஒருதலையே" என்னும் வரி அறிவிக்கிறது. இத்தலத்து இறைவரைப் பெரியவர்கள் போற்றுவர் என்னும் கருத்து "பெரியோர்கள் பரசுவாரே, பெரியான் என்று அறிவார்கள் பேசுவாரே" என்னும் தொடர்களால் தெரிய வருகிறது.

இத் தலத்தை வர்ணிக்கையில், பாலருவாயர்,

"முள்ளின்மேல் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின் மேல்விடு கூறைக் கொடிவிளைந்த கள்ளில்"

"விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரார் அம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக் கள்ளில்"

"கடியார்பூம் பொழில்சோலைக் கள்ளில்"

"கருநீலம் மலர்விம்மு கள்ளில்"

"மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்"

என்று வர்ணித்துள்ளனர்.

இத் தலத்தை இறைவர் விரும்பி வாழ்வர் என்னும் குறிப்பு: "கள்ளில் என்றும், பெருநீல மிடற்றண்ணல் பேணுவதே" என்னும் வரியால் தெரிய வருகிறது.

---

மலன் - பாசங்கள். உள்ளுமேல் - நினைத்தால், எய்தல்- அடைதல். ஒருதலை - நிச்சயம் பரசுவர் - போற்றுவர். கூகை - கோட்டான். முரலும் - கத்தும் வெள்ளில் - விளாமரம். கூறை - ஆடை, விரை - வாசனை. விழுமை - பெருமை, உரை - புகழ். பொன் - அழகிய. புனல் - நீர். கடி - வாசனை. பொழில் - சோலை. மிடறு - கழுத்து. பேணுவது - விரும்புவது. விம்மு - மலரும், மா - பெருமை.

ஆதர்கள் என்பவர்கள் கீழ் மக்கள். இவர்கள் அடியார்களை இகழும் இயல்பினர். இதனைத் திருஞான சம்பந்தர் "அடியார் பண்பு இகழ்வார்கள் ஆதர்களே" என்று கூறி உணர்த்தி யுள்ளனர்.

இதில் சம்பந்தப் பெருமான் உபதேசித்துள்ள உபதேச மொழிகளும் உண்டு.

"ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறிஅல்ல பேணு மின்கள்
மாச்செய்த வினவயல் மல்கு கள்ளில்
தீச்செய்த சடைஅண் ணல்திருந் தடியே"

என்னும் உபதேசத்தைக் காண்க,

சீர்காழி, திசையுளார் எவராலும் புகழப் படுவது என்பதும், திருஞான சம்பந்தர் நல்ல ஒளியுடையார் என்பதும் ஈற்றுப் பாடலால் அறிய வருவன. திருக்கள்ளில் விளங்கும் இறைவரைப் போற்றினல் புகழும் பேரின்பமும் வந்து சேரும் என்பது இப்பதிகத்தின் பயனகும். இக் குறிப்புகளை

"திசைநான்கும் புகழ்காழிச் செல்வம் மல்கும்
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவும் முதிர்சடையன் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே"

—முதல் திருமுறை.

என்னும் பாட்டில் காண்க.

---

ஆச்சியம் - பரிகசிக்கத் தக்க. அமணர் - சமணர். குண்டர் - பௌத்தர், நெறி - நல்வழி. பேணுமின்கள் - சிவபெருமானையே போற்றுங்கள். மல்கு - பெருகும். தீச்செய்த - தீயைப்போன்ற. திசை - திசை. காழி - சீர்காழி. பந்தன் - திருஞானசம்பந்தன். முகை - மலர் அரும்பு.

# 19 திருக்காளத்தி

இத்தலம் காளத்தி என்றும் வழங்கப் பெறும். இக்கோவிலில் இறைவர் காற்று வடிவாய்த் திகழ்பவர் என்பதை இன்றும் நேரில் கண்டு இன்புறலாம். இதனை மூலட்டானத்து இலிங்கத்தின் அருகே உள்ள விளக்கு எந்த நேரமும் அசைந்து கொண்டிருப்பதன் மூலம் உணரலாம். இத்தலம் தட்சகைலாயம் எனப்படும். இது விராட் புருடனது ஆருதார க்ஷேத்திரங்களில் விசுத்தி க்ஷேத்திரமாகத் திகழ்வது என்றும் கூறுவர். இத் தலத்தைச் சீபுரம் என்றும் மும்முடிச் சோழபுரம் என்றும் சொல்லுவர். இத்தலம் ரேணுகுண்டா கூடூர் இரயில் வழியில் இடையே உள்ளது. இரயில்வே ஸ்டேஷன் பெயர் காளாஸ்திரி என்பது. இங்கிருந்து இரண்டு கல் நடந்தால் இத் தலத்தை அடையலாம். இதுபோது இங்குச் செல்லப் பஸ் வசதிகளும் உண்டு.

இது சீயாகிய சிலந்தியும், காளமாகிய பாம்பும், அத்தியாகிய யானையும் இறைவரைப் பூசித்து முத்தி பெற்ற தலமாகும். இம் மூன்றையும் இறைவர் தம் திருமேனியில் ஒடுக்கிக் காட்சி அளிப்பதை இங்குள்ள சிவலிங்கத் தோற்றத்தின் மூலம் நன்கு உணரலாம். இது குறித்தே இத்தலம் சீகாளத்தி எனப்பட்டது. இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு மூர்த்தி, வெண்ணிற மூர்த்தியும் ஆவார். சுவாமி மேற்கே பார்த்தவண்ணம் உள்ளார். இவருக்குப் பச்சை கற்பூரமும், திருநீறும் கலந்த அபிடேகம் நடைபெறுகிறது.

இத்தலத்தில் விஷ்ணு, பிரம்மா, இலக்குமி, சரசுவதி உரோமேசர், வசிட்டர், வேதருடிகள், ஆதிசேடன், யட்சர், அகத்தியர், திக்குப்பாலகர். யோகினிகள், முசுகுந்தன், கன்னியர் இருவர்,

கண்ணப்பர், நக்கீரர், சங்கம வேந்தன், சிவகோ சாரியார் முதலானோர் வழிபட்டுள்ளனர்.

இத்தலத்தின் அருகில் சுவர்ண்முகி என்னும் ஆறு ஓடுகிறது. இது வடக்கு நோக்கிச் செல்வது ஒரு சிறப்பாகும். இவ் வாற்றின் கீழ்க் கரையில் தான் இத்தலம் அமைந்துளது. இதனைப் பொன் முகரி ஆறு என்றும் சொல்வர். குளிக்க வசதியான ஆறு. இவ்வாற்றின் மீது ஒரு பாலம் உளது. அப் பாலத்தின் கீழ் இடம் ஆழமாக இருக்கும். இங்கும் குளிக்க வசதி உண்டு. பொன் முகரி ஆற்றிற்குப் போகும் வழியில்தான் கோவிலின் பெரிய கோபுரம் உளது. கோவிலுக்கும் இக் கோபுரத்திற்கும் தொடர் பில்லாதது போல அது காணப்படுகிறது.

இங்குச் சிவராத்திரி திருவிழா மிகச் சிறப் பானது. திருக்காளத்தி மலையினைச் சுற்றி வரப் பதினெட்டுக் கல் நடக்க வேண்டும். ஆனால், காளத்தி அப்பர் சிவராத்திரியின் போதும், மாட்டுப் பொங்கலின் போதும் மலையில் வாழும் மக்களுக்கும். ஏனைய உயிர் இனங்கட்கும் காட்சி அளிக்கச் சுற்றி வருவார். அதுபோது அன்பர்கள் ஆயாசம் இன்றிச் சுற்றி வரலாம். இங்கு வசந்த உற்சவம் சித்திரை வைகாசியில் மிக்க சிறப்புடன் நடக்கிறது. அது போது ஆற்றின் மணல் வெளியில் இறைவர் அன்பர் கட்குக் காட்சி கொடுக்கப் பந்தலில் அமர்ந்திருப்பர்.

இங்குப் பாதாள விக்னேஸ்வரர் இருக்கிறார். அவர் முப்பதடி ஆழத்தில் நில அறைக்குக் கீழ் உள்ளனர். உள்ளே போகப் படிகள் உண்டு.

இத் தலத்து இறைவர்க்குத் தும்பைப் பூச் சூடுவது விசேடமாகும். இக்கோவிலுக்குள் சென்று மூலட்டான ஈசுவரரை வணங்கும்போது, அவர் பக்கலில் நிற்கும் திருக்கண்ணப்பரையும் கண்டு வணங்கலாம். இறைவரைத் தரிசித்ததனால் உண்

டாகும் பயன் கண்ணப்பரையும் உடன் தரிசப்பதனுலேயே ஏற்படும் என்பதை உணர்ந்து பிராம்மண குலச் சிரேஷ்டரான திருஞானசம்பந்தர், வேடர்குலத் திலகரான கண்ணப்பரை வணங்கினுர். இதனைச் சேக்கிழார் தெள்ளத் தெளிய "கும்பிட்ட பயன் காண் பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்" என்று எடுத்து விளம்பியுள்ளார். உள் பிராகாரத்தைச் சுற்றி வரும்போதும் மேடை மீது திருக்கண்ணப்பர் உருவம் கம்பீரத்துடன் காணப்படுகிறது. அதனையும் கண்டு தொழலாம். கோயிலைச் சுற்றிக்கொண்டு வெளியே வரும்போது மலையின் மேல் ஏற வழி செல்கிறது. அங்கும் சிவலிங்கமும், திருக்கண்ணப்பர் திருஉருவமும் உள்ளன. அவர்களையும் கண்டு மகிழ்ந்து வணங்கலாம். இங்குள்ள சிவலிங்கத்தையே கண்ணப்பர் வழிபட்டார் என்பர். கண்ணப்பர், மலைமீதுள்ள சிவலிங்கத்தையே வழிபட்டார் என்றும் பெரிய புராணம் கூறும் கூற்றுக்கு இது பொருத்தமாகும். ஆனுல், இதுபோது பொன்முகரி ஆற்றங் கரையில் உள்ள கீழ்க்கோயில் இறைவரையே வழிபட்டனர் என்று கூறுவாரும் உளர். இக்கோவிலை பொன்முகரி ஆற்றில் நீராடிவிட்டு கோயிலை அடையச் சில படிகளை ஏறிக் கீழ்மலைக்குச் செல்லவேண்டி இருத்தலின் இதுவும் பொருத்தமாகும். ஆனுல், மேல்மலையில் உள்ள இயற்கை நிலையை உற்றுநோக்கும்போது, அந்த இடமே கண்ணப்பர் பூசித்த இடம் என்பது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது. மேலே அடர்ந்த காடும் ஒரு குளமும் உள்ளன.

இறைவியார் ஞானப் பூங்கோதை என்னும் பெயருடன் விளங்குகின்றனர். இவ்வம்மையாருடைய திருப்பெயரை அப்பர் பெருமான் தம் திருத்தாண்டகத்துள் "ஞானப் பூங்கோதையாள் பாகத்தான்" என்று பாடியும் உள்ளனர். இவ்

வம்மையார்க்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பொன் பாவாடை சாத்தப்படுகிறது. அக் காட்சி யினைக் கண்டு களித்தல் நாம் மக்கள் பிறவி எடுத்த தன் பயன் ஆகும்.

இத்தலத்து இறைவர் காளத்தி நாதேஸ்வரர், குடுமித்தேவர் எனப்படுவர். தேவியார் ஞானப்பூங் கோதை என்று கூறப்பெறுவார். விநாயகர் ஐந்சந்தி விநாயகர் ஆவார். இத் தலத்து விருட்சம், கல்லால விருட்சம். (அது விழுது இரங்காத ஆல விருட்சம்.) அகண்ட வில்வ மரமும் இத்தலத்து விருட்சமே. தீர்த்தங்கள், பொன் முகரி, சூரிய தீர்த்தம், பிரம்மதீர்த்தம், சரஸ்வதிதீர்த்தம் என்பன.

இத் தலத்தில் மணிகண்டேஸ்வரர் கோவிலும் உண்டு. இதனைத் தெற்கு நோக்கி வந்தால் கண்டு வணங்கலாம். இதில் விஷ்ணு ஆலயமும் உளது. மலை அடிவாரமாக ஐந்தாறு கல் சென்ருல் தெலுங்கு மக்கள் கூறும் வெய் லிங்கக் கோ(ா (ஆயிரம் லிங்கமுடை தலம்) என்னும் கோயிலையும் கண்டு வணங்கலாம். இதனை அடர்ந்த காட்டைக் கடந்து சென்று தரிசிக்கவேண்டும். இங்கும் மக்கள் வாழ் கிருர்கள். சிறு ஓடை ஒன்று ஓடுகிறது.

கடைவீதியிலும் திருக்கண்ணப்பர் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிருர். அத் திருவுருவை யும் கண்டு தரிசிக்கலாம்.

திருக்காளத்தியில் தனித்தனி இரண்டு சிறு குன்றுகள் இருக்கின்றன. ஒரு குன்றில் துர்க்கை கோயில் உளது. மற்ருெரு குன்றில் குமரன் கோவில் உளது. இரண்டிலும் ஏறிச் செல்ல நல்ல படிகள் உண்டு. திருக்காளத்தியில் பல சத்திரங்கள் உள்ளன. திருக் காளத்தியின் காலி கோபுரமும், மண்டபமும் ஸ்ரீகிருஷ்ண தேவராயரால் கட்டப் பட்டன.

இங்குள்ள இறைவர்க்குரிய பெயர்களுள் குடுமித்தேவர் என்பதும் ஒன்று. இது நாணன் என்னும் வேடனால் திருக்கண்ணப்பருக்கு உணர்த்திய பெயராகும். அவனுக்குக் காளத்தி நாதர் என்னும் பெயர் தெரிந்திலது. இறைவர் குடுமி (மலைஉச்சி) மீது இருத்தலின், இப்பெயரை அமைத்துப் பேசினான். ஆனால், இதுபற்றி ஒரு வரவாறு கூறப்படுகிறது. அரசன் அன்புடன் தினம் தினம் இறைவருக்குச் சாத்தும்படி மலர் மாலைகளை அனுப்புவது வழக்கம். கோயில் அர்ச்சகனோ இறைவருக்குச் சாத்தாமல் தனது காதல் மனைவிக்குச் சாத்தியபின் அரசனுக்கு அனுப்புவது வழக்கம். அரசனுக்கு இது தெரியாது. இறைவருக்குச் சாத்திய பிறகே தனக்கு வந்து சேர்வதாக எண்ணி மகிழ்ந்து ஏற்றுக் கண்களில் ஒற்றித் தன் முடியில் சூடிக் கொள்வான். ஒருநாள் காதல் கிழத்தியின் முடி (மயிர்) ஒன்று மாலையில் சிக்கிக் கொண்டது. அதனைக் கவனியாமல் அரசனுக்கு அர்ச்சகன் அனுப்பி விட்டான். அரசன் கண்களில் அம் முடி காணப்பட்டது. உடனே அர்ச்சகனை வரவழைத்துக் காரணம் கேட்டனன். அவன் பயந்து எப்படியேனும் உயிர்தப்ப வேண்டுமென்று பொய் கூறவேண்டி, "அரசரே காளத்தி அப்பருக்குக் குடுமிஉண்டு. அக் குடுமியின் ஒரு முடி இதில் சிக்கிக் கொண்டது போலும்!" என்று கூறினான். "அரசன் இறைவருக்குமா முடியுண்டு! நான் பார்க்க வேண்டும். நாளை வருகின்றேன்" என்று கூறி அர்ச்சகனை அனுப்பி விட்டனன். அர்ச்சகன் தன் வீடு திரும்பி இறைவனிடம் தன் தவற்றைச் சொல்லி முறையிட்டனன். இறைவர் அன்று இரவு அவன் கனவில் தோன்றி, "அன்பனே! அஞ்சாதே' நாளை அரசன் வந்து பார்க்கும் போது நாம் தலையில் உச்சிக் குடுமி யுடன் இருப்போம்" என்று சொல்லி மறைந்தார். அரசனும் மறு

நாள் வந்து பார்க்கையில் இறைவர் குடுமையுடன் இருத்தலைக் கண்டு வியந்து போற்றினான். இக் காரணத்தால் இறைவர் குடுமித் தேவர் எனப் பட்டார். இதுவே அவ்வரலாறு.

திருக் காளத்தியில் தீப மரங்கள் உண்டு. இவை இருட்டில் ஒளியுடன் திகழும். இதனைச் சேக்கிழார் பெருமானார் "சோதிமா மரங்களால் இங்கு இருள் இல்லை" என்பர். இத் தலத்துக் கல் வெட்டுகளால் நாம் அறிவன:

இறைவர் திருக் காளத்தி உடைய நாயனார், திருக் காளத்திச் சிவனார், ஆளுடையார், தென் கயிலாய முடையார் என்றும், வீதியில் வரும் பெருமான், சோதி விடங்கர் என்றும் குறிக்கப் பெற்றுள்ளனர்.

இதுபோது மாசி விழா சிறப்பாக நடக்கிறது. கல் வெட்டு மூலம் வைகாசியில் இத் திருவிழா சிறப் புடன் நடந்ததாகத் தெரிகிறது. இவ் விழா தடை யில்லாது நடக்க நரசிங்கக் காளத்தி தேவனை யாதவ ராசன் தேவதானம் அளித்துள்ளனன்.

உற்சவ மூர்த்தியான சோதிவிடங்கர் எட்டாம் நாள் திருவீதி உலாப் போம்பொழுது, திருச்சாந்து, (சந்தனம்), பச்சைக் கற்பூரம் மணக்க வெள்ளைச் சாத்துடன் எழுந்தருளுவர். இதன் பொருட்டும், நைவேத்தியமாகத் தோசை, திருக்கண்ணமுது (பாயசம்) நிவேதனம் செய்ய நூறு பணம் கொடுக்கப் பட்டது. மாசி மாதத் திருவிழாவின் ஏழாம் நாளும் இறைவர் திருவீதி உலாப் போம் பொழுது தோசை நிவேதனத்தின் பொருட்டும் நிபந்தம் ஏற்பாடு செய்யப் பட்டது.

திருக் காளத்தி உடையார் கோயில் மலைமேல் ஒரு மடம் இருக்கிறது. இம் மடத்தில் மகேஸ்வரம்

பூசையின் பொருட்டு நன்செய், புன்செய் நிலங்கள் மாதவராயன் என்பவனால் கொடுக்கப்பட்டன.

தியாகேசன் என்னும் திருமடமும் ஒன்று இருந்தது. இங்கு நாள்தோறும் முப்பது யாத்திரீகர்களுக்குச் சோறும், ஐந்து பிராமணர்கட்கு அரிசியும் கொடும்பதற்குத் தியாக மேனன் என்பவன் ஏற்பாடுகள் செய்திருந்தான். இத் தலத்து வடக்கு வீதியில் கூற்றுதைத்தான் சோமதேவர் மடம் என்ற பெயரிலும் ஒரு மடம் உண்டு.

திருக்காளத்தி உடைய நாயனாரின் திருமலையின் அடிவாரத்தில் ஒரு நந்தவனம் இருந்தது. அதற்கு வீர நரசிங்க மாதவன் நந்தவனம் என்பது பெயர். இஃது அவனால் உண்டாக்கப் பட்டது. இது பழுதுருதிருக்கப் பொன்னும், நெல்லும் பெற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனன். இதுவே அன்றி ஆலால சுந்தரர் பெயரில் ஒரு நந்தவனம் இருந்தது. ஒரு பாக்குத் தோட்டத்திற்குக் கண்ணப்பர் தோட்டம் என்று பெயர் வைக்கப்பட்டது. மண்டபமும் தாழ்வாரமும் புத்தங்கையார் என்னும் அம்மையாரால் கட்டப் பட்டன.

இராசேந்திர சோழன் காலத்தில் கார்த்திகைத் திப விழா சிறப்புடன் நடத்தப்பட்டது. இதற்குக் கங்கை கொண்ட சோழ மயிலாடுடையான் நிவந்தம் அளித்துள்ளான். அளவு கருவிக்குக் காளத்தியுடையான் மரக்கால் என்பது பெயர். மூன்றும் பிராகார மண்டபம் சின்னையா மண்டபம் எனப்படும்.

திருக்காளத்தி அப்பரது பெயர், பட்டப் பெயராக ஒரு தலைவனுக்குத் திருக்காளத்தி தேவன் என்றும், திருவிளக்குக் குடிகளில் ஒருவனுக்கு மன்றுடி காரிசாத்தான் திருக்காளத்தி கோன் என்றும் சூட்டப்பட்டன,

இங்குக் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் திருக்காளத்தியில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுச் செய்திகளாகும். இதனால் திருக்காளத்தியில் முழுக்க முழுக்கத் தமிழ் மொழி முன் காலத்தில் பேசப்பட்டு வந்ததை அறிக.

1438ஆம் ஆண்டு தெலுங்கு கல்வெட்டின் மூலம் நூற்றுக்கால் மண்டபமும், பெரிய கோபுரமும் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டன என்பது தெரிகிறது.

திருக்காளத்தியிலிருந்து பஸ் மூலம் சென்று திருப்பதி வேங்கடாசலபதியையும் கண்டு வணங்கலாம். இது கீர்த்திபெற்ற ஒரு வைணவத் தலம். ஆழ்வார்களால் பாடப்பட்ட திவ்ய க்ஷேத்திரம்.

திருக்காளத்தியில் முத்தி பெற்றவர் திருக்கண்ணப்பர். இவரது வரலாற்றுச் சுருக்கம் பின்வருமாறு:

இவர் பொத்தப்பி நாட்டில் நாகன் தத்தை என்னும் வேடர்குலப் பெற்றோர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தார். இவர் திண் என்று இருந்ததால் திண்ணன் என்று அழைக்கப்பட்டார். இவர் இளவரசு பட்டம் பெற்று, காட்டிற்கு வேட்டையாடப் போனார். இவருடன் நாணன், காடன் என்னும் இருவரும் புறப்பட்டனர். திண்ணனார் ஒரு பன்றியைக் கொன்றார். அதனைப் பக்குவப் படுத்தக் காடனிடம் கூறி, நாணனுடன் மலைமேல் சென்றார். சிவலிங்கத்தைக் கண்டார். அவர் தனியே இருப்பது குறித்து அவரை விட்டுப் பிரியாராயினார். சிவலிங்கத்தின்மீது பூவும் நீரும் இருக்கக் கண்டு, அதற்குக் காரணம் என்ன என்று நாணனைக் கேட்டார். நாணன், "இவரை பிராமணர் இவ்வாறு செய்து வழிபடுவர்; அவர் இட்ட பூவும் நீருமே இவை" என்றான். உடனே தாமும் அவ்வாறு வழிபட

மலையை விட்டுக் கீழே இறங்கி, மலர்களைப் பறித்துத் தலையில் செருகி, நாணன் தயாரித்து வைத்த பன்றி இறைச்சியை ஓர் இலைத் தொன்னையில் ஏந்தி, ஒரு கையில் வில் ஏந்தி, நீர் முழுக்குக்குப் பொன் முகலி ஆற்றின் நீரை வாயில் முகந்துகொண்டு, தம்முடன் வந்த இருவர்கள் என்ன கூறியும் அவர்களை ஏறிட்டும் பார்க்காமல் சிவலிங்கத்தை அணைந்து, தமது செருப்புக் காலால் இறைவர் திருமுடி மலர்களை நீக்கி, வாயில் கொணர்ந்த நீரைத் தலையில் உமிழ்ந்து கொணர்ந்த மாமிசத்தையும் ஊட்டினார். இரவெல்லாம் உறங்காமல் காத்து நின்றார். மறுநாளும் இறைவருக்கு வேண்டுவன கொணரப் புறப்பட்டார்.

பிராம்மணராம் சிவகோசரியார் தம் வழக்கப்படி பூசை செய்ய வந்தபோது, கோவிலில் செருப்படிச் சுவடும், எலும்புகளும் இருக்கக் கண்டு நடுங்கி, அவற்றை விலக்கி மீண்டும் குளித்து வழிபாடு ஆற்றிச் சென்றார். பின் திண்ணனார் தம் வழக்கப்படி பூசை ஆற்றினார். இரவில் இறைவரைக் காத்து நின்றார்.

மறுநாளும் சிவகோசரியார் வந்தபோது முன்னாள் இருந்தது போலவே இருக்கக் கண்டு வருந்தி, இடத்தைச் சுத்தம் செய்து வழிபட்டுச் சென்றார். இங்ஙனம் ஐந்து நாட்கள் இறைவர்க்கு மாறுபட்ட முறையில் இருவர்களின் பூசையும் நடந்தது.

சிவகோசரியார் வருந்தி இறைவரிடம் "இவ்வாறு தூய்மைகெட நடப்பது உமக்குப் பொருத்தமோ? இஃது இனி நடக்காவண்ணம் திருவருள் புரிக" என்று வேண்டிச் சென்றார். இறைவர் அன்று இரவு சிவகோசரியார் கனவில் "அன்பனே அவனை வேடன் என்று கருதாதே.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீஎன் றருள்செய்வார்"

—பெரியபுராணம்.

இத்துடன் இன்றி,

"மற்றவன் செருப்புக் காலால் மணம்கமழ் நமது சென்னி
உற்றபூ மாற்றும் காலத்து உடம்பெலாம் மயிர்பொ டிப்பச்
சிற்றிள மகன்பூங் கையால் திருமுலை வருடப் பெற்ற
பெற்றதாய் என்ன நெஞ்சம் பெரிதுரு குதுமால் அன்ப

அவன்மனம் நமக்குக் கோயில் அவன்உரை பலவும் ஓத்தாம்
அவன்முயல் தொழில்கள் எல்லாம் அறத்தொழில் ஐயம் இல்லை"

—சீகாளத்திப் புராணம்.

என்று கூறி, மேலும் "நாளை மறைந்திரு. அதுபோது அவன் அன்பின் திறத்தைக் காட்டுகிறோம்" என்றருளினார். ஆறும் நாள் சிவகோசரியார் பூசைமுடித்து மறைந்திருந்தார்.

திண்ணனார் தமது வழக்கமான பூசையை முடிக்க வந்தபோது வழியில் பல தீச் சகுனங்கள் தோன்ற ஓடோடியும் வந்து பார்த்தபோது, இறைவர் கண்ணில் இரத்தம் வருதல் கண்டு திடுக்கிட்டுக் கொண்டுவந்த பொருள்கள் தம் கையினின்றும் சிதறியதையும் அறியாராய், இறைவரைக் கட்டித் தழுவிக் குருதி நிற்கப் பல பச்சிலைகளைப் பிழிந்தார். மலர்களைப் பிழிந்தார். இரத்தம் நிற்கவில்லை. பின் கண்ணுக்குக் கண்ணை வைத்தால் இறைவர் கண் சரியாகிவிடும் என்று தம் ஒரு கண்ணைப் பிடுங்கி இட்டார். குருதி நின்றது. பெரிதும் மகிழ்ந்தார்.

---

பொடிப்ப-சிலிர்க்க. ஓத்து-வேதம். ஐயம்-சந்தேகம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு கண்ணிலும் செந்நீர் வரக்கண்டு வருந்தி, 'இனி இதற்கு அஞ்சேன்; மருந்து கைமேல் கண்டேன்'' என்று மற்றொரு கண்ணைத் தோண்டி வைக்க முயன்ற போது இறைவர்,

''நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பஎன்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்பஎன்
றின்னுரை அதனொடும் எழில்சிவ லிங்கம்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் தன்கை அம்பொடும் அகப்படப்பிடித்து
அருளினன்''

—நக்கீரர் திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

இறைவர் திருவருள் புரிந்ததைச் சேக்கிழார், ''என் வலத்தில் மாறிலாய் நிற்க'' என்று இறைவர் அருளியதாக விளக்கிப் போந்தார். இவ்வாறு காளத்தி அப்பர் பக்கலில் இருப்பதை இன்றும் திருக் காளத்தி மூலட்டானத்தில் பார்க்கலாம்.

இவர் இறைவர்க்குக் கண் அப்பிய காரணத்தால் கண்ணப்பர் எனப்பட்டார்.

இவரது வரலாற்றை நக்கீரர் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்று பாடியருளினர். கல்லாட தேவ நாயனாரும் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற பெயரில் இவரது சரித்திரத்தைப் பாடியுள்ள னர். இந்நூலின் இறுதியில் கண்ணப்பர் திருவடியைத் தொழுதால் பிறப்புக்குக் காரணமான தீவினை ஒழியும் என்று கூறப்பட்டுள்ளது. இக்கருத்தை,

''திருவேட் டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே''

என்னும் வரிகளில் காண்க.

---

தோன்றல் - (ஈண்டுக்) கண்ணப்பர் (தோன்றல் - ஆண்களில் சிறந்தவர்) தடம் - நீண்ட. எழில் - அழகிய.

திருக்கண்ணப்பர் செய்த பூசையின் அருமை பெருமையினைப் பல புராண நூல்களும், தோத்திர நூல்களும், தனிப்பாடல்களும் பாடி மகிழ்ந்துள்ளன.

திருவாசகம் இவரது பூசையை,

"பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன்அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ"

என்றும்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை"

என்றும்,

திருஞானசம்பந்தர்,

"வாய்கலசம் ஆகவழி பாடுசெய்யும்
வேடன் மலராகும் நயனம்
காய்கணை யினால்இட ந்து ஈசன்அடி
கூடும் காளத்தி மலையே"

என்றும்,

"குவப்பெரும் தடக்கை வீரன்
கொடுஞ்சிலை இறைச்சி பாரம்
துவர்ப்பெரும் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெரும் குருதி சோர
ஒருகணை உவந்தங் கப்பப்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னாரே"

என்று அப்பரும்,

---

சேடு - பெருமை. ஊன் - மாமிசம். குவவு - திரட்சி. கொடுஞ்சிலை - வளைந்த வில். கணை - அம்பு. உவ-மகிழ்ந்து. தூய-சுத்தமான. துவர்-சிவப்பு. தோள் நோக்கம்-பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டு. நயனம் - கண்.

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்"

என்று சுந்தரரும் இவருடைய அருஞ்செயலையும், மாண்பையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

பட்டினத்தடிகள், ஆறு நாட்களில் தொண்டு செய்து இவர் முத்தி பெற்றதை, "தொண்டுசெய்து நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லேன்" என்று பாடியுள்ளனர்.

நக்கீரருக்கும் திருக்காளத்திக்கும் தொடர்புண்டு. மதுரையில் வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் அரசாண்டனன். அவன் தன் மனைவியின் கூந்தலி லிருந்து ஒரு புதுமணம் வீசுதலை உணர்ந்தான். அம் மணம் அவளது கூந்தலின் இயற்கை மணமா? மலர் வைத்து முடிக்கப்பட்ட காரணத்தால்வந்த மணமா?" என்று சந்தேகித்து இதன் உண்மையை அறிந்து தெரிவிப்பவர்கள் பெற ஆயிரம் பொற்காசு அமைந்த பையைச் சங்க மண்டபத்தில் கட்டித் தொங்கவிட்டான். பலரும் அதைப் பெற முயன்றனர். எவரும் அரசன் உள்ளக் கிடக்கையை அறிந்து பாடிலர்.

இந் நிலையில் தருமி என்னும் ஏழைப் பிராம் மணன் இறைவரை வேண்ட மதுரை சொக்கலிங்கப் பெருமான்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே"

—குறுந்தொகை.

---

கொங்கு - மணம். அம் சிறை - உள் இறகு. தும்பி - வண்டே. காமம் - ஓரவஞ்சகம். கெழீஇய - பொழிந்திய. இயல் - மென்மை. எயிறு - பல். அரிவை - பெண். (ஈண்டுப் பாண்டியன் மனைவி.) நறியவும் - மணமுள்ளது.

என்னும் பாடலை எழுதிக்கொடுக்க, அதைப் பாண்டியனிடம் கொடுத்தனன். இப்பாட்டின் கருத்து: 'வண்டே! உள்ளதை உள்ளவாறு சொல்லுக. அதாவது, பாரபட்சம் இல்லாமல் சொல்லுக. இந்தப் பெண்ணின் கூந்தலின் மணம்போல மணம்பெற்ற பூ உனக்குத் தெரியுமா?" என்பது. வண்டுக்கு எல்லா மலர்களின் மணமும் தெரியும். ஆனால், அரசியின் கூந்தல் மணம் போன்ற மணம் எம் மலரினும் அது நுகர்ந்தது இல்லை. ஆகவே அரசியின் கூந்தலிலிருந்து வந்தமணம் மலர் முடித்ததனால் இன்றி இயற்கையான மணம் நிறைந்தது என்பது இதனால் பெறப்பட்டது.

அப் பாட்டில் பாண்டியன் தன் மனைவியின் கூந்தல் மணம் இயற்கை மணம்பெற்றது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பாண்டியன் அப் பாடலைப் படித்து அதன் உள்பொருளை உணர்ந்து மகிழ்ந்து பொற்கிழியை எடுத்துக்கொள்ளக் கட்டளை இட்டனன். அதுபோது நக்கீரர் தடுத்தார். தருமி நக்கீரரை எதிர்த்துப் பேச ஆற்றல் இல்லாதவனாய் இறைவரிடம் முறையிட்டான். இறைவர், புலவர் வேடத்துடன் வந்து "தேவ மாதர்களுக்கு இயற்கை மணம் உண்டு என்று நக்கீரரிடம் வாதாடினார். நக்கீரர் எந்தப் பெண்களாயினும் அவர்களுக்கு இயற்கை மணம் இல்லவே இல்லை என்று எதிர்த்துப் பேசினார். அதுபோது சிவபெருமான் "நீ வழிபடும் திருக்காளத்தியிலுள்ள தேவியான ஞானப் பூங்கோதையின் கூந்தலும் செயற்கை மணமுடையதோ?" என்று கேட்டார். நக்கீரர் சிறிதும் அஞ்சாது" அதுவும் செயற்கை மண முடையதே" என்றனர். அந்நிலையில் இறைவர் நக்கீரருக்குத் தாம் சிவபெருமான் என்பதை உணர்த்தத் தம் நெற்றிக்கண்ணையும் சடையையும் காட்டினர். அதுபோதும் நக்கீரர்,

"ஏற்றினன் நெற்றிக் கண்ணும் எரிமருள் சடையும் காட்ட
மாற்றரும் மருட்சி யான்கண் வடிவெலாம் காட்டி னலும்
சாற்றிய செய்யுள் குற்றம் சடைகொண்டு வெருட்டல்
தோற்றிலன் இதனுக்கு" [வேண்டா

—சீகாளத்திப் புராணம்.

என்றான்.

இத்தகைய செருக்கான மொழிகளைக் கேட்ட சிவபெருமான் நக்கீரரைக் குஷ்ட நோயால் துன்புறச் சபித்தனர். நக்கீரர் தம் குற்றத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டனர். அதுபோது இறைவர் "நீ கயிலை தரிசனம் செய்தால், இந்நோய் தீரும்" என்று கூறத் தட்சண கயிலாயமாகிய திருக்காளத்தியை அடைந்தார். பொன்முகலியில் நீராடினார். இறைவரையும் தேவியாரையும் வணங்கினர். கைலை வேறு காளத்தி வேறு என்னும் வேறுபாட்டு உணர்ச்சி இன்றிக் கைலை பாதி காளத்தி பாதி என்னும் அந்தாதி நூலைப் பாடினர். குஷ்டம் நீங்கியது.

"இவரே முதல்தேவர் எல்லார்க்கும் மிக்கார்
இவர்அல்லர் என்றிருக்க வேண்டா—கவராதே
காதலித்தின் றேத்துதிரேல் காளத்தி ஆள்வார்நீர்
ஆதரித்த தெய்வமே ஆம்"

"ஆம்என்று நாளை உளஎன்று வாழ்விலே
தாம்என்று வீழ்கை தவம்அன்று—யாம்என்றும்
இம்மாய வாழ்வினையே பேணு திருங்கயிலை
அம்மானைச் சேர்வ தறிவு"

—கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி.

---

எரிமருள் - தீப்போன்ற செந்நிறமுடைய. மாற்றரும் மருட்சியான் - மாற்றமுடைய விபரீத அறிவுடைய நக்கீரன். சாற்றிய - பாடிய. வெருட்டல் - அச்சுறுத்தல். கவராதே - வஞ்சிக்காமல். ஏத்துதிரேல் - போற்றினல். பேணுது - போற்றுது. இருங் கயிலை - பெருமைமிக்க கயிலைமலை.

இத் தலத்திற்கு வீரைநகர் ஆனந்தக்கூத்தர் பாடிய திருக்காளத்திப் புராணம் உண்டு. இத்துடன் இன்றிக் கருணைப் பிரகாசர், சிவப்பிரகாசர், வேலப்ப தேசிகர் ஆகிய மூவரும் (இவர்கள் மூவரும் சகோதரர்கள்) சேர்ந்து பாடிய சீகாளத்திப் புராணமும் உண்டு. கருணைப்பிரகாசர் நூலைக் கடவுள் வாழ்த்துடன் தொடங்கிச் சீகாளத்திச் சருக்கம் வரையில் பாடினர். சிவப்பிரகாசர் திருக்கண்ணப்பர் சருக்கம் முதல் நக்கீரர் சருக்கம் வரையில் பாடினார். வேலப்ப தேசிகர் கன்னியர் சருக்கம் முதல் சிலந்தி முதல் முற்கதைச் சருக்கம் வரையில் இரண்டு சருக்கங்களைப் பாடினார்.

சேறைக் கவிராஜ பண்டிதர் பாடிய உலாவும் உண்டு. அதுவே திருக்காளத்தி நாதர் உலா எனப்படும். இவ்வுலாவில் காளத்தியப்பர் ஞானப் பூங்கோதையோடு இரவில் கூடி இன்புற்ற நிலையை அழகுற,

> "அகிலாண்டம் ஈன்றுளை அவ்விருளில் கூடி
> அகிலாண்ட பூண்முலைப் போர் ஆடி — மிகஉறங்கிச்
> செங்கதிரோன் கைமலரச் செந்தா மரைமலர
> மங்கையுடன் செங்கண் மலர்ந்தருளி"

என்று பாடி இருப்பதைப் படித்து இன்புறுக.

இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் இரண்டும், அப்பர் சுவாமிகள் பாடிய திருத்தாண்டகம் ஒன்றும், சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் ஆக நான்கு பதிகங்கள் உள்ளன.

திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகம் கலிவிருத்த யாப்பால் ஆனது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது ஆண்டுக் காண்க. இப் பதிகப் பண் கொல்லி. இஃது இக்காலத்து நவரோசு இராகம் எனக் கூறலாம். இரண்டாவது பதிகம் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால்

ஆனது. இதன் இலக்கணமும் முன்பே கூறப்பட்டது. இதனையும் ஆண்டே காண்க. இதன் பண் சாதாரி. இதனை இக்காலத்துப் பந்துவராளி இசை எனக் கூறலாம்.

அப்பர் பாடல் திருத்தாண்டகம் ஆதலின் அதன் இலக்கணமும் முன்பே கூறப்பட்டது. இதனையும் ஆண்டுக் காண்க.

சுந்தரர் பாடலைக் கலிநிலைத் துறையில் அடக்கலாம். இதன் இலக்கணத்தையும் முன் பகுதிகளில் காண்க. இதன் பண் நட்ட ராகம். இதனை இக்காலத்துப் பந்துவராளி போன்றது என்று ஒருவாறு கூறலாம்.

முதல் பதிகத்தில் திருஞானசம்பந்தர் நமக்கு உபதேசங்களைச் செய்துள்ளார்.

> "ஆங்கமர் காளத்தி அடிகளை அடிதொழ
> வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகும்
> நீலம்ஆர் கண்டனை நினையுமா நினைவது
> விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
> நிரைதரு கழல்இணை நித்தலும் நினைமின்
> அத்தன்தன் காளத்தி அணைவது கருமம்
> அண்ணலார் காளத்தி ஆங்கணைந் துய்ம்மினே
> பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமின்"

என்னும் மொழிகளைக் காண்க.

திருஞானசம்பந்தர் காளத்தி அப்பரது திருவடிகளை உள்ளத்தில் கொண்டு உவப்பதை "எந்தையார்

---

அடிகள் - இறைவர். வீங்கு - மிக்க. வீடு - மோட்சம். நீலம் - விஷம். ஆர் - பொருந்திய விரை - வாசனை. விண்ணவன் - தேவன். அத்தன் - தந்தை. கருமம் - செயல். நித்தல் - தினம். உய்ம்மின் - பிழையுங்கள். பாங்கிலார் - ஒரு தன்மை இல்லாதவர். (சமண பௌத்தர்கள்) பரன் - சிவபெருமான்.

இணையடி என்மனத் துள்ளவே" என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

திருக்காளத்தி அப்பரை வணங்குவார் பெறும் பேற்றைக் குறிப்பிடுகையில்,

"காளத்தி அடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகும்"

"காளத்திஒருவனை, விரும்புவார் அவர்கள்தாம்
விண்ணுல காள்வர்"

"ஓங்குவண் காளத்தி உள்ளமோ டுணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க் கொருவனே"

என்று குறிப்பிட்டுள்ளனர்.

காளத்தி மலையின் இயற்கை அழகு நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளது.

"மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
ஓங்குவண் காளத்தி
அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி

என்னும் வரிகளைக் காண்க.

---

மந்தம் - தென்றல்காற்று. பொழில் - சோலை. மல்கு-பெருகும். வண்மை-வளப்பம். எண்வகைச் சித்திகளாவன (அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகியவைகள்) அணிமா - அணுவாகச் சுருங்கல். மகிமா - உருவை ஆகாயம்போல் பெருக்கல். கரிமா - தேகம் மலைபோல் கனத்திருத்தல். இலகிமா - கனம் இன்மை ஆதல். பிராத்தி - விரும்பியதைப் பெறுதல். பிராகாமியம் - பிறர் உடலில் சேரல். ஈசத்துவம் - எவர்க்கும் மேம்பட்டிருத்தல். வசித்துவம் - தன்வசம் ஆக்கல்.

இப் பதிகத்தில் பொன்முகலி ஆறு பல பொருள்களை அடித்து வருதலைப் பாடுகையில்,

"சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலி"

"ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனம்
சாலமா பீலியும் சண்பகம் உந்தியே
காலமார் முகலி"

"கோங்குமே குரவமே கொன்றைஅம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலி"

"கரும்புதேன் கட்டியும் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலி"

"வரைதரும் அகிலொடும் மாமுத்தம் உந்தியே
திரைதரு முகலி"

"முத்துமா மணிகளும் முழுமலர்த் திரள்களும்
எத்துமா முகலி"

"மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலி"

என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

இப் பதிகத்தை இட்டமாகப் பாட வல்லவர்கள், பாபத்திலிருந்து விலகுவர், திருஞானசம்பந்தர் தம்மைச் சிட்ட நான்மறைவல ஞானசம்பந்தன் என்று கூறிக்கொள்கின்றனர். சீர்காழி வயல்களையுடையது என்பதும் அழகியது என்பதும் ஈற்றுப் பாடலால் அறியவருகின்றன.

---

சந்தம் - சந்தனமரம். அகில் - அகில் கட்டை. உந்து - தள்ளிக்கொண்டு. முகலி - பொன்முகலியாறு. ஆலம், மா, மரவம், சாலம் என்பன மர வகைகள். கதலி - வாழை, வரை - மலை. திரை - அலை. மா - சிறந்த. எத்து - தள்ளும். நண்ணும் - நெருங்கும்.

"சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவெண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே"

"வரைதரும் அகிலொடு மாமுத்தம் உந்தியே
திரைதரும் முகலியின் கரையினில் தேமலர்
விரைதரு சடைமுடி காளத்தி விண்ணவன்
நிரைதரு கழலிணை நித்தலும் நினைமினே"

—மூன்றும் திருமுறை.

இரண்டாவது பதிகத்தின் வழி நாம் அறிவன :

இறைவர் தாரகாசூரனைக் கொல்லக் காளியை ஏவினர் என்னும் குறிப்பு, "வல்லைவரு காளியை வகுத்து வலியாகிமிகு தாரகனை நீ கொல்என விடுத் தருள் புரிந்தசிவன்" என்னும் வரிகள் அறிவிக் கின்றன.

இறைவர் சலந்தராசூரனைச் சக்கரத்தால் கொன்றதை,

"ஆரும்எதி ராதவலி ஆகிய
சலந்தரனை ஆழி அதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவன்"

என்றும் பாடியுள்ளனர். சிவபெருமான் எல்லாமாய் இருத்தலைச் "சகல சிவன்" என்னும் தொடர் அறி வித்து நிற்கிறது.

---

சந்தம் - சந்தனம். விரை - வாசனை. அகில் - அகில் கட்டை. மா - சிறந்த. உந்தி - தள்ளி. திரை - அலை. முகலி - பொன்முகலி ஆறு. தே - தேன் நிறைந்த. விரை - கலந்த. விண்ணவன் - தேவன். கழல் இணை - இரண்டு திருவடிகள். ஆழி - சக்கரம். ஈரும் - பிளக்கும்.

காளத்திமலை வேடர்கட்கு இருப்பிடம் ஆதலின், அங்குள்ள ஆடவர்களையும், பெண்களையும் பற்றி வெகு அழகுறப் பாடியுள்ளனர். ஆடவர்களைப் பற்றிக் கூறுகையில், காளத்தி மலையின் சிறப்பையும் இணைத்து,

"வார் அதர் இருங்குறவர் சேவலின்
மடுத்தவர் எரித்த விறகில்
காரகில் இரும்புகை விசும்புகமழ்
கின்றகா ளத்தி மலையே"

"வரியசிலை வேடுவர்கள் ஆடவர்கள்
நீடுவரை யூடு வரலால்
கரியினொடு வரிஉழுவை அரிஇனமும்
வெருவுகா ளத்தி மலையே"

என்றும், பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"ஏனம்இள மானினொடு கிள்ளை தினை
கொள்ள எழில்ஆர் கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்தி மலையே"

என்றும் பாடியுள்ளனர்.

சிறப்பாகக் காளத்தி மலையினைச் சிறப்பிக்கும் போது,

---

வார்-நீண்ட. அதர்-வழி. இருங்குறவர்-கருநிறக் குறவர்கள். சேவலின் - அவர்கள் தங்கி இருக்கும் குடிசைகளில். மடுத்து - தீமூட்டி. கார்-காரிய. இரும்புகை - பெரும்புகை. விசும்பு - ஆகாயத்தே. வரிய - கட்டமைந்த. சிலை - வில். வரையூடு - மலை வழியே. கரி - யானை. வரி - கோடுடைய. உழுவை-புலி. அரி இனம்-சிங்கக் கூட்டம். வெருவு-அஞ்சி ஓடும். ஏனம் - பன்றி. கிள்ளை - கிளி. எழில் - அழகு. ஆர் - அமைந்த. கவண் - கல் எறியும் கருவி. கனகமணி-பொன்மணி. விலகு - இருள் விலகும்.

''எதிர்எதிர வெதிர்பிணைய எழுபொறிகள்
சிதறஎழில் ஏனம் உழுத
கதிர்மணியின் வளர்ஒளிகள் இருள்அகல
நிலவுகா ளத்தி மலையே''

''பல்பலஇ ருங்கனி பருங்கிமிக
உண்டவை நெருங்கி இனமாய்க்
கல்அதிர நின்றுகரு மந்திவிளை
யாடுகா ளத்தி மலையே''

''அலைகொள்புனல் அருவிபல சுனைகள்வழி
இழியவயல் நிலவு முதுவேய்
கலகலென ஒளிகொள்கதிர் மூத்தம்அவை
சிந்துகா ளத்தி மலையே''

''ஊரும்அர வம்ஒளிகொள் மாமணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
காரிருள் கடிந்துகன கம்என
விளங்குகா ளத்தி மலையே''

''புனவர்புன மயில்அனைய மாதரொடு
மைந்தரும் மணம்புண ரும்நாள்
கனகமென மலர்கள்அணி வேங்கைகள்
நிலவுகா ளத்தி மலையே''

''குன்றின்மலி துன்றுபொழில் நின்றகுளிர்
சந்திமுறி தின்று குலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை
யாடுகா ளத்தி மலையே''

என்று சிறப்பித்துள்ளனர்.

---

வெதிர் - மூங்கில்கள். பிணைய - சேர. பொறிகள் - தீப்பொறிகள். எழில் - அழகிய. ஏனம் - பன்றி. கதிர் - ஒளியுடைய. பருங்கி - குடித்து. மந்தி - பெண் குரங்கு. வேய் - மூங்கில். கனகம் - பொன். புனவர் - வேடர். அனைய - போன்ற. வேங்கை - வேங்கைமரம். (இதன் மலர் பொன்னிறமாதலின் கனகம் உவமை ஆயிற்று.) துன்றி - நெருங்கி வளர்ந்த. சந்தமுறி - சந்தனத் தழை. பிடி - பெண்யானை.

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் பின் இரண்டடிகள் இலக்கியச் சுவைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இதனைத் திருஞான சம்பந்தரே நல்ல தமிழின் பாடல் என்று சிறப்பித்துள்ளனர். சம்பந்தர் "நாடுபல நீடுபுகழ் 'ஞானசம்பந்தன்' என்று புகழ்ந்து கொள்கிறார். அவரது கொச்சைவயம் (சீர்காழி) மாட மாளிகை நிறைந்தது என்று கூறப்பட்டுள்ளது. இப் பதிகத்தைப் பாடுபவர் நல்லவர்கள் என்பதும், பரலோகம் அவர்கட்கு எளிதில் கிடைக்கும் என்பதும் கூறப்பட்டுள்ளன.

''வானவர் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னை வினவில்
ஏனமிள மானினொடு கிள்ளைதினை
கொள்ள வெழிலார் கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்தி மலையே''

''வேயனைய தோளுமையொர் பாகமது வாக விடைஏறி
தூயமதி சூடுசுடு காடில்நட மாடிமலை தன்னை வினவில்
வாய்கலசம் ஆகவழி பாடுசெயும் வேடன்மலர் ராகு நயனம்
காய்கணை யினாலிடந் தீசன்அடி கூடுகா ளத்தி மலையே''

மூன்றாம் திருமுறை.

திருநாவுக்கரசர் பாடியுள்ள தாண்டகத்தின்வழி நாம் அறிவன. இத்தாண்டகம் இறைவரைத் தமிழ் மந்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபடலாம் என்பதை அறிவித்து நிற்கிறது. இறைவனுக்கு

---

தானவர் - அரக்கர். வாதை - துன்பம். வேய் - மூங்கில். அனைய - போன்ற. விடை - இரடபம். தூய - சுத்தமான. மதி - சந்திரன். வேடன் - கண்ணப்ப நாயனார். நயனம் - கண். கணை - அம்பு. இடந்து - தோண்டி.

வட சொல்லால்தான் அர்ச்சனை செய்யவேண்டும் என்னும் நியதி இல்லை. தமிழ் மொழியினாலும் அர்ச்சனை செய்யலாம். இறைவர் சுந்தரரிடம் அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால், 'மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று கூறியதையும் நினைவுபடுத்திக் கொள்க. திருஞானசம்பந்தரும், இறைவர்க்கு இருமொழிகளாலும் அர்ச்சனை செய்யப் பட்டதை "வடசொலும் தென்சொலும் தாள் நிழல் சேர" என்று அறிவுறுத்தி இருப்பதையும் காண்க.

வடமொழி அர்ச்சனை என்பது என்ன? இறைவரின் திருப்பெயர்களை வட சொற்களால் கூறி, அத் திருப்பெயரின் ஈற்றில் நமஃ என்று சொல்லி அவருடைய திருவடிகளில் மலர் இடுவதாகும். உதாரணமாக "உமா மகேஸ்வராய நமஃ" என்று கூறி மலர் இடுவர். இதன்பொருள் உமை அம்மையோடு கூடிய தேவர்களின் தலைவனே உனக்கு வணக்கம் என்பது தானே. இவ்வாறே தென்னாடுடைய சிவனே போற்றி என்று தமிழ் மொழியில் சொல்லித் திருவடிகளில் மலர் இடலாம் அன்றோ? இதன் பொருட்டன்றோ மாணிக்க வாசகரும், அப்பர் பெருமானும் போற்றி போற்றி என்று முடியும் பாடல்களைப் பாடி நமக்கு அளித்துள்ளனர்.

அப்பர் பெருமான் இறைவர் திருப்பெயர் ஒவ்வொன்றன் பின்னும் காண், கண்டாய், போலும் என்னும் முறையில் அமைத்தும் பல தாண்டகங்களையும் பாடியுள்ளார். இவை தமிழ் அர்ச்சனைக் குரிய பாடல்களே.

நம் நாட்டில் இதுபோது பல ஆலயங்களில் இலட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை என்று நடத்தப் படுதை நாம் அறிகிறோம். அவ்வர்ச்சனைகள் எப்படி

நடைபெறுகின்றன? ஒரு நாளைக்கு ஐந்து முறையோ ஆறுமுறையோ ஐந்தாறு பிராம்மணர்களைக்கொண்டு இறைவரது நூற்றெட்டோ, ஆயிரத்தெட்டோ பெயர் அடங்கிய புத்தகத்தை ஒவ்வொருவரையும் படிக்கச் செய்து, ஒருவர் இறைவர் திருமுன் நின்று மலர் இடச்செய்வதே ஆகும். இவ்வாறே இறைவருடைய திருப்பெயர்களைத் தேவார திருவாசகங்களின் ஏனைய திருமுறைகளிலிருந்து தேர்ந்தேடுத்து இலட்சக் கணக்கிலும், கோடிக் கணக்கிலும் தமிழ் அர்ச்சனை புரியலாமே. இப்படியே அந்தந்தத் தெய்வங்கட் குரிய பெயர்களுடன் போற்றி என்று இணைத்து அர்ச்சனை புரியலாமே. இத்தகைய தமிழ் அர்ச்சனை யைச் செய்வதில் கோயில் அர்ச்சகர்கள் பின்வாங் கார். நாம் அவர்களைத் தமிழில் அர்ச்சனை செய்யு மாறு வேண்டாதது நம் குறையே ஆகும். நாம் வேண்டினுல் அவர்கள் தம்மை இம் முறையில் அர்ச்சனை செய்ய முன்வருவர். ஆகவே அன்பர்கள் இனியாகிலும் தமிழால் அர்ச்சனை நடத்திக்கொள்ள முன் வருவார்களாக.

மற்றொரு முறையிலும் அர்ச்சனையை நடத்த லாம். கோவில்களில் எத்தனையோ சிவலிங்கங்கள் உண்டு. அவற்றின்முன் நாம் மலர்களைப் பறித்து வைத்துக் கொண்டு இறைவரின் திருப்பெயர்களாக அமைந்த தமிழ்ப் பெயர்களைச் சொல்லி ஒவ்வொரு மலர் இட்டும் வழிபடலாம்.

“நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப”

என்று கூறுபவர் நம் தொல்காப்பியர்.

அப்பரது தாண்டகத்தில் கீழ்வரும் தொடர் களைக் காண்க.

விற்றூண் ஒன்றில்லாத நல்கூர்ந்தான், கச்சிக் கம்பன், மாசதுரன், மயானத்து மைந்தன், பொற்றூண், குன்று ஒப்பான், கற்றூண், கணநாதன் எலும்பு ஆபரணன், எல்லாம் முடிப்பான், மூவுலகாயினான், பாசுபதன், கொன்றைக் கண்ணியான், நாரணன், நான்முகன், பூரணன், புண்ணியன், புராணன் புனல் ஏற்ற புனிதன், சாரணன், சந்திரன், கதிரோன், காரணன், தீயாடி, சிந்தை செய்வார்க்கு உற்றான், கல்லாடை மேற்கொண்ட கபாலி, எரிபவள வண்ணன், திரிபுரம் தீயிட்ட தீ ஆடீ, மலைமகள்தன் மணாளன், கல்லாலில் இருந்த கபாலி, நம்பன், ஞானப் பூங்கோதையான் பாகத்தான், ஞானத் தொளியான், கறைக்கண்டன், இறையவன், ஏழுலகும் ஆயினான், கடலும் மலையும் ஆயினான், மணிக்கண்டன், நஞ்சுண்டான், ஊழித்தீ அன்னான், நால் வேதத்தின் பண்பினான் என்பன.

இறைவரைக் குறிக்கும் மேலே காட்டிய தொடர்களிலும், சொல்லிலும் அப்பர் காண் என்னும் சொல்லை அமைத்துப் பாடியுள்ளனர். அவ்வாறே காண் என்று பாடியுள்ள தொடர்களைக் கூறி மலர் இட்டு அர்ச்சனை செய்யலாம். போற்றி என்று சேர்த்தாகிலும் அர்ச்சனை செய்யலாம்.

இத் தாண்டகம் திருக்காளத்திமீது பாடப்பட்டதாயினும், இதில் கச்சி ஏகம்பம், திருப்பாராய்த் துறை, திருப்பழனம், திருப்பைஞ்ஞீலி, திருஒற்றியூர், திருச்சோற்றுத்துறை, திருக்கயிலாயம், திருக்கானப்

---

நல்கூர்ந்தான், இறைவர் எலும்பும் பாம்பும் ஆபரணமாக அணிந்திருக்கிறார் ஆதலின் இப்படிக் கூறினார். இவ்வாறு கூறியதன் கருத்து, அவனது எளிய நிலையையும் கூறியவாறாம்) சாரணன் - எங்கும் நடமாடுபவன். ஞானப் பூங்கோதை, இத்தலத்து இறைவியாரின் திருப்பெயர்.

பேர், திருக்குடமூக்கு, திருக்கீழ்க்கோட்டம், திருமறைக் காடு, திருவண்ணுமலை ஆகிய தலங்கள் குறிக்கப் பட்டுள்ளன.

அப்பர் பெருமானுர் கண்களில் இத்தலத்துப் பெருமான், எப்போதும் தோன்றி அருள் செய்ததை ஒவ்வொரு பாட்டிலும் "காளத்தி காணப்பட்ட கண நாதன் காண் அவன்என் கண்ணுளானே" என்று பாடி இருப்பது கொண்டு தெளியலாம்.

இறைவர் அப்பருடைய தீவினைகளை ஒழித்ததை "இடிப்பான்காண் என் வினையை" என்றும், தம் மனத்தில் இருப்பதை "என் சிந்தையான்காண்" என்று கூறுதல் கொண்டு உணரலாம்.

இறைவரே எல்லாத் தேவர்களும் ஆவார் என் பதை 'நாரணன்காண் நான்முகன்காண்' என்பத ஞல் புலனுகிறது.

மன்மதனை அழித்ததையும், பிரமன் தலையைக் கிள்ளியதையும் அழகுற முறையே 'சுருவேந்தன் ஏவலத்தை நீரு நோக்கக் கற்ருன்' என்றும், 'முறை மையால் ஐம்புரியும் வழுவாவண்ணம் படித்தான் தலை அறுத்த பாசுபதன்' என்றும் பாடி இருப்பது காண்க.

இறைவர் பழமையினும் பழமையானவன் என்பதை 'எல்லாம்முன் தோன்ருமே தோன்றினுன்' என்று கூறுமாற்ருல் தெரியலாம்.

அடியார்கள் தொண்டை ஏற்பவன் என்பதை, 'குறையுடையான் குற்றேவல் ஏற்பான்காண்' என்று

---

சுரு வேந்தன் - மீன் கொடியையுடைய மன்மதன். ஏ - அம்பு. நீறு - சாம்பராக. ஐம்புரி - பஞ்சாதி என்னும் வேத உறுப்பு.

கூறியுள்ளனர். 'அடியார்கள் தொழுதேற்ற அருளு வான்' என்பதையும் அறிவித்துள்ளனர்.

இறைவன் அன்பர்களின் மனத்திலும், வாக்கி லும் இருப்பவன் என்றும் தன் அடியைப் பாடும் தொண்டர் கூட்டத்தில் இருப்பவன் என்றும், எல் லாப் பொருள்களிலும் நிறைந்தவன் என்றும் கூறி யுள்ளனர். அப்பர் பெருமான் தம் பதிகத்தின் ஈற்றுப் பாடலில் இராவணனைப்பற்றிக் குறிப்பிட்டுப் பாடுவது இயல்பு. ஆனால் இத் தாண்டகத்தில் அக் குறிப்பு இல்லை.

''நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே''

''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பால் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணு ளானே''

---

நாவாய் - கப்பல். புராணன் - பழமையோன். மனத் தகத்தான் - மனத்திலுள்ளவன். இமயவர் - தேவர். இனம்- கூட்டம். போது - மலர். பொருப்பு - மலை. கனம் - மேகம்.

"தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
திருஏகம் பத்தான்காண் தேன்ஆர்ந் துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத் தொளிஆ னான்காண்
வானப்பே ரூரும் அறிய ஓடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தியான் அவன்என் கண்ணு ளானே"

—திருத்தாண்டகம்.

திருக்காளத்தியைப் பற்றிச் சுந்தரர் பாடியுள்ள பதிகத்தின் வழி நாம் அறிவன :

இறைவரைப் பற்றிக் கூறும்போது அவர் செண்டு ஆடும் விடையன். கண்டார் காதலிக்கும் கணநாதன் என்றும். பொறுக்கும் தன்மையன், கருணையான், இடர்த் துணைவன் என்றும், என்குரு, மெய்யவன், திரு ஐயன் என்றும், ஆரா இன் அமுது என்றும் கூறப்பட்டுள்ளனர். இவ்வாறேயன்றி, மற்றும் பலவாறுக இறைவரை விளித்துள்ளார்.

இறைவர் தமக்குத் திருவருள் புரிந்த நிலையினைச் சுந்தரர், "செய்யவனாகியே வந்து இடரானவை தீர்த்தவனே" என்றும், "என்னுள் குடியாகக் கோயில் கொண்ட குழகன்" என்றும், ஒளியாய்வந்து என் உள்ளம் புகுதவல்ல எம்பெருமான்' என்றும், பாடுவதிலிருந்து சுந்தரர் உள்ளத்தில் இறைவர் குடிகொண்டிருந்தார் என்பது புலனாகிறது.

---

ஆர்ந்து - நிறைந்து. உக்க - சிந்த. மட்டித்து நின்றான் - எல்லா உலகத்தையும் அஞ்சாது ஒடுக்க வல்லவன்.

செண்டாடும் விடையான் - குதிரையைப் போன்று விரைவாகச் செல்லும் இரிடப வாகனத்தை யுடையவன்.

செய்யவனாகி - செம்மை நிறத்தையுடைய வேதியனாகி (அதாவது சுந்தரரை ஆட்கொள்ளவந்த பிராமணர் வடிவம்)

சுந்தரர் இப் பதிகத்தில் காளத்தி இறைவரைத் தவிர்த்து வேறு எந்தத் தெய்வத்தையும் போற்ற மாட்டேன் என்பதை ஒவ்வொரு பாட்டிலும் 'உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேன்' என்று பாடி இருத்தல் கொண்டு உணரலாம்.

சுந்தரர் தம் வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் நடந்துகொண்ட நிலையினையும் இப்பதிகத்தில் குறித்துள்ளனர். ஐந்தாவது பாட்டில் மாதர்களின் கண் வலையில் சிக்கிக் கிடந்து அலறியதையும், நன்மை அறியாது திரிந்ததையும் குறிப்பிடுகின்றனர். ஆறாவது பாட்டில் தாம் பொய்யவன் என்றும், நன்னெறி அறியாதவன் என்றும், ஏழாவது பாட்டில் 'கடியப்படத் தக்கவன், திருவடித் தாமரைகளை உணராதவன்' என்றும் குறிப்பிடுதல் காண்க.

இக் கருத்துகளை,

"செஞ்சேல் அன்ன கண்ணார்
திறத் தேஇடந் துற்றலறி
நஞ்சேன் நான் அடியேன்
நலம் ஒன் றறி யாமையினால்
துஞ்சேன் நான் ஒருகால்
தொழுதேன் திருக் காளத்தியாய்
அஞ்சா துன்னை அல்லால்
அறிந் தேத்த மாட்டேனே"

"பொய்யவ னாய்அடி யேன்
புகவே நெறி ஒன்றறியேன்
செய்யவ னாகி வந்திங்
கிடரான வை தீர்த்தவனே

---

சேல் அன்ன - சேல்மீனைப்போன்ற. நஞ்சேன் - நைந்து போனேன். துஞ்சேன்-மடிந்திராவனாகி. நெறி- நல்லவழி.

மெய்யவ னே திருவே
விளங்கும் திருக் காளத்திஎன்
ஐயநுன் தன்னை அல்லால்
அறிந் தேத்த மாட்டேனே''

''கடியேன் காதன் மையால்
கழல்போற்றி யாதன என்னுள்
குடியாக் கோயில் கொண்ட
குளிர்வார் சடை எம்குழகா''

என்னும் பாடல்களில் காண்க.

திருக்காளத்தி தேவர்களால் வணங்கப்படுவது என்பதை 'முடியால் வானவர்கள் முயங்கும் திருக் காளத்தி' என்று கூறியிருப்பதனுல் அறிக. இயற்கை எழிலை 'களிஆர் வண்டறையும் காளத்தி' என்றும், 'காரூறும் பொழில்சூழ் காளத்தி' என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். காளத்தியில் மாளிகைகள் நிறைந் திருந்தன என்பதை, 'கடைஆர் மாளிகைசூழ் காளத்தி' என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

ஈற்றுப் பாடலில் செந்தமிழ்ப் பாடலாம் இப் பதிகத்தைப் பாடுவார், 'விண்ணுலகம் பெறுவர்' என்பதும், 'தப்புத் தவறுகள் எதுவும் பொருந்தப் பெருர்' என்பதும், சுந்தரர் 'அணிநாவல் ஆரூரர்' என்பதும் சொல்லப்பட்டுள்ளன.

---

கழல்போது-திருவடிமலர். களிஆர்-மகிழ்ச்சி நிறைந்த. அறையும்-ஒலிக்கும். கார்-மேகம். கடைஆர் - வாயில்கள் நிறைந்த.

"மறிசேர் கையினனே மதமா உரி போர்த் தவனே
குறியே என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின் னடியார் நினைக்கும் திருக் காளத்தியுள்
அறிவே உன்னை அல்லால் அறிந் தேத்த மாட்டேனே"

—ஏழாம் திருமுறை.

இத்தலத்து முருகன்மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் மூன்று. அவற்றுள் ஒன்று,

சிரத்தா னத்திற் பணியாதே-
செகத்தோர் பற்றைக் குறியாதே;
வருத்தா மற்றொருப் பிலதான-
மலர்த்தாள் வைத்தெந் தனையாள்வாய்;
நிருத்தா கர்த்தத் துவநேசா-
நினைத்தார் சித்தத் துறைவோனே;
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே-
திருக்கா ளத்திப் பெருமாளே.

---

மறி - மான். மதமா - யானை. உரி - தோல். செகத்தோர் - உலகத்திலுள்ளவர்கள். உறைவோனே - வாழ்பவனே. சிரத்தானத்தில் - தலைமேல். முத்தர் - ஜீவன் முத்தர்.

# 20. திருஒற்றியூர்

இத் தலத்தின் பெயர்க்குரிய காரணம் மிக வியத்தற்குரியதாகும். மாந்தாதா என்னும் சூரிய வம்சத்து மன்னன் தான் செய்த சிவபுண்ணிய வசத்தால் ஆயுள் நீடிக்கப் பெற்றான். அதனால் மூப்பு மிக்குத் துன்புறலானான். அந்நிலையில் பணக் குறைவால் கோயில்களின் படித்தரத்தைக் குறைக்குமாறு ஓலை எழுதினான். அங்ஙனம் தினசரிக் கட்டளை பெற்ற தலங்களுள் திருஓற்றியூரும் ஒன்று அவ்வோலையில் ஒற்றித் தியாகேசன் திருவருளால் "ஒற்றியூர் நீங்கலாக" என்னும் தொடர் கட்டளை வகுத்த அரசனாலும், எழுதியவர்களாலும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அமைந்துவிட்டன. இவ்வாறு ஓலையில் பதிவு ஆன காரணத்தால்—அதாவது திருஓற்றியூர் மட்டும் ஒற்றிவைக்கப் பட்டமையினால், இத்தலம் ஒற்றியூர் என்னும் பெயரைப் பெற்றது. திரு என்பது அடைமொழியாகும். இங்ஙனம் இறைவர், மாந்தாதா எழுதுவித்த ஓலையில் உள்ள எழுத்துகளை அறிந்து மாற்றம் செய்ததால் திருஒற்றியூர்ப் பெருமான் எழுத்தறியும் பெருமான் என்று அழைக்கப்பட்டனர்.

இவ்வரலாற்றையே சிறிது மாற்றியும் கூறுவர். அரசன் தனது ஆட்சிக்குட்பட்ட ஊர்கட்கு இந்த அளவுக்கு வரிப்பணம் கட்டவேண்டும் என்று எழுதிச் சுற்றறிக்கையாக அனுப்பினான். அப்படி வரி விதிக்கப்பட்ட ஊர்களில் திருஒற்றியூரும் ஒன்றாகும். ஆனால் இறைவரின் திருவருளால் அச் சுற்றறிக்கை ஓலையில் எழுதப்பட்ட வரிகள் பிளந்து அவற்றின் இடையே "இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாக" என்று எழுதப்பட்டுவிட்டது. இவ்வாறு எழுதப்பட்டதை அரசனே அவ்வாணையை எழுதிய

எழுத்தாளர்களோ அறிந்திலர். ஆகவே, வரி கட்டுதல் வேண்டும் என்னும் விதியிலிருந்து இத் தலம் ஒற்றி (விலக்கி) வைக்கப்பட்டமையின், இஃது திருஒற்றியூர் என்னும் பெயர் பெற்றதாகவும் கூறுவர். இந்த அற்புத நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமானுர், "ஏட்டுவரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்ட மலரும் திருநுதலார்" என்று எடுத்து மொழிந் துள்ளனர். கடல் ஒற்றிச் சென்றதால் இப் பெயர் பெற்றது என்பாரும் உளர்.

இறைவர் படம்பக்கநாதர் என்று அழைக்கப் பெறுவர். வாசுகி என்னும் பாம்பு உபமன்யூ முனிவரிடம் சிவதீட்சை பெற்று ஒற்றியூர் இறைவரை வழிபட்டது. அப் பாம்பை இறைவர் தம் திருமேனி யில் ஐக்யம் செய்துகொண்டனர். இதுபோதும் திருஒற்றியூர் மூல உருவில் பாம்பு வடிவம் காணப் படுதலைக் கண்டு களிக்கலாம்.

திருவள்ளுவர்க்கு மாணவராக அமையும்பேறு பெற்ற ஏலேலசிங்கச் செட்டியார் அரசனுக்குச் செலுத்த வேண்டிய கப்பப் பணம் இல்லாமல் துன்பப் பட்டு ஒற்றியூர்ப் பரமனிடம் முறையிட அவர் மாணிக்கம் ஒன்றை ஈந்து கப்பம் கட்டுமாறு செய்தனர். அங்ஙனம் திருவருள் புரிந்தமையால் இங்குள்ள தியாகர் மாணிக்கத் தியாகர் என்னும் பெயரைப் பெற்றனர்.

மேலே கூறிய பெயர்களே அன்றி ஆதிபுரீஸ் வரர், புற்றிடங்கொண்டார் என்னும் பெயர்களை யும் யுடையவர். இறைவியாரின் பெயர்கள் வடிவுடை அம்மன், திரிபுரசுந்தரி என்பன. இறைவியாரைப் பூசிப்பவர்கள் ஆதிசைவ குருக்கள் அல்லர். மலை யாளப் பிராம்மணர்களே பூசைசெய்து வருகின்றனர். இறைவர் புற்றிடங் கொண்டவர் ஆதலின் அவர்மீது கவசம் என்றும் இடப்பட்டிருக்கும். அக் கவசம்

ஒவ்வொரு கார்த்திகை மாதம் பௌர்ணமி தினத்தன்றும், அடுத்த இரண்டு நாட்களும் எடுக்கப்படும். அதுபோது இறைவர் புற்றுக இருக்கும் நிலையை நேரில் கண்டு களிக்கலாம். கவசம் சாத்தப்பட்டிருக்கும்போது புற்றின் ஒரு பகுதியை மட்டும் பார்க்கலாம்.

இத் தலத்து விருட்சம் மகிழமரம். இம் மரத்தடியில்தான் சுந்தரர் சங்கிலியாரை மணக்கும்போது, திருஒற்றியூர் எல்லையை விட்டுப் பிரிவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தனர். இவ்விழாவே மகிழடி சேவை என மாசி மாதத்தில் விசேடமாக நடத்தப்படுகிறது. இங்குள்ள தீர்த்தம் பிரம்ம தீர்த்தம், அலைவாய் தீர்த்தம். அலைவாய் என்பது கடல். கடல் இத்தலத்திங்கு அருகில் இருப்பதால் கடலும் தீர்த்தமாயிற்று. "உகைக்கும் தண்கடல் ஓதம் வந்துலவும் ஒற்றியூர்" என்று சுந்தரர் பாடுதல் காண்க.

இத் தலத்தில் மாந்தாதா, தொண்டைமான், ரோமச முனிவர், நந்திதேவர், திருமால், பிரமதேவர், வால்மீகி முனிவர், சந்திரன், வாசுகி, சேடன், லவன் பஞ்சதருக்கள் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். கோவிலுக்குள் மாசிமாதப் பெருவிழாவில் ஒன்பதாம் நாள் திருக்கல்யாண உற்சவத்தில் அகத்தியருக்குக் காட்சி தந்த விழா சிறப்பாக நடக்கும். இங்குள்ள யோகதட்சண மூர்த்தி வடிவும், ஏகபாத மூர்த்தி வடிவும் காணத் தக்கன.

பதும கற்பத்தில் பிரளய காலத்தில் தனக்குத் திருவருள் புரியப் பிரமன் தவம் செய்தான். அவனது யோகாக்கினி மத்தியில் இறைவர் விசித்திர ரூபமான பலகை வடிவில் தோன்றி, அவ்வக்கினியே கோவிலாகக் கொண்டனர். அங்ஙனம் கொண்டு பிரளய வெள்ளத்தை ஒற்றிப்போகும்படி திருவருள்

புரிந்தனர். இக் காரணம்பற்றித் திருஒற்றியூர் என்னும் பெயரை இத்தலம் பெற்றது என்று கூறுதலும் உண்டு.

இத் தலத்தில் நடன தரிசனம் விசேடம். எக்காரணம் கொண்டும் தியாகர் பகலில் புறப்படார். இங்குள்ள தியாகர் மாசி மாதப் பெருவிழாவில் ஆரும்நாள் இரவு நடன தரிசனம் தருகின்ருர். இதுவே ஆரும்பவனி எனப்படும். இது சிறப்பான திருவிழா. ஐந்தாம் பவனியும் விசேடமானது. இந் நடன விழா நந்திதேவர் பொருட்டு நிகழ்வது. நந்திதேவர் மகா கைலாயத்தில் சந்தியாகாலத்தில் செய்யும் பிரதோஷ நடனத்தைக் கண்டுகளித்தவர். அஃது ஆடும் நடனம். அமர்ந்து இருந்து அசையும் நடனத்தை இங்கு (திருஒற்றியூரில்) செய்ய வேண்டும் என்று இறைவரிடம் விண்ணப்பித்துக் கொள்ள இறைவர் இந் நடனத்தைப் புரிகிருர். இதனை, விஷ்ணு. பிரம்மா, ரோசமுனிவர் ஆகியோரும் கண்டு களிப்பர்.

கோயிலுக்குள் அநேக இலிங்கங்கள் உள்ளன. அஷ்டோத்திர லிங்கம், சகஸ்ர லிங்கம், தாரா லிங்கம் முதலியன பலவாம். கோயில் பெரியது. கோயிலுக்கு முன்னுள்ள கோபுரம் மாங்காடு எல்லப்பச் செட்டியாரால் கட்டப்பட்டுளது.

புற்றிடங் கொண்டார் சந்நிதிக்கு வடக்கே ஆதிபுரீஸ்வரர், (ஆதிலிங்கேஸ்வரர்) ஆலயம் ஒன்று உண்டு. புதிதாகக் கட்டப்பட்டது. அழகிய வேலைப்பாடுடன் கூடியது. பல இலட்ச ரூபாய் செலவிட்டு இதனைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தவர், சென்னை, சூளை, இராமசாமிப்பிள்ளை என்பவர். இங்குச் சுந்தரரும் சங்கிலி நாச்சியாரும் மணக் கோலத்துடன் காட்சி அளிக்கும் உருவங்களைக் கண்டு வணங்கலாம்.

திருஒற்றியூர் எழுத்தறியும் பெருமான் சந்நிதியின் உட்பிராகாரத்தில் ஆதிசங்கரர் உருவமும், லகுலீசர் உருவமும் உள்ளன. இக் கோவிலின் கர்ப்பக் கிரகம் கஜப்பிருஷ்ட (யானையின் பிட்டம் போன்று அரை வட்டமானது) வடிவில் அமைந்தது. இதற்குமேல் உள்ள விமானம் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது

திருஒற்றியூரில் பல சத்திரங்கள் உள. ராஜேந்திர சோழன் மடம், குலோத்துங்க சோழன் மடம் இருந்தனவாகக் கருதப்படுகிறது. மண்ணை கொண்ட சோழன் மண்டபம், ராஜராஜன் மண்டபம், ராஜேந்திர சோழன் மண்டபம் எனப் பல மண்டபங்களும் இருந்திருக்கின்றன.

கோயிலைச் சுற்றி வரும்போது வட்டபலி நாச்சியார் என்னும் துர்க்கை கோவில் உளது. இச் சந்நிதிக்கு முன்பு ஒரு கிணறு போன்ற வடிவம் காணப்படுகிறது. அக் கிணறு ஒரு வட்டமான பாறையினால் மூடப்பட்டிருக்கிறது. இவ்வம்மையாருக்குச் சித்திரை மாதம் பதினெட்டு நாள் திருவிழா நடக்கிறது. இவ்வம்மையார்க்கு உயிர்ப்பலி இடுதல் உண்டு. இவ்வாறு உயிர்ப்பலி இடுவதால், படம்பக்க நாதருக்குச் சம்புரோட்சணம் செய்யப்படுகிறது. சங்கராசாரியார் இந்தத் துர்க்காதேவியின் உக்கிரத்தை அடக்கி, அவள் சந்நிதிக்கு வெளியே இருக்கும் கிணற்றில் இறக்கிப் பாறையினால் மூடினார் என்று கூறப்படுகிறது.

திலீப மகராசனுக்கும் தியாகர் நடன தரிசனம் தந்துள்ளனர். நடராசர் சந்நிதிக்குப் பின் திருமால் சிலை இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அஃது இதுபோது மறைக்கப்பட்டுள்ளது. கோவிலுக்குள் அமைந்துள்ள சிறு ஆலயங்கள் அரீஞ்சீஸ்வரமுடையார், கம்பீஸ்வரமுடையார், விடேல்விடுகீஸ்

வரர் ஆலயங்கள் என்பன. சந்நிதி வீதியில் அகத்தீஸ்வரர் கோவிலும் உண்டு. இங்குள்ள இறைவர் அகத்தீஸ்வரர். தேவியார் அகிலாண்டேஸ்வரி. இக் கோவிலுக்குள் இரண்டு சுரங்க அறைகள் இருப்பனவாகக் கூறுவர்.

இத் தலம் திருஒற்றியூர் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே அரை கல் தொலைவில் உள்ளது. சென்னைத் தங்கசாலையிலிருந்து பஸ் வண்டிகள் மிகுதியும் போகின்றன. சென்னையிலிருந்து வடக்கே ஐந்து கல் தொலைவில் இத் தலம் உளது.

திருவொற்றியூர் ஆலயத்திற்குக் கிழக்கே கடற்கரையில் பட்டினத்தார் கோவிலும், இராமலிங்க சுவாமிகள் மடமும் உள்ளன.

திருஒற்றியூர்க் கோவில் கல்வெட்டுகளினால் நாம் அறிவன:

படம்பக்கநாதர் கோவில் வீர ராஜேந்திரனால் கட்டப்பட்டது. இங்கு வியாகரண மண்டபம் ஒன்று இருந்து இலக்கணப் பாடம் நடத்தப்பட்டது. இதனால் இவ்வூர் இறைவர் வியாக்கர்ணதானப் பெருமான் எனனும் பெயரையும் பெற்றனர். குலோத்துங்கன் இங்கு நடந்த ஆனி விழாவைத் தரிசித்துள்ளான். அவன் இராசராசன் மண்டபத்தில் தங்கி இருந்தனன். இவ்வூர்த் தியாகர் கருணை விடங்கர் என்னும் பெயரையும் பெற்றிருந்தனர். இங்குச் சூரியனுக்கும் ஒரு தனிக்கோவில் இருந்தது. இங்குள்ள பிள்ளையார் அனுக்குப் பிள்ளையார் என அழைக்கப்பட்டனர். வாக்குவாதம் நடத்த வாக்கணிக்கும் மண்டபம் ஒன்று இருந்ததையும் அறிகிறோம். இக் கோவிலில் பணிபுரியும் ஆட்கள் நூற்றுமுப்பத்தொன்பது பேர்கள் இருந்தனர். ஆதொண்டைச் சக்கரவர்த்தி புழல்கோட்டத்தை வென்ற

போது, அங்கிருந்து இரண்டு பவழத் தூண்களையும், இரண்டு வெண்கலத் தூண்களையும் கொணர்ந்து கோயிலுக்குத் தானமாக அளித்தனன். ஆனால் அவை இதுபோது இல்லை. அவற்றைக் கடல் கொண்டுவிட்டது என்பர்.

இறைவர் திருப்பெயர்கள் மகாதேவபட்டர், திருஒற்றியூர் மகாதேவர், ஒற்றியூர் ஆழ்வார், திருஒற்றியூர் உடைய நாயனார், படம்பக்க நாயக தேவர் என்று அறிய வருகின்றன.

இத் தலத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவும், ஆனித் திருவிழாவும், மாசிப் பெருவிழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இதுபோது மாசி மாதம் நடைபெறும் மகிழ மரத்தடி சேவை கல்வெட்டில் பங்குனிமாதம் நடத்தப்பட்ட விழாவில் ஆறும் நாள் நடத்தப்பட்டதாக அறியவருகின்றது. அவ் விழாவில் படம்பக்கநாதரை ஆண்டு எழுந்தருளப் பண்ணிச் சுந்தரர் புராணம் வாசிக்கப்பட்டது.

குலோத்துங்கசோழ மண்டபத்தில் நாள்தோறும் ஐம்பது அடியார்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. இதற்காக முதல் குலோத்துங்கன் பனப்பாக்கம் என்னும் ஊரை எழுத்தறிவார் நல்லூர் என்று பெயரிட்டு, அதில் ஒரு பகுதியை நிவந்தமாக அளித்தனன்.

திருஒற்றியூர் வியாக்கரணதான வியாக்கியான மண்டபம் சித்தரசன் பொருட்டுத் துர்க்கையாண்டி நாயகனால் கட்டப்பட்டது. மண்ணைக் கொண்ட சோழன் மண்டபம் கோயில் சம்பந்தமான வழக்கு விசாரிக்கப் பயன் பட்டது.

சதுரானன பண்டிதர்க்கு ஒரு மடம் இருந்தது. அதற்குத் திருமயான மடம் என்றும் பெயரும் உண்டு. இராஜேந்திரமடம் ஆரியதேசத்து மேகலா

புரத்துப் பிராமண அம்மையாரால் கட்டப்பட்டது. அங்கராயன் மடம் ஒன்று இருந்ததாகவும் அறிகிறோம். கோயிலின் வெளிப் பிராகாரத்து மதிலைக் கட்டியவர் சேதிராய தேவர்.

இங்கு அளக்கும் கருவியின் பெயர் அருமொழித் தேவன் நாழி எனப்பட்டது. இதுகொண்டு நெய், நெல் முதலியன அளக்கப்பட்டன.

இறைவர் திருப்பெயரான படம்பக்க நாதன் என்பது கோயில் நாயகம் செய்துவந்த ஒருவனுக்குப் படம்பக்க நாயகபட்டன் என்று இடப்பட்டது. திரு புவன சுந்தரத் தெரு மன்றுடிகளில் ஒருவனுக்குப் படம்பக்கன் என்று இடப்பட்டது. எழுத்தறிவார் நல்லூர் என்னும் பெயர் பனம்பாக்கத்திற்கு வைக்கப் பட்டது. மணலி என்னும் ஊரினர் ஒற்றியூருக்கு உப்புத் தட்டுத் தானம் செய்தனர். அதற்குப் படம் பக்க நாயகப் பேரளம் என்னும் பெயர் சூட்டப் பட்டது.

கிரந்த கல்வெட்டுகள் திருஒற்றியூரை ஆதிபுரி என்றும், இறைவரை ஆதிபுரீஸ்வரர் என்றும் கூறு கின்றன.

இத் தலத்தில் கைலாயத்திலிருந்துப் பூலோகத் தில் வந்து பிறந்த அநிந்திதை, கமலினி என்னும் இருவருள் அநிந்திதை என்னும் அம்மையார், ஞாயிறு கிழார்க்குத் திருமகளாராகத் தோன்றி யருளி ஒற்றியூர்ப் பெருமானுக்கு மலர் பறித்து மாலையாகக் கட்டி அணியும் தொண்டினை மேற்கொண்டிருந் தனர்.

இவ்வம்மையாரை இத்தலத்து இறைவரைக் கண்டு வணங்க வந்த சுந்தரர் பார்த்து அவரை மணக்க விரும்பினர். அவ்விருப்பத்தை நிறைவேற்றி வைக்க இறைவரிடம் விண்ணப்பித்துக் கொண் டனர். அவ்வாறே செய்துவைக்க இறைவர்

திருவுளம்பற்றிச் சங்கிலியாருடைய கனவில் சுந்தரர் பெருமைகளைக் கூறி மணக்குமாறு தூண்டினார். அவ்வம்மையார் சுந்தரர் தம்மைவிட்டுப் பிரிவதில்லை என்று மகிழமரத்தடியில் சத்தியம் செய்வாராயின் மணப்பதாகக்கூற, அப்படியே சுந்தரர் சத்தியம் செய்தனர். ஆனால் சுந்தரர் தம் வாக்கைத் தவறித் திருஒற்றியூர் எல்லையைத் தாண்டிக் காலடி வைத்ததும், (சுந்தரர் திருஒற்றியூரைத் தாண்டிக் கால் வைத்த இடமே இதுபோது, காலடிப்பேட்டை என வழங்கப் பட்டு வருகின்றது. இங்கு ஒரு விஷ்ணு ஆலயமும் உளது. வைகாசி கருடசேவை விசேடமானது) கண்பார்வை மங்கியது. உடனே சுந்தரர் திரும்பி வந்து திருஒற்றியூர்த் தியாகர் முன்நின்று உருகிப் பாடினார்.

சுந்தரர் இங்குப் பாடிய பதிகத்தில் தம் கண் இழந்தது குறித்துப் பாடி இருப்பது கல்லான உள்ளத்தையும் கரைக்கவல்லதாகும். அவ்வாறு அவர் பாடி வருந்தியதைக் கீழ்வரும் வரிகளில் காண்க.

"ஒழுக்கஎன் கணுக்கொரு மருந்துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே"

"மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வதே கணக்குவழக் காகில்
ஊன்று கோல்எனக் காவதொன் றருளாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே"

"கழித் தலைப்பட்ட நாயதுபோல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீஅரு ளாயின செய்யாய்
ஒற்றி ஊர்எனும் ஊர்உறை வானே"

"உற்ற நோய்உறுபிணி தவிர்த் தருளாய்
ஒற்றி ஊர்எனும் ஊர்உறை வானே"

---

கழித்தலை - கோவில் கட்டிவைக்கப்பட்ட, உறுபிணி - உள்ளநோய்.

சுந்தரர் தமது கண் பார்வை இழந்து வருந்தும் வருத்தத்தை ஒரு முழுப் பாட்டில் தெள்ளத் தெளியப் பாடிக் கசிந்து உருகி உள்ளனர். அப் பாடல்,

''மகத்தில் புக்கதோர் சனிஎனக் காளுய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்தில் பெண்டுகள் நான்ஒன்று சொன்ஞல்
அழையேல் போகுரு டாஎனத் தரியேன்
முகத்தில் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்க ணுமுறை யோமறை யோதீ
உகைக்கும் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே''

என்பது.

இத் தலத்தில் சக்கரப்பாடி என்னும் தெருவில், வாணியர் குலத்தில் பிறந்த சிவபக்தர் இருந்தார். அவர் பெயர் கலிய நாயஞர் என்பது. அவர் கோயி லுக்கு விளக்கு ஏற்றும் தொண்டில் ஈடுபட்டவர். எண்ணெய் விற்றுத் தேடிய பொருள் நாளுக்கு நாள் குறைந்தது. ஆஞல், நாயஞர் தம் திருத்தொண்டை முட்டு இன்றி நடத்தி வந்தனர். கூலிக்கு வேலை செய்து எண்ணெய் விற்றும் தொண்டு செய்தனர். எண்ணெய் கொடுப்பதையும் அவர்கள் மரபினர் நிறுத்திவிட்டனர்.

தம் தொண்டுக்குத் தடை வராதிருக்கத் தம் மனைவியாரை விற்க விலை கூறிஞர். அவ்வம்மை யாரை யாரும் வாங்குவார் இல்லை. ஆகவே, எண்

---

மகத்தில் புக்கதோர் சனி - சிம்மராசியில் மக நட்சத்திரத்தில் புகுந்த சனி, அகத்தில் - வீட்டில், உகைக்கும் - தள்ளும். ஓதம் - அலையின் ஈரம். மகத்தில் சனி புகுந்தால் நாட்டுக்குக் கெடுதி. அந்த ராசியில் பிறந்த சாதகனுக்கும் துன்பம் மிகுதி.

ணெய் வாங்கப் பொருள் இல்லை என்றாலும், மனம் தளராமல் கோவிலுக்குள் சென்றார். அகல்களுக்கு வத்தி இட்டனர். எண்ணெய்க்குப் பதிலாகத் தம்மை அறுத்து அதன் வழியே வரும் இரத்தத்தை ஊற்றி விளக்கெரிக்கக் கத்திகொண்டு அறுத்துக் கொண்டனர். இந்நிலையில் இறைவர் அவர் முன்தோன்றிக் காட்சி தந்தனர். அறுப்புண்ட இடமும் மறைந்தது. குருதியும் நின்றது. இறைவர் அவருக்குத் திருவருள் செய்தனர்.

பட்டினத்தார் தமக்கு முத்தி தரும் தலம் எது என்று இறைவரைக் கேட்டபோது, அவருக்கு ஒரு பேய்க் கரும்பைத் தந்து இக் கரும்பு எத்தலத்தில் இனிக்கிறதோ, அத்தலமே உனக்கு முத்திதரும் தலம் என்று திருவருள் புரிந்தனர். அவ்வாறே பட்டினத்தடிகள் பேய்க்கரும்புடன் இத் தலத்திற்கு வந்து அக் கரும்பைச் சுவைத்தபோது அஃது இனிக்கக் கண்டனர். இதனை அவரே,

"கண்டம் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு"

என்று பாடி இருக்கின்றனர்.

இத்தலம் அவருக்குச் சிவமயமாகக் காட்சி அளித்ததையும்,

"வாவிஎலாம் தீர்த்தம் மணல்எலாம் வெண்ணீறு
காவணங்கள் எல்லாம் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருஒற்றி யூர்"

என்று பாடி அறிவித்துள்ளனர்.

---

கண்டம் - கழுத்து. கரும்பு - கரும்புபோல் இனிக்கும் சிவபெருமான். வாவி - குளம். காவணம் - சோலைகள், தோப்பு, மண்டபம்.

இராமலிங்கசுவாமிகள் பசியினால் வருந்தி உறங்கிக்கொண்டிருக்கும்போது வடிவுடை அம்மையார் அவரை எழுப்பிச் சோறு அளித்துத் திருவருள் புரிந்தனர் என்பது தெரிகிறது. இதனை அவரே,

"அன்றொருநாள் நப்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய்காண்"

என்று பாடி அறிவித்துள்ளனர்.

இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருநேரிசைப் பதிகங்கள் இரண்டும், திருவிருத்தப் பதிகம் ஒன்றும், திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும், திருத்தாண்டகம் ஒன்றும் ஆக ஐந்தும், சுந்தரர் பாடிய பதிகங்கள் இரண்டும் சேர்ந்து எட்டுப் பதிகங்கள் உள்ளன.

திருஞானசம்பந்தர் பதிகம் தரவு கொச்சகம். இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. பண் காந்தாரப் பஞ்சமம். இதனை இக்காலத்தில் கேதார கௌளத்தில் பாடுகின்றனர். திருநேரிசைப் பற்றியும், திருவிருத்தம் பற்றியும், திருக்குறுந்தொகை பற்றியும், திருத்தாண்டகம் பற்றியும் முன்பே கூறப்பட்டன. ஆண்டுக் காண்க. சுந்தரரின் முதல் பதிகம் எண்சீர் விருத்தம். ஓர் அடியில் எட்டுச் சீர்கள் வருவது எண்சீர் விருத்தம். இதன் பண் தக்கேசி. இதனைக் காம்போதி என ஒருவாறு கூறுவர். இரண்டாவது பதிகம் கலிவிருத்தத்தால் ஆனது. இதன் பண் குறிஞ்சி. இதன் சாயல் அரிகாம்போதி போல இருக்கிறது என்பர்.

திருஞானசம்பந்தர் பதிகத்தில் இறைவர், "விண்ணும் தொழநின்றவன், ஊனம் இல்லி, அரன் ஆகிய ஆதிமூர்த்தி, பரவுவார் (போற்றுவார்)பாவம் எல்லாம் பறைத்து (ஓட்டி) ஆளும் பெம்மான், விலகினார் வெய்ய பாவம் விதியால் அருள்செய்து நல்லபலகினார்

(பாவத்தினின்றும் விலகியவர்கட்கு அருள் செய்பவன்) அலகினால் விசி நீர் கொண்டு அடிமேல் அலர் இட்டு முட்டாது உலகினார் ஏத்த நின்றான், கமையொடு (பொறுமை) நின்ற சீரான், பெற்றியால் பித்தன் ஒப்பான், திகழ் சேவடி சிந்தை செய்து பரவினார் பாவம் எல்லாம் பறைய (நீங்க) படர்பேர் ஒளியொடு ஒருவனாய் நின்ற பெம்மான்'' என்று புகழப் பட்டுள்ளார்.

இறைவர்க்கு உலகில் யாவரும் நன்றியுடனும், நன்மையுடனும் வாழ வேண்டும் என்னும் திரு உள்ளம் உண்டு என்பதை "நன்றியால் வாழ்வது உள்ளம் உலகுக்கு ஆரும் நன்மையாலே'' என்னும் வரியால் உணர்த்தி யிருப்பதைக் காணலாம்.

இப் பதிகத்துப் பத்தாவது பாடல் உபதேச முறையில் அமைந்துள்ளது. அப்பாடல்,

''தோகைஅம் பீலிகொள்வார் துவர்க்கூறைகள்
போர்த்துழல்வார்
ஆகமச் செல்வனாரை அலர்தூற்றுதல்
காரணமாக்
கூகை அம் மாக்கள்சொல்லைக் குறிக்கொள்ளன்மின்
ஏழுலகும்
ஓகைதந் தாளவல்லான் உறையும்இடம்
ஒற்றியூரே''

என்பது.

---

தோகை - மயில், பீலி - இறகு, துவர்க்கூறை - செவ்வாடை, அலர் தூற்றுதல் - பழிச்சொல் கூறுதல், கூகையம் மாக்கள் - கோட்டான்களைப் போன்றவர், (சமணர்) விலங்குத் தன்மை வாய்ந்த மக்கள், ஓகை - மகிழ்ச்சி, விண் - தேவர்கள், ஊனம் - குற்றம், பறைத்து - ஓட்டி, பரவினார் - போற்றி வழிபட்டவர்கள். பெற்றி - தன்மை. அலகினால் - தாளத்தோடு.

இப் பதிகத்தில் மொந்தை, தாளம், தகுணிச்சம் ஆகிய இசைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன. இப் பதிகத்தில் வரும் "கழலும் சிலம்பும் ஒலிப்ப" என்ற தொடர் அம்மை அப்பரது அருட்கோலத்தை நினைவூட்டுவதாகும்.

ஈற்றுப் பாடலில் தம்மைச் சீர்காழித் தலைவன் என்றும், தமிழ்ஞான சம்பந்தன் என்றும் தமது பாடல் பண்ணுடன் அமைத்துப் பாடப்பட்டது என்றும், இப் பதிகத்தைப் பாடிப் பரமனை வணங்க வல்லவர் விண்ணுலக இன்பம் அடைவர் என்றும், அவர்கள் முத்தி இன்பம் பெறுதல் எளிது என்றும் பாடியுள்ளனர். இக் கருத்துகளை,

"ஒண்பிறை மல்குசென்னி இறைவனுறை ஒற்றியூரை
சண்பையர் தம்தலைவன் தமிழ்ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பரவிப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேல்உலகம் விருப்பெய்துவர் வீடெளிதே"

எனும் பாடலில் காண்க.

"விளிதரும் நீரும்மண்ணும் விசும்போடனல் காலும்ஆகி
அளிதரு பேரருளான் அரனாகிய ஆதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய் கமழ்கொன்றை யினோடணிந்து
ஒளிதரு வெண்பிறையான் உறையும்இடம் ஒற்றியூரே"

—மூன்றும் திருமுறை.

திருநாவுக்கரசர் பாடியுள்ள முதல் திரு நேரிசை வாயிலாக நாம் அறிவன :

அப்பர் இத்தலத்தைப்பற்றிப் பாடிய பாடல்களில் நல்ல உபதேசங்களை அறிவித்துள்ளனர்,

மல்கு-விளங்கும். சண்பையர்தம் தலைவன் - சீர்காழித் தலைவர். பரவி - போற்றி. ஏத்த - புகழ. விளிதரும் - பிரளய காலத்தில் அழிக்கும். விசும்பு - ஆகாயம், கால் - காற்று. பண் - இசை, உறையும் - வாழும்.

"தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டில் வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை ஏற்றி நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே"

"பிணமுடை உடலுக் காகப் பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம் வேண்டா போக்கலாம் பொய்யை [நீக்க
நிணமுடை நெஞ்சின் உள்ளான் நினைக்குமா நினைக்கின் றார்க்கு
உணர்விறோ டிருப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே"

"பின்னுவார் சடையான் தன்னைப் பிதற்றிலாப் பேதை மார்கள்
துன்னுவார் நரகம் தன்னுள் தொல்வினை தீர வேண்டின்
மன்னுவான் மறைகள் ஓதி மனத்தினுள் விளக்கொன் றேற்றி
உன்னுவார் உள்ளத் துள்ளார் ஒற்றியூர் உடைய கோவே"
என்பன அவ்வுபதேசப் பாடல்கள்.

நெஞ்சிற்கு அறிவுறுத்திய பாடல்கள் இரண்டு உள்ளன. அவையே,

"முள்குவார் போகம் வேண்டின் முயற்றியால் இடர்கள் [வந்தால்
எள்குவார் எள்கி நின்றங் கிதுஒரு மாயம் என்பார்
பள்குவார் பத்தர் ஆகிப் பாடியும் ஆடி நின்றும்
உள்குவார் உள்ளத் துள்ளார் ஒற்றியூர் உடைய கோவே"

---

சலம் - சஞ்சலம், வானத்தை - அருள் வெளியை, வம்மின்கள் - வாருங்கள், உள் - மனத்தில், விரவ - கலக்க, ஊனத்தை - உடம்பை எடுப்பதாகிய பிறப்பை, புணர்வு - மாதர் புணர்ச்சி, வார் - நீண்ட, துன்னுவார் - சேர்வர், மன்னும்-நிலைத்த. வான்-பெருமை, உன்னுவார்-நினைப்பவர். முள்குவார் - தழுவும் மாதர்கள், முயற்றி - மனமே முயற்சி செய்கிறாய், இடர் - துன்பம். எள்குவார் - இகழ்வார். பள்குவார் - அச்சத்தில் ஆழ்பவர். உள்குவார் - நினைப்பவர்,

"வெறுத்துகப் புலன்கள் ஐந்தும் வேண்டிற்று வேண்டு [நெஞ்சே
மறுத்துக ஆர்வச் செற்றக் குரோதங்கள் ஆன மாயப்
பொறுத்துகப் புட்ப கத்தேர் உடையானை அடர ஊன்றி
ஒறுத்துகந் தருள்கள் செய்தார் ஒற்றியூர் உடைய கோவே"

என்பன.

அப்பர் பெருமான் இறைவர் திருவடியைப் பெறுதற்குரிய வழியினைக் கூறுகையில்,

"வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீ தன்தன் பாதம்
மெள்ளத்தான் அடைய வேண்டின் மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார் காயத்துக் கலந்து நின்று
உள்ளத்துள் ஒளியும் ஆகும் ஒற்றியூர் உடைய கோவே"

என்று பாடியுள்ளனர். சிவஞான ஒளியால் கள்ளத்தை நீக்கினால், இறைவரின் திருவடிகளை அடையலாம் என்பது இதன் கருத்து.

இறைவர் நம் உள்ளத்தில் வந்து பொருந்துதற்குரிய வழிவகைகளையும் அப்பர்,

---

உக - அழிய, புலன்கள் ஐந்து - உடம்பு, வாய், கண், மூக்கு, காது ஆகியவை, வேண்டிற்று - விரும்ப வேண்டிய இறை அன்பை, மறுத்துஉக - ஐம்புலன் வேட்கையை மறுத்து ஒழிய, ஆர்வம் - ஆசை, செற்றம்- கோபம், குரோதங்கள் - வெறுப்பு உணர்ச்சிகள், பொறுத்து- திரு ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து, புட்பகத் தேருடையான் - இராவணன், அடர - அழுந்த, ஒறுத்து - தண்டித்து, உகந்து - அவன் இசை கேட்டு மகிழ்ந்து, காயத்து - உடம்பில்,

"வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா வானவர் இறைவன் [நின்று
புசிப்பதோர் பொள்ளல் ஆக்கை அதனொடும் புணர்வு [வேண்டில்
அசிர்ப்பெனும் அருந்த வத்தால் ஆன்மாவின் இடம்அ தாகி
உசிர்ப்பெனும் உணர்வும் உள்ளார் ஒற்றியூர் உடைய கோவே"

என்று அறிவிக்கின்றார்.

இறைவர் தம்மை எப்போதும் தம் திருப்பெயர் கூறித் திருவடி வணங்குபவர்கட்கு அருள் செய்யும் முறையினை நமக்கு அறிவிக்கும் முறையில்,

"காமத்துள் அழுந்தி நின்று கண்டரால் ஒறுப்புண் ணாதே
சாமத்து வேதம் ஆகி நின்றதோர் சயம்பு தன்னை
ஏமத்தும் இடைஇ ராவும் ஏகாந்தம் இயம்பு வார்க்கு
ஓமத்துள் ஒளிய தாகும் ஒற்றியூர் உடைய கோவே"

"சமையம்மேல் ஆறும் ஆகித் தான்ஒரு சயம்பு வாகி
இமையவர் பரவி ஏத்த இனிதின்அங் கிருந்த ஈசன்
கமையினை உடையர் ஆகிக் கழல்அடி பரவு வார்க்கு
உமைஒரு பாகர் போலும் ஒற்றியூர் உடைய கோவே"

என்று அறிவித்துள்ளனர்.

---

வசிப்பு - வசித்தல், வானவர் இறைவன் - தேவாதி தேவனை சிவபெருமான், புசிப்பது - இன்பங்களை அனுபவிப்பது, பொள்ளல் - உடலில் உள்ள ஒன்பது சந்துகள், யாக்கை - சரீரம், புணர்வு - வந்து சேர்தலை, அசிர்ப்பு - கண்ணீர்ப் பெருக்கம், உசிர்ப்பு - உயிர்ப்பு (மூச்சு) சயம்பு - சுயம்பு மூர்த்தியாம் தான்தோன்றித் தம்பிரான், ஏமத்தும் - பகற் போதும், ஏகாந்தம் ஒரு முடிவுடன், ஓமத்துள் - யாகத்தில், சமயங்கள் - புறச்சமயம், அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்கள் என்பன. அவை ஒவ்வொன்றும் ஆறு உட்பிரிவினை உடையன. பரவி - போற்றி, கமை - பொறுமை.

திருநாவுக்கரசர் இறைவரை எள்ளி நகையாடும் முறையிலும் ஒரு பாட்டைப்பாடி அமைத்துள்ளனர். அதாவது,

"ஒருத்திதன் தலைச்சென் றாளைக் கரந்திட்டான் உலகம் ஏத்த
ஒருத்திக்கு நல்லன் ஆகி மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்விலல் ஐயம் உண்ணி
ஒருத்திக்கும் நல்லன் அல்லன் ஒற்றியூர் உடைய கோவே"

என்பது. இது நகைச் சுவைக்கு ஏற்ற பாட்டு. இவ்வாறு தோத்திர நூல்களிலும் நகைச்சுவை இருக்க, இதனை அறியாதார் தமிழில் நகைச்சுவை இல்லை என்பார். அவர்தம் மதியினை என் என்பது?

அப்பரது இரண்டாவது திருநேரிசையில் இரண்டு பாடல்களே உள. இரண்டும் நாம் படித்து இன்புறத் தக்கவை. அவை,

"ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைப் போலப் பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூர் உடைய கோவே"

"மனம்எனும் தோணி பற்றி மதிஎனும் கோலை ஊன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது
மனன்எனும் பாறை தாக்கி மறியும்போ தறிய ஒண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே"

என்பன.

---

ஒருத்தி - கங்கை, கரந்திட்டான் - மறைத்திட்டான், இரண்டாவது ஒருத்தி - உமை, ஐயம் - பிச்சை, உண்ணி - உண்பவன். கூட்டை - உடம்பை, ஓம்பினேன் - பாதுகாத்தேன், மூழை - அகப்பை, தேரை - தவளை, உய்ய - பிழைக்க, தோணி - படகு, மதி - அறிவு, சினம் - கோபம், செறி - நீர் நிறைந்த, மனன் - மன்மதன், மறியும்போது - கீழ் மேலாகக் கவிழ்ந்தபோது, உனும் - நினைக்கும்.

இரண்டாவது பாட்டு முற்று உருவக அணிக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. மனம் படகாகவும், அறிவு நீரைத் தள்ளும் கோலாகவும், கோபம் சரக்காகவும், பாச பந்தங்கள் கடலாகவும், மன்மதன் பாறையாகவும் உருவகம் செய்யப்பட்டிருப்பதைக் காண்க.

அப்பரது திருவிருத்தப் பதிகத்தில் திருஒற்றியூர்,

"அலைகொள் முந்நீர் மல்லல் திரைச்சங்கம் நித்திலம்
கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றி ஊர்"

"வாரிகுன்ரு, ஆலைக் கரும்பொடு செந்நெல் கழனி
சோலைத் திருஒற்றியூர்" [அருகணைந்த

என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இறைவரை நோக்கி எள்ளி நகையாடும் முறையில் அப்பர் வினவுவது படித்து இன்புறுதற்குரியது. அது,

"சொல்லக் கருதிய தொன்றுண்டு கேட்கில் தொண்
[டாய் அடைந்தார்
அல்லல் படக்கண்டு பின்என் கொடுத்தி"

என்பது.

மற்றும் ஒரு முறையில் எள்ளி நகையாடுவதையும் ஒரு பாட்டில் காணலாம். அப்பாடல்,

---

முந்நீர் - கடல், மல்லல் - வளமான, திரை - அலை, நித்திலம் - முத்து, வம்ப - புதிய, ஒல்லை - விரைவாக, எற்று - மோதும், வாரி - வளம், அல்லல் - துயரம்,

"சுற்றிவண்டி யாழ்செயும் சோலையும் காவும் துதைந்திலங்கு
பெற்றிகண் டால்மற்றி யாவரும் கொள்வர் பிறரிடைநீ
ஒற்றிகொண் டாய்ஒற்றி ஊரையும் கைவிட் டுறும் [என்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுஒப்ப தில்லிடம் வேதியனே"

என்பது.

அதாவது "இறைவரே! நீர் எழுந்தருளியுள்ள இந்த இடம், சோலை சூழ்ந்த நல்ல காற்ரோட்டமுள்ள இடம். இதனை யாவரும் விலைக்கு வாங்கிக் கொள்ள முன்வருவர். ஆகவே, இதனை விற்க முற்படுகின் றீரோ? வேண்டா, நீரோ இதனை ஒற்றிஊராக (அடமான ஊராக) பெற்றுள்ளீர்" என்பது.

மற்ருெரு பாட்டில் இறைவரை ஒன்றரைக் கண்ணன் என்று கூறி நகையாடுகிருர். அப்பாடல்,

"இன்றரைக் கண்ணுடை யார்எங்கும் இல்லை இமயம்என்னும்
குன்றரைக் கண்ணன் குலமகள் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்துமை யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீர்ஒற்றி யூர்உறை உத்தமனே"

என்பது.

இந்தப் பாடல் கருத்தை நன்கு உளத்தில் கொண்ட பலப்பட்ட சொக்கநாதப் புலவர் இறைவர்க்கு ஒன்றரைக் கண்ணும்கூட இல்லை. அவருக்கு இருப்பது அரைக்கண்ணே தான் என்று எள்ளி நகையாடுவார் போன்று,

---

யாழ்-யாழ் இசை. கா-பூஞ்சோலை. துதைந்து-நெருங்கி, இலங்கு - விளங்கும், பெற்றி - தன்மை, குன்றர் + ஐக்கு + அண் + நல் + குலமகள் எனப் பிரிக்க. மலை அரசனுன பர்வதராசனுக்கும் தோன்ருமல் வந்து தோன்றிய நல் உமை என்பது இதன் பொருள்.

"முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே—மிக்க
உமையாள்கண் ஒன்றரைமற் றான்வேடன் கண்ஒன்
றமையுமித னல்என் றறி"

என்று பாடி யிருத்தல் காண்க. ஊன் வேடன் திண்ணனாராம் கண்ணப்பர். இறைவர் உமையாளுக்குக் கொடுத்த ஒன்றரைக் கண் போக மீதியுள்ள ஒன்றரைக்கண் புண்பட்டபோது, திண்ணனார் தம் கண்ணைப் பிடுங்கி வைத்ததனால் தமக்கு எஞ்சி நின்றது அரைக் கண் ஆதலின், "அரைக் கண்ணே" எனப்பட்டது.

அப்பர் மக்களுக்குத் திருவொற்றியூரை வணங்குமாறு கூறும் வரி "சோலைத் திருஒற்றியூரை எப்போதும் தொழுமின்களே" என்பது.

இறைவரின் விரிசடை, திருமுடி எவ்வெவற்றிற்கு இடம் என்பதைத் திருநாவுக்கரசர் வெகு அழகுடன் மொழிந்துள்ளார்.

"புற்றினில் வாழும் அரவுக்கும் திங்கட்கும் கங்கைஎன்னும்
சிற்றிடை யாட்கும் செறிதரு கண்ணிக்கும் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சுடை யான்பிரி யாதெனைஆள்
விற்றுடை யான்ஒற்றி ஊருடை யான்தன் விரிசடையே"

"அங்கண் கடுக்கைக்கு முல்லைப் புறவம் முறுவல்செய்யும்
பைங்கண் தலைக்குச் சுடலைக் களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை அரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானம் திருஒற்றி ஊரர் திருமுடியே"

என்னும் திருவிருத்தங்களைக் காண்க.

---

அரவு - பாம்பு, திங்கள் - சந்திரன், செறி - அடர்ந்த, கண்ணி - கொன்றை மாலை, பெற்று (பெற்றம்) - இடபம். அம்கண் கடுக்கை - அழகிய தேனையுடைய கொன்றைக்கு புறவம் - காடு, முறுவல் - நகை. சுடலை - சுடுகாடு, களரி- காடு, வேலை - கடல்.

இறைவரது பிறைச்சந்திரன் இறைவர் யானையைக் கொன்றபோது இற்று வீழ்ந்த கொம்புபோலும், அதனைப் பாம்பு சுற்றிக்கொண்டிருப்பது, கொம்புக்குப் பூண் இட்டது போலும், நெற்றிக்கண் யானைக் கொம்பில் தோன்றும் முத்துப் போலும் இருப்பதாகக் கருதி,

"செற்றுக் களிற்றுரி கொள்கின்ற ஞான்று செருவெண் [கொம்பொன்
றிற்றுக் கிடந்தது போலும் இளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி போலச் சுடர்இமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு மால்ஒற்றி யூரனுக்கே"

என்று ஒரு பாடலைப் பாடியுள்ளனர்.

இறைவர் தம்மை ஆட்கொண்டதை வியந்து "என் சிந்தை பிரிவரியான்" என்றும், "அடியேனை பிறப்பறுத்தாள வல்லான்" என்றும் பாடியுள்ளனர். "இறைவரை நஞ்சு உண்ணுமாறு செய்துவிட்டார்களே தேவர்களும் அசுரர்களும். ஆ! இதற்கு என் செய்வேன்" என்று எண்ணி வருந்துவார் போல, "நெருக்கின வானவர் தானவர் கூடிக் கடைந்தநஞ்சைப் பருக்கினவா றென்செய்கேன்" என்று பாடித் தம் ஆற்ருமையை அறிவித்துள்ளனர்.

வினை தம்மை ஒன்று செய்ய இயலாது என்பதனை,

"சுற்றிக் கிடந்தொற்றி யூரன்என் சிந்தை பிரிவறிவான்
ஒற்றித் திரிதந்து நீஎன்ன செய்தி உலகமெல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு நாம்என்று கண்குழித்துத்
தெற்றித் திருப்பதல் லால்என்ன செய்யும்இத் தீவினையே"

என்னும் பாடலில் பாடி உணர்த்தி உள்ளதைக் காண்க.

---

செற்று-கொன்று, களிற்றுரி-யானைத்தோல், ஞான்று-அந்நாளில், இற்று-ஒடிந்து, கிம்புரி-பூண், தெற்றித்து-மாறுபட்டு.

உபதேச முறையில் அமைந்த பாடல்,

வேலைக் கடல்நஞ்சும் உண்டுவெள் ளேற்றெரு(டு)ம் [வீற்றிருந்த
மாலைச் சடையார்க் குறைவிடம் ஆவது வாரிகுன்று
ஆலைக் கரும்பொடு செந்நெற் கழனி அருகணைந்த
சோலைத் திருஒற்றி யூரைஎப் போதும் தொழுமின்களே.

என்பது.

இறைவரிடம் எப்பொருள் சேரினும் பகையின்றி வாழும் என்னும் அரிய குறிப்பு, இத்தலத்து முதல் குறுந்தொகைவழி அறியவருகின்றது. அதாவது பாம்பு சந்திரனைப்பற்றி அதன் ஒளியை மங்கச் செய்யும். ஆனால், இறைவர் தலையில் உள்ள பாம்பும் சந்திரனும் ஊர்ந்துகொண்டு இருந்தனவே அன்றிப் பாம்பு சந்திரனைப் பற்றிலது. இதனை அப்பர்,

ஒற்றி ஊரும் ஒளிமதி பாம்பினை
ஒற்றி ஊரும்அப் பாம்பும் அதனையே
ஒற்றி ஊர ஒருசடை வைத்தவன்
ஒற்றி ஊர்தொழ நம்வினை ஓயுமே.

என்று பாடி உணர்த்தியுள்ளனர். ஈற்றடி திருஒற்றி யூரைத் தொழுதால் நம் வினை நீங்கும் என்னும் அறவுரையினை உணர்த்துகிறது.

இறைவி, தம் கணவர் சுடலையில் இருளில் மண்டை ஓட்டை ஏந்தி ஆடுகின்றாரே என்று வருந்துவாளாம். இதனை,

வாட்டம் ஒன்றுரைக்கும் மலைமகள்
ஈட்ட வேஇருள் ஆடிஇ டுபிணக்
காட்டில் ஓரி கடிக்க எடுத்தோர்
ஓட்டை வெண்தலைக் கைஒற்றி ஊரரே.

என்று அறிவித்துள்ளனர்.

---

மதி - சந்திரன். வேலை - கரை. ஏறு - எருது. வாரி - வளம், வருவாய். ஒற்றி - பொருந்தி. ஓயும் - நீங்கும். வினை - தீவினை. ஈட்ட - நெருக்க. ஓரி - நரி.

இறைவர் இங்குத் தேவர் தொழ வாழ்கின்றார் என்றும், அவர் பாதத்தைத் தொழுதால் பாவம் நீங்கும் என்றும், "மனமே! நீ திருஒற்றியூர் நிலவினான் அடியே அடை" என்றும் அறிவிக்கும் முறையில்,

"மற்றை யாரொடு வானவ ரும்தொழ
ஒற்றி ஊர்உறை வான்ஓர் கபாலி"

"திருஒற்றியூர், பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே"

"ஒற்றியூர், அடையும் உள்ளத் தவர்வினை அல்குமே"

"திருஒற்றியூர், நிலவி னான்அடி யேஅடை நெஞ்சமே"

என்னும் வரிகள் திருக்குறுந்தொகையில் உள்ளன.

அப்பர் பெருமான் திருஞானசம்பந்தரைப் போலவும், சுந்தரரைப் போலவும் பதிகத்தைப் பாட இன்ன பயனை அடைவர் என்று அறிவிப்பதில்லை என்றாலும், தாம் பாடிய நமச்சிவாயப் பதிகத்தில் "நமச்சிவாயப்பத்து ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே" என்று பாடி இருக்கின்றார். அதுபோல் இப்பதிகத்தின் ஈற்றுப் பாடலில் "திருஒற்றியூர் உறையினால் பொலிந்தார் உயர்ந்தார்களே" என்று பாடி இப்பதிகத்தை ஓதுவார் பெறும் பயனைக் கூறியுள்ளனர்.

பலவும் அன்னங்கள் பல்மலர் மேல்துஞ்சும்
கலவ மஞ்ஞைகள் கார்என வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு ஒற்றியூர்
நிலவி னான்அடி யேஅடை நெஞ்சமே.

என்பது நெஞ்சிற்கு அறிவுறுத்திய பாடல். இதன் மூன்று வரிகளில் திருஒற்றியூரின் இயற்கை வளம்

---

ஏத்த - போற்ற. பறையும் - நீங்கும். அல்கும் - குறையும். துஞ்சும் - தூங்கும். கலவம் - தோகை. மஞ்ஞைகள் - மயில்கள், கார் - மேகம். வெள்குறும் - வெட்கப்படும். நிலவினான் - தங்கினான். பொழில் - சோலை. திரை - அலை.

கூறப்பட்டுள்ளதைக் காண்க. "திரையினுர் புடைசூழ் திருஒற்றியூர்" என்று இப் பதிகத்தில் வரும் வரியும் இயற்கையை ஒட்டிய வருணனே ஆகும்.

இக் குறுந்தொகைப் பதிகத்தில் உபதேச முறையில் அமைந்த பாடல்கள் இரண்டு உள. அவையே,

கூற்றுத் தண்டத்தை அஞ்சிக் குறிக்கொண்மின்
ஆற்றுத் தண்டத் தடக்கும் அரன்அடி
நீற்றுத் தண்டத்த ராய்நினே வார்க்கெலாம்
ஊற்றுத் தண்டொப்பர் ஒற்றி ஊரரே.

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணுளனுர்
ஓது வேதிய னுர்திரு ஒற்றியூர்
பாதம் ஏத்தப் பறையும் பாவமே.

என்பன.

அப்பர் இத் தலத்துத் தாண்டகத்தில் முதல் பாட்டின் ஈற்றில் இத்தலத்து இறைவரைக் கனவில் கண்டு கடுநோய் நீங்கப்பெற்றதை, "கண்டேன் நான் கனவகத்தில் கண்டேற் கென்றன் கடும்பிணியும் சுடுந்தொழிலும் கைவிட்டவே" என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

---

திரை - அலே. புடை - பக்கம். கூற்றுத் தண்டம் - இயமனது தண்டனே. ஆற்றுத் தண்டம் - அறத்தின் வழியாம் தண்டனே. அரன் - சிவன். நீற்றுத்தண்டத்தர் - திருநீறு அணிந்து வணங்கி எழுந்திருப்பவர். ஊற்றுத்தண்டு - இனிப்புச் சாறு நிறைந்த கரும்பு. ஊன்றுகோல் என்றும் கொள்ளலாம். போது - காலந்தோறும். மாது - கங்கையாள். பறையும் - ஒழியும்.

திருத்தாண்டகத்தில் திருஒற்றியூர் கீழ்வருமாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை,

ஓமத்தால் நான்மறைகள் ஓதல்ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூர்

விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும்
திரைமோதக் கரைஏறிச் சங்கம் ஊரும் திருஒற்றியூர்

ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தம் ஆக
ஒளிதிகழும் ஒற்றியூர்

ஒல்லைதான் திரைஏறி ஓதம் மீளும்
ஒளிதிகழும் ஒற்றியூர்.

என்னும் வரிகளில் காண்க. பங்குனி உத்திரத்தில் தீர்த்தவாரி இங்கு நடந்த குறிப்பைக் அறியவும்.

இத் தாண்டகப் பதிகத்தில் நான்காவது, ஐந்தாவது, ஆறுவது, ஏழாவது, எட்டாவது, பத்தாவது பாடல்கள் அகப்பொருளைத் தழுவினவாகும். அவை தலைவி தோழிக்குக் கூறும் முறையில் அமைந்துள்ளன. அகப்பொருள் இன்னது என்பது முன்பே கூறப்பட்டது.

"எம்அடிகள் உம்ஊர்தான் ஏதோ என்ன
விரையாதே கேட்டியேல் வேற்கண் நல்லாய்
திருஒற்றி ஊர்என்றார் தீய வாறே"

"பயின்றிருக்கும் ஊர்ஏதோ பணியீர் என்ன
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின் றாரே"

---

ஓமத்தால்-யாகத்தீயால். நால் + மறை - நான்கு வேதம். கலம் - கப்பல்கள். திரை - அலை. ஒல்லை - விரைவாக. எம் அடிகள் - எம் தலைவரே. வேல்கண் - வேல் போலும் கண். தீயவாறே - என் தீவினையின் பயன் இருந்தவாறு இது ஆகும். பயின்றிருக்கும் - வசித்திருக்கும். பணியீர்-சொல்லி அருள்வீராக.

"எல்லாம்தான் இவ்வடிகள் யார்என் பாரே
திருஒற்றி ஊர்புக்கார் தீய வாறே"

"நாம்இருக்கும் ஊர்பணியீர் அடிகேள் என்ன
ஒல்லைதான் திரைஏறி ஓதம் மீளும்
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின் றாரே"

"திருஒற்றி ஊர்நம்ஊர் என்று போனார்
செறிவளைகள் ஒன்றொன்றாச் சென்ற வாறே".

"நிலைப்பாடே நான்கண்ட ஏடீ கேளாய்
நெருநலை நல் பகல்இங்கோர் அடிகள் வந்து
கலைப்பாடும் கண்மலரும் கலக்க நோக்கிக்
கலந்துபலி இடுவேன் எங்கும் காணேன்
சலப்பாடே இனிஒருநாள் காண்பேன் ஆகில்
தன்ஆகத் தென்ஆகம் ஒடுங்கும் வண்ணம்
முலைப்பாடே படத்தழுவிப் போகல் ஒட்டேன்
ஒற்றியூர் உறைந்திங்கே திரிவா னையே"

என்பன அவ்வகப்பாட்டு வரிகளும், பாடலும் ஆகும்.

"நிலைப்பாடே" என்னும் தாண்டகத்தில் தலைவி தன் முலைகளால் இறைவராம் தலைவரைக் கட்டி வெளியே செல்ல ஒட்டாமல் செய்வேன்" என்று கூறியுள்ளது இன்பச் சுவையைப் பயப்பதாகும்.

இத்தலத்து இறைவியாரின் பெயர் வடிவாம்பிகை என்னும் குறிப்பை "வடிவுடை மங்கையும் தாமும்" என்னும் வரியில் காணலாம்.

---

ஒல்லை - விரைவாக. திரை - அலை. செறி வளைகள் - கையில் நெருங்கி இருந்த வளையல்கள். ஏடீ - ஏண்டி தோழீ. நெருநல் - நேற்று. கலைப்பாடு - ஆடையின் பெருமை. சலப்பாடு - வஞ்சகம். ஆகம் - மார்பு.

மண் அல்லை விண் அல்லை வலயம் அல்லை
மலை அல்லை கடல் அல்லை வாயு அல்லை
எண் அல்லை எழுத்தல்லை எரியும் அல்லை
இரவல்லை பகல் அல்லை யாவும் அல்லை
பெண் அல்லை ஆண் அல்லை பேடும் அல்லை
பிறிதல்லை ஆனாயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை அல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே.

என்னும் இத் தாண்டகத்தில் இறைவர் எங்கும் தோய்ந்தும் தோயாதும் இருப்பவர் என்பது அழகுற இயம்பப் பட்டிருப்பதைக் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தில் பாடியுள்ள முதல் பதிகம், சுந்தரர் தம் கண் ஒளி இழந்து அதனைப் பெறுவதற்கு முயன்று பாடிய முறையில் அமைந்துளது. இப் பதிகம் மிகமிக உருக்கமானது. சுந்தரர் தம் குற்றத்தை உணர்ந்து இறைவரிடம் முறையிடுகின்ற முறைகளை இப் பதிகத்தில் கண்டு அறியவும்.

முதல் பாட்டில் "இறைவரே நான் அழுக்கு நிறைந்த உடம்புடன் உம்மைச் சரண் புகுந்தேன். அந்த அழுக்குடல் கொண்டே நான் படும்பாடு போதுமானது. நான் வாழ்க்கையில் தவறு செய்தாலும் உமது திருவடிகளை நினைப்பதில் தவற மாட்டேன். வழுக்கிக் கீழே விழுந்தாலும் உம் திருப்பெயரைத் தவிர வேறு ஒன்றையும் வாயால் கூறேன். பசுவின் பாலைப் பெற விரும்புபவர், அப் பசுவின் சாணம், மூத்திரம் குறித்துச் சிறிதும் அருவைசப் படாமல் எடுப்பார்கள் அல்லரோ? அதுபோல என்னை ஆட்கொண்ட நீங்கள் என் பிழைகளைப் பொறுத்து அருள்செய்ய வேண்டாவா? ஆகவே, என்

---

எரி - தீ. உன் + நல்லை - உண்ணல்லை. வலயம் - ஞாயிறு முதலிய மண்டிலங்கள். வாயு - காற்று.

கண்ணுக்கு மருந்து தருக" என்று முறையிடுகின்றனர். இக் கருத்துகள் அடங்கிய பாடலே,

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

என்பது.

இரண்டாவது பாட்டில் தம் நிலையினை எடுத்து மொழிகின்றார். "உமக்கு அடிமையானேன். சங்கிலி நாச்சியார் காதல் காரணமாகக் கட்டத்தைத் துய்க்கப் பிறந்தேன். எட்டு வடிவுடன் திகழும் இறைவரே! அடியேன் என்ன எடுத்து மொழிவேன்? இரு மாதர்களை விரும்பி மணந்தேன். ஆனாலும், உம் திருவடிகளை நினைக்கத் தவறமாட்டேன். நினைக்க மறந்தாலும் உம்திருவடிகட்குத் தொண்டுசெய்வதை ஒழிக்கமாட்டேனே. இப்படி இருந்தும் என்னை இப்படி வருத்துதல் முறையோ?" என்று கூறிக் கதறுகின்றார்.

கட்ட னேன்பிறந் தேன்உனக் காளாய்க்
காதல் சங்கிலி காரணம் ஆக
எட்டி னால்திக ழும்திரு மூர்த்தி
என்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன்
பெட்டன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
பிழைப்பன் ஆகிலும் திருவடிக் கடிமை
ஒட்டி னேன்எனை நீசெய்வ தெல்லாம்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே."

என்பது அவ்வாறு கதறிய பாடல்.

---

மெய்-உடம்பு. ஒழுக்க-ஊற்ற. சங்கிலி-சங்கிலி நாச்சியார். எட்டினால் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டுப் பொருள்கள். திகழும் - விளங்கும். பெட்டன் - இரு மாதர்களை விரும்பி மணந்தவன்.

மூன்ருவது பாட்டில் இறைவரைப் பலவாறு விளித்து "என் குறையை யார் இடத்துக் கூறு வேன்?" என்கிருர். இதனை,

"கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டி யேபலர்க் கும்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே
அத்த என்இடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியும் சலஞ்சலம் முரல
வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி ஊர்எனும் ஊர்உறை வானே."

எனும் பாடலில் காண்க.

நான்காவது பாட்டில் "என்னைப்பெற்ற காரணத் தால், தாய்தான் சுற்றம் என்று கொள்ளேன். எல் லோரும் அன்புடையவர்களே. எனக்கு நீங்கள் அருள் செய்து விட்டால் என்னை முன் இகழ்ந்து சொன்னவர் களை நீங்களும் இகழ்ந்து பேசமாட்டீர்கள். உமக்கோ மூன்று கண்கள் உண்டு. அவையும் போதா என்று என் கண்களையும் கொண்டீர்களே! சரி. ஊன்றுகோலை யாகிலும் கொடுப்பீராக" என்று வேண்டுகின்ருர்.

"ஈன்று கொண்டதோர் சுற்றம்ஒன் றன்ருல்
யாவர் ஆகில்என் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டால்
சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வ தேகணக் குவ்வழக் காகில்
ஊன்று கோல்எனக் காவதொன் றருளாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே".

என்பது அவ்வேண்டுகோள் பாடல்.

---

களைகண்ணே - பற்றுக்கோடாய் இருப்பவனே. அங்கை நெல்லியின்பழம் என்பது, உள்ளங்கை, நெல்லிக்கனி என்னும் பழமொழியாகும். அங்கை - அகம் + கை, உள்ளங்கை. அத்த - தந்தையே. சிப்பி - கிளிஞ்சல். சலஞ்சலம் - இது ஒருவகை சங்கு. முரல - ஒலிக்க. வரன்றி-வாரிக்கொண்டு.

ஐந்தாவது பாட்டிலும் தாம் கண் இழந்து படும் துன்பத்தைப் பலவாறு கூறி முறை இடுகின்றனர். "நான் தலயாத்திரை செய்து வழிநடக்க முயல்பவன். அல்லது நீங்கள் வகுத்தவழிப்படி நடக்கமுயல்பவன். நீரோ வழி வகுப்பவர். வகுத்தபடி நீங்கள் நடவாமலும் இருக்கலாம். நான் உங்களைப்போல் என்னைப் பாவிக்கமாட்டேன். கண் இழந்ததால் நீர்ச்சுழிபோல் மனம் சுழன்று மயங்குகின்றது. நாயைக் கோலில் கட்டி இழுத்துச் செல்வதுபோல் என்னைத் தடிபிடிக்கச்செய்து கறகற என்று இழுத்துக்கொண்டு போகின்றார்கள். இந்நிலை ஒழிய அருள் செய்ய வேண்டும்" என்று வருந்தி விண்ணப்பித்துக் கொள்கின்றார். இக் கருத்துகள் அடங்கிய பாட்டே,

"வழித்த லைப்படு வான்முயல் கின்றேன்
உன்னைப் போலஎன்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச்
சுழல்கின் றேன்சுழல் கின்றதென் உள்ளம்
கழித்த லைப்பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீஅரு ளாயின செய்யாய்
ஒற்றி யூர்எனும் ஊருறை வானே"

என்பது.

ஆறுவது பாட்டில் "இறைவரே! நான் மான்போலும் கண்களையுடைய பெண்களின் கண் வலையில் சிக்கி வருந்திய வல்வினைக்கு அஞ்சி, உங்கள் சீலத்தையும் குணங்களையும் சிறிதும் சிந்தித்தேன் அல்லேன். அதனால் நான் உயிரோடு நரக வேதனையில் அழுந்தாதபடி என் கண் ஊனத்தை நீக்கி அருள் செய்வீராக. இதுவே நான் உங்களை வேண்டுவது" என்று முறையிடுகின்றார். இதனை,

"மானை நோக்கியர் கண்வலைப் பட்டு
வருந்தி யான்உற்ற வல்வினைக் கஞ்சித்
தேனை ஆடிய கொன்றையி னாய்உன்
சீல மும்குண முஞ்சிந்தி யாதே
நானும் இத்தனை வேண்டுவ தடியேன்
உயிரொ டும்நர கத்தழுந் தாமை
ஊனம் உள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே"

எனும் பாட்டில் காண்க.

ஏழாவது பாட்டிலும் "நான் ஏனைய தேவர்களை நினைந்து உம்மை மறக்கமாட்டேன். ஏனையவர்களுடன் வாழவும் மாட்டேன். கண்ணைப் பெற்றிருந்தும் பெற்றிழந்த அறிவிலியேன். தவறு என்று நான் அறிந்திலேனே. முற்றிலும் என்னை வெறுத்தால் என்னால் என்ன செய்ய முடியும்? நான் உம்மை என்றும் மறவேனே. நான் அடைந்துள்ள கண்ணோய் வருத்தத்தைத் தீர்த்து அருள்செய்வீராக" என்று முறையிடுகின்றனர். இதனை,

"மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்
நெஞ்சி னாரொடு வாழவும் மாட்டேன்
பெற்றி ருந்து பெருதொழி கின்ற
பேதை யேன்பிழைத் திட்டதை அறியேன்
முற்று நீஎனை முனிந்திட அடியேன்
கடவ தென்உனை நான்மற வேனேல்
உற்ற நோய்உறு பிணிதவிர்த் தருளாய்
ஒற்றி ஊர்எனும் ஊர்உறை வானே"

என்னும் பாட்டில் அறிக.

---

மானை நோக்கியர் - மான்போலும் கண்களை யுடைய பெண்கள். சீலம் - செயல்முறை. ஊனம் - குறை. முனிந்திட - வெறுத்திட, பிணி - நோய். நோய் - துன்பம்.

எட்டாவது பாட்டில் தம் மனத்துக்கு உரைப்பார் போல், "மனமே வாடி இருந்து என் செய்வாய்? நான் உற்றவல்வினைக்கு அஞ்சிப் பிணங்கினால் யாது பயன்? 'ஒற்றியூர் உறைவானே, மலைமங்கையைக் கூடினாய், ஆயிரமுகமுடைய கங்கையாளைச் சூடினாய்" என்று அழைத்து நம் குறையை முறையிட்டால் அடியவனான எனக்கு ஏதேனும் அவன் வழிவகை உரைக்கவும் கூடும். ஆகவே வா. போற்றுவோம்" என்னும் கருத்தில் பாடியுள்ளனர்.

"கூடி னாய்மலை மங்கையை நினையாய்
கங்கை ஆயிரம் முகமுடை யாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்கால்
தொழும்பனே னுக்கும் சொல்லலும் ஆமே
வாடி நீஇருந் தென்செய்தி மனனே
வருந்தி யான்உற்ற வல்வினைக் கஞ்சி
ஊடி னால்இனி ஆவதொன் றுண்டே
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே"

இப்பாட்டில் மேற்சொன்ன கருத்துகளைக் காண்க.

சுந்தரர் தம் குறைபாட்டை எந்தெந்த முறையிலோ இறைவரிடம் முறையிட்டுக் கொண்டனர். ஆனால், இறைவர் அந்தநேரத்தில் எவ்வித நன்மையையும் செய்திலர். அதனால் சுந்தரர் சிறிது சினம் கொண்டனர். சினம்கொண்டு இறைவரை வையவும் தொடங்கினார். "இறைவரே நீர் மகம் நட்சத்திரத்திற்கு உரித்தான சிம்ம ராசியில் புகுந்த சனிபோல எனக்குத் துன்பம் செய்தவர் ஆகின்றீர்' என்றனர். பின்னர்தாம் அவ்வாறு கூறியது தவறு என்று உணர்ந்து "மைந்தனே, மணியே, மணவாளா, முக்கணா, மறைஓதி" என்று விளிப்பாராயினார். தாம்

---

சொல்லிய - சொல்லி. புக்கால் - புகுந்தால். தொழும்பனேன் - தொண்டனேன். ஊடினால் - பிணங்கினால்.

கோபங்கொண்டு சனி எனக்காளுய் என்று கூறியதற்குக்காரணமும் கூறுபவர்போல் "வீட்டில் பெண்களுக்கு நான் ஒரு கட்டளை இட்டால் 'குருடா எங்களைக் கூப்பிடாதே' என்று சொன்னுல், நான் எப்படிப் பொறுப்பேன்? முகத்தில் கண்களை இழந்து எப்படி வாழ்வேன்?" என்றும் கூறி விளக்கிஞர். இக்கருத்துகளையே,

"மகத்தில் புக்கதோர் சனிஎனக் காளுய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்தில் பெண்டுகள் நான்ஒன்று சொன்னுல்
அழையேல் போகுரு டாஎனத் தரியேன்
முகத்தில் கண்இழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்க ணுமுறை யோமறை ஓதி
உகைக்கும் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி ஊர்எனும் ஊர்உறை வானே"

என்று இப் பாடலில் பாடியுள்ளனர்.

பத்தாவது பாட்டுப் பதிகப் பயனை உணர்த்தும் பாட்டாகும். இப்பாட்டில் சுந்தரர் தம்மை உலகம் போற்றும் நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் பயின்ற நாவன் என்றும், ஒழுக்கம் மிக உடையவன் என்றும், தம் அடக்கம் தோன்ற, சிறுவன் வன்தொண்டன் என்றும் கூறிக்கொள்கின்றனர். வன்தொண்டன் என்பது சுந்தரர் பெயர்களில் ஒன்று. இப் பாடல்கள் பத்தையும் பாட வல்லவர் நிச்சயமாகப் பரகதி அடைவர் என்றதையும் கூறி முடிக்கின்றனர். அப்பாடலே,

"ஓதம் வந்துல வும்கரை தன்மேல்
ஒற்றி ஊர்உறை செல்வனை நாளும்
ஞாலம் தான்பர வப்படு கின்ற
நான்மறை அங்கம் ஓதிய நாவன்

---

அகம் - வீடு. உகைக்கும் - மோதும். ஓதம் - அலை.

சீலம் தான்பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்தொண்டன் ஆரூரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லார் தாம்போய்ப்
பரக திதிண்ணம் நண்ணுவர் தாமே''

என்பது.

திருஒற்றியூரின் இயற்கை வளன்,

''சங்கும் சிப்பியும் சலஞ்சம் முரல
வயிர முத்தொடு பொன்மணி வரன்றி
ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவும் ஒற்றியூர்''

''உகைக்கும் தண்கடல் ஓதம்வந் துலவும் ஒற்றியூர்''

என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது..

சுந்தரர் இத்தலத்தின்மீது பாடிய மற்ளுெரு பதிகமும் உண்டு. இதில் இறைவரைப்பற்றி,

''பாட்டுப் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார்''

''பந்தும் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார்''

''அடைவார் வினைகள் அறுப்பான்''

''வினைய வீட்ட நன்று நல்ல நாதன்''

''கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்''

''உலகில் உள்ளார் வினைகள் தீர்ப்பான்''

''எற்றும் வினைகள் நீர்ப்பார்''

என்று கூறப்பட்டுள்ளதைக் காண்க.

---

பரவி - போற்றி. பயிலும் - (கொண்டு) விளையாடும். பாவை - பார்வதி. வீட்ட - அழிக்க. கலவம் - தோகை. படியான் - வடிவுடையவன். எற்றும் - வந்து மோதும்,

திருவொற்றியூரின் இயற்கை எழில்,

"காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஒட்டும் திரைவாய் ஒற்றியூர்"
"உந்தும் திரைவாய் ஒற்றியூர்"
"உகளும் திரைவாய் ஒற்றியூர்"
"உலவும் திரைவாய் ஒற்றியூர்"

எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிகத்தில் அமைந்த நான்காவது பாடல் அகப் பொருள் அமையப் பாடப்பட்டது. அதாவது திருஒற்றி ஊரன்மீது காதல்கொண்ட ஒருத்தி கூறும் அமைப்பில் உளது.

"என்ன தெழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி ஊரே"

என்னும் பாடலைக் காண்க.

சுந்தரர் தமக்கும் இறைவருக்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பை "எந்தம் அடிகள்" என்றும் "என்னை அடிமையாக உடையான் தன்னை நினைக்கத் திருவருள் தருபவன்" என்றும் கூறுதலால் உணரலாம்.

ஈற்றுப் பாடலில் இப் பதிகத்தைப் பாட வினை ஒழியும் என்பது உணர்த்தப் பட்டுள்ளது. இதனை

"பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமும் திமிலுங் கரைக்கே.
ஓட்டுந் திரைவாய் ஒற்றி யூரே"

என்னும் பாடலில் காண்க.

---

கலம் - கப்பல். திமில்-படகு. திரை - அலை. எழில்-அழகு. நிறை - கற்பு. புறவில் - கடற்கரையில். உன்ன - நினைக்க. உந்தும் - மோதும். உகளும் - புரள்கின்ற. பரவி-துதித்து. ஈட்டும் - தேடிச் சேர்த்த.

"படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே"

—ஏழாம் திருமுறை.

அருணகிரிநாதர் இத்தலத்து முருகன் மீது பாடிய திருப்புகழ் இரண்டு. அவற்றுள் ஒன்று,

கரியமுகில் போலும் இருள் அளக பார
கயல்பொருத வேலின் விழிமாதர்
கலவிகளில் மூழ்கி மிருகமத படீர
களபமுலை தோய அணையூடே
விரகமது வான மதனகலை ஓது
வெறியன்என நாளும் உலகோர்கள்
விதரணம தான வகைநகைகள் கூறி
விடுவதன்முன் ஞான அருள்தாராய்
அரிபிரமர் தேவர் முனிவர்சிவ யோகர்
அவர்கள்புகழ் ஓத புவிமீதே
அதிகநட ராசர் பரவுகுரு ராச
அமரர்குல நேச குமரேசா
சிரகர கபாலர் அரிவையொரு பாகர்
திகழ்கனக மேனி யுடையாளர்
திருவளரும் ஆதி புரியதனில் மேவு
செயமுருக தேவர் பெருமாளே.

—திருப்புகழ்.

---

படை - ஆயுதம். விடை - எருது. முகில் - மேகம். அளகம் - கூந்தல். கலவி - புணர்ச்சி. அணையூடு - படுக்கையில். விரகம் - காம இச்சை. பரவு - போற்றும். அமரர் - தேவர். அரிவை - பார்வதி, கநகமேனி - பொன் நிறமான திருஉருவம். ஆதிபுரி - திருஒற்றியூர். பொருத- மோதிய. மருகமதம் - கஸ்தூரி. களபம் - சந்தனம், விதரணமதான - சுறுக்கென்று தைக்கும்படியான.

# 21. திருவலிதாயம்

இத்தலம் இதுபோது பாடி என வழங்கப்படு கிறது. இத் தலத்தைப் பிரகஸ்பதி, அனுமான், பாரத்துவாஜர் முதலியோர் பூசித்துப் பேறு பெற் றுள்ளனர். இவர்கள் பூசித்ததன் குறிப்பாக இவர் களின் பெயரால் தனித்தனித் தீர்த்தம் இங்கு உண்டு. விக்கிரம சோழன் இத்தலப் பெருமானைப் பூசித்து மகப்பேறு பெற்றுள்ளான். இங்குள்ள கிணற்று நீர் நல்ல சுவையுடையது.

இத்தலத்து இறைவர் வலிதாய நாதர், திரு வல்லீஸ்வரர் என்றும், இறைவியார் தாயம்மை, செகதாம்பிகை என்றும் குறிப்பிடப் பெறுவர். இத் தலத்துக் கல் வெட்டுகளால் இறைவர், இறைவி யார் திருப்பெயர்கள் முறையே திருவலிதாயமுடைய நாயனுர் என்றும், திருவீதி நாச்சியார் என்றும் அழைக்கப்பட்டனர் என்பது தெரிகிறது ஒரு கல்வெட்டுத் திருவெண்காட்டிலிருந்து அழகிய திருச்சிற்றம்பல முடைய நாயனுரை எழுந்தருளிச் செய்து அதற்குப் பூசையினை நடத்தி அவ்வூர்க் குருக்களையும் குடிஏற்றிப் பூசைக்கும் குருக்கள் குடும் பத்திற்கும் உணவு முட்டாதிருக்க நிலம் மான்னியம் இட்டதைக் குறிப்பிடுகிறது. நெல் திருஞானசம்பந்தர் பெயரால் அமைந்த நாழியினுல் அளந்து கொடுக்கப் பட்டதாம். திரிபுவன சக்கரவர்த்தியான ராஜ ராஜன் க்ஷேத்திர பாலப் பிள்ளையார் கோவிலைக் கட்டி நிவேதனத்திற்காக நிலங்களையும் தானம் செய்தான் என்பதும் தெரிகிறது. விஜயகண்ட கோபாலதேவர் காஞ்சபுரத்திலிருந்து நடன மாதர்களை இங்குக் குடியேற்றியதாகத் தெரிகிறது, இத்துடன் இன்றி இறைவியார்க்கும் இறைவருக்கும் ஆபரணங்களும் பாத்திரங்களும் கொடுத்தனர் என்பதும் அறிய

வருகிறது. சாளுக்கிய யாதவராயன் பாடியைச் சார்ந்த சிந்தாமணிபுரம் என்னும் இடத்தில் இரு வீடுகளையும், இருநந்தவனங்களையும் தந்துள்ளனன். விளக்கிற்காகவும் பொன் கொடுத்துள்ளனன்.

இத்தகைய சீரும் சிறப்புடன் பூசைக்கும் ஏனைய தினசரி நடைமுறைக்கும் தானம் பல செய்யப்பட்ட இத்தலம், இப்பொழுது சீரும் சிறப் புடன் இல்லை. இறைவருக்கு நல்ல துணியும் சாத்தப் படவும் இல்லை. இதனைக் கண்டு உளம் வருந்தி இராமலிங்க வள்ளலார்,

"சிந்தை நின்ற சிவானந்த செல்வமே
எந்தை யேயெமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத் தலைவநீ
கந்தை சுற்றும் கணக்கது என்கொலோ"

என்று பாடி வருந்தி யுள்ளனர்.

இத்தலந்து இரடப வாகன சேவையும் அதிகார நந்தி சேவையும் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. இதனைச் சென்னையில் உள்ள அன்பர்கள் பணம் வசூலித்து நடத்துகின்றனர்.

இத்தலம் வில்லிவாக்கம் இரயில் அடியிலிருந்து தென்மேற்கே இரண்டு கல் தொலைவிலும், கொரட்டூர் இரயில் அடியிலிருந்து ஒரு கல் தொலைவிலும் உளது. சென்னையிலிருந்து பஸ் வழியாகவும் இத் தலத்தை அடையலாம். இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது.

இது தாவு கொச்சகத்தால் ஆனது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. இதன் பண் நட்ட பாடை. இதனை நாட்டை இராகம் என்றும் நாட்டைக் குறிஞ்சி என்றும் கூறுவர்.

இறைவர் நிலவும் நிலையினைப் பாடுகையில் பாலருவாயர்,

"பத்தரோடு பலரும்பொலியம் மலர்அங்கைப் புனல்தூவி
ஒத்தசொல்லி உலகத்தவர்தாம் தொழுதேத்த உயர்
மத்தம் வைத்த பெருமான் [சென்னி
பிணிஇல்லவர் என்றும்தொழுதேத்தச் செய்யன்
புந்திஒன்றி நினைவார்வினை ஆயின தீரப்பொருளாய
அந்திஅன்னதொரு பேர்ஒளியான்"

என்று பாடியுள்ளனர்.

இத்தலத்து இயற்கை அழகு, "மடைஇலங்கு பொழிலின் நிழல்வாய் மது வீசும் வலிதாயம்" "மடல் இலங்கு கமுகின் பலவின் மதுவிம்மும் வலிதாயம்" "வண்டுவைகும் மணம் மல்கிய சோலை வளரும் வலிதாயம்" என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது.

இத் தலத்தைத் தொழுது போற்றுவதே உயிராக உடையவர் பெரியவராகக் கருதப்படுவர் என்பதை, "வலிதாயம் தொழுதேத்த உயிராக

---

பொலிய - விளங்க. அம்கை = அகம் + கை - உள்ளங்கை, புனல் - நீர். உகந்தவர் - விரும்பியவர்கள். மத்தம் - ஊமத்தம்பூ. பிணி இல்லவர் - இத் தலத்தை வணங்கிவந்த காரணத்தால் நோய் நீங்கப் பெற்றவர்கள். புந்தி - மனம். ஒன்றி - இணைந்து. அந்தி அன்ன - காலைச் சந்தி, மாலைச் சந்திப் பொழுதில் தோன்றும் செவ்வானம் போன்ற. மடை - நீர் மதகு. இலங்க - விளங்க. பொழில் - சோலை. மது - தேன். கமுகு - பாக்குமரம். பலவின் - பலாப்பழத்தின். விம்மும் - பொங்கும். வைகும் - தங்கிய. மல்கிய - மிக்க. உள்கும் - நினைக்கும்.

உடையார் பெரியார் என உள்கும் உலகோரே"
என்று அறிவித்துள்ளனர்.

இப்பதிகத்தில் உபதேச முறையில் அமைந்த பாடல்கள் இரண்டு. அவையே,

"ஐயன்நொய்யன் அணியன்பிணி இல்லவர்என்றும்
[தொழுதேத்தச்
செய்யன்வெய்ய படைஏந்த வல்லான்திருமா
[தொடுறைகோவில்
வையம்வந்து பணியப்பிணிதீர்த் துயர்கின்ற வலிதாயம்
உய்யும்வண்ணம் நினைமின் நினைந்தால் வினைதீரும்
[நலம்ஆமே"

"ஆசிஆர மொழியார் அமண் சாக்கியர்அல் லாதவர்கூடி
ஏசிஈரம் இலராய்மொழி செய்தவர்சொல்லைப்
[பொருள்என்னேல்
வாசிதீர அடியார்க்கருள் செய்துவளர்ந்தான் வலிதாயம்
பேசும்ஆர்வம் உடையார்அடியார் எனப்பேணும்
[அடியாரே"

என்பன.

"உள்நிறைந்த பெருமான்கழல் ஏத்தநம் உண்மைக் கதிஆமோ" என்பதும் உபதேச மொழியே.

---

ஐயன் - அழகான தலைவன். நொய்யன் - நுட்பமானவன். அணியன் - நெருக்கமானவன். செய்யன் - செந்நிறத்தவன். வெய்ய - கொடிய- படை - ஆயுதம். திருமாது - அழகிய உமையம்மை. உறை - வாழும். வையம் - உலக மக்கள். உய்யும் வண்ணம் - ஈடேறும்படி. ஆசி - ஆசீர்வாதம். ஈரம் - அன்பு. வாசி - வேற்றுமை. பேணும் - போற்றும்.

இத்தலத்தின் மாண்பைக் கூறும்போது,

வலிதாயம், சித்தம் வைத்த அடியார் அவர்மேல் அடைய மற்றிடர் நோயே.

வலிதாயம், அடைய நின்ற அடியார்க்கு அடையா வினை அல்லல் துயர்தானே.

வையம்வந்து பணியப் பிணிதீர்த்து உயர்கின்ற வலிதாயம்.

உலகத்து ஒளிமல்கிட உள்கும் வலிதாயம்

பற்றிவாழும் அதுவே சரணாவது பாடும் அடியார்க்கே.

மந்திவந்து கடுவனொடும் கூடி வணங்கும் வலிதாயம்.

வலிதாயம் தேன் இயன்ற நறுமாமலர்கொண்டு நின்று ஏத்தத் தெளிவாமே.

மண்நிறைந்த புகழ்கொண்டு அடியார்கள் வணங்கும் வலிதாயம்.

வலிதாயம் உடல் இலங்கும் உயிர் உள்ளவும் தொழ உள்ளத் துயர் போமே.

என்று அறிவித்துள்ளார்.

"புந்திஒன்றி நினைவார் வினையாயின தீரப்பொருளாய
அந்திஅன்ன தொருபேர்ஒளி யான்அமர்கோயில்
[அயல்எங்கும்
மந்திவந்து கடுவன்னொடு கூடிவணங்கும் வலிதாயம்
சிந்தியாதவர் தம்மொடும்வெந் துயர்தீர்தல் எளிதன்றே".

—முதல் திருமுறை

---

புந்தி - மனம். மற்று என்பது இடைச்சொல், பொருள் இல்லை. அல்லல் - துன்பம்தரும். மல்கிட - பெருக. உள்கும் - நினைக்கும் - மந்தி - பெண் குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. இயன்ற - பொருந்திய நறு - நல்ல மணமுடைய. மா - சிறந்த. ஏத்த - போற்ற. கழல் - திருவடி. இலங்கும் - விளங்கும். அடும் - வருத்தும். எளிதன்று - சுலபம் அன்று.

சீர்காழி தாழைகள் நிறைந்த கடல் கரையைச் சார்ந்தது என்றும், இப்பதிகத்தை இசையுடன் பாட வல்லவர்கள் வான் உலகில் உயர்ந்து விளங்குவர் என்றும் ஈற்றுப் பாடலில் அறிவித்துள்ளனர்.

இத்தலத்து முருகர் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ஒன்றே உளது.

மருமல்லி யார்குழலின் மடமாதர்
மருள்உள்ளி நாயடியன் அலையாமல்
இருநல்ல வாகுமுன தடிபேண
இனவல்ல மானமன தருளாயோ
கருநெல்லி மேனிஅரி மருகோனே
கனவள்ளி யார்கணவ முருகேசா
திருவல்லி தாயம்அதில் உறைவோனே
திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே.

—திருப்புகழ்

---

மரு - வாசனை. குழல் - கூந்தல். மடமாதர் - இளைய பெண்கள். மருள் - மயக்கம். பேண - போற்ற. உள்ளி - நினைவு கொண்டு. உறைவோனே - வாழ்வோனே.

# 22. வடதிருமுல்லைவாயில்

சோழ நாட்டில் திருமுல்லைவாயில் என்னும் ஒரு தலமுள்ளது, அது தென் திருமுல்லைவாயில். அதற்கு வடக்கே இத்தலம் இருத்தலின் இது வட திருமுல்லைவாயில் எனப்பட்டது. இத் தலத்தின் சிறப்பு முல்லை மலரினுல் அமைதலின், இது முல்லை வாயில் எனப்பட்டது. சண்பகாரண்யம் என்றும் இதனைக் கூறுவர். முல்லைக்கொடி இங்கு விசேடம் என்னும் குறிப்புச் சுந்தரர் பாடியுள்ள இத் தலத்துப் பதிகத்தின் பத்தாவது பாடலின் வழி நன்கு தெளிவாகின்றது. அதாவது தொண்டைமான் இங்கு வேட்டை ஆட வந்தனன். அதுபோது அவனது யானை முல்லைக் கொடியில் சிக்கிக் கொண்டு மேலே அடியெடுத்து வைக்க முடியாமல் தத்தளித்தது. அதனைக் கண்ட தொண்டைமான் தனது வாளினுல் முல்லைக் கொடிகளைச் சேதித்தனன். அப்படிச் சேதித்த போது இறைவர் அங்குத் தோன்றிக் காட்சி அளித்தனர். அவனுக்குத் திருவருளும் புரிந்தனர். இந்தக் குறிப்புத்தான்,

> ''சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
> சூழ்கொடி முல்லையால் கட்டிட்
> டெல்லையில் இன்பம்அவன்பெற வெளிப்பட்
> டருளிய இறைவனே என்றும்
> நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்
> நாதனே நடைவிடை ஏறீ
> பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
> பாசுப தாபரஞ் சுடரே''

என்னும் பாட்டில் பெறப்படுகிறது,

---

சொல்லரும் - சொல்லி முடியாத. களிற்றை - யானையை. எல்லை - அளவில்லாத. பரவும் - போற்றும். நரைவிடை - வெள்ளிய எருது.

இங்குள்ள இறைவர், தொண்டைமான் வீசிய வாளினால் சிறிது தாக்கப்பட்டதை இன்றும் இலிங்கத்தில் காணலாம். அப்பகுதி சந்தனக் காப்பினால் மறைக்கப்பட்டுள்ளது. இறைவர் தீண்டாத் திருமேனியுடையர் என்றும் கூறுவர்.

முருகப் பெருமான் இத் தலத்து இறைவரைப் பூசித்துப் பேறு பெற்றுள்ளார். இங்குள்ள கோயிலுள் இரண்டு எருக்கமரத் தூண்கள் உள்ளன. இவை தொண்டைமான் சக்கரவர்த்தியால் கொடுக்கப்பட்டவை. முருகப் பெருமானே அன்றிச் சோழன், பிரமன், இந்திரன், ஐராவதம், திருமால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தூர்வாசர், பிருகு, சித்ரகருமன், சம்புதாசன், குசலவர், சாமதேனு, வசிட்டர் முதலியோரும் பூசித்துள்ளனர். இது பெரிய கோவில், இதன் கோபுரமும் பெரியது. இங்குள்ள நந்திதேவர் தொண்டைமான் சக்கரவர்த்திக்குப் போரில் துணையாகச் சென்றனர் என்றும் கூறுவர். இதனால் இங்குள்ள நந்தி, துவஜஸ்தம்பத்தைப் (கொடி மரத்தை) பார்த்த வண்ணம் இருத்தலையும் கண்டு மகிழலாம். இரஷப உற்சவ மூர்த்தியும் 'இக் கோவிலில் உண்டு. கோவிலுக்குத் தெற்கே பச்சை அம்மன் கோவில் ஒன்று உளது. இவ்வம்மை சக்தி வாய்ந்தவள். இறைவரது திருப்பெயர் மாதிலாமணி ஈஸ்வரர், பாசுபத ஈஸ்வரர் என்பன. இறைவியார் பெயர் கொடி இடை நாயகியார் என்பது. இதனைச் சுந்தரர் "கொடி இடை உமையவள்" எனத் தம் இரண்டாவது பாடலில் குறிப்பது கொண்டு தெளியலாம். இங்குள்ள தீர்த்தம் பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தம் என்பன. பாலாறு இத்தல வழியாகச் சென்று இது போது வறண்ட மணல் வெளியாக இருப்பதை இன்றும் காணலாம். இங்குள்ள இறைவியாரின்

கோவில் விஜய நகரத்து அரசரால் கட்டப்பட்டது. இறைவர் கோவில் ஆதொண்டைச் சக்ரவர்த்தியால் கட்டப்பட்டது. இங்குச் சித்திரை மாதம் பெருவிழா நடைபெறும். இவ்விழா முதல் முதல் பிரம்ம தேவரால் நடத்தப்பட்டதாகக் கூறுவர். ஒன்பதாம் நாள் நடக்கும் முல்லை அடி சேவை விசேடமானது. இத் தலத்திற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்று உளது.

இஃது எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. இதன் பண் தக்கேசி. இக்காலத்து காம்போதி இராகம் என்று இதனை ஒருவாறு கூறலாம்.

இத்தலத்து இறைவருக்கு வெந்நீர் அபிடேகம் நடைபெறும். இறைவர் திருப்பெயர் மாசிலாமணி ஈஸ்வரர் என்பதைச் சுந்தரர் பதிகத்தின் வாயிலாகவும் அறியலாம், 'முல்லை வாயிலாய் மாசிலாமணியே' என்று பதிகத்தின் ஐந்தாவது பாடலில் வருதல் காண்க.

இறைவர்க்குப் பாசுபதேஸ்வரர் என்னும் பெயர் உண்மையை ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'பாசுபதா பரஞ்சுடரே' என்று விளித்திருப்பதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

திருமுல்லைவாயில் பாலாற்றங் கரையின் வடபால் உளது என்பதையும் சுந்தரர் தம் பாடலில் "வட கரை முல்லை வாயிலாய்" என்று பாடி அறிவித்தலையும் காண்க.

பிரம்ம சூத்திரத்திற்குச் சிவ பரத்துவ முறையில் பெருவிளக்க உரை எழுதிய நீலகண்ட சிவாசாரியார் திருஉருவம் இக் கோயிலில் உண்டு. அவருக்கும் பூசையும் உண்டு.

இத்தலம் அம்பத்தூர் ஸ்டேஷனுக்கு இரண்டு கல் தொலைவில் உள்ளது. இதுபோது பஸ் போக்கு

வரவு மிகுதியும் உண்டு. ஆவடி ரயிலடி வழியாக வும் இத்தலத்தை அடையலாம்.

இத் தலத்துக் கல் வெட்டுகளால் நாம் அறியத்தக்க குறிப்புகள்: இத் தலத்தில் சோழர் பாண்டியர் நாயக மன்னர் காலங்களில் செதுக்கப் பட்ட கல் வெட்டுகள் உண்டு. பார்த்திவேந்திர வர்மன் காலத்துக் கல் வெட்டுகளும் இருக்கின்றன.

மழவராயன் மகளாராகிய கண்டராதித்த பெருமாள் மனைவியாராம் செம்பியன் மாதேவியார் அம்பத்தூராரிடமிருந்து நிலம் வாங்கித் திருமுல்லை வாயில் கோவிலுக்கு அளித்துள்ளனர். மண்டபத் தூண் கல் வெட்டு அந்த மண்டபம் கட்டப்பட்ட குறிப்பை அறிவிக்கிறது. ஜாடவர்மன் சுந்தர பாண்டிய தேவனின் கல் வெட்டுப் புழல் கோட்டத்தை விக்ரம சோழ வள நாடு என்று குறிப் பிடுகிறது.

இத்தலத்துச் சுந்தரர் பாடல், சுந்தரரின் வாழ்க் கைக் குறிப்புகளுள் சிலவற்றை நன்கு தெரிவிக்கும் முறையில் அமைந்துளது.

இவர் தம் கண் பார்வை இழந்து பெரிதும் வருந்திய நிலையை, "பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்" என்று பாடல்களின் இறுதிதோறும் பாடி இருப்பதனுல் உணரலாம். இவருக்குக் கண் பார்வை அருளும்படி, "தமிழால்பாடுவேற்கு அருளாய்" என்று முறை இடுவது சிந்தனைக்கு விருந்தாக உள்ளது. இதனுல் தமிழில் வேண்டுகோள் விடுத்தால் இறை வர் அருள்செய்வார் என்பது குறிப்பு. இறைவர் தமது கண் பார்வையை அழித்ததற்குக் காரணம், திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியார்க்குக் கூறிய சத்தியத்தைப் பிழைத்ததனுல் என்பதையும் "தண் பொழில் ஒற்றிமாநகருடையாய் சங்கிலிக்கா என் கண்கொண்ட பண்பா" என்று கசிந்து உருகிப் பாடி அறிவித்து இருப்பதுகொண்டு அறிக. சுந்தரர் தமது

குற்றத்தை உணர்ந்து இறைவரிடம் முறையிட்டதை யும் ''மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினும் குணம் எனக் கொள்ளும் கொள்கையால் மிகபல செய்தேன்'' என்று பாடி இருத்தலையும் படித்து அவர் உள்ளக் கசிவை உணரவும். இவற்றோடு, இறைவர் இவரைத் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட நிலையினையும் 'நம்பனே, அன்று வெண்ணெய் நல் லூரின் நாயினேன் தன்னை ஆட்கொண்ட சம்புவே' என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளதையும் அறிக.

சுந்தரர் சிவனுரது திருவருளைப் பெற்ற மகிழ்ச்சி யினுல் தாம் வாழ்ந்த நிலையினையும் அழகுற, "திருவும் மெய்ப்பொருளும் செல்வமும், எனக்கு உன் சீருடைக் கழல்கள் என்று எண்ணி, ஒருவரை மதியாது உருமைகள் செய்தும் ஊடியும் உறைப்ப னுய்த் திரிவேன்'' என்று பாடுதலையும் காண்க.

இத்தலத்து இயற்கை அழகு,

''முருகமர் சோலைசூழ் திருமுல்லை வாயில்''

''செண்பகச் சோலைசூழ் திருமுல்லை வாயில்''

''பொன்நலம் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலம் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நலம் கழனி சூழ்திரு முல்லை''

''திணிபொழில் தழுவு திருமுல்லை வாயில்''

''திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயில்''

என்று இயம்பப்பட்டிருக்கிறது.

---

உருமைகள்-பற்றுமை. ஊடி-பிணங்கி. உறைப்பனுய்-அழுந்திய பற்றுடையனுய். முருகு - தேன். அம் - அழகு. விரை-மணம். மருவி-கலந்து. பொறி-புள்ளிகள். அலவன்-வண்டு. திணி பொழில் - நெருக்கமாக உள்ள சோலை. திரை - அலை.

இப் பதிகத்தில் திருவொற்றியூர் 'தண்பொழில் ஒற்றி மாநகர்' எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிகம் திருமுல்லைவாயிலின் தலச் சிறப்பைப் புகழும்போது,

"தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயில்"

"மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய
வார்குழல் மாமயில் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயல் கண்ணார்
அருநடம் ஆடல்அருத * * திருமுல்லைவாயில்"

"செம்பொன்மா மாளிகைசூழ் திருமுல்லை வாயில்"

"செல்வத் திருமுல்லை வாயில்"

"நல்லார் பரவும் திருமுல்லை வாயில்"

என்று புகழ்ந்துள்ளது.

இத்தலம் பாலாற்றங்கரையின் வடகரையில் இருந்தது என்னும் குறிப்பு,

"சந்தன வேரும் கார்அகில் குறடும்
தண்மயில் பீலியும் கரியின்
தந்தமும் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளும் சுமந்துகொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை வாயில்"

என்னும் வரிகளில் தெரிய வருகின்றது.

இத்தலத்து இறைவர் பல்கலைப் பொருள் என்று சிறப்பிக்கப் பட்டுள்ளனர். இவரது ஆட்டம் இலயம் சதி பிழையாமல் உமாதேவியார் காண

---

மணிகெழு-அழகு பொருந்திய. வார்குழல்-நீண்டகூந்தல். சாயல் - மென்மைத் தன்மை. அணி - அழகு. கொங்கை - முலை. அம் - அழகு. அரு நடம் - அருமையான நடனம். பரவும் - போற்றும். கரி - யானை. குறடு - கட்டை. கார் - கரிய. தரளக்குவை - முத்துக்குவியல். உந்தி - தள்ளி. இழி - பாயும். பாலி - பாலாறு.

ஆடப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை, "கூடிய இலயம் (பல திறன்கள் கூடிய கூத்து) சதி (தாளம்) பிழையாமைக் கொடி இடை உமையவள் காண ஆடிய அழகா" என்னும் வரியால் அறிந்து கொள்ளலாம். உமாதேவி அஞ்சியதால் யானையைக் கொன்று அதன் தோலை உரித்தார் என்றும் கூறப் பட்டுள்ளது. "மாதர் வெருவிட (அஞ்ச) வேழம் (யானை) அன்று உரித்தாய்" என்னும் வரியைக் காண்க.

சுந்தரர் தமது தொண்டை "பாடிப் பரவிடும் அடியேன்" என்றும், "திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன்" என்றும், "திருப்புகழ்விருப்பால் பன் னலத்தமிழால் பாடுவேன்" என்றும் "எல்லியும் பகலும்பணியது செய்வேன்" என்றும் "உன்னைத் தேடித் திரிவேன்" என்றும் பாடி உணர்த்தி இருப்ப தையும் காண்க.

இறுதிப் பாட்டில் இந்தப் பதிகத்தின் பத்துப் பாடல்களையும் உள்ளம் குளிர்ந்து போற்ற வல்லார் கள் நரை, திரை, மூப்பு, நடலை இன்றி விண்ணவர்க் கரசராகத் தேவலோகம் செல்வர் என்னும் பயனைக் குறிப்பிட்டுள்ளனர். இக்கருத்தை,

"உரைதரும் மாலைஓர் அஞ்சினோ டஞ்சும்
 உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
 நண்ணுவர் விண்ணவர்க் கரசே"

என்னும் வரிகளில் காண்க.

---

நரை - முடிவெளிப்பு. திரை - உடல் தசை அலைபோல் அலைதல். நடலை - நடுக்கம்.

"திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனுய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினுல் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே"

"மட்டுலாம் மலர்கொண் டடியிணை வணங்கும்
மாணிதன் மேல்மதி யாதே
கட்டுவான் வந்த காலனை மாளக்
காலினுல் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயில்
செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே"

—ஏழாம் திருமுறை.

திருமுல்லைவாயில் முருகப் பெருமான்மீது அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ் மூன்று. அவற்றுள் ஒன்று,

---

திரு-வீட்டின்பம். உறுமை-பற்றுமை, ஊடி-பிணங்கி. உறைப்பனுய் - உறைந்த பற்றுடையவனுய், முருகு - தேன், மணம், மட்டு - தேன். உலாம் - உலாவும். மாணி - மார்க்கண்டேயர். செகுத்த - அழித்த. சிட்டனே - சிரேட்டனே. பகர்ந்த - உபதேசித்த. மறை - வேதம். பட்டனே - ஆசாரியனே.

சோதி மாமதி போல்முக மும்கிளர்
    மேரு லாவிய மாமுலை யுங்கொடு
    தூர வேவரும் ஆடவர் தங்கள்முன் எதிராயே
  சோலி பேசிமுன் ளுளில்இ ணங்கிய
    மாதர் போலிரு தோளில்வி ழுந்தொரு
    சூதி னுல்வர வேமனை கொண்டவ ருடன்மேவி
மோதி யேகனி வாய்அத ரம்தரு
    நாளி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
    மோன மாய்அவ மேசில சண்டைக ளுடனேகி
  மோச மேதரு தோதக வம்பியர்
    மீதி லேமய லாகிம னம்தளர்
    மோட ளுகிய பாதக னுங்கதி பெறுவேனே
ஆதி யேஎனும் வானவர் தம்பகை
    யான சூரனை மோதிய ரும்பொடி
    யாக வேமயி லேறிமு னிந்திடு நெடுவேலா
  ஆயர் வாழ்பதி தோறுமு கந்துரல்
    ஏறி யேஉறி மீதளை யும்கள
    வாக வேகொடு போதநு கர்ந்தவன் மருகோனே
வாதி னுல்வரு காளியை வென்றிடும்
    ஆதி நாயகர் வீறுத யங்குகை
    வாரி ராசனு மேபணி யும்திரு நடபாதர்
  வாச மாமல ரோனெடு செந்திரு
    மார்பில் வீறிய மாயவ னும்பணி
    மாசி லாமணி யீசர்ம கிழ்ந்தருள் பெருமாளே.

—திருப்புகழ்.

---

மாமதி - சிறந்த சந்திரன், அதரம் - உதடு, அளை - வெண்ணெய், ஆதி நாயகர் - சிவபெருமான், சோலி - தங்கள் வியாபாரப் பேச்சை, அவமே - வீணுக, தோதக வம்பியர் - வஞ்சனை செய்யும் பெண்டிர், மோடன்-மூடன். நுகர்ந்தவன் - உண்டவனுகிய கண்ணன், வாரி ராசன் - கடல் தலைவனுன வருணன், மாமலரோன் - சிறந்த தாமரையில் வீற்றிருக்கும் பிரமன், திரு - இலக்குமி.

# 23. திருவேற்காடு

இத் தலத்திற்கு வேலமரம் தல விருட்சம். ஆகவே, இது திருவேற்காடு எனப்பட்டது. இத் தலத்தை முருகப் பெருமான் சூரபதுமனைக் கொல்லும் பொருட்டு இறைவரது ஆசிபெறப் பூசித்துள்ளனர். முருகப் பெருமான் பிரமனைச் சிறை யிட்டதால் இறைவரைப் பூசித்து மன்னிப்பு வேண்டிய தலம். இங்கு முருகன் சிவலிங்கத்தை வழிபாடு செய்யும் கோலத்தில் நின்றிருப்பதைக் காணலாம். குமரன் வேல் ஏந்திய வேலனுகவும் காட்சி அளிக்கின்றுன். அகத்தியர்க்கு இறைவர் தாம் உமாதேவியை மணந்து கொண்டபோது, அக்கோலத்துடன் காட்சி தந்த தலங்கள் சில உண்டு. அங்ஙனம் காட்சி தந்த தலங்களுள் திருவேற்காடும் ஒன்று. இவ்வுண்மையினை இன்றும் மூலத்தானத்திற்குப் பின் உமா மகேஸ்வரர் திருக்கோலம் அமைந்திருப்பதைக் கண்டு களிக்கலாம். அதாவது கல்யாண சுந்தரராக விளங்கும் காட்சியைக் காணலாம். இத்தலம் கூவ நதிக் கரையில் உளது. இந்நதியைப் பாலி நதி என்றும் கூறுவர். இங்குள்ள விநாயகப் பெருமானிடம் திருமால் விகடக் கூத்தாடி அவரிடமிருந்து பாஞ்சசன்யம் என்னும் சங்கைப் பெற்றதாகவும் கூறுவதுண்டு. இங்கு அகத்தியர், சூத முனிவர் உருவங்கள் இருக்கின்றன.

இத் தலத்து இறைவர் வேற்காட்டீஸ்வரர், வேதபுரீஸ்வரர் என்றும், இறைவியார் வேற்கண் அம்மை, பாலாம்பிகை என்றும் கூறப்படுவர்.

இங்கு வேதங்கள் வெள் வேலமரமாக விளங்க அதன் அடியில் பாலாம்பிகையுடன் வேதபுரீசர் வீற்றிருக்கின்றுர். இப்பெருமான் கயிலையில் நடந்த திருமணக் கோலத்துடன் வீற்றிருந்து அகத்திய

ருக்குக் காட்சி அளிப்பதால் இது திருமறைக் காட்டுக்கு ஒப்பு எனப்படும்.

திருமறைக் காட்டில்தான் (வேதாரண்யத்தில்) இறைவர் அகத்தியர்க்கு மணக்கோலக் காட்சியைக் காணச் செய்தனர்.

இத்தலத்துப் பாலாம்பிகையையும், திருவலி தாயம் செகதாம்பிகையையும் திருஒற்றியூர் வடி வாம்பிகையையும் ஒரே நாளில் வழிபடுபவர்கள் இப் பிறப்பிலும் மறு பிறப்பிலும் எல்லா நலன்களையும் வளன்களை யும் பெறுவர்.

இத் தலத்தில் விஷம் தீண்டுவதில்லை. அதாவது விடப் பயம் இல்லை என்பதாம். விநாயகர், முருகப் பெருமான், திக்குப் பாலகர்கள், திருமால், பிரமன் முதலியோர்கள் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர்.

தீர்த்தம் வேலாயுத தீர்த்தம். இது வற்றுத நீரையுடையது. இந்தத் தீர்த்தம் முருகப்பெருமான் தன் வேலாயுதத்தால் தோண்டித் தோற்றுவித்த தீர்த்தம். இதில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமை, திங்கட்கிழமைகளில் குளித்து வந்தால் எல்லா நோய்களும், தீவினைகளும் நீங்கும். மற்றொரு தீர்த்தமும் இங்கு உண்டு. அது வேத தீர்த்தம் எனப்படும். இதில் ஞாயிறுதோறும் நீராடினல் குட்ட நோய் நீங்கும் என்று கூறப்படுகிறது.

இங்குச் சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமி யில் நடக்கும் சந்திப்பு விழா மிகச் சிறப்பானது. இத்தலம் ஆவடி இரயில் நிலையத்திலிருந்து தெற்கே நாலு கல் தொலைவில் உள்ளது. இடையில் காடு வெட்டி ஆற்றைக் கடக்க வேண்டும். பஸ் போக்கு வரவும் உண்டு. ஆனல் பஸ் கோயில் வரையில் செல்லாது. கருமாரி அம்மன் கோயில் வரையில் செல்லும். இவ்வம்மையாரையும் வணங்கி அரை மைல் நடந்தால் இத் தலத்தை அடையலாம்.

இத் தலத்திற்கும் மூர்க்க நாயனூர்க்கும் தொடர்பு உண்டு. இவரது திருவுருவம் இங்கு உளது. இவர் பிறந்த ஊர் இதுவே. இவர் வேளாள மரபினர். இவர் தினமும் அடியார்களுக்கு உணவு அளித்த பின்பே உண்ணும் கடப்பாடு உடையவர். இவர் உணவு அளிப்பதை அறிந்த அடியார்கள் பலர் இவர் இல்லம் வந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் உணவு படைத்துவந்ததால் இவரிடமிருந்த பொருள்கள் செலவாகிவிட்டன. இதனுல் இன்னது செய்வது என்பதை அறியாது திகைத்தனர். நாயனூர் இத்தகைய அடியார் பத்தியில் சிறந்தவராயினும், இவரிடம் ஒரு தீய பழக்கம் இருந்து வந்தது. அதாவது சூதாடுவது, அதன் மூலம் பொருள் சம்பாதித்து அப் பொருளைக் கொண்டு அடியார்கட்கு உணவளிக்கத் திட்டமிட்டனர். ஆனுல், தாம் பிறந்த திருவேற் காட்டில் தம்மோடு சூதாடுவாரைக் காண முடியவில்லை. ஆகவே, அவ்வூரை விட்டுப் பல இடங்களுக்குச் சென்று சூதாடி வென்று அதனுல் கிடைத்த பொருளைக் கொண்டு அடியார்கட்டு உணவு அளித்து வந்தனர். இந்நிலையில் கும்பகோணத்தை அடைந்தார். அங்குச் சிற்சில சமயங்களில் தோற்றும் போவார்; பின் வெற்றிமேல் வெற்றி காண்பர். ஆட்டத்தில் மாறு பட்டவரைத் தம் வாளால் குத்துவார். இதனுல்தான் இவர் மூர்க்கர் என்னும் பெயரைப் பெறுவாராயினர். இவர் அடியார் கட்கு அமுது படைத்து வந்த காரணத்தால் மூர்க்க நாயனூர் என அழைக்கப்பட்டார்.

சூதாட்டத்தில் வந்த பொருளைத் தம் குடும்பத்திற்குப் பயன் படுத்தினூர் இல்லை. அடியார்களை உண்பித்த பின்பே கடைசியில் உண்டு மகிழ்வர்.

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடியுள்ள பதிகம் ஒன்றே உளது. இஃது ஆசிரியத் துறையால் ஆனது. இதன் இலக்கணம் திருஓத்தூர்ப் பதிகத்தில் கூறப்பட்டது. இதன் பண் பழந்தக்க ராகம். இஃது இக்காலத்து அரபி இராகம் போன்றது என்பர்.

இத் தலத்தின் மாண்பைக் கூறவந்த திருஞான சம்பந்தர்,

"வேற்காடு, உள்ளி யார்உயர்ந் தார்இவ் வுலகினில்
தெள்ளி யார்அவர் தேவரே".

"வேற்காடு, பாடி யும்பணிந் தார்இவ் வுலகினில்
சேடர் ஆகிய செல்வரே".

"வேற்காடு, போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே".

"வேற்காடு, தாழ்வு டைமனத் தார்பணிந் தேத்திடப்
பாழ்ப டும்அவர் பாவமே".

"வேற்காடு, பாட்டி னல்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னார்வினை ஒல்லையே".

"வேற்காடு, நூலி னல்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே".

"வேற்காடு, சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே".

---

உள்ளியார் - நினைந்தவர். தெள்ளியார் - அறிவு தெளிந்தவர். சேடர் - பெருமையுடையவர். போது - மலர். சாந்து - சந்தனம். புகை - தூபம். பழங்காலத்தில் கற்பூரம் கொளுத்தப்படவில்லை என்பதை அறியவும். ஏதம் - துன்பம். எய்துதல்-வந்தடைதல். ஏத்திட-துதித்திட. ஒல்லை-விரவில். நூலினல் - ஆகம நூலின் முறைப்படி. மாலினர் - மயங்கிய ஆன்மாக்கள். வினை - பாவம். தீர்க்கமே - நிச்சயம்.

"வேற்காடு, வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே"

"வேற்காடு, ஈறி லாமொழி யேமொழி யாஎழில்
கூறி னூர்க்கில்லை குற்றமே!"

என்று கூறியுள்ளனர். "ஈண்டுத் தமிழ் மொழியை ஈறு (அழிவு) இலா மொழி" என்று குறிப்பிட்டிருப்பதை நன்கு உணரவும். வடமொழி இக்காலத்தில் வழக்கற்ற மொழி என்று கூறப்படுவதை நினைவு கொள்க. அவர் காலத்திலும் அஃது அந்நிலை உற்றது போலும்! அதனை உட்கொண்டுதான் தமிழை "ஈறிலா மொழி" என்றனர் என்க.

இறைவர் வெள்வேல மரத்தடியில் வீற்றிருக்கும் குறிப்பு "வேலினால் உறை வேற்காடு" என்னும் வரியால் விளங்குகிறது. இறைவர் "வேதவித்தகன்" "மாறி லாமல ரானொடு மால்அவன் வேறலான்" என்று குறிக்கப் பெறுகிறார்.

இத்தலத்தின் இயற்கை அழகு "விண்ட மாம் பொழில் சூழ்திரு வேற்காடு" என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், இப்பதிகத்தில் மற்றும் பல உண்மைகளை உணர்த்தி யுள்ளனர் புகலியார். "நாம் உயர்ந்தவற்றையே எண்ண வேண்டும். அப்படி எண்ணினால் நற்கதி உண்டாகும்" என்கிறார். "ஒள்ளிது உள்ளக் கதிக்கு ஆம்" என்னும் தொடரைக் காண்க.

---

வாரம்-அன்பு. கழல்-திருவடி. எழில்-அழகு. உறை-தங்கி இருக்கும். வித்தகன் - அறிஞன். மலரான் - பிரமன். விண்ட - மலர்ந்த. மாம்பொழில் - மாஞ்சோலை. ஒள்ளிது - உயர்ந்தது. உள்ள - நினைக்க. கதி - நல்லநிலை.

இப்பதிகத்தில் உபதேச முறையில் அமைந்த பாடல் ஒன்று உண்டு. அது,

"பரக்கி ணர்படு வெண்தலை யில்பலி
விரக்கி ளன் உறை வேற்காட்டூர்
அரக்கன் ஆண்மை அடரப்பட் டான்இறை
நெருக்கி ளனை நினைமினே".

என்பது.

திருஞான சம்பந்தர், தம் தமிழைச் செந்தமிழ் என்றும், அத் தமிழால் இறைவரைப் பாட நல்ல குணங்கள் உண்டாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இப் பதிகத்தில் 'சமண பௌத்தர்களைப் பற்றிய குறிப்பு இல்லை.

"ஆடல் நாகம் அசைத்தள வில்லதோர்
வேடம் கொண்டவன் வேற்காடு
பாடி யும்பணிந் தார்இவ் உலகினில்
சேடர் ஆகிய செல்வரே".

—முதல் திருமுறை

இத்தலத்து முருகன்மீது பாடிய திரும்புகழ் இரண்டு. அவற்றுள் ஒன்று,

---

பரக்கிணர் - அலைந்து திரிந்தவர்கள் (பிரம விஷ்ணுக்கள்). படு - இறந்த. வெண்தலை - மண்டை ஓடு. பலி - பிச்சை. விரக்கிளன் - சாமர்த்திய முடையவன். அரக்கன் - இராவணன். ஆண்மை - செருக்கு, வீரம். அடர் - அழிதல். இறை - சிறிது. ஆடல் - படம் எடுத்து ஆடும். அசைத்து - இடுப்பில் கச்சாகக் கட்டி. சேடர் - பெருமையுடையவர்.

ஆலம்போல் எழுநீல மேலங்காய் வரிகோல
மாளப்போர் செயும்மாய விழியாலே
ஆரம்பால் தொடைசால ஆலுங்கோ புரவார
ஆடம்பார் குவிநேய முலையாலே
சாலந்தாழ் வுறுமால ஏலங்கோர் பிடியாய
வேளங்கார் துடிநீப இடையாலே
சாரஞ்சார் விலறுய நேகங்கா யமன்மீறு
காலந்தான் ஒழிவேது உரையாயோ
பாலம்பால் மணநாறு காலங்கே யிறிலாத
மாதம்பா தருசேய வயலூரா!
பாடம்பார் திரிசூல நீடந்தா கரவீர
பாசந்தா திருமாலின் மருகோனே!
வேலம்பார் குறமாது மேலும்பார் தருமாதும்
வீறங்கே இருபாலும் உறவீறு
வேதந்தா அபிராம நாதந்தா அருள்பாவு
வேலங்கா டுறைசீல பெருமாளே.

—திருப்புகழ்

---

ஆலம் - விடம்; வரிகோலம் - இரேகைகள் கொண்டு; ஆரம் - முத்துமாலை. தொடை - மாலை. ஆலும் - அசையும். சால்+அம்=சாலம் - மிகவும் அழகுடைய. மால - ஆசை தரக் கூடியதாய். ஏல் - பொருந்தி. வேள் - விருப்பம். துடி நிபம் - உடுக்கை போன்ற. (நிபம், நீபம் என நீண்டது) அம்பால் - கடல் நீரால். மாது அம்பா - உமாதேவி. இறி விலாத - ஈறு இல்லாத. சேய - குமரனே. பாடு - பெருமை வாய்ந்த. பாசம் - பக்தி. உம்பார் தருமாது - தெய்வ யானை. அபிராமன் - அழகன்.

## 24. மயிலாப்பூர்

இது மயிலாப்பூர், திருமயிலை எனவும் வழங்கப் பெறும். இறைவி இறைவரை இங்கு மயிலாக வடிவு கொண்டு பூசித்த காரணம்பற்றி இப்பெயர் பெற்றது. அப்பர் இத்தலத்தை மயிலார்ப்பு என்று குறிப்பிடு கின்றார். மேலும் அவர் இவ்வூர் மேகமும் சந்திர னும் தவழக்கூடிய அவ்வளவு உயரமான மாடங்களை (வீடுகளை) உடையது என்றும், நல்ல மாட வீதிகளை யுடையது என்றும், குறிப்பிட்டுள்ளார். இதனை, "மங்குல் (மேகம்) மதி தோயும் மாடவீதி மயிலாப்பு" என்னும் அவர்தம் திருவாக்கால் உணரவும். மயி லின் ஓசை மிகுதியும் இவ்வூரில் இருந்ததால் மயி லார்ப்பு எனவும்படும். ஆர்ப்பு என்பது ஓசை. ஊரின் பெயர் மயிலை. கோவிலின் பெயர் கபாலீச்சுரம். அம் மையார் மயிலாகப் பூசிப்பதை வடக்கு வெளிப் பிராகா ரத்தில் புன்னை மரத்தடியில் உள்ள சிறு கோவிலில் இன்றும் கண்டு களிக்கலாம் பூசையின் பயனாக அம்மையார் மயிலுருவம் நீங்கிச் சுயவடிவினில் இறை வரை மணந்தனர். இராமபிரானும் இத்தலத்தை வழிபட்டு ஐப்பசி ஓணத் திருவிழா நடத்தியதாக அறியப்படுகிறது. ஓணத் திருவிழா நடந்த குறிப்பு. "ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவும்" என்று திருஞானசம்பந்தர் தம் பதிகத்திலும் குறிப்பிட் டுள்ளனர். ஓண விழாவே அன்றிக் கார்த்திகை தீப விழாவும், மார்கழி திருவாதிரை விழாவும், தைப்பூச விழாவும், மாசி மக விழாவும், பங்குனி உத்திர விழா வும், (இவ்விழா இதுபோதும் மிகமிகச் சிறப்பாக இங்கு நடத்தப்படுகிறது. மூன்றும் நாள் அதிகார நந்தி சேவையையும், ஐந்தாம் நாள் இரடபவாகன சேவை யையும், ஏழாம்நாள் தேர்விழாவையும், எட்டாம்நாள் அறுபத்துமூவர் விழாவையும், பத்தாம் நாள் புன்னை மரத்தடியில் இறைவிபூசித்து மணம்செய்துகொண்ட விழாவையும், கண் களிக்கக் கண்டு மகிழவேண்டிய

விழாக்கள் ஆகும்.) சித்திரை அட்டமி விழாவும், வைகாசியில் பொன் ஊஞ்சல் விழாவும், ஆனியில் சாந்தி விழாவும் (விடயாத்தி விழா) நடத்தப் பட்டன என்பதும் திருஞான சம்பந்தர் பாடிய பதி கத்தால் தெரிய வருகின்றது.

இங்குள்ள தேவியார் கற்பகாம்பிகை. நல்ல சக்தி வாய்ந்த அம்மையார். வெள்ளிக்கிழமை இவ்வம்மை யாரைத் தரிசிப்பது விசேடம். அன்று திரள்திரளாக மக்கள் வந்து தொழுது செல்வர். இவ்வம்மை யார்க்கு மலர்ப் பாவாடை செலுத்தி மக்கள் வழி படுவர். இவ்வாறு சாத்துதல் அடிக்கடி நடை பெறும். பிரம்ம தேவரும் பூசித்துப் பேறு பெற்றுள்ள னர். இங்குள்ள முருகப்பெருமான் சிங்காரவேலர் என்னும் பெயருடையவர். இங்குள் ஆறுமுகப் பெருமான் திருவுருவத்தைக் கண்டு வணங்க வேண் டியது நம் கடமை ஆகும். இம்மூர்த்தம் சிறப்புடைய மூர்த்தம்.

மயிலாப்பூரில் வாயிலார் நாயனார் என்பவர் தோன்றினர். இவர் அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஒருவர். இவர் வேளாளர். இவர் தம் உள் ளத்தை இறைவர் உறையும் கோவிலாக்கினர். அறிவாகிய விளக்கை ஏற்றினர். ஆனந்தமாகிய நீரைப் பொழிந்தார். அன்பாகிய அமுதத்தை நிவேதனம் புரிந்தார். இவ்வாறு ஞானபூசை செய் தவர். இதனைச் சேக்கிழார்,

"மறவாமை யால்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்"

என்று பாடி உணர்த்தியுள்ளார்.

---

திருமஞ்சனம் ஆட்டி - அபிடேகம் செய்து. அறவாணர் - சிவபெருமான். அமுது - நிவேதனம். உற - பொருந்த. ஆதி - முதன்மையான சிவபெருமான்.

இவரது ஆலயமும் ஆறுமுகப் பெருமான் கோயில் அருகில் உள்ளது.

திருமயிலையில் சிவநேசச் செட்டியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அப்பெண்ணின் அறிவு, அழகு, வளர்ச்சி முதலானவற்றைக் கண்டு, மகிழ்ந்து அப்பெண்ணைத் திருஞானசம்பந்தருக்கு மணமுடிக்கத் தீர்மானித்துக் கோயிலுக்குப் பூத்தொண்டு செய்ய ஏற்பாடு செய்தார். அம்மகளின் பெயர் பூம்பாவை என்பது. அப்பெண் ஒருநாள் மலர் கொய்கையில் பூ நாகம் தீண்டியதும் இறந்தாள். அவ்விறந்த உடலைச் செட்டியார் எரித்து அதன் சாம்பலையும், எலும்பையும் ஒரு மண் குடத்தில் வைத்துச் சேமித்துப் போற்றி வந்தார். திருஞானசம்பந்தர் அங்குத் தரிசனம் காரணமாக வந்தபோது, அவர் முன் சாம்பற் குடத்தை வைத்து நடந்தவற்றை நவின்றார். திருஞானசம்பந்தர் இரக்கம்கொண்டு "மட்டிட்ட" என்று தொடங்கும் பதிகம் பாடி எலும்பைப் பெண்ணாக்கினார். இந்த விழா இன்றும் பங்குனி உத்திர விழாவின் எட்டாம் நாள் குளக்கரையில் நடைபெற்று வருகிறது. இவ்வம்மையார் உருவமும், ஞானசம்பந்தர் உருவமும் கோபுரத்தின் வடக்குப் பக்கத்தில் உள்ளன.

திருமயிலையில் உலகம் போற்றும் உத்தமராகிய திருவள்ளுவர் கோவில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது. அது முண்டகக் கண்ணி அம்மன் கோவில் தெருவின் அருகில் உள்ளது. மயிலைக் கோயிலுக்கு வடக்கே அரை கல் தொலைவில் உளது.

திருமயிலைக் கோவில் இறைவர் கபாலீஸ்வரர் என்றும், தேவியார் கற்பகாம்பிகை என்றும் கூறப் பெறுவர். விநாயகர் கூத்தாடு விநாயகர். விருஷம் புன்னைமரம். இதனைத் திருஞானசம்பந்தர் "மட்

டிட்ட புன்னையம் கானல்'' என்று கூறுதலால் உணர்ந்து கொள்ளலாம். தீர்த்தம் கபாலி தீர்த்தம். பெரிய குளம். இதுவே அன்றி இராம தீர்த்தம், சித்திரை தீர்த்தங்களும் உண்டு. இத்தலத்திற்கு அமைந்துள்ள மாடவீதி அழகுடையது. இதுகுறித்தே அப்பர், ''மாடவீதி மயிலாப்பூர்'' என்று சிறப்பித்துள் ளனர்.

இதுபோதுள்ள திருமயிலைத் தலம் திருஞான சம்பந்தர் காலத்தது அன்று. அவர் காலத்தில் அது கடற்கரை ஓரத்தில் இருந்தது. அதாவது அலைகள் கோயில் அருகே வந்து வீசும் நிலையில் இருந்தது. இதன் உண்மை, திருஞானசம்பந்தர் ''ஊர்திரை வேலை உலாவும் உயர் மயிலை'' என்று பாடுதலால் பெறப்படுகிறது. எனவே இது சாந்தோம் கெதட்ரல் கோயில் இருக்கும் இடத்தில் இருந்தது. கி. பி. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியர் இக் கோயிலை இடித்து இடித்த இடத்தில் கோட்டை கட்டினர். இக்கோயிலின் கற்கள் இப்போதும் கிறித் தவர்களின் பாதிரிமார் வாழ் இடங்களில் இருப்ப தைக் காணலாம். இவ்வுண்மைகளைக் கீழ்வரும் செய்திகளைக் கொண்டு தெளியலாம்.

மயிலையில் பல கல்வெட்டுகள் இருந்திருக் கின்றன. அவை முற்ற முடிய கிடைத்தில. சிற்சில கல் வெட்டுகள், சாந்தோம் மாதா கோவில் அருகே ஒரு சிறு சிறு கல்வெட்டுத் துண்டுகளாகக் காணப் பட்டன. அவை வட எழுத்தால் இயன்றவை. அவற்றின்மூலம், ''மயிலாப்பூர் சிவன் பார்வதி ஆகிய இவர்களின் கருவறை'' (மூலட்டானம்) என்பதும், ''கூத்தாடுவார் (நடராசப்பெருமான்) திருவுரு முன்பு, ஒரு விளக்கு எரிய நிலம் வரியின்றிக் கொடுக்கப் பட்டதும்'' என்பதும் அறியவருகின்றன. இப்படியே பிஷப் வீட்டு முன் தாழ்வாரத்தில் உள்ள கல்லில்

"திருமயிலாப்பில் உள்ள திருப்பூம்பாவை" என்னும் வரி காணப்படுகிறது. இதனால் பூம்பாவை உருவு கோவிலில் இருந்த உண்மை புலனாகின்றது. சாந்தோமில் காணப்பட்ட சிறுசிறு கல் வெட்டுகள் வழி இதுபோதுள்ள கபாலீச்சுரம் அந்த இடத்தில் இருந்திருக்கவேண்டும் என யூகிக்க வேண்டி இருக்கின்றன. இந்த உண்மையினைத் திருஞானசம்பந்தர் திருவாக்காம் "ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை" எனும் வரிகொண்டு முன்பே நிலைநிறுத்தப்பட்டது. இதனால் சாந்தோமில் இருந்த கிறிஸ்தவர் இக் கோவிலை அழித்து மாதா கோவிலாகக் கட்டிக்கொண்டனர் என்று கருத இடன் இருக்கிறது. இது மேலும் ஆராய்தற்கு உரியது. இப்படிஎல்லாம் காண்கிற போது இதுபோதுள்ள கபாலீசுவரர் கோவில் சம்பந்தர் காலத்தது அன்று என்பது பெறப்படுகிறது. இது போதுள்ள இறைவர் கோவிலிலும், இறைவியார் கோவிலிலும் சிற்சில கல்வெட்டுகள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றிக் காணப்படுகின்றன.

மயிலாப்பூருக்கு அடுத்துள்ள திருவல்லிக்கேணி மயிலைக்கு உள்பட்டது என்னும் உண்மையினைத் திருமழிசை ஆழ்வார், "நீள்ஓதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணி" என்று பாடுதலால் அறியலாம். இவரே அன்றி, திருமங்கை ஆழ்வாரும் இந்த உண்மையினை "தேன் அமர்சோலை மாட மாமயிலைத் திருவல்லிக்கேணி" "மாட மாமயிலைத் திருவல்லிக்கேணி" என்றே பாடி யுணர்த்தி யுள்ளனர்.

திருமயிலைக் கபாலீச்சுரர் கோவில் நவராத்திரி உற்சவத்தையும், அதுபோது நவராத்திரி மண்டப அலங்காரத்தையும் கண்டு களித்தல் வேண்டும். இறைவியாரின் திருக்கோயில் தெற்கு நோக்கியும் இறைவர் மூலட்டானம் மேற்கு நோக்கியும் அமைந்துள்ளன.

திருமயிலையில் கபாலீச்சுரர் கோவிலே அன்றி, மற்றும் சில கோவில்களையும் கண்டு தரிசித்தல் வேண்டும். தெற்கு மாடவீதியில் வெள்ளீஸ்வரர் கோவில் உண்டு. சுக்கிரன் பூசித்த தலம். தேவியார் காமாட்சி அம்மையார். இக்கோவில் விழா சித்திரையில் நடைபெறும். திருமயிலைக் கபாலீச்சுரம், சென்னை எழும்பூரிலிருந்து நாலு கல் கடந்தாலும், சென்ட்ரலிலிருந்து நான்கு மைல் கடந்தாலும் அடையலாம். பஸ் வசதி உண்டு.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இது கலி விருத்தத்தால் ஆனது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. இதன் பண் சீகாமரம். இதனை இக்காலத்து நாத நாமக்கிரியை இசை என ஒருவாறு கூறலாம். இப்பதிகத்திற்கும் திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாற்றிற்கும் தொடர்பு உண்டு. அதாவது, இது பூம்பாவையை எழுப்பப் பாடிய பதிகமாகும். இந்தக் கதைக் குறிப்பு முன்பே கூறப்பட்டது.

திருஞானசம்பந்தர் இத்தலத்தில் பாடிய "மட்டிட்ட" என்று தொடங்கும் பதிகம், இறைவரை நோக்கிப் பாடப்பட்டதாக அமையாமல், இறந்து சாம்பரும் எலும்புமாக இருந்த பூம்பாவையை நோக்கிப் பாடியதாக அமைந்துளது. இதனைச் சிறப்புடன் நோக்குதல் வேண்டும். ஆகவே, இப்பதிகம் கையறு நிலைப்பதிகம் போன்றது என்னலாம். கையறு நிலையாவது இறந்தவர்களிடத்தில் அன்புடையவர்கள் வருத்தப்பட்டுப் பாடுவதாகும். இதனைப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "காணாதே போதியோ" "காணாதே போதியோ" என்று வருதலை நன்கு நோக்குக. இத்தொடரைப் படிக்கும்போது நமக்கே எத்துணை இரக்கம் தோன்றுகிறது! இந்த உண்மையினை உணராமல் இப் பதிகம் இன்பப்

பகுதியை விளக்கும் பதிகம் என்று கூறுதல் பொருந்தாக் கருத்தாகும்.

திருமயிலையின் இயற்கை அழகு,

"மட்டிட்ட புன்னையம் கானல் மடமயிலை"
"ஊர்த்திரை வேலை உலாவும் உயர்மயிலை"
"மடல் ஆர்ந்த தெங்கின் மயிலை"
"கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சுரம்"
"கான்அமர் சோலைக் கபாலீச்சரம்"

என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது. பின் இருவரிகள் கோயிலுடன் இணைந்து இயற்கையின் எழிலை உணர்த்துகின்றன.

இத் தலத்தில் வாழும் பெண்களைப் பற்றிக் கூறுகையில்,

"மாமயிலை, மைப்பயந்த ஒண்கண் மடநல்லார்"
"மாமயிலை, வளைக்கை மடநல்லார்"
"மாமயிலை, மைப்பூசும் ஒண்கண் மடநல்லார்"
"மாமயிலை, மடநல்லார்"

என்று கூறியுள்ளனர். இந்த உண்மையினை இன்றும் இங்குக் காணலாம்.

கபாலீச்சுரம் அமைந்த வீதி "மலிவிழா வீதி" என்றும், கபாலீச்சுரம் "கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்" என்றும், கூறப்பட்டுள்ளன. இத்தலத்து இறைவர், "துளக்கில் கபாலீச்சுரத்தான்" என்றும்,

---

மட்டு - தேன். கானல் - கடற்கரைச் சோலை. மடமயிலை - இளைய மயில்கள் நிறைந்த மயிலை. ஆர்ப்பு (ஒலி) ஊர். ஊர் - கரையில் ஊர்ந்து வரும். திரை - அலை. வேலை - கடல். தெங்கு - தென்னைமரம். கான் - நல்ல மணம். பயந்த-பெற்ற. மலி - மிகுந்த. ஏற்றும் - போற்றும். துளக்கு - அசைதல்.

"கலிவிழா கண்டவன்" என்றும் கூறப்பட்டுள்ள ளனர். மயிலை கடலோரத்தில் இருப்பதனால் இங்குச் செம்படவர் வாழ்வது பொருத்தம் ஆயிற்று. ஆகவே, அவர்களுடைய சேரி "கூர்தரு வேல் வல்லார் கொற் றங்கொள் சேரி" என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. சம்பந்தர் காலத்தில் மயிலை ஒரு துறைமுகப் பட்டின மாக இருந்தது. இந்த உண்மை,

> "அருநி தித்திறம் பெருக்குதற் கருங்கலம் பலவும்
> பொருக டல்செலப் போக்கி அப் பொருட்குவை நிரப்ப
> வருமரக்கலம் மணிப்படப் பணைக்கரை நிரைக்கும்
> இருநி திப்பெருஞ் செல்வத்தின் எல்லையில் வளர்த்தார்"

எனச் சேக்கிழார் சிவநேசரைப் பற்றிக் கூறுவத னாலும், வாயிலார் நாயனார் புராணத்துள் இந்நகரில் அயல் நாடுகளிலிருந்து யானைக் கன்றுகள் கப்பல் களில் கொண்டுவரப்படுகின்றன என்று அறிவிப் பதனாலும் தெரிய வருகிறது.

திருஞான சம்பந்தர் முதல் பாட்டில் இறந்த பெண்ணின் சாம்பலை நோக்கி, "பூம்பாவாய் நீ அடியார்கட்கு அமுது படைக்கும் விழாவாகிய மகேசுவரர் பூசையைக் காணாதே செல்வாயோ? செல் லாது வருக" என்று அழைத்தனர் "இதனை உருத்திர கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரியில் காண்க. உருத்திர கணத்தார் இறைவரின் அடியவர்கள். போதியோ என்பதன் குறிப்புப் போகக் கூடாது என்பது. இம் முதற் பாட்டுப் புரட்டாசி மாதம் மகேசுவர பூசை திருமயிலையில் விசேட மாகக் கொண்டாடப் பட்ட தைக் குறிப்பதாகும். இப்பாடலில் ஆடி ஆவணி

---

வல்லார் - வல்லவர்களான செம்படவர்கள். கொற்றம் - மீன் பிடிப்பதில் அடையும் வெற்றி. கலிவிழா - திருவருள் எழுச்சியை விளைவிக்கும் திருக்கோயில் விழாக்கள். நிதி - செல்வம். கலம் - கப்பல். குவை - குவியல்.

விழாக்களில் இம்மகேசுவர பூசை நடந்திருக்க வேண்டும் என்பதையும் குறிப்பாகக் கொள்ள வேண்டி இருக்கிறது. அப்படிக் கொண்டால்தான் பன்னிரண்டு மாதங்களிலும் இப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ள திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன என்பதை உணர முடியும்.

இரண்டாவது பாட்டில் ஐப்பசிஓண விழாவைக் காணுமலும், அவ் விழாவில் அருந்தவத்தவர்கள் உண்டு களிப்பதைக் காணுமலும் போதியோ என்பது கூறப்பட்டுள்ளது. இஃது "ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவும் காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரியால் அறியப்படுகிறது. ஓண விழா திருமாலுக்குச் சிறப்பாக உரியதாயினும், சிவபெருமானுக்கும் இஃது உரியது என்பது ஈண்டுப் புலப்படுகிறது. திருமால் இராமாவதாரத்தில் இந் நட்சத்திரத்தில் இங்குள்ள இறைவரை வழிபட்டார் என்பது வரலாறு.

மூன்ருவது பாட்டில் கார்த்திகைத் திருவிழாவைக் (விளக்கீடு, அதாவது விளக்கு வரிசை) காணுமல் போதியோ என்று பாடப்பட்டுள்ளது. இவ்விழா மாதர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பது "தளத்து ஏந்து இள முலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்" என்று பாடப்பட்டது கொண்டு தெரிய வருகின்றது. தளத்து ஏந்தும் முலையாவது சந்தனம் பூசப்பட்ட முலை என்பதாம்.

நாலாவது பாட்டில் திருவாதிரை விழாவைக் காணுமல் போதியோ என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதனை "ஆர்திரை நாள் காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரி விளக்குகிறது. ஆர்திரை நாள் திருவாதிரையாகும். இது மார்கழியில் கொண்டாடப்

படுகிறது. திருவாதிரை நட்சத்திரம் சிவனார்க்கே உரிய நட்சத்திரம்.

ஐந்தாவது பாட்டு, வெண்பொங்கல் சமைத்துக் கொண்டாடும் தைப்பூச விழாவைக் காணாது போதியோ என்று கூறுகிறது. தைப் பூசத்தில் நெய் பெய்த பொங்கல் செய்து பூசிக்க வேண்டும் என்பது, "நெய் பூசும் வெண் புழுக்கல்" என்று பாட்டில்வருவதால் அறியலாம். இதனையும் மாதர்கள் சிறப்புடன் கொண்டாடுவர் என்பது "நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்" என்று வருதலால் அறிகிறோம். இந்தக் கருத்துகளை "நெய்ப்பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும், தைப் பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரிகளில் காண்க. ஒண்புழுக்கலாவது வெண் பொங்கல். நேரிழையார் என்பவர்கள் நேர்மையான நகைகளை அணிந்த பெண்கள்.

ஆறுவது பாட்டு, மாசி மாத மக நட்சத்திரத்தில் இறைவர் கடல் ஆடச் செல்லுவதைக் காணாது போதியோ பூம்பாவாய் என்று குறிப்பிடுகிறது. இதனை "மாசிக் கடலாட்டுக் கண்டான்" என்பதனால் அறியலாம். அதுபோது அடியார்களும் கடலுக்குச் சென்று இறைவர் திருவடிகளைத் தொழுது வணங்குவர் என்பது, "அடிகள் பரவி நடமாடும்" என்னும் தொடர் அறிவித்து நிற்கிறது.

ஏழாவது பாடல், "திசைகள்தோறும் உருத்திர பலி கொடுத்துப் பங்குனி உத்திர விழா நடைபெறுமே. அது பேராரவாரத்தோடு நடைபெறுமே. அதைக் காணாது போதியோ?" என்று வினவி நிற்கின்றது. மக்கள் பெரிதும் கூடிப்பாடி ஆரவாரிப்பர் ஆதலின், உத்திர விழாவை ஒலி விழா என்றனர். இதனைப் "பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்திர நாள் ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்னும் வரி உணர்த்துகிறது. பலியாவது திசை தோறும் நடத்தப்படும் உருத்திர பூசை.

எட்டாவது பாடல், சிவகணங்கள் பதினெட்டும் சித்திரை மாதம் அட்டமி திதியில் விழாக் கொண்டாடுவதைக் காணுதே போதியோ என்று அறிவிக்கிறது. இதனைப் "பண்ணுர் பதி னெண்கணங்கள் தம் அட்டமி நாள் கண்ணுரக் காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரியால் அறியலாம்.

ஒன்பதாவது பாடல், பொன் ஊஞ்சல் விழாவைக் காணுமல் போகின்ருயோ என்பதை உணர்த்தி நிற்கிறது. இதனைப் "பொற்ருப்புக் (அழகிய கயிறு கட்டித் தொங்கவிடப்பட்ட ஊஞ்சல் விழாவை) காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரி குறிக்கிறது. தாப்பாவது, கயிறு.

பத்தாவது பாட்டுச் சமணர்களும் பௌத்தர் களும் இழித்துப் பேசப் பவித்திரோஸ்வம் (விட யாத்திவிழா) நடைபெறுவதைக் காணுது போதியோ என்பதை அறிவிக்கின்றது, பெருஞ்சாந்தி என்பத ணல் ஆனி முதல் ஆவணி வரை நடந்தது என்ப தையும் ஒருவாறு ஊகிக்கலாம். இதனைப் "பெருஞ் சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் வரி கொண்டும் தெரியலாம். மகேசுர பூசை இம் மாதங்களில் நடந்தது என்று முன்பு கூறப்பட்டதை யும் பொருளாகக் கொள்க.

இப் பதிகம் பூம்பாவைப் பாட்டு என்று திரு ஞானசம்பந்தரால் குறிக்கப்பட்டுள்ளது. இதனை அவர் "தேன்அமர் பூம்பாவைப் பாட்டாக" என்று கூறுதல்கொண்டு தெளிக. இதற்குக் காரணம் பாடல்தோறும் பூம்பாவாய் என்று வருதலே ஆகும். இப்பதிகத்தின் சிறப்பைக் கூறும்போது சம்பந்தர்

தம்மைச் "செந்தமிழான் ஞானசம்பந்தன்" என்று கூறிக்கொள்கின்றனர். இப் பத்துப் பாடல்கள் நலம் புகழ் பாட்டு என்றும், இதனைப் பாடவல்லவர் வான சம்பந்தம் பெறுவர் என்றும் அவர் கூறியுள்ளனர்.

இப்பதிகத்தின் உள்கருத்து, அடியார்கட்கு அன்னம் இடுதலும், அவ் விழாவைக் கண்ணாரக் காணுதலும் பிறவி பெற்றதன் பயன் என்பதாகும்.

இந்த இரண்டையும் ஆணையாக வைத்தே எலும்பைப் பெண்ணாக்கினார் திருஞானசம்பந்தர் என்பதைச் சேக்கிழார்,

"மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகென உரைப்பார்"

என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

அப்பர் சுவாமிகள், இத்தலத்து இறைவர் மீது பாடிய பதிகம் கிடைத்திலது. ஆனால், இத்தலத்தின் பெயரைக் குறித்துள்ளார். புக்க திருத்தாண்டகத்தில் "மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பில் உள்ளார்" என்றும் திருஒற்றியூர்த் தாண்டகத்தில் "எதிர் கண்டோம் மயிலாப்புள்ளே" என்றும் பாடி இருப்ப தால் இந்த உண்மையை உணர்க.

திருநாவுக்கரசர் பாடியுள்ள திருக்கழுக்குன்றத் தாண்டகப் பதிகத்தில் இரண்டே தாண்டகங்கள் உள்ளன. அவற்றுள் முன்னையது திருக்கழுக்குன்றப் பெருமானைப் பற்றியது. மற்றொன்று திருமயிலைக் கபாலீசுரரைப் பற்றியதாக இருக்கலாமோ? என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது. அத்தாண்டகம்,

---

மதி - சந்திரன். அண்ணலார் - சிவபெருமான். அமுது செய்வித்தல் - உண்பித்தல். பொலிவு - சிறப்பு, விளக்கம். ஆர்தல் - நிறைவு உறுதல்.

"பல்லாடு தலைசடைமேல் உடையான் தன்னைப்
பாய்புலித்தோல் உடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருள்அனைத்தும் ஆனான் தன்னைச்
சுடருருவில் என்பருக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் அடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளும் காபா லியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"

என்பது. இதில் இத்தலத்து இறைவர் இறைவி யாரை ஒருங்கே கண்டு மகிழ்ந்த குறிப்பை "காபாலி யைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்னும் வரி உணர்த்தி நிற்கிறது.

சுந்தரர் இத்தலத்து இறைவரைப் பாடிய பாடல் கிடைத்திலது. ஆனால், இவர் இத்தலத்தின் பழமை யினைத் "துறைக்கொண்ட செம்பவள இருள் அகற்றும் சோதித் தொன்மயிலை" என்று வாயிலார் நாயனாரைப் பற்றிக் கூற வந்த இடத்தில் தம் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டுள்ளனர்.

"மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசும் நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்"

—இரண்டாம் திருமுறை

---

பகவன் - உமா தேவிக்குத் தன் உடலைப் பகுத்துக் கொடுத்த சிவபெருமான், என்பு - எலும்பு, அரு - நீங்காத. கோலத்தானை - அழகுடையவனை. அடர்த்தான் - அழித் தவன். ஆல் - கல்லாலமரம். அல்லாத காலன் - முறை தெரியாத இயமன். கல்லாடை-காவி உடை. மடநல்லார்- இளைய பெண்கள். மா-சிறந்த. புழுக்கல்-சோறு (பொங்கல்). நேரிழையார் - நேர்மையான ஆபரணம் அணிந்த பெண்கள்.

இத்தலத்து முருகப் பெருமான் மீது பாடிய திருப்புகழ் பத்து. அவற்றுள் ஒன்று,

களபமணி ஆரம் உற்ற வனசமுலை மீது கொற்ற
கலகமத வேள்தொ டுத்த கணையாலும்
கனிமொழிமி ஞர்கள் முற்றும் இசைவசைகள் பேச வுற்ற
கனல்எனவு லாவு வட்ட மதியாலும்
வளமையணி நீடு புட்ப சயனஅணை மீதுருக்கி
வனிதைமடல் நாடி நித்தம் நலியாதே
வரிஅளிஉ லாவு துற்ற இருபுயம் அளாவி வெற்றி
மலர்அணையில் நீஅணைக்க வரவேணும்
துளபமணி மார்ப சக்கர தரன்அரிமு ராரி சர்ப்ப
துயிலதரன் ஆத ரித்த மருகோனே
சுருதிமறை வேள்வி மிக்க மயிலைநகர் மேவும்உக்ர
துரகதக லாப பச்சை மயில்வீரா
அளகைவணி கோர்கு லத்தில் வனிதைஉயிர் மீளஅழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா
அருவரையை நீறெ ழுப்பி நிருதர்தமை வேர்அ றுத்து
அமரர்பதி வாழ வைத்த பெருமாளே.

—திருப்புகழ்

---

களபம் – சந்தனம். வனசம் - தாமரை. கொற்றம் - வீரம். மதவேள் - மன்மதன். கணை - மலர் அம்பு. மிஞர்கள் - மின்னல் ஒளியைப் போன்ற மாதர்கள். அளி – வண்டு, முராரி - முரனை அழித்த திருமால். சுருதிமறை - வேதம். வனிதை - பூம்பாவை. சொற்ற - சொன்ன. அருவரை - கிரவுஞ்சமலை. நீறெழுப்பி - சாம்பராக்கி. நிருதர் - அரக்கர். மடல்நாடி - மடல் ஏறுதலை விரும்பி. துளபம் - துளசி. தரன் - கையில் ஏந்திய திருமால். வேள்வி - யாகம். துரகத கலாப - குதிரையாகிய மயில். அளகைவணிகோர் - அளகாபுரிக்குத் தலைவனை குபேரனைப் போன்ற பெரும் செல்வம் படைத்த வணிகராம் சிவநேசர். நிருதர் - சூரன் முதலிய அரக்கர். அமரர்பதி - தேவலோகம். முருகனே திருஞானசம்பந்தர் எனும் கொள்கை இருத்தலின் இத் திருப்புகழின் ஈற்றில் அங்கம் பூம்பாவையை எழுப்பிய குறிப்பைப் பாடியுள்ளனர்.

## 25. திருவான்மியூர்

இத் தலத்தில் வான்மீக முனிவர் வழிபாடு ஆற்றிப் பேறுபெற்றனர். இக்காரணம்பற்றி இத்தலம் திருவான்மியூர் எனப் பெயர் பெற்றது. அமிர்தபுரி என்றும் இதனைக் கூறுவர். தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் பெற்று அவ்வமுதத்தால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூசித்த காரணத்தால் அமிர்தபுரி என்றும், இறைவர் மருந்தீசர் என்றும் கூறப்பெறுவர். இதனை இன்றும் அங்குள்ள இலிங்கம் வெண்ணிறத்துடன் விளங்குதல் கொண்டு உணரலாம். இதனால் இறைவர் பால்வண்ணநாதர் என்ற பெயருடனும் துலங்குகின்றார்.

இங்குள்ள இலிங்கம் சிறிது சாய்ந்து காணப் படுகிறது. இலிங்கத்தின்மேல் பகுதியில் மாட்டின் குளம்பு பதிந்தாற் போன்ற வடு காணப்படுகிறது. இவ்வடுவிற்குக் காரணம், காமதேனு பூசித்துத் தனது பாலை இலிங்கத்தின்மீது சொரிந்தபோது, அதன் குளம்பு பட்டதனால் ஏற்பட்ட தழும்பு என்பர். இத்தலத்தின் மேலண்டை மாட வீதியில் வான்மீக முனிவர் கோவில் உளது. இங்குப் பருவம் தோறும் நடனம் நடைபெறும். இந்நடனம் அவர் தரிசித்து இன்புறும் பொருட்டே ஆடப் படுவதாகும்.

இறைவியாரின் திருப்பெயர் சொக்கநாயகி, திரிபுர சுந்தரி எனப்படும். கோயில் மூலட்டானம் மேற்கு நோக்கி உளது. கோயிலின் கோபுர வாயில் கிழக்கு நோக்கி உளது. கோயிலுக்குள் சென்றதும் காட்சி அளிப்பவர் முருகப்பெருமானே ஆவார். இதற்குத் தல விருட்சம் வன்னி மரம். இத்தலத்தில் ஜன்ம நாசனி, பாபநாசனி, காமநாசனி, ஞானதாயினி, மோட்சதாயனி, என்னும் ஐந்து தீர்த்தங்கள் இருந்தனவாகக் கூறுகின்றனர். ஆனால், இதுபோது

வெளியே ஒரு குளமும், உள்ளே ஒரு குளமும், ஒரு கிணறும் இருப்பதை மட்டும் காணலாம். இங்குள்ள தியாகர் ஆடும் தியாகர். இன்றும் ஒவ்வொரு மாத மும் பௌர்ணமி அன்று தியாகர் நடனவிழா நடை பெறுகிறது. ஆனால் பங்குனி மாத பிரம்மோற்சவத் தில் நடைபெறும் நடனமே பெருஞ் சிறப்புடைய தாகும்.

இத்தலத்தைத் தரிசிக்க இராஜேந்திர சோழன் பல முறை வந்துள்ளான். இறைவர் வீற்றிருக்கும் கருப்பக் கிரகம் சோழக் கட்டடமாகும். யானை படுத் திருப்பது போல் இருக்கும். இங்குள்ள கருப்பக் கிரகத்தில் பழைய சோழச் சிற்பங்கள் இருக்கின்றன. அவை மேல்பாகம் சிங்க முகமும், நடுப்பகுதி மனித வடிவும் உடையவை. உள் கோவிலைச் சுற்றி வருகை யில் அப்பைய்ய தீட்சிதர் உருவத்தையும், பைரவர் மூர்த்தியையும் பார்த்து வணங்கி இன்புறுதல் வேண் டும். கிழக்குப் பக்கத்துக் கோபுரம் முடிவுபெருதது. இங்கு நூற்றெட்டு இலிங்கங்கள் உண்டு. இத் தலம் கடலுக்கு அருகே உள்ளது. இத்தலத்தின் வடக்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில் சைவசமயசரபமாகிய பாம்பன் சுவாமிகளின் சமாதி உளது. மடாலயமும் உளது. வருடந்தோறும் இங்குக் குருபூசையும், மயூரவாகன சேவன விழாவும் சிறப்பாக நடைபெறு கின்றன.

இத் தலத்துக் கல்வெட்டுகளால் நுந்தா விளக்கு எரிக்க ஆடுகள் தானமாகக் கொடுக்கப் பட்ட செய்தியும், கோயில் வழிபாட்டிற்கு நில தான மும், பூமாலையின் பொருட்டுப் பொன் தானமும், வழி பாட்டிற்குப் பணமும், நெல்லும் கொடுக்கப்பட்ட செய்திகளும் அறிய வருகின்றன.

இத்தலம் சென்னையிலிருந்து தென்கிழக்கே எட்டுக் கல் தொலைவிலும், மயிலாப்பூரிலிருந்து தெற்கே நான்கு கல் தொலைவிலும் உளது.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் இரண்டும், அப்பர் பாடிய பதிகம் ஒன்றும் ஆக மூன்று பதிகங்கள் உண்டு.

திருஞான சம்பந்தரின் முதல் பதிகம் கலிநிலைத் துறையால் ஆனது. பண், இந்தளம். இவ்விரண்டன் விளக்கமும் முன்னர்க் கூறப்பட்டன. ஆண்டுக் காண்க. இரண்டாவது பதிகம் தரவு கொச்சகத்தால் ஆனது. இதன் பண் காந்தார பஞ்சமம். இவற்றின் விளக்கமும் முன்னதாகக் கூறப்பட்டுள்ளது. அப்பர் பதிகம் கலிவிருத்தத்தால் ஆனது. இதன் இலக்கணமும், பண்ணும் முன்னரே கூறப்பட்டன.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவரை நோக்கிப் பல வினாக்களை வினாவும் முறையில் தம் முதல் பதிகத்தில் பாடியுள்ளார். இக் குறிப்பைப் பாடல்களில் "உலகாளுடையீர் சொலீர். சிலம்பார்க்கவும் வல்லீர் சொலீர், அடிகேள் சொலீர், ஆடல் உகக்க வல்லிர் சொலீர், சரிதைத் தொழிலீர் சொலீர். சூதுலாவிய கொங்கை ஒரு பங்குடையீர் சொலீர், தொல் அழலீர் சொலீர், வீற்றிருந்தீர் சொலீர், இருவர்க்கும் அறிவரியீர் சொலீர், பொடி பூசிய மேனியீர் சொலீர்" என்று வினவுதல் கொண்டு தெளியலாம். இது குறித்தே திருஞான சம்பந்தர் இப்பதிகத்தை, 'வினா உரை' பதிகம் என்று உணர்த்தும் முறையில், 'வினாவுரை ஓதி' என்று தமது திருக்கடைக்காப்பில் குறிப்பிடுகின்றனர்.

---

ஆர்க்கவும் - ஒலிக்கவும். அடிகேள் - பெரியீர். உகக்க - விருப்ப, சரிதை - திரியும் சூதுலாவிய கொங்கை - சொக்கட்டான் காயைப் போன்ற முலைகளுடைய உமாதேவி. தொல்கழலீர் - பழைய வீரத் தண்டை அணிந்த திருவடியுடையீர். அறிவரியீர் - பிரம்மன் திருமால் ஆகிய இருவர்களால் அறிய முடியாதவரே. வானவர் - தேவர். பொடி - விபூதி. மேனி - உடல்.

திருஞானசம்பந்தர் வினவும் வினக்கள் "வரை உலாம் மடமாதுடன் ஆகிய மாண்பது, அந்தியின் ஒளியின் நிறம் ஆக்கியவண்ணம், ஆட உகந்தது, ஆனை து அங்கவ்வுரி போர்த்தனல் ஆட உகந்தது, வஞ்ச நஞ்சுண்டு வான வர்க்கின் அருள் வைத்தது, விண்ணில் பிறை செஞ்சடை வைத்த வியப்பது. மூதெயில் ஒரு மூன்றெரி ஊட்டிய மொய்ம்பது, பண்டிருக் கொரு நால்வர்க்கு நீர் உரை செய்தது, பக்கமே பல பாரிடம் பேய்கள் பயின்றது, எருதுமேல் கொடு உழன்று உகந்துஇல் பலீ ஏற்றது, கைதவச் சமண் சாக்கியர் கட்டுரைக்கின்றது", என்பன. இவ்வரிகள் ஒவ்வொன்றன் ஈற்றிலும் ஏன் என்னும் வினச் சொல்லைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். முதலில் வரும் "நீர் ஏன் பார்வதியுடன் விளங்குகின்றீர்" என்பதும், இரண்டாவதில் வரும், "நீர் ஏன் அந்திப் பொழுதின் செந்நிற வண்ணமாக உள்ளீர்" என்பதும், மூன்ருவதில் வரும் "யானையைக் கொன்று அதன் தோலை போர்த்துச் சுடலையில் ஏன் ஆட விரும்பினீர்" என்பதும், நான்காவதில் வரும் "விடத்தை ஏன் குடித்துத் தேவர்கட்கு ஏன் இன்னருள் செய்தீர்" என்பதும், ஐந்தாவதில் வரும் "சந்திரனை ஏன் சடையில் வைத்தீர்"என்பதும், ஆருவதில் வரும் "மூன்று கோட்டைகளை ஏன் தீக்கு இரையாக்கினீர்" என்பதும், ஏழாவதில் வரும் "கல்லால விருட்சத்தின் கீழ் அமர்ந்து சனகாதி முனிவர்கட்குச் சிவஞான

---

வரை - இமயமலை. மடமாது - இளைய உமாதேவி. மாண்பு - சிறப்பு அங்கு - உடம்பில். உரி - தோல். நஞ்சு - விடம். அனல் - சுடலை. உகந்து - விரும்பி. மூதெயில் - பழைய கோட்டை. எரி - தீ பண்டு - முன்பு. இருக்கு - சிவஞான உபதேசம். நால்வர் - சனகர். சனந்தரர், சனுதரர், சனத்குமாரர். பாரிடம் - பூதகணம். பயின்றது - உடன் இருந்தது. இல் - வீடு. பலி - பிச்சை. கைதவம் - வஞ்சகம். சாக்கியர் - பௌத்தர்.

உபதேசத்தை ஏன் உபதேசம் செய்தீர்'' என்பதும், எட்டாவதில் வரும் "உங்களை ஏன் பூதகணங்கள் சூழ்ந்துள்ளன'' என்பதும், ஒன்பதாவதில் வரும் "எருதின்மீது ஏறி ஏன் வீடுதோறும் பிச்சைக்குச் செல்லும் விருப்புடையீர்'' என்பதும், பத்தாவது பாட்டில் வரும் "சமணர்களும் சாக்கியர்களும் ஏன் வஞ்சகமான மொழிகளைப் பேசுகின்றனர்'' என்பதும் அவ் வினாக்களின் பொருளாம்.

இவ்வாறு வினாவியதன் கருத்து, முறையே "நீர் அம்மை அப்பராக விளங்கவில்லை எனில், உயிர்கள் போகத்தை அனுபவிக்க முடியாது'' என்பதும், "இறைவன் சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்'' என்பதும், "தீயவரை அடக்கி ஆள்வர்'' என்பதும், "விடம் உண்டிலர் எனில் தேவர்கள் இறப்பர்'' என்பதும், "இறைவன் ஒருவனே இறவாதவன்'' என்பதும், "அடைக்கலம் புகுந்தவரைக் காப்பவன்'' என்பதும், "மும்மலங்களை அழிக்க வல்லவன்'' என்பதும், "நால்வர்கட்கு உணர்த்தவில்லை எனில் அவர்கட்குச் சிவஞான போத உணர்ச்சி ஏற்படாது'' என்பதும், "எவ்வுயிர்க்கும் இயல்பானவன்'' என்பதும், "சமண பௌத்தர்களின் மொழிகள் வெற்றுரைகள்'' என்பதும் ஆகும்.

திருவான்மியூரின் இயற்கை அழகு இப் பதிகத்தில் இனிது உணர்த்தப்பட்டுள்ளது. இதனை,

> "கரைஉ லாம்கட லிற்பொலி சங்கம்வெள் இப்பிவன்
> திரைஉ லாம்கழி மீன்உக ளும்திரு வான்மியூர்''

---

பொலி - விளங்கும். சங்கம் - சங்கு. இப்பி - சிப்பி. வன்திரை - பலமான அலை. உகளும் - துள்ளும். கழி - உப்பங்கழி.

"கான்அ யங்கிய தண்கழி சூழ்கட லின்புறம்
தேன்அ யங்கிய பைம்பொழில் சூழ்திரு வான்மியூர்"

"வண்டி ரைத்த தடம்பொழில் இன்நிழல் கானல்வாய்த்
தெண்தி ரைக்கடல் ஓதம்மல் கும்திரு வான்மியூர்"

"மைத ழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினம்
செய்த வத்தொழில் ஆர்இசை சேர்திரு வான்மியூர்"

என்னும் வரிகளில் காண்க.

திருவான்மியூரின் தனி மாண்பினையும், இயல்பினையும்,

"சந்து யர்ந்தெழு கார்அகில் தண்புனல் கொண்டுதம்
சிந்தை செய்தடி யார்பர வும்திரு வான்மியூர்"

"மஞ்சு லாவிய மாடம் மதில்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லும்திரு வான்மியூர்"

"மண்ணி னில்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ண னப்புரி சைத்தொழில் ஆர்திரு வான்மியூர்"

"போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறம்
தீதில் அந்தணர் ஓத்தொழி யாத்திரு வான்மியூர்"

---

கான் - காட்டில். அயங்கிய - பள்ளமான. தண்கழி - குளிர்ந்த கழி. தேன் அயங்கிய - தேன் சொரிந்த. பொழில் - சோலை. இரைத்த - ஒலித்த. தடம் - குளம். கானல் - கடற்கரைச் சோலை. தெண் திரை - தெளிந்த அலை. ஓதம் - நீர். மல்கும் - பெருகும். மை - மேகம். தவத் தொழிலார் - இறைவனை வழிபடும் தவம் மேற்கொண்டவர்கள். இசை - முழக்கம். சந்து - சந்தனம். கார் - கரிய. அகில் - அகில் கட்டை. (இதுவும் ஒரு வாசனைக் கட்டை) புனல் - நீர். பரவும் - வணங்கும். மஞ்சு - மேகம். மாடம் - பெரிய வீடுகள். பொன் விளங்கும் செஞ்சொலாளர்கள் - நல்ல மொழிகளைப் பேசுபவர்கள். பயிலும் - வாழும். புரிசை - மதில். தொழில் ஆர் - பலவித வேலைப்பாடு அமைந்த. போது - மலர். புரிசைப்புறம் - மதிலுக்கு வெளியே உள்ள வேதபாடசாலை. இதனால் திருவான்மியூரில் வேத பாடசாலை இருந்ததை அறியலாம். ஓத்து - வேத ஒலி.

"பொருது வார்கடல் எண்திசை யும்தரு வாரியால்
திரித ரும்புகழ் செல்வம்மல் கும்திரு வான்மியூர்"

என்று புகழ்கின்றார் புகலிவேந்தர்.

இறைவர், "உரை உலாம் பொருளாய் உலகாளுடையீர், ஆதி எம்பெருமான்" என்று சிறப்பிக்கப் பட்டுள்ளனர். இப் பதிகத்தின் பலன், யார் இதை நீதியோடு நினைக்கின்றார்தளோ, அவர்கள் வானுலகை ஆளும் வாய்ப்பைப் பெறுவர் என்பது. இதனை "ஞானசம்பந்தன் சொல் நீதியால் நினைவார் நெடு வானு லகாள்வர்" எனும் வரியில் காண்க.

திருஞானசம்பந்தரது மற்றொரு திருவான்மியூர் பதிகத்தால் நாம் அறிவன: இப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் இறைவரைப் பலவாறு விளித்து "இறைவா உன்னைத் தவிர்த்து வேறு எவரிடத்தும் எனது அன்பு சென்று அடையாது" என்பதை ஒவ்வொரு பாட்டிலும் அமைத்துப் பாடி உணர்த்தியுள்ளனர். இதனைக் கீழ் வரும் வரியில் காணலாம்.

"உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே" என்று கூறுவது கொண்டு தெளிக. ஆதரவு என்பது புகலிடம்.

திருவான்மியூர், இப்பதிகத்தில் "திரை ஆர் தெண்கடல் சூழ் திருவான்மியூர், செடியார் மாதவி சூழ் திருவான்மியூர், செய்யார் செங்கயல்பாய் திரு வான்மியூர், தென்பால் வையம் எலாம் திகழும் திரு வான்மி, எழில்வார் பொழில் சூழ் திண் ஆர் வண்

---

பொருது - மோதி. வார் - நீண்ட. எண் - எட்டு. வாரி - வளம். திரை - அலை. ஆர் - பொருந்திய. மாதவி - ஒருவகை மரம். செய் - வயில்களில். வையம் - உலகம். தென்பால் - தெற்கே. எழில் - அழகு. பொழில் - சோலை. திண் ஆர்-வன்மை அமைந்த. வண் புரிசை-வளமான மதில்.

புரிசைத் திருவான்மியூர், சேதம் இல்லாத் திரு வான்மியூர், தேனார் சோலைகள் சூழ் திருவான்மியூர், செறிவார் மாமதில் சூழ் திருவான்மியூர், திண்தேர் வீதியது ஆர் திருவான்மியூர் (இதனால் இத்தலம் தேர் விழாவிற்குச் சிறந்ததாக இலங்கியதை உணர வும்) சென்றார் தம் இடர்தீர் திருவான்மியூர்'' (இத் தொடரை நன்கு சிந்திக்கவும்) என்றும் புகழப் பட்டுள்ளது.

உமை அம்மையார் காதல் மிகுதியினாலும் அன் பின் முதிர்வினாலும் இறைவரது மார்பில் உறங்கும் அழகைத் திருஞான சம்பந்தர் "மைஆர் ஒண்கண் நல்லாள் உமையாள்வளர் மார்பினனே'' என்று இறைவரை விளித்திருப்பது கொண்டு தெளியலாம்.

சமணர், பௌத்தர்கள் காரணம் இன்றி இழி வாகப் பேச வல்லார்கள் என்னும் குறிப்பு, "குண்டா டும் சமணர் கொடுஞ்சாக்கியர் என்றிவர்கள் கண் டார் காரணங்கள் கருதாதவர் பேச'' எனும் வரியில் தெரிகிறது. திருஞானசம்பந்தர் தம் அன்பைப் பிற தெய்வங்களிடத்துச் செலுத்தமாட்டேன் என்று கூறி இருப்பதுபோல, ஆறுவது செய்யுளில் "இறை வா! உன்னைத்தவிர்த்து வேறு நெறிகளை நினைக்கவே மாட்டேன்'' என்றும் கூறியுள்ளனர். இதனை "நீதி நின்னை அல்லால் நெறியாது நினைந்தறியேன்'' எனும் வரியில் தெளிக.

திருஞானசம்பந்தர் தாம் பிறந்த ஊரைப் பாக்கு மரங்கள் சூழ்ந்த சீர்காழி என்றும், தம்மை நல்ல புகழால் மிக்கவர் என்றும், இப்பதிகத்தைத் தளரா

---

செறி - நெருக்கமான. மா - பெரிய. திருவான்மி என்பது திருவான்மியூர் என்பதன் மரூஉ மொழி.

மல் ஓதிப் போற்றவல்லவர்களின் தீவினை நீங்கும் என்றும் கூறியுள்ளனர். இந்த உண்மைகளை.

"கன்று ருங்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில்
நன்று னபுகழான் மிகுஞானசம் பந்தன்உரை
சென்றார் தம்இடர்தீர் திருவான்மி யூர்அதன்மேல்
குன்று தேத்தவல்லார் கொடுவல்வினை போய்அறுமே"

எனும் திருக்கடைக்காப்புச் செய்யுளால் உணர்க.

"மஞ்சு லாவிய மாடம தில்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லும்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிருள் ஆடல் உகக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்அருள் வைத்ததே"

—இரண்டாம் திருமுறை.

"பொன்போ லும்சடைமேல் புனல்தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடைஏறிய வேதியனே
தென்பால் வையமெலாம் திகழும்திரு வான்மிதன்னில்
அன்பா உன்னைஅல்லாம் அடையாதென தாதரவே"

—மூன்றும் திருமுறை.

அப்பர் பாடிய திருக்குறுந்தொகை மூலம் நாம் அறிவன. இக்குறுந்தொகைப் பதிகம் மக்களுக்கு அருள் உபதேசம் செய்வது போலப் அமைந்துளது.

---

கமுகு - பாக்கு மரம். காழி - சீர்காழி. ஏத்த - போற்ற. மஞ்சு - மேகம். பொலி - விளங்கும். துஞ்சு - தூங்கும். உகக்க - விரும்ப. புனல் - கங்கையாற்று நீரை. புரிநூல் - பூணூல். விடை - எருது. தென்பால் - தெற்கு. வையம் - உலகம். வான்மீ - திருவான்மியூர்.

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன் அடி சூழ்மின்கள்
பண்டுநீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே"

"பொருளும் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளும் மாவல்ல ஆதியாய் என்றலும்
மருள்அ றுத்திடும் வான்மியூர் ஈசனே"

"மந்தம் ஆகிய சிந்தை மயக்கறுத்
தந்த மில்குணத் தானை அடைந்துநின்
றெந்தை ஈசன்என் றேத்திட வல்லீரேல்
வந்து நின்றிடும் வான்மியூர் ஈசனே"

"நெஞ்சில் ஐவர் நினைக்க நினைக்குறுர்
பஞ்சின் மெல்லடி யாள்உமை பங்கஎன்
றஞ்சி நாள்மலர் தூவி அழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே"

"ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழல்அடி
நாட்டி நாள்மலர் தூவி வலம்செயில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே"

என்பன அவ்வுபதேச மொழிகள்.

---

விண்ட - விரிந்த. மா - சிறந்த. அண்டர் - தேவர். பண்டு - முன்பு. பறைந்திடும் - நீங்கும். பொழில் - சோலை. (ஈற்றடி திருவான்மியூரின் சோலை வளத்தைக் காட்டுகிறது) மருள் - மயக்கம். ஏத்திட - போற்ற ஐவர் - பஞ்சேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, காது) நாள் - புதிய. ஓட்டைமாடம் - உடம்பு. ஒன்பது வாசல் என்பன, இரு கண், இரு காது, இரு மூக்கு, ஒரு வாய், மலம் கழி இடம், சிறுநீர் வரும் இடம். கழல் - வீரத்தண்டை.

இறைவரது இயல்பு இன்னது என இயம்புகையில்,

"உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ருக்கருள் வான்அலன்
வள்ளல் ஆகிய வான்மியூர் ஈசனே"

"தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூர் ஈசனே"

"குணங்கள் தான்பர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூமொழி யார்அவர்
வணங்க நின்றிடும் வான்மியூர் ஈசனே"

"ஆதி யும்அர னும்அயன் மாலுமாய்ப்
பாதி பெண்உரு வாய பரமன்என்
ஓதி உள்குழைந் தேத்தவல் லார்அவர்
வாதை தீர்த்திடும் வான்மியூர் ஈசனே"

"ஆர்வம் ஆக அழைத்தவன் ஏத்தலும்
வாரம் ஆயினன் வான்மியூர் ஈசனே"

என்று இயம்பி யுள்ளனர்.

திருவான்மியூர் "வண்டுசேர் பொழில் வான்மியூர்" என்று புகழப்பட்டுள்ளது.

"நெஞ்சில் ஐவர் நினைக்க நினைக்குறுர்
பஞ்சின் மெல்லடி யாள்உமை பங்கஎன்
றஞ்சி நாள்மலர் தூவி அழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே"

—திருக்குறுந்தொகை.

---

ஏத்த - போற்ற. உக்கவர் - கர்வம் நீங்கி குழைந்து மனம் உருகியவர். சுணங்கு - அழகுதேமல். தூய - நல்ல. குழைந்து - உருகி. வாரம் - அன்பு. ஐவர் - மெய், வாய், கண், மூக்கு, செவிகள். நாள்மலர் - புதிய மலர்.

இத்தலத்து முருகன்மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ஒன்றே உளது.

குசமாகி யாருமலை மரைமாறு ணூலினிடை
　குடிலான ஆல்வயிறு　குழையூடே
குறிபோகு மீனவிழி மதிமாமு காருமலர்
　குழல்கார தானகுண　மிலிமாதர்
புசஆசை யால்மன துனேநாடி டாதபடி
　புலையேனு லாவிமிகு　புணர்வாகிப்
புகழான பூமிமிசை மடிவாய் இருதவகை
　பொலிவான பாதமலர்　அருள்வாயே
நிசநார ஞுதிதிரு மருகாவு லாசமிகு
　நிகழ்போத மானபர　முருகோனே
நிதிஞான போதமா னிருகாதி லேயுதவு
　நிபுணுநி சாசரர்கள்　குலகாலா
திசைமாமு காழிஅரி மகவான்மு ஞேர்கள்பணி
　சிவநாத ராலமயில்　அமுதேசர்
திகழ்பால மாகம்உற மணிமாளி மாடம்உயர்
　திருவான்மி யூர்மருவு　பெருமாளே.

—திருப்புகழ்.

---

குசம் - கொங்கை. மரை - தாமரை. மாறு - போன்ற. மதி - சந்திரன். ஆல் - ஆல இலை போன்ற. குழல்கார் - கூந்தலாகிய மேகம், புசம் - தோள். அரன் - சிவபெருமான். மடிவாய் - சோம்பேறியாய். இருத - அழியாத, நிசா சரர்மன் - இரவில் சஞ்சரிக்கும் அரக்கர்கள். மகவான் - இந்திரன். ஆழி - சக்கரம். மாகம் - ஆகாயம். மருவு - பொருந்திய.

## 26. திருக்கச்சூர் ஆலக் கோயில்

இத்தலத்தில் திருமால் ஆமை வடிவில் பூசித்த காரணத்தாலும், ஆலமரம் தல விருட்சமாக இருக்கின்றமையாலும் இது கச்சூர் ஆலக் கோயில் எனப்பட்டது. கச்சபம் என்னும் சொல்லுக்கு ஆமை என்பது பொருள். கச்சப ஊர் கச்சூர் என மருவியது. ஆலயத்திற்கு மேற்கே மலை அடியில் மருந்தீசர் என்னும் பெயரில் இறைவர் எழுந்தருளியிருக்கின்றார். மருந்து என்பது உணவாகிய அமுதத்தைக் குறிக்கும். சுந்தரர் தம் பாட்டில் மலைமேல் மருந்தை என்று இவரைக் குறித்துப் பாடியுள்ளனர். இங்குள்ள தியாகராய மூர்த்தி தொண்டை நாட்டுத் தியாகர்களில் ஒருவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பகல் பன்னிரண்டு மணிக்கு இத் தலத்து இறைவரைக் கண்டு வணங்க வந்தார். அவ்வேளை நல்ல பசிவேளை. ஆகவே, இறைவர் சுந்தரரது களைப்பைப் போக்க வீடுகளில் சென்று பிச்சை ஏற்று வந்து சுந்தரரை உண்பித்தார். இப்படி (மருந்து) அமுது தந்து உண்பித்த காரணத்தால் மலை அடி இறைவர், மருந்தீசர் எனப்பட்டார். இறைவர் தம் பொருட்டு உச்சிவேளையில் பிச்சை எடுத்து வந்து உண்பித்ததைச் சுந்தரர் இத்தலப் பதிகத்தின் இரண்டாம் பாட்டில்,

"கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்
றுச்சம் போதா வூரூர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே

---

கச்சு - இடுப்புப் பட்டையாக. ஏர் - அழகிய. அரை - இடுப்பு. அசைத்து - கட்டி. கழல் - வீரத் தண்டை. சிலம்பு - சதங்கை. கலிக்க - ஒலிக்க.

இச்சை அறியோம் எங்கள் பெருமான்
ஏழேழ் பிறப்பும் எனைஆள்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால்
ஆலக் கோயில் அம்மானே''

என்று பாடுகின்றார்.

இறைவர் தமக்காக வீடுகள் தோறும் சென்று பிச்சை எடுத்துத் தமக்கு இட்டது குறித்து மிக்க இரக்கத்துடன் பாடுவதை இப் பதிகத்தில் காண லாம். இவ்வுண்மையினை,

''கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே''

''பலிக்கென்று, உச்சம்போதா ஊரூர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே''

'':ஒறுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் உருகாரே''

''காதல் செய்து களித்துப் பிதற்றிக்
கடிமா மலரிட் டுனைஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயம் கொள்ளல் அழகிதே''

என்னும் வரிகளில் காண்க.

இறைவரின் அருள் பண்பைப் புகழ்கையில்,

''பொய்யே உன்னைப் புகழ்ந்தால் அதுவும் பொருளாக்
கொள்வானே''

என்று போற்றியுள்ளனர்.

---

ஏழ்ஏழ் பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, பறவை, நீர் வாழ்வன, ஊர்வன, தாவரம் என்பன.

கதுவாய் - முரிந்த வாய். பலி - பிச்சை. கவலாரே - துன்பப் படுவார்களே. அதுவே யாமாறு இதுவோ - இஃது உன் கருணை இருந்தவாறு என்னேயோ? ஒறுவாய் - மூளி யான வாய். அறவே - முற்றிலும். கடி - வாசனை பொருந்திய. மா - சிறந்த. ஏத்தி - போற்றி. ஆதல் - உயர்வையே. ஐயம் - பிச்சை.

பெரியவர்கள் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்னும் பெரு நோக்கம் உடையவர்கள் ஆதலின், பிறர் பொருட்டு இறைவர்மாட்டு வேண்டுதலை,

"மெய்யே எங்கள் பெருமான் உன்னை
நினைவார் அவரை நினை கண்டாய்"

என்னும் வரியில் காண்க.

இத்தலத்து மலைமீதும் இறைவர் இரந்து இட்ட ஈசர் என்ற பெயரில் வீற்றிருக்கின்றார். மருந்தீசர் தேவியார் இருள்தீக்கித் தாயார் எனப்படுவார். விருந்திட்டநாதர் என்பது இத்தலத்து இறைவர்க்குப் பெயர். தேவியார் திருப்பெயர்கள் உமையம்மை, அஞ்சனாட்சி என்பன.

இங்குள்ள தியாகரைக் கண்டு தரிசித்தல் சிறப்புடையதாகும். இத்தியாகர் அமுத தியாகர் எனப்படுவார்.

இங்குள்ள தீர்த்தம் கூர்ம தீர்த்தம், அமிர்த தீர்த்தம், ஔடத தீர்த்தம் என்பன. மலைமீது உள்ள கோயில் ஆலக் கோயில் எனப்படும். கீழ் உள்ள கோயிலைத் தாழங்கோயில் என்பர். இங்குள்ள மலை ஔடதகிரி எனப்படும். அஸுவனி தேவர்கள் பூசித்து ஔடதங்களை (மருந்துகளை) பெற்றனர். ஆகவே இறைவரும் ஔடத ஈசுவரர் என்றும் கூறப்பெறுவர்.

செங்கற்பட்டுக்கு வடக்கேயுள்ள சிங்கப் பெருமாள் கோயில் இரயில் நிலையத்துக்கு வடமேற்கே ஒன்றரை மைல் தொலைவில் இத்தலம் உள்ளது. சென்னையிலிருந்து செல்லப் பஸ் வசதி உண்டு. சிங்கப்பெருமாள் கோவில் என்னும் ஊரிலுள்ள திருமாலையும், ஆஞ்சநேயரையும் கண்டு வணங்கலாம்.

திருக்கச்சூர் ஆலக் கோயிலில் சோழர், பாண்டியர், விஜய நகரவேந்தர், சாளுக்கிய மன்னர்களின் கல்வெட்டுகள் உண்டு.

இக்கல்வெட்டுகளின்வழி நாம் அறிவன: இறைவருக்குத் திருஆலக் கோயில் உடையார் என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்துக்கு நித்த விநோத நல்லூர் என்னும் பெயரும் உண்டு. இது செயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்தில் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் என்று கூறப்பட்டுள்ளது. நித்தவிநோத நல்லூர் என்னும் பெயரும் இத்தலத்திற்கு இருந்ததாகத் தெரிகிறது. மூன்றும் குலோத்துங்க சோழ தேவரது கல்வெட்டு, திருநாவுக்கரசுதேவருக்கு உருவம்செய்து அமைத்த செய்தியை அறிவிக்கிறது. இவனது முப்பத்து மூன்றும் ஆண்டில் நித்திய வர்மன் கட்டளைப்படி இத் தலத்து இறைவருக்கு அறுபத்தேழு வேலி நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் முப் பத்தாறும் ஆண்டில், செங்குன்றமாகிய அருமொழி தேவ நல்லூரிலும் இத்தலத்திற்கு நிலங்கள் விடப் பட்டுள்ளன.

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு, தேவாரத்து (வழிபாட்டிற்குரிய) ஈஸ்வரம் உடையார் திருக்கோயிலையும், மணற்குடி என்னும் ஊர், திருக் கச்சூர் ஆலக் கோயில் உடையார்க்குத் தேவதான மான ஊர் என்பதையும் அறிவிக்கிறது.

இங்குள்ள கல்வெட்டு மூலம் சில அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. சாத்தனூர் என்பவர் முத்தமிழ் ஆசிரியர் என்பதும், அவரது தமிழ்ப் புலமை பெரிதும் போற்றத்தக்கதாக இருந்தது என்பதும், அவரது மரபைச் சார்ந்த பெருநம்பி என் பார், பொய்யாமொழி மங்கலம் என்னும் ஊரைக்

காணியாக உடையார் என்பதும், திருக்கச்சூர் கடிகை யாரில் (Learned Assembly) ஒருவராகத் திகழ்ந் தார் என்பதும் அவ்வரிய குறிப்புகளாகும்.

மற்ருெரு கல் வெட்டின் வழி, (அதாவது சக்ரவர்த்தி இராஜ ராஜ தேவரின் எட்டாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு) எண்ணெய் வணிகர்களான செக்காளர்கள் காஞ்சிமா நகரத்தில் உள்ள திருக் காட்டுப் பள்ளி உடையார் கோவிலில் கூடி, திருக் கச்சூர் செக்காளர்கள், திருக்கச்சூர்க் கோயிலுக்குத் திருவிளக்குக்கு எண்ணெய் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்ததை அறியலாம்,

திருக்கச்சூர் ஆலக் கோயிலுக்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றே உளது. இஃது எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. பண், கொல்லிக் கௌவாணம். இதனை இக்காலத்து நவரோசு இசை போன்றது என்னலாம். இப் பதி கத்தில் "தொழுவார்களின் கவலை ஒழிப்பவன், மாலை மதியமாய் இருப்பவன், மலைமேல் மருந்து, பிறவாத வன், இறவாதவன், முதுமை அடையாதவன், கல்லால் விருட்சத்தின் கீழ் அறம் உரைத்தவன், பொய்யாகப் புகழ்ந்தாலும் அதனையும் புகழாகக் கொள்பவன், செந்நிறத்தன், வெண்ணிறத்தன், ஞானக் கண்ணன், தன்னை நினைக்கின்றவர்களை நினைப்பவன், காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவான்" என்று இத்தலத்து இறைவர் சிறப் பிக்கப்பட்டுள்ளனர்.

இப்பதிகத்தில் இறைவர் பிச்சை ஏற்ருல் அடி யார்கள் கவலைப்படுவர் என்பது, "தலையில் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவல்வார் என்றும், பலிக்கு என்று உச்சம் போதா ஊர் ஊர் திரியக் கண்டால் அடியார் உருகுவார் என்றும், பாடி

உணர்த்தப் பட்டுள்ளது. இவ்வாறு இறைவர் செய்வதன் குறிப்பை நம்மால், அறிய முடியாது என்பதையும், "அதுவே யாம் ஆறு இதுவோ" என்றும் "இச்சை அறியோம்" என்றும் "அறவே ஒழியாய்" அடியார் இருக்க ஐயம் கொள்வது அழகிதே" என்றும் பாடி உருகி உள்ளனர்.

இறைவர் சுடலையில் ஆடும் அழகை, "முதுவாய் ஓரி கதற முது காட்டு எரிகொண்டு ஆடல்" என்று குறிப்பிடுகிறார். அவருடைய திருவடிகளில் கழலும் சிலம்பும் ஒலிக்கின்றன என்பதும் (இறைவன் அப்பனாகவும், அம்மையாகவும் ஒரு சேரக் காட்சி அளித்தலின் இவ்வாறு கூறப்பட்டது. ஆண்கள் கழல் அணிவர். பெண்கள் சிலம்பு அணிவர்.) கூறப் பட்டுள்ளது.

சுந்தரர் தம்மைப் பற்றிக் கூறுகையில் தாம் பல கோயில்களில் சென்று வணங்கியதால் பெற்ற பேற்றை, "சாலக் கோயில் உள நின் கோயில் அவை என் தலைமேல் கொண்டாடி, மாலைத் தீர்ந்தேன், வினையும் தீர்ந்தேன்" என்று குறிப்பிடுகின்றனர். இத்துடன் இன்றி மேலும் தம்மைப் பற்றிக் கூறுகையில் "மறவேன் அடியேன்" என்றும் "ஊனைப் பெருக்கி உன்னை நினையாது ஒழிந்தேன் செடியேன் உணர்வில்லேன்" என்றும், "உன்ன உன்னும் மனத்து ஆரூரன்" என்றும் ஆரூரன் (திருவாரூர்த் தியாகர்) பேர் முடிவைத்த மன்னு புலவன் வயல் நாவலர்கோன்" என்றும் கூறிக் கொள்கின்றனர்.

---

ஓரி - நரி. காட்டில் - சுடுகாட்டில். சால - மிகுதி. மாலை - மயக்கம், ஊன் - உடல். செடியேன் - கீழ்மையுடையவன். உன்ன - நினைக்க. விடை - எருது. ஏர் - அழகிய.

திருக்கச்சூர் ஆலக்கோயில், "அச்சம் இல்லாக் கச்சூர்" என்றும், "கோலக் கோயில் குறையாக் கோயில்" என்றும் "குளிர் பூங்கச்சூர்" என்றும்,

"கடையும் புடைசூழ் மணிமண் டபமும்
கன்னி மாடம் கலந்தெங்கும்
புடையும் பொழிலும் புனலும் தழுவிப்
பூமேல் திருமா மகள்புல்கி
அடையும் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில்"

என்றும் புகழப் பட்டுள்ளது.

இத்தலத்தின் இயற்கை அழகு,

"பொழிலும் புனலும் தழுவிக் கழனிப் பழனக் கச்சூர்"

"வயல் சூழ்ந்த ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்"

"ஆதல் கழனிப் பழனக் கச்சூர்"

"அன்னம் மன்னும் வயல்சூழ் கச்சூர்"

என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தலம் திருக்கச்சூருக்கு வடபால் உள்ளது என்பதையும் "கச்சூர் வடபால் ஆலக்கோயில்" என்று பதிகத்தில் குறிக்கப் பட்டிருப்பது கொண்டுணரலாம்,

இத் தலத்தில் இலக்குமி நீங்காது பற்றி வாழ்கின்றாள் என்பதை "பூமேல் திருமா மகள் புல்கி" என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதிகப் பாடல்களைப் பாட வல்லவர்கள் அடையும் பயனைக் கூறுகையில் "என் தலைமேல் (சுந்தரர் தலைமீது) இருப்பர்" என்று இறுதிப் பாட்டில் குறிப்பிடுகின்றனர்.

---

புடை - பக்கத்தே. மணி - அழகிய. பொழில் - சோலை. புனல் - நீர். பூ - தாமரை. திருமாமகள் - இலக்குமி. புல்கி - சேர்ந்து. பழனம் - வயல். ஆதல் - விளைதல். மன்னும் - நிலைத்து இருக்கும். கடை - வாயில்.

“முதுவாய் ஓரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே”

“பிறவாய் இறவாய் பேணாய் மூவாய்
பெற்றம் ஏறிப் பேய்சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகா டென்றும்
இடமாக் கொண்டு நடமாடி
ஒறுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் உருகாரே
அறவே ஒழியாய் கச்சூர் வடபால்
ஆலக் கோயில் அம்மானே”

—ஏழாம் திருமுறை.

---

ஓரி - நரி. முதுகாடு - சுடுகாடு. எரி - தீ. மது - தேன். வார்-ஒழுகும். வீ-மலர். மலையான் மகள்-பார்வதி. பேணாய் - எதையும் போற்றாய். மூவாய் - கிழப்பருவம் அடையமாட்டாய். பெற்றம் - எருது. துறவாய் - நீக்க மாட்டாய். ஒறுவாய் - ஊளியான வாய். அறவே - முற்றிலும்.

## 27. திருஇடைச்சுரம்

இது மலைகளுக்கு இடையே கல்சுரத்தில் அமைந்திருத்தலின், இப்பெயர் பெற்றது. கல்லால விருட்சத்தின் கீழ் இருந்து உபதேசம் புரிந்த தட்சணாமூர்த்திகளிடம் உபதேசம் பெற்ற சனத்குமார முனிவர் பூசித்த தலம். அவரேயன்றிக் கௌதம முனிவரும் பூசித்துள்ளனர். இங்குள்ள மூலலிங்கம் மரகத லிங்கம். இது தன் முன்னுள்ள யாவற்றையும் தன் வடிவில் காட்டி ஒளிவிடக்கூடிய அற்புத உருவம். இவ்வாறுன அற்புத வடிவுடன் திகழ்வதை உணர்ந்தே திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே" என்று வியந்து பாடிப் பரவியுள்ளனர். இங்குள இலிங்கத்திற்குப் பின்புறம் கற்பூரஒளியைக் காட்டினுல் நன்ருகத் தெரியக்கூடிய பளபளப்புடைய திருவுருவமாகும். இங்குள்ள மலை நந்திமலை எனப்படும்.

இங்குள்ள இறைவர் இடைச்சுரநாதர், ஞானபுரீஸ்வரர் எனப்படுவார். இறைவியார் இமயமடக்கொடி ஆவார், இங்குள்ள தீர்த்தம் மதுர தீர்த்தம், இந்திர தீர்த்தம் என்பன.

இத் தலத்துக் கல்வெட்டின் மூலம், இறைவர் திருவிடைச்சுரமுடைய நாயனுர், திருவிடைச்சுரமுடையார் என்று குறிக்கப் பெற்றுள்ளனர். இங்குச் சனனபுரீஸ்வரர் கோவில் இருப்பதை அறிவிக்கிறது. கோவர்த்தன அம்பாள், திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் உருவம் அமைத்துக் கருப்பக் கிருகத்திற்கு விளக்குப் போடவும், ஆவன செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. பொன், நிலம், ஆடுகள், பசுக்கள் அளிக்கப்பட்டனவாகவும் அறியவருகிறது.

செங்கல்பட்டிலிருந்து திருப்போரூருக்குச் செல்லும் வழியில் மூன்று மைல் கடந்து வடக்கே அரைக்கல் சென்றால் இத் தலத்தை அடையலாம்.

இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. அஃது எண்சீர் விருத்தத்தால் ஆயது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. பண் குறிஞ்சி. இதனை இக்காலத்து அரிகாம்போதி இசை எனலாம். இப் பதிகத்தின் மூலம் நாம் அறிவன :

இத் தலத்து இயற்கை அழகு வெகு அழகுறச் சிறப்பிக்கப்பட்டுள்ளதை,

"விரிவளர் தருபொழில் இளம்மயில் ஆல
வெண்ணிறத் தருவிகள் திண்ணென வீழும்
எரிவளர் இனமணி புனமணி சாரல், இடைச்சுரம்"

"சேற்றயல் மிளிர்வன கயல்இள வாளை
செருச்செய ஓர்ப்பன செம்முக மந்தி
ஏற்றையொ டுழிதரு எழில்திகழ் சாரல், இடைச்சுரம்"

"நானமும் புகையொளி விரையொடு கமழ
நளிர்பொழில் இளமஞ்சை மன்னிய பாங்கர்
ஏனமும் பிணையலும் எழில்திகழ் சாரல், இடைச்சுரம்"

---

தரு - மரங்கள். பொழில் - சோலை. ஆல - ஆட. எரி - தீ. இனமணி - பலவகை மாணிக்கங்கள். புனம் - தினைப்புனம். மணி - அழகிய. செரு - போர். ஓர்ப்பன - கூர்ந்து பார்க்கின்றன. மந்தி - பெண்குரங்கு. (மீன்கள் போர் இடுவதைக் குரங்குகள் பார்த்துக்கொண்டிருக்கும்) ஏற்றை - ஆண்குரங்கு. உழிதரும் - திரியும். நானம் - கஸ்தூரி. விரை - வாசனை. நளிர் - குளிர்ந்த. பொழில் - சோலை. மஞ்சை - மயில். மன்னிய - நிலைபெற்ற. பாங்கர் - பக்கத்தே. ஏனம் - பன்றி. பிணையல் - பெண்மான். எழில் - அழகு.

"சீர்கொண்ட மென்சிறை வண்டுபண் செய்யும்
செழும்புனல் அனையன செங்குலை வாழை
ஏர்கொண்ட பலவினொ டெழில்திகழ் சாரல்,
இடைச்சுரம்"

"கோடல்கள் ஒழுகுவ முழுகுவ தும்பி
குரவமும் மரவமும் மன்னிய பாங்கர்
ஏடவிழ் புதுமலர் கடிகமழ் சாரல், இடைச்சுரம்

"பொழில்மல்கு நீடிய அரவமும் மரவம்
மன்னிய கவட்டிடைப் புணர்குயில் ஆலும்
எழில்மல்கு சோலையில் வண்டிசை பாடும், இடைச்சுரம்"

"சாந்தமும் அகிலொடும் முகில்பொதிந் தலம்பித்
தவழ்கன மணியொடு மிகுபளிங் கிடறி
ஏந்துவெள் அருவிகள் எழில்திகழ் சாரல், இடைச்சுரம்"

"மலைஇலங் கருவிகள் மணமுழ வதிர
மழைதவழ் இளமஞ்சை மல்கிய சாரல்
இலைஇல வங்கமும் ஏலமும் கமழும், இடைச்சுரம்"

"கருமைகொள் வடிவொடு சுனைவளர் குவளைக்
கயல்இனம் வயலின் வாளைகள் இரிய
எருமைகள் படிதர இளஅனம் ஆலும், இடைச்சுரம்"

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

---

பண்-இசை. செழும்புனல்-வளமான நீர். ஏர்-அழகு. பலவு-பலாப்பழம். கோடல்-செங்காந்தள் பூ. ஒழுகல்-தேனைச் சொரியும். தும்பி-வண்டுகள். குரவம், மரவம் என்பன மலர்களின் வகைகள். கடி-வாசனை. மல்கு-மிக்க. கவட்டிடை-கிளையில். அரவம்-ஓசை. ஆலும்-ஒலிக்கும். சாந்தம்-சந்தனம். அகில்-அகில்கட்டை. முகில்-மேகம். பொதிந்து-மூடி. கனம்-கூட்டமான. இலங்கு-விளங்கும். முழவு-மத்தளம். அதிர-ஒலிக்க. அணிவர்-நெருக்கமானவர். இரிய-விலக. அனம்-அன்னம்.

இத்தலத்து வாழும் மாதர்களைப் பற்றிக் கூறுகை யில்,

"வடம்உலை அயலன கருங்குருந் தேறி
வாழையின் தீங்கனி வார்ந்துதேன் அட்டும்
இடமுலை அரிவையர் எழில்திகழ் சாரல், இடைச்சுரம்"

"புடைச்சுரத் தருவரைப் பூக்கமழ் சாரல்
புணர்மட நடையவர் புடைஇடை ஆர்ந்த,
இடைச்சுரம்"

என்று கூறியுள்ளனர்.

இறைவரைப்பற்றிக் குறிப்பிடுகையில், "கூற்றுயிர் செகுப்பதோர் கொடுமையை உடையவர்" "வணங்கவும், இணங்கவும் வாழ்த்தவும் படுவார்" என்றும், "பீடுயர் செய்ததோர் பெருமையை யுடையவர்" என்றும், "பலபுகழ் அல்லது பழி இலர்" என்றும், "அருமையர் அடிநிழல் பரவி நின்றேத்தும் அன்புடை யடியவர்க் கணியரும் ஆவர்" என்றும் பாடியுள்ளனர்.

இப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் பாதி பகுதி திருஇடைச்சுரத்தின் இயற்கை வர்ணனை இனிது பாடப்பட்டிருப்பதைக் கூர்ந்து கவனிக்கவும்.

சீர்காழி நீர்வளம் உடையது எனப் புகழப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் இத்தலத்து இறை

---

புடை - பக்கத்தே. சுரம் - பாலையில். வரை - மலை. மட நடையவர் - பெண்கள். புடையிடை - பக்கங்களில். ஆர்ந்த - நிறைந்த. வடம் - ஆலமரம். உலை - அசையும். வார் - ஒழுகும். அட்டும் - எடுக்கும். அரிவையர் - பெண்கள். பீடு - பெருமை.

வரைக் கண்டு உருகியதாக ஈற்றுப் பாடல் அறிவிக்கிறது. இக்கருத்துகளை "மடைச்சுரம் மறிவன வாளையும் கயலும் மருவிய வயல்தனில் வருபுனல் காழி" என்றும், "பிறையுடை அண்ணல் சரிதைகள் பரவி நின்று உருகு சம்பந்தர்" என்றும் வரும் வரிகளில் காண்க.

இப் பதிகத்தில் சமண பௌத்தர்களைப் பற்றிய குறிப்பு இல்லை.

"பலஇலம் இடுபலி கையில்ஒன் றேற்பர்
பலபுகழ் அல்லது பழிஇலர் தாமும்
தலைஇலங் கவிர்ஒளி நெடுமுடி அரக்கன்
தடக்கைகள் அடர்த்ததோர் தன்மையை உடையர்
மலைஇலங் கருவிகள் மணமுழ வதிர
மழைதவழ் இளமஞ்ஞை மல்கிய சாரல்
இலைஇல வங்கமும் ஏலமும் கமழும்
இடைச்சுரம் மேவிய இவர்வணம் என்னே"

—முதல் திருமுறை.

திருஇடைச்சுரத்தை வணங்கிவிட்டு அங்கிருந்து திருப்போரூருக்குச் சென்றால், முருகப்பெருமானையும் கண்டு வணங்கலாம். இத் தலத்து முருகப் பெருமானைப் பற்றி அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் நான்கு. அவற்றுள் ஒன்று,

---

மடைச்சுரம் - நீர்மடைகளின் வழி. மறிவன - மடங்கித் துள்ளுவன: மருவிய - கலந்த. புனல் - நீர். காழி - சீர்காழி. சரிதை - ஒழுக்கம். பரவி - போற்றி. இலம் - வீடு. அவிர் - விளங்கும். அரக்கன் - இராவணன். தடம் - பெரிய. மஞ்ஞை - மயில். மல்கிய -மிக்க.

சீரு லாவிய ஓதிமம் ஆன மாநடை மாமயில்
சேய சாயல்க லாமதி முகமாஞர்
தேனு லாவிய மாமொழி மேரு நேரிள மாமுலை
சேலு லாவிய கூர்விழி குமிழ்நாசி
தாரு லாவிய நீள்குழல் வேய ளாவிய தோளியர்
சார்பி லேதிரி வேனை நின் அருளாலே
சாம வேதியர் வானவர் ஓதி நாள்மலர் தூவிய
தாளில் வீழ விஞ்மிக அருள்வாயே
காரு லாவிய நீள்புன வேடர் மால்வரை மீதுறை
காவல் மாதினொ டாவல்செய் தவேனே
காண ஆகம வேதபு ராண நூல்பல ஓதிய
கார ஞகரு ஞகர முருகோனே
போரு லாவிய சூரனை வாரி சேறெழ வேல்விடு
பூப சேவக மாமயில் மிசையோனே
போதன் மாதவன் மாதுமை பாதி ஆதியு மேதொழு
போரி மாநகர் மேவிய பெருமாளே.

—திருப்புகழ்.

---

ஓதிமம் - அன்னம். மா - சிறந்த. சேய - செம்மை. மாஞர் - பெண்கள். நாசி - மூக்கு. தார் - மாலை. குழல் - கூந்தல். வேய் - மூங்கில். வானவர் - தேவர். நாள் - புதிய. விஞ - ஆராய்ச்சி அறிவு. கார் - மேகம். மால்வரை - பெரிய மலை. உறை - வாழ்கின்ற. மாது - வள்ளி. கருஞகர . அருளுக்கு உறைவிடமான, கருணை + ஆகரம். வாரி - கடல் - பூப - அரசனே. மிசையோன் - மேல் இருப்பவன். மாதவன் - திருமால். போரி - திருப்போரூர். போதன் - தாமரை மலரில் வாழும் பிரமன். ஆதி - முதன்மையான சிவபெருமான்.

# 28. திருக்கழுக்குன்றம்

கழுகுகுன்றம் என்பது கழுக்குன்றம் எனப் பட்டது. கழுகுகள் பூசித்துப் பேறு பெற்ற தலம். இதற்குப் பட்சி தீர்த்தம், உலகளந்த சோழபுரம், வேதகிரி, தட்சிண கைலாசம், ருத்திர கோடி என்னும் பெயர்களும் உண்டு. கழுகள் பூசித்துப் பேறுபெற்ற தலம் என்பதை இன்றும் நேரில் கண்டு இந்த உண்மையை உணரலாம். இரண்டு கழுகு கள் ஒவ்வொரு நாளும் பகல் பதினோரு மணிக் குள் மலையின் கோபுரத்தைச் சுற்றி வந்து, பண்டாரம் ஒருவர் கொடுக்கும் சர்க்கரைப் பொங்கலையும், நெய் யையும் உண்டு செல்வதை நேராகப் பார்த்து இன் புறலாம். இக் காட்சியைக் காண யாத்திரிகர்கள் பலர் நாளும் நாளும் இத்தலத்திற்கு வந்தவண்ண மாகவே இருப்பர். இக்காட்சி திருக்கழுக்குன்றம் மலை மேல்தான் காண அமைந்துள்ளது. இந்தத் தலத் தைப் பட்சி தீர்த்தம் என்று கூறி வட நாட்டார் போற்றிப் புகழ்ந்து வணங்குகின்றனர். மலைமீது ஏறு தற்கு வசதியான படிகள் உண்டு. மின் விளக்கு களும் போடப்பட்டுள்ளன.

கழுகுகள் பூசித்தது இன்று நேற்று அன்று. சண்டன், பிரசண்டன் என்னும் கழுகுகள் முதல் யுகத்திலும், (கிரேதாயுகம்) சம்பாதி, ஜடாயு என்னும் கழுகுகள் இரண்டாம் யுகத்திலும் (திரேதா யுகம்) சம்புகுத்தன், மாகுத்தன் என்னும் கழுகுகள் மூன்றும் யுகத்திலும் (துவாபரயுகம்) பேறு பெற்றன. சம்பு, ஆதி என்னும் கழுகுகள் நான்காம் யுகத்தில் (கலியுகம்) பூசித்துப் பேறு பெற மலையை வணங்கிக் கொண்டு வருகின்றன. கழுகுகள் தொழுததை அருணகிரியார் "கழுகுதொழு வேதகிரி" என்று பாடியுள்ளனர். இவைகளே அன்றி நந்திதேவர்,

அட்டவசுக்கள், பசு, இந்திரன், வராகன் வேதங்கள், விஷ்ணு, பிரம்மா, முருகன், சந்திரன், கோடி ருத்திரர் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். கோடி ருத்திரர் பூசித்துப் பேறு பெற்றதற்குச் சான்று, இத் தலத்துச் சங்கு தீர்த்தக் கரைக்குக் தென்கிழக்கில் அரை பர்லாங் தூரத்தில் உள்ள ருத்திரகோடீஸ்வரர் கோவிலே என்பதை அறிக. இத் தலத்து விநாயகர், வண்டுவன விநாயகர். இறைவர், ருத்திர கோடீஸ்வரர். தேவியார். அபிராமி அம்மையார். இக்கோவிலைக் கண்ட அளவில், இது பழைமையானது என்பது நன்கு புலனாகும். ஆனால் கோவில் கவனிப்பார் அற்றுப் பாழ் அடைந்து இருக்கிறது. உள் சுற்று வரவு செடி, கொடிகள் அடர்ந்து காணப்படுகிறது. ஒருவேளை பூசைதான் நடக்கிறது. இக் கோவிலை ருத்ரன் கோவில் என்பர். இது வைப்புத் தலங்களில் ஒன்று.

திருக்கழுக்குன்றமலைமேல் இருக்கும் வேதகிரீஸ்வரர்மீது பன்னிரண்டு ஆண்டுக் கொருமுறை இயற்கை இடி விழும். இலிங்கத்தின் மீது விழுந்தும் இலிங்கத்திற்கு எந்த விதமான இடையூறும் செய்யாது. இதனை இடி முழுக்கு என்பர். அதாவது இந்திரன் பூசை செய்வதாக ஐதீகம்.

மலை, வேத வடிவமானது. மலை இருக்கு, யசுர், சாம, அதர்வணம் போல நான்கு குன்றுகள் இணைந்திருப்பதே இதற்குச் சான்று. இதனால்தான் தேவார ஆசிரியர் மலைமீது ஏறுமலே மலைமீதுள்ள இறைவரை மனத்தால் எண்ணிக் கீழ் இருந்தே பாடிச் சென்றனர். அவர்கள் நின்று பாடிய இடம் இது போது மூவர்பேட்டை என்று வழங்கப்படுகிறது. இங்கு மூவர் உருவங்கள் அமைந்த கோவில் உண்டு. மாணிக்க வாசகரும் இங்கிருந்தே இறைவரைக் குருவடிவாகக் கண்டு பாடல் பாடியுள்ளனர். இம் மூவர்பேட்டை நாம் மலையை வலமாகச் சுற்றி வரும்

போது, சுற்று முடிவதற்குச் சில கச தூரத்திற்கு முன் உள்ளது. மலையைச் சுற்றி வரும்போது, சஞ்சீவி மலை இருக்கும் இடம் ஒன்று வருகிறது. அங்கு வேப்ப மரங்கள் மிகுதி. அங்குக் கருங்கல் மேடைகளும் உண்டு. ஒரு கிணறும் உண்டு. சின்னஞ்சிறு கோவி லும் இருக்கிறது. இங்கு மலையைக் காலையிலும் மாலை யிலும் சுற்றி வருபவர், சிறிது நேரம் உட்கார்ந்து வேப்பங்காற்றையும் துய்த்து, அங்குள்ள மலை அடிவாரத்தில் இருக்கும் செம்மண்ணை எடுத்து நெற்றியிலும் உச்சியிலும், இட்டுக்கொண்டு சிறிது உள்ளுக்கும் கொள்வர். இப்படிப் பயன் படுத்தும் மண், மலை மருந்து என்றும், அதனை மேற் கூறியவாறு செய்வதால் நோய் நீங்கும் என்றும் கூறுவர். கிணற்று நீர் சஞ்சீவி மலையின் ஊற்று நீர் என்று அதனையும் பருகி இன்புறுவர். அதைக் கடந்து வரும்போது மாணிக்க வாசகர்க்கு இறைவர் திருவடி தரிசனம் தந்த திருவடிகளைக் காணலாம். அவற்றையும் கடந்ததும் திருமலை சொக்கம்மாள் சந்நிதி சிறு குன்றின்மேல் இருப்பதையும் கண்டு தரிசிக்கலாம். அக் கோவிலுக்குப் பக்கத்தே நின்று மலையை நோக்கி "கவலை தீருமா?" என்று கேட்டால் தீரும் என்னும் எதிர் ஒலியையும் கேட்டு மகிழலாம்.

திருக்கழுக்குன்ற மலையைச் சுற்றி வருதற்குரிய தூரம் இரண்டு மைல், இரண்டு பர்லாங்கு. இதைச் சுற்றி வரும்போது விஸ்வாமித்திரர் தீர்த்தம், கோடி விநாயகர் தீர்த்தம், மெய்ஞ்ஞான தீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலானவற்றைக் காணலாம்.

மலைமீது உள்ள இலிங்கப் பெருமான் பின்புறம், மலையைக் குடைந்து அமைத்த மும்மூர்த்திகளின் உருவங்களையும், மற்றும் பல சிற்பங்களையும் காண லாம். மேற்குப் பக்கம் மும்மூர்த்திகளின் உருவமும் வடக்குப் பக்கத்தில் யோக தட்சணாமூர்த்தி உருவ

மும், தெற்குப் பக்கம் நந்தீஸ்வரர், சண்டேஸ்வரர் உருவங்களும் உள. இங்கு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் பெருவாரியான அபிடேகம் (திருமுழுக்கு) அன்பர்களால் நடத்தப்பெறும். மலைமீது திருமலைச் சொக்கம்மாள் ஆலயமும் தனியே உண்டு கீழே இறங்கி வரும்போது, பல்லவர்கள் குடைந்து வைத்துள்ள சிறு மண்டபத்தையும், சிற்பங்களையும் காணலாம். இந்த இடத்தைச் சயினக் கோயில் என்பர்.

மலைமேல் நீர்ச்சுனை உண்டு. மலைமேல் உள்ள வேதகிரீஸ்வரருக்குக் கீழ் இருந்து திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு செல்பவர் ஒரு வைஷ்ணவப் பிராம்மணர். மற்றும், சந்தனம் அறைத்தல்போன்ற தொண்டு செய்பவரும் அவரே. அப்படிச் செய்ய வேண்டும் என்பது அவ் வைணவப் பரம்பரையின் திட்டமாகும்.

திருக்கழுக்குன்றத்தின் கீழ்க் கோயிலும் மிகப் பெரியது; நான்கு பெரிய கோபுரங்களைக் கொண்டது. கீழ்க் கோபுரம் ஒரு வைஷ்ணவ அன்பரால் கட்டப்பட்டது என்பர். இங்குள்ள ஆமை மண்டபம் என்பது பெரியது. இங்கிருக்கும் இறைவர் பக்தவத்சலர் என்றும், இறைவியார் திரிபுரசுந்தரி என்றும் பெயர் பெறுவர். மலைமேல் உள்ள இறைவர் வேதகிரீஸ்வரர் என்றும், தேவியார் பெண்ணின் நல்லாள் அம்மை என்றும் அழைக்கப் பெறுவர். இப் பெண்ணின் நல்லாள் அம்மையாரைத்தான் திருமலைச் சொக்கம்மாள் என்று கூறி வருகின்றனர்.

கீழ்க் கோவிலின் உள், நந்தி தீர்த்தம் என்னும் பெயரில் ஒரு குளம் உண்டு. சந்நிதிக்கு எதிர் கடை வீதிக்குச் சற்றுத் தூரத்தில் சங்கு தீர்த்தம் என்னும் குளம் உளது. இது பெரிய குளம். இதில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை, வலம்புரி சங்கு

ஒன்று தோன்றுவது வழக்கம். இக் காரணம் பற்றி இக் குளம் இப்பெயர் பெற்றது. இச்சங்கு தூய்மை செய்யப்பட்டுச் சங்காபிடேகம் என்னும் விழாவின் போது பயன் படுத்தப்படும். சங்குதீர்த்தக் கரையில் மார்க்கண்டேயர் கோவிலும், இரட்டைப் பிள்ளையார் கோவிலும் உள்ளன.

திருக்கழுக்குன்றத்தில் பல இடங்களிலிருந்து மக்கள் திரண்டுவந்து பலநாள் தங்குவர். தங்குவ தற்குச் சத்திரங்கள் உண்டு. இங்குள்ள சங்கு தீர்த் தத்தில் மூழ்கி மலையைக் காலை மாலை வலம் வந்து மலை மருந்தை (மண்) உடம்பில் பூசியும், உள்ளுக்குச் சிறிது உண்டும் வந்தால் குஷ்டநோய் தீரும் என்பது நம்பிக்கை.

இங்குச் சித்திரை மாதம் பெருவிழா நடை பெறும். அவ் விழாக்களில் இரடப வாகன சேவை யும், அறுபத்துமூவர் காட்சியும், ஐந்து தேர்கள் ஓடும் இரத உற்சவமும், இராவணேஸ்வர வாகனக் காட்சியும் விசேடமானவை. அறுபத்துமூவர் விழா வின்போது, இறைவர் மலையைச் சுற்றி வருவர். அதுவே அதிகாரநந்தி சேவையும் ஆகும். இது மூன்றாம் நாள் விழா.

சுர குரு தாம்செய்த பசுக்கொலைப் பாபம் நீங்க மலை அடிவாரத்தில் இலிங்கத்தை நிறுவிப் பூசித்த போது கோஹத்திப் பாபம் அவரது சிரசினின்று எழுந்து காக்கை வடிவம் கொண்டு விழுந்ததாம். அங்ஙனம் வீழ்ந்த இடமே இதுபோது காக்கைமலை எனப்படுகிறது. அங்குக் காக்கைகள் மிகுதியும் வந்து தங்குவதை இன்றும் நேரில் காணலாம். இது சங்கு தீர்த்தத்திற்குத் தென்மேற்கு மூலையில் இருக்கிறது. இந்தச் சுரகுரு அமைத்த கோவிலே பக்தவத்சலர் கோவில் என்பர்.

இத்தலத்து விருட்சம் வாழை ஆகும். இதனால் இத்தலம் கதலிவனம் எனவும்படும்' அருணகிரியார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். இந்த உண்மையினைக் கீழ்வரும் திருப்புகழ் வரிகளாம்,

கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிர் உலவு வாசல் நிறைவானோர்
கடல்ஒலிய தான மறைதமிழ்கள் ஓதும்
கதலி வனம் மேவும் பெருமாளே

என்பது கொண்டு தெளிக.

இத் தலத்தில் வசு தீர்த்தம், இந்திர தீர்த்தம், என்னும் தீர்த்தங்களும் உண்டு. இங்குள்ள திரிபுர சுந்தரியின் தோற்றம் மிகப் பழமையானது என்று கருதப்படுகிறது. அம்மையாரின் கழுத்து முதுமை காரணமாக மெலிந்து இருத்தலின், அம்மையாரின் திருவடிகட்கே அபிடேகம் நடத்தப் பெறும். கோவில் அழகானது. இவ்வம்மையார்க்கு வெள்ளிக் கிழமை தோறும் பூப்பாவாடை அன்பர்களால் சாத்தப்படும். பக்தவத்சலர் கோயிலில் அகோரமூர்த்தியின் உருவைக் கண்டு களித்து வணங்குதல் வேண்டும்.

இத் தலத்துக் கல்வெட்டுகளால் நாம் அறிய வருவன : இத் தலம் உலகளந்த சோழபுரம் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இறைவர் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் எனப்பட்டனர். சண்முகப் பிள்ளையார் என முருகன் குறிக்கப்பட்டனர். கருப்பக்கிரகத்தின் முன்னுள்ள மண்டபம் கட்ட ஈசான சிவா இடமிருந்து ஒரு நிலம் வாங்கப்பட்டது. கோயிலைப் பழுது பார்க்க விஜயநகர அரசர் பிரதாபபுக்கராயர் நிலம் தந்தனர். மலைமேல் உள்ள இறைவர் திருமலை ஆளுடைய நாயனார் எனப்பட்டார். அவருக்கு மக்களால் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது.

சண்முகப் பிள்ளையார்க்கு விளக்குப் போடப் பசுக்கள் தானம் செய்யப்பட்டன. பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கு வந்த டச்சுக்காரர்களைப் பற்றிய குறிப்புகளும் தெரியவருகின்றன. அவற்றில் ஒன்று கழுகுகள் வந்து உணவு அருந்திப் போவதை அவர்கள் கண்ட காட்சியாகும்.

இவர்கள் கண்ட காட்சியைப்பற்றி ஒரு செவிமரபு வரலாறு சொல்லப்படுகிறது. அதாவது ஒரு டச்சுக்காரர் பட்சிப் பண்டாரம் கழுகுகளுக்குச் சர்க்கரைப் பொங்கலைக் கொடுக்கக் காத்திருந்த போது, அந்த டச்சுக்காரர் அவருக்குப் பக்கத்தே மீன்களைப் பரப்பி வைத்தனராம். ஆனால், கழுகுகள் மீனை உண்ணுமல் சர்க்கரைப் பொங்கலையே உண்டு சென்றனவாம். இதுவே அவ்வரலாறு.

திருக்கழுக்குன்ற சிற்பங்கள் சில நரசிம்மவர்ம பல்லவன் காலத்தன. இங்குள்ள மூல இலிங்கம் மூலத்தான ஈஸ்வரர் என்பது. கி. பி. ஏழாம் நூற்றுண்டு கந்த விஷ்ணு என்னும் பல்லவன், இதற்கு மான்யம் விட்டுள்ளான். பக்தவச்சலர் கோவில் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டு சடாவர்மனுல் கட்டப்பட்டது.

திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டிலிருந்து தென்கிழக்கே ஒன்பது கல் தொலைவில் உளது. சென்னையிலிருந்து அடிக்கடி பஸ் போக்கு வரவும் உண்டு.

திருக்கழுக்குன்றத்திலிருந்து பன்னிரண்டு கல் சென்ருல் திருப்போரூர் என்னும் முருகப்பெருமான் கோவிலையும், சிதம்பரசுவாமிகள், மௌன சுவாமிகள் மடங்களையும், குன்றின்மீதுள்ள சிவன் கோவிலையும் வணங்கலாம். இங்கு ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள் திருப்போரூர் ஆதீன பரம்பரைத் தருமகர்த்தராக விளங்குகின்றனர்.

திருக்கழுக்குன்றத்திற்கு ஒன்பது கல் தொலைவில் மகாபலிபுரம் என்னும் ஊர் உளது. இங்கு மலையில் குடையப்பட்ட சிற்பங்கள் பற்பலவாகும். இவற்றைக் காண வெளியூர்களிலிருந்து பற்பலர் வந்தவண்ணமாக இருப்பர். மேற்கு நாட்டவர் இந்தியாவிற்கு வந்தால் இந்த இடத்தைக் கண்டே செல்வர். இங்குச் சிவன் கோவில் கடற் கரை அருகே உளது. ஊரில் திருமால் கோவில் உளது. இத் தலத்துப் பெருமாள் தலசயனத் துறைவார் என்றும், தேவியார் நிலமங்கை நாச்சியார் என்றும் கூறப்பெறுவர். தீர்த்தம் கருட நதி. தலசயனமூர்த்தி, புண்டரீக ரிஷிக்குக் காட்சிதந்தவர். பூதத்தாழ்வார் பிறந்த தலமும் இதுவே. பூதத்தாழ்வாரும் திருமங்கை ஆழ்வாரும் இத் தலத்தைப் பாடியுள்ளனர்.

மகாபலி புரத்தில் வராகப் பெருமாள் சந்நிதியும் உண்டு. கடற்கரை மணல் பரப்பில் அடிமட்டத்தில் ஒரு கோவில் அமைப்புக் காணப்படுகிறது. மகாபலிபுரம் யாத்திரிகர்கட்கு இடமாக இருத்தலின், அரசாங்கம் பல வசதிகளைச் செய்துள்ளது.

திருக்கழுக்குன்றத் தலத்தின்மீது சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் தனித் தனியே ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். சம்பந்தர் பாடியபதிகம் கலிநிலைத்துறை யாப்பால் ஆனது. இதன் பண், குறிஞ்சி. இவ்விரண்டைப் பற்றிய குறிப்பு முன்பே எழுதப்பட்டது. அப்பர் பாடிய பதிகம் திருத்தாண்டகம். இதன் இலக்கணமும் முன்பே கூறப்பட்டது. சுந்தரர் பதிகம் கலிநிலைத்துறை யாப்பால் அமைந்தது. பண் நட்ட பாடை. இவற்றின் விளக்கங்களும் முன்பே விளக்கப்பட்டன.

மாணிக்கவாசகருக்கு இறைவர், இங்குக் குரு தரிசனம் காட்டியுள்ளார். அதனைப் போற்றித் திருவாதவூர் அடிகள் பாடிய திருவாசகப் பதிகமும் ஒன்று உண்டு.

அஃது எழுசீர் ஆசிரிய விருத்தம் ஆகும். திருவாசகப் பாடல்களுக்குப் பண் வகுக்கப்படவில்லை. ஆனால், பெரும்பாலும் மோகனராகத்தில்தான் ஓதுவார்கள் இப்பாடல்களைப் பாடி வருகின்றனர்.

இத்தலத்திற்குத் தல புராணம் உண்டு. இத் தலத்தின் மீது அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடியுள்ள உலா ஒன்றும் உளது. இவ்வுலாவில் வரும் கீழ் வரும் வரிகள் படித்தற்குச் சுவை தருவனவாகும். திருமணம் ஆனவர்கள் தனிக்குடித்தனம் செய்வது வழக்கம் ஆதலின், அவர்களைப்போலச் சிவபெருமானும் தம் திருமணத்திற்குப் பிறகு திருக்கழுக்குன்றத்தில் குடி புகுந்தார் என்பதை,

''விருப்பின் மலைமகளை வேட்டொரு கால்வேதம்
பொருப்பின் நெடிது குடிபுகுந்தான்''

என்றும், நடனம் ஆடிய இளைப்பைப் போக்க இங்கு வந்து தங்கினார் என்பதை,

''சாற்றும் வடவனத்தில் ஆடித் தனதிளைப்பை
மாற்றும் கதளி வனத்தினான்''

என்றும் பாடி இருப்பதைப் படித்து இன்புறுக. இப்படிப் பல இன்பந்தரும் குறிப்புகள் இவ்வுலாவில் உண்டு.

திருஞானசம்பந்தர் இத் தலத்தின் மீது பாடியுள்ள திருக்கழுக்குன்றத் திருப்பதிகத்தின் மூலம் நாம் அறிவன: இறைவர் இத் தலத்தை விரும்பி வாழ்பவர் என்னும் குறிப்பு ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் ''காதல்செய் கோயில் கழுக்குன்றே'' என்று கூறி இருப்பது கொண்டு அறிகிறோம்.

பாலருவாயர் இறைவரைப் பற்றிக் கூறுகையில், ''வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும் கானகத்தான்'' என்றும், ''சிறுத்தொண்டர் உள்ளம்

எல்லாம் உள்கிநின்று ஆங்கே உடன் ஆடும் கள்ளம் வல்லான்" என்றும் கூறியுள்ளனர்.

இப் பதிகத்தில் இத்தலத்துத் தேவியாரைப் "பெண்ணின் நல்லாள்" என நாலாவது பாட்டில் குறித்திருப்பதைக் காண்க. இப் பதிகத்தில் ஏழாவது பாடல் கிடைத்திலது.

கடைசிப் பாட்டு, இப் பதிகத்தைப் பாடவல்லவர்கள் புண்ணியராய் விண்ணவரோடு வாழ்வர் என்றும், திருஞானசம்பந்தர் சீர்மையுடையவர் என்றும், இப் பதிகம் பண்ணுடன் பாடப்பட்டது என்றும் அறிவித்து நிற்கிறது. இந்த உண்மைகளை,

"கண்ணு தலான் காதல்செய் கோவில் கழுக்குன்றை
நண்ணி யசீர் ஞான சம் பந்தன் தமிழ்மாலை
பண்ணி யல்பால் பாடிய பத்தும் இவைவல்லார்
புண்ணி யராய் விண்ணவ ரோடும் புகுவாரே"

என்னும் பாடலில் காணலாம்.

"தேன கத்தார் வண்டது வுண்ட திகழ்கொன்றை
தான கத்தார் தண்மதி சூடித் தலைமேலோர்
வான கத்தார் வையகத் தார்கள் தொழுதேத்தும்
கான கத்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே"

—முதல் திருமுறை.

திருநாவுக்கரசர் இத் தலத்தின் மீது பாடிய இரு தாண்டகங்களுள் முதல் தாண்டகந்தான் இத் தலத்தின் மீது பாடப்பட்டது என்பதை நன்கு விளக்கிக் கொண்டிருக்கிறது. ஆனல் இரண்டா

---

உள்கி - நினைந்து. மதி - சந்திரன். தேன் அகத்து - தேனின் உள். ஆர் - பொருந்திய. நக - மலர, தண்மதி - குளிர்ந்த சந்திரன். வையகத்தார் - உலகத்தார்.

வது தாண்டகம் திருமயிலைத் தாண்டகமாக இருக்கலாம் என்று யூகிக்க இடம் தருகிறது. இதை மயிலாப்பூர் தலத்தைப்பற்றி எழுதிய இடத்து நன்கு விளக்கியுள்ளேன். அதனை ஆண்டுக்காண்க. அப்பர் இறைவரைக் கழுக்குன்றில் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியைக் "கழுக்குன்றத்து அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்று பாடியுள்ளது கொண்டு நன்கு உணரலாம்.

அப்பர் இத் தலத்துத் தாண்டகத்தில் இறைவனை "முதலானன், பூவின்மேல் நான்முகனும் மாலும் போற்றப் புணர்வரிய பெருமான், புனிதன், காவலன், கற்பகம் என்றுபுகழ்ந்து போற்றியுள்ளனர்.

"மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக் காடுடையானை முதலா னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலாலம் உண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"

— திருத்தாண்டகம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ள பதிகத்தின் வாயிலாக நாம் அறிவன: திருக்கழுக்குன்றத்

---

மூவிலைவேல் - சூலம். ஆவினில் ஐந்து - பஞ்சகவ்யம். (பசுப் பால், தயிர், நெய், நீர், சாணம்) அமரர்கோன் - தேவர் தலைவன். ஆலாலம் - விடம். உகந்த - மகிழ்ந்த. புனிதன் - தூய்மையானவன். காவலன் - அரசன்.

தின் இயற்கை அழகை இவரது பதிகத்தில் நன்கு காணலாம். இந்த உண்மையினை,

''கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றம்''

''நிறங்கள் செய்த மணிகள் நித்திலம் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றம்''

''பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மதம் மூன்றுடைக்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றம்''

''முலைகள் உண்டு தழுவு குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவின் தண்கழுக் குன்றம்''

''கடமு டைய புறவில் தண்கழுக் குன்றம்''

''தேனும் வண்டும் மதுஉண் டின்னிசை பாடவே
கான மஞ்ஞை உறையும் தண்கழுக் குன்றம்''

''மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
கழைகொள் முத்தம் சொரியும் தண்கழுக் குன்றம்''

''கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றம்''

என்று பாடப்பட்டிருப்பது கொண்டுணர்க.

இப் பதிகத்தில் உபதேச மொழிகளும் அமைந்துள்ளன. அவ் உபதேச மொழிகளே,

''கொன்று செய்த கொடுமை யால்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்''

''இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே''

---

பிடி - பெண் யானை. நித்திலம் - முத்து. கறங்கு - ஒலிக்கும். தீரம் - மனவலிமை. மதம் மூன்று - கன்ன மதம், கபால மதம், பீஜ மதம். களிறு - ஆண் யானை. முசுக் கலைகள் - ஆண் குரங்குகள். புறவு - முல்லைநிலம். கடம் - காடு. கான மஞ்சை - காட்டு மயில். சால - மிகவும். கலித்து - ஒலித்து. வேய் அவை - மூங்கில்கள். கழை மற்றொரு வகை மூங்கில். இறங்கி - வணங்கி.

"நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திட"
"வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி ஆடியை
"புலைகள் தீரத் தொழுமின்"
"பிழைகள் தீரத் தொழுமின்"
"சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழுமின்கள்"

என்பன.

ஈற்றுப் பாடலில், சுந்தரர் தம்மை வளம் பெருகிய தோள்களையுடைய ஆரூரன் என்கின்றார். (இதனால் சுந்தரருடைய உடல் வளத்தையும் அழகையும் அறிந்து கொள்ளலாம்.) இப்பதிகம் இயற்கை அழகும் பண் அழகும், பொருந்தப் பாடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பாடல்களைப் பாடுபவரை நோக்கி "மக்களே பாடித் தொழுது நல்வழிபடுங்கள்" என்று சுந்தரர் கூறுகின்றார்.

"கொன்று செய்த கொடுமை யால்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரான் இடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே"

— ஏழாம் திருமுறை.

மாணிக்கவாசகர் இத் தலத்தின் மீது பாடிய பதிகத்தின் வழி நாம் அறிவன : இறைவர் குருவடிவாக வந்து காட்சி தந்த உண்மையை இப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "காட்டினாய் கழுக்குன்றிலே" என்று அமைத்துப் பாடி இருப்பது கொண்டு உணர்ந்து கொள்ளலாம்.

இறைவர் திருவாதவூரரைத் திருப்பெருந்துறையில் குரு வடிவில் வந்து ஆட்கொண்டமையின்

---

நித்தலும் - தினமும். வெளிறு - அறியாமை. புலைகள் - கீழ்மைக் குணங்கள். சொல்லல் - சொல்லவேண்டிய சுந்தரரின் பாடல்களை. சந்தம் - சந்தனம். நாறும் - மணக்கும்.

அந் நினைவுபற்றி "பிணக்கிலாப் பெருந்துறைப் பெருமான்" என்று அவரைப் போற்றுகின்றார். இறைவருடைய திருப்பெயர்களைப் பேசுபவர்கட்கு ஒப்பற்ற இன்பங்கள் வரும்; துன்பங்கள் போகும் என்கிறார். அடியவனாகிய எனக்கு நல்வினை தீவினைகளை ஒன்றாகக் கருதும் நிலை ஏற்பட மலம் நீங்கியபோது அழகிய வடிவை எனக் காட்டினாயே என்று வியந்து கூறுகின்றனர்.

இறைவரை "வந்திக்கிழவியின் பொருட்டு மண் சுமந்து பிட்டு உண்டவரே, பெருந்துறைப் பித்தனே, ஒழுக்கமுடையவனே, சிவலோகனே, பன்றிக் குட்டிகட்கும் பன்றி வடிவுடன் வந்து பால்கொடுத்த கருணைமூர்த்தியே, குணமாம் பெருந்துறைக் கொண்டலே, எனது சிந்தையில் உன் திருவடிகளை நினைக்க வைத்த சிகாமணியே, பிற தெய்வங்களைப் போற்றாத அறிவு தந்த பெருமானே, பெருந்துறைப் பெருவெள்ளமே, அறுபத்துநான்கு இயக்கிமார்கட்கு எட்டு வகைச் சித்திகளும் கைவரச் செய்த ஈசனே" என்று புகழ்கின்றனர்.

மாணிக்கவாசகர் தம்மை, "கட்டளை பிறந்தும் நேரே வந்து காணாத குற்றமுடையவன், நாயினும் கடையாயவன், துன்பவடிவானவன், மனக்கலக்கம் உடையவன் உன் திருவருளுக்கு விலக்கானவன், மேல் விளைவதை அறியாதவன், வினைகளால் கேடுபடுபவன், நாணத்தகாததற்கும் நாணம் எய்தியவன், நடுக் கடலுள் அழுந்தியவன். சைவ ஆசாரம் ஏதும் அறியாதவன்" என்று கூறிக் கொள்கின்றார்.

இறைவர் தமக்குத் திருவருள் புரிந்த நிலைகளைக் குறிப்பிடும்போது, தாம் கலங்கி இருந்த நிலையில் அக் கலக்கத்தை ஒழித்துக் கண்ணீரையும் துடைத்து, மும்மலங்களையும் அழித்தார் என்றும், பெருந்துறையில் திருவடியாகிய படகைப் பிடித்தபோது காணு

ணுதொரு காட்சியை அளித்தார் என்றும் பாடியுள்ளனர். "இறைவா! நீ உண்டு என்பதற்குச் சாட்சி இவ்வுலகமே என்னும் கருத்தையும் இப் பதிகத்தில் பாடியுள்ளனர். இதனை "ஞாலமே கரியாக" என்னும் அவருடைய வாக்கைக் கொண்டே தெளியவும்.

"பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே"

"பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே"

"மலங்கி னேன்கண் ணின்நீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவத றிந்திலேன்

---

பிணக்கு - மாறுபாடு. நாமம் - திருப்பெயர். இணக்கு இலாத-ஒப்பற்ற. உணக்கிலாத வித்து-காயாத பிறவியாகிய விதை, திருக்கோலம்-குருதரிசனம். சட்டம்-உடல். சழக்கன்-பொய்மையேன். சிட்டன்-ஆசாரசீலன். மலங்கினேன்-கலங்கினேன். மலம்-ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலம். விலங்கினேன் - விலகினேன்.

இலங்கு கின்றநின் சேவ டிகள்இ
ரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே''

''கோல மேனிவ ராக மேதுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்தசி காமணி
ஞால மேகரி யாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே'' —திருவாசகம்.

அருணகிரி நாதர் இத் தலத்து முருகன்மீது பாடிய திருப்புகழ் நான்கு. அவற்றுள் ஒன்று,

வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கும் அபிராம
வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி புயநேய
ஆத ரத்தொ டாத ரிக்க ஆன புத்தி புகல்வாயே
காது முக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாம
காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி இமையோரை
ஓது வித்த நாதர் கற்க ஓது வித்த முனிநாண
ஓரெ ழுத்தில் ஆறெ ழுத்தை ஓது வித்த பெருமாளே.

---

இலங்கு - விளங்கு கோலமேனி - அழகிய உடல் வராகம் - பன்றி. குட்டிகளுக்குப் பால் கொடுக்க வந்த பெண் பன்றி வடிவம். சீலம்-ஒழுக்கம் கரி-சாட்சி, நச்சி-விரும்பி. வேத வெற்பு-வேத கிரியாகிய திருக்கழுக்குன்றம். அபிராமா - அழகனே. வேடுவச்சி - வள்ளி, பாத பத்மம்-திருவடித் தாமரை. செச்சை - வெட்சிமாலை. ஓதுவித்த நாதர் - சிவபெருமான். ஓரெழுத்து- பிரணவம். ஆறெழுத்து-சடாட்சர மந்திரம் புனத்தில் - வள்ளிமலைத் தினைப்புனத்தில். காதுமுக்ர - பகைத்து வந்த. மகுடம் + ஆகாசம், மகுடாகாசம். வீசிவிட்ட காலர் - வீசிவிட்ட பாதத்தை யுடைய நடராசர். பத்தி - பக்தி, ஓதுவித்த முனி - பிரமதேவன்.

## 29. திருஅச்சிறுபாக்கம்

இத் தலத்துக்குரிய பெயர்க் காரணங்களாக இரண்டு வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. ஒன்று இறைவர் முப்புரம் எரித்தபோது பூமியாகிய தேரின் அச்சு இற்ற (முறிந்த) காரணத்தால், இத்தலம் அச்சிறுபாக்கம் எனப் பெயர் பெற்றது என்பது. மற்ருெரு காரணம், பாண்டிய நாட்டு அரசன் தன் நாட்டில் திருக்கோயில் அமைக்கக் கங்கை மணலை ஏற்றிக்கொண்டு வர, அவ்வண்டி இத்தலத்து அருகே வந்தபோது மேலே செல்லாமல் நின்றுவிட, அதனுல் வண்டியைச் செலுத்தப் பெரிதும் முயன்ற போது அச்சு முறிந்ததனுல் இப்பெயர் பெற்றது என்பது. (இதுபோது அச்சரபாக்கம் எனப் படுகிறது) அதன்பின் அம்மன்னன் காதில் அசரீரி வாயிலாக இறைவர் திருவருளே அச்சு முறிந்த மைக்குக் காரணம் என்று உணர்ந்து இக் கோயில் திருப்பணி செய்துள்ளனன். இங்குள்ள அச்சுமுறிந்த இடம் வண்டிக்குப்பம் என்று கூறப்படுகிறது. இத் தலத்தில் இரண்டு மூலட்டானங்கள் உள்ளன. கண்ணுவர், கௌதமர் ஆகிய இருவரும் பூசித்த தனுல் இரு மூலட்டானங்கள் இங்கு ஏற்பட்டன. இறைவர் இரண்டு மூலட்டானங்களில் விளங்கு வதைத் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தின் முதல் பாட்டில் "அன்று இரண்டு உருவமாய் எம் அடிகள் அச்சிறுபாக்கமது ஆட்சிகொண்டாரே" என்று கூறி இருப்பதைக் கொண்டுணரலாம். கோவில் கிழக்கு நோக்கி யுள்ளது. கோயிலுக்கு வெளியே தேவ தீர்த்தம் இருக்கிறது. கோயிலுக்குள் சிங்க தீர்த்தம் உளது. மேலும் சங்கு தீர்த்தம் என்னும் ஒரு தீர்த்த மும் உண்டு. இத்தலம் பாக்கபுரி, பாக்கபுரம் என்றும் கூறப்பெறும். கோவிலுக்குள் இருக்கும் இரண்டு ஆவுடையார்கள், முறையே எமையாட்சீசர், உமை

யாட்சீசர் என்று பெயர் பெறுவர். உமையாட்சீசர் கோவில் கோபுரத்திற்கு நேரே இருக்கிறார். இறைவர் சுயம்புமூர்த்தி. (தான் தோன்றித் தம்பிரான்) இறைவர் பாக்கபுரி ஈஸ்வரர் என்றும், இறைவியார் சுந்தர நாயகி என்றும், அதிசுந்தரமின் அம்மை, பாலகுசாம்பாள் என்றும், கூறப்பெறுவர். இங்குத் தல விருட்சம் கொன்றை. இங்கிருக்கும் ஆட்சீஸ்வரர் கோயிலின் மண்டபத்தின் வடக்குச் சுவரில் முதல் குலோத்துங்கன் உருவம் உளது. இதனால் இக் கோயில் அவனால் கட்டப்பட்டது என ஒருவாறு ஊகிக்கலாம். இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் இறைவர் ஆட்சிகொண்ட நாயினார், ஆட்சீஸ்வரர் என்னும் பெயரையுடையார் என அறிகிறோம். இதனைத் திருஞானசம்பந்தர் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், அச்சிறுபாக்கமது ஆட்சி கொண்டாரே'' என்று கூறுவதிலிருந்தும் உணரலாம்.

இவ்வூரின் மலை உச்சியில் ஒரு சிவாலயம் உண்டு. ஆட்சீஸ்வரர் வருடந்தோறும் அகத்தியருக்கும், திருஞானசம்பந்தருக்கும் காட்சி தருகிறார். இவ்வூர் மலையின் தென்கோடிக்குப் பெரும்பேர் என்பது பெயர். இங்குத் தான்தோன்றீஸ்வரர், கைலாசநாதர் கோயில்களும் உள்ளன. பெருவிழா சித்திரையில் நடக்கும். ஐந்தாம் நாள் திருக்கல்யாண விழாவும், இரஷப வாகன விழாவும், ஏழாம் நாள் கொன்றையடி விழாவும் சிறப்புடன் நடைபெறும். பதினோராம்நாள் பெரும்பேருக்கு இறைவர் சென்று அகத்தியர்க்குக் காட்சி தருவர். வைகாசியில் திருஞானசம்பந்தர் விழா நடக்கும். ஆவுடையாருக்கு முன் உள்ள கிணற்றில் சுரங்கம் இருப்பதாகக் கூறுகின்றனர். அஃது, இதுபோது கல்லால் மூடப்பட்டுள்ளது. கல்வெட்டால் இத்தலத்து இறைவராம் அட்சீஸ்வரர், அச்சுக்கொண்டருளிய தேவர் என அறியப்படு

கிருர். விளக்கிற்காக ஆடுகளும், பொன்னும், திரு அமுதுக்காக நிலமும் விடப்பட்டனவாகத்தெரிகிறது.

இத் தலத்தைப் பற்றிச் சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது. அப்பதிகம் எண்சீர் விருத்தத்தால் ஆனது. இதன் பண் குறிஞ்சி. இவற்றின் விளக்கம் முன்பே கூறப்பட்டது. இப்பதிகத்தால் அறிய வருவன :

இறைவர் அம்மை அப்பராக விளங்கும் நிலையினை "அன்றிரண்டு உருவமாய் எம் அடிகள்" என்று உணர்த்தி இருப்பதனுல் அறியலாம். இதுவே அன்றி இறைவரின் இனிமையையும், அடியார்மாட்டுக் கொண்டுள்ள அன்பினையும், "தேனினும் இனியர் தீங்கரும் பனையர் தம் திருவடி தொழுவார் ஊன் நயந்து உருக உவகைகள் தருவார் உச்சிமேல் உறைபவர்" என்று முறையே கூறுதல் கொண்டு தெளியலாம்.

இறைவரைப்பற்றி மேலும் குறிப்பிடுகையில், "வானகம் இறந்து வையகம் வணங்க வயங்கொள நிற்பதோர், வடிவினை யுடையார், பேரருளாளர், பிறவியில் சேரார், பிணியிலர் கேடிலர், பலபுகழ் அல்லது பழியிலர், எண்ணல் ஆகாத இமையவர் நாளும் ஏத்தரவங்களோடு எழில் பெற நின்ற அண்ணலார்" (இராவணனுக்கு) அச்சமும் அருளும் கொடுத்த எம் அடிகள், உள்கலாததோர் இயல்பினை யுடையர்,

---

ஊன் — உடல், தசை. உவகை - மகிழ்ச்சியை. உறைபவர் - வாழ்பவர். வானகம் - தேவலோகம். இறந்து - கடந்து. வையகம் - உலகத்தில். வயம் - வெற்றி. பிணி - நோய். இமையவர் - தேவர். ஏத்து - போற்றும். அரவம் ஓசை. எழில்-அழகு. அண்ணலார் - பெருமையில் சிறந்தவர். அடிகள்-பெரியவர், தலைவர். உள்கலா - நினைக்காத.

"நோற்றல ரேனும் வேட்டல ரேனும்
நுகர்புகர் சாந்தமொ டேந்திய மாலைக்
கூற்றல ரேனும் இன்னவா றென்றும்
எய்தல்ஆ காததொர் இயல்பினை யுடையார்"

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமணர்களையும், பௌத்தர்களையும் பற்றிக் கூறும்போது "நல்வினை நீக்கிய வல்வினையாளர், ஓதியும் கேட்டும் உணர்வினை இலாதார்" என்றும் கூறினர். அவ்விரு சமயத்தாராலும் விளக்கப் படாதவர் என்பதனையும் உள்கலாகாததோர் இயல் பினை யுடையார் என்பதனையும் கூறியுள்ளனர்.

இப்பதிகத்தின் நான்காவது பாட்டின் மூலம் நமக்கு அரிய குறிப்பு ஒன்று கிடைத்துள்ளது. அதாவது இறைவர்க்குத் திருஞானசம்பந்தர் காலத்திலேயே தமிழ் மொழியிலும், வடமொழியிலும் அர்ச்சனை நடந்து வந்த நிகழ்ச்சி ஆகும். இதனை,

"தார்மலர் அடிஒன்று அடியவர் பரவத்
தமிழ்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர"

என்னும் வரிகளில் காண்க. இதை உணர்ந்த பிறகேனும் மெய்யன்பர்கள் கோயில் குருக்களை அப்பரது போற்றித் திருத்தாண்டகத்தையேனும், மணிமொழியார் போற்றித் திருவகவலையேனும் கொண்டு அர்ச்சனை புரியுமாறு வற்புறுத்துவார்களாக.

சீர்காழியின் இயற்கை வர்ணனை, ஈற்றுப் பாட லில் பொய்கை நிறைந்தது என்றும், அப்பொய்கை யில் மலர் நிறைந்தது என்றும், அம்மலரின் தேன், தவளைகளின் வாயில் நிறையும் என்றும், இருள்மீன்

---

நோற்றலர்-தவம் செய்திலர். வேட்டலர்-யாகம்செய்தில
நுகர் - உண்ணும், புகர் - உணவு. சாந்தம் - சந்த
எய்தல்-அடைதல். பரவ - வணங்க. ஒன்று - பொருந்

கள் மலர்கள் கிழியத் துள்ளும் என்றும் கூறப்பட்டுள்ளன. இதனை,

"மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர் கிழியப்
பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழி"

என்னும் வரிகளில் காண்க.

திருஞான சம்பந்தர் தாம் சிவபெருமான் திருவடிகளைத் தவிர்த்து வேறு தெய்வங்களைப் போற்றுதவர் என்பதை 'கைச்சிறு மறியவன் கழல் அலால் பேணுக் கருத்துடை ஞானசம்பந்தன்' என்னும் வரிகளில் உணர்த்தி இருப்பதை ஈற்றுப் பாடல் வழி உணரலாம். திருஞானசம்பந்தரின் தமிழ்ப் பாடல்களைக் கொண்டு அச்சிறுபாக்கத்து அடிகளைப் போற்றும் அடியார்கள் தீவினை இல்லாத நிலையினைப் பெறுவர் என்பதை, "ஏத்தும் அன்புடை அடியார் அருவினை இலரே" என்னும் வரிகள் மூலம் சம்பந்தர் திருக்கடைக் காப்புச் செய்யுளில் அறிவித்துள்ளனர்.

"தேனினும் இனியர் பாலன நீற்றர்
தீங்கரும் பனையர் தம் திருவடி தொழுவார்
ஊனயந் துருக உவகைகள் தருவார்
உச்சிமேல் உறைபவர் ஒன்றலா தூரார்
வானகம் இறந்து வையகம் வணங்க
வயங்கொள் நிற்பதோர் வடிவினை உடையார்
ஆனையின் உரிவை போர்த்தஎம் அடிகள்
அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே"

— முதல் திருமுறை.

---

மை - கருமை. செறி - மிக்க. மது - தேனை. இறவு - இருல் மீன். இறவு + ஏறி எனப் பிரிக்க. வெறி - வாசனை. காழி-சீர்காழி. மறி-மான். கழல்-திருவடி. பேணு-போற்றுத. ஏத்தும் - போற்றும். அருவினை - கொடியவினை. பாலன - பால்போன்ற. நீற்றர் - விபூதி அணிந்தவர். ஊன் - உடம்பு. உவகைகள் - மகிழ்ச்சி. உறைபவர் - வாழ்பவர். வையகம் - உலகம். வயம் - வீரம். உரிவை - தோல்.

## 30. திருவக்கரை

இத் தலம் வக்ராசுரன் என்பவனுல் பூசிக்கப் பட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது. வக்கரனது எலும்பைப் பெறுவதற்குக் காளியும் பூசித்திருக்கின் ருள். அவளது ஆலயம் புகழுடன் இன்றும் அங் குளது. சந்திரன், குண்டலமாமுனி ஆகிய இவ் விருவரும் இங்குப் பூசித்துள்ளனர்.

இங்குள்ள மூலத்தான இலிங்கம் மூன்று முகம் பெற்று விளங்குகிறது. ஒவ்வொரு யுகத்தின் முடிவி லும் ஒவ்வொரு முகமாகத் தோன்றி, நான்காவது யுகமாகிய கலியுகம் முடிந்ததும் நாலாவது முகத்து டன் இவ்விலங்கம் தோன்றும் என்று கூறுகின்றனர். இங்குள்ள நடராசப் பெருமான் வக்ரதாண்டவர். இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றே உளது. அது தரவு கொச்சகத்தால் ஆனது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. இப்பதிகப் பண் பஞ்சமம். இதனை இக்காலத்து ஆகிரி இராகம் என ஒருவாறு கூறலாம்.

இத்தலத்து இறைவர் சந்திரசேகரர். இதனைத் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தின் மூன்றும் பாட லில் "சந்திர சேகரனே அருளாய்" என்று குறித்துள் ளார். இறைவியார் திருப்பெயர் வடிவாம்பிகை, அமிர்தாம்பிகை என்று கூறப்பெறும்.

இத் தலத்தைக் கண்டராதித்தர் மனைவியார் செம்பொன் மாதேவியார், கருங் கல்லால் கட்டி னர் என்பர். அவ்வம்மையார் கட்டுதற்கு முன்பு இத்தலம் மரத்தாலும், செங்கற்களாலும் கட்டப்பட்ட தாகத் தெரிகிறது. இத் தலத்தின் பிராகாரத்தில் திருமால் கோயில் உளது.

இத்தலத்தை மைலம் ஸ்டேஷனில் இருந்து சென்று முருகன் தலமாகிய மைலத்தை அடைந்து

முருகனை வணங்கி, அங்கிருந்து புதுச்சேரி போகும் வழியில் நாலு கல் சென்று வானூரை அடைந்து நெமிலி வழியாக ஐந்து கல் சென்றால் அடையலாம். புதுச்சேரியிலிருந்து பதினேழு மைல் கடந்து வானூரை அடைந்து, அங்கிருந்து மேற்கே இரண்டு கல் செல்லினும் அடையலாம். விழுப்புரத்திலிருந்து பதினைந்து கல் தொலைவில் உளது. அல்லது முண்டியம்பாக்கம் இரயில் அடியிலிருந்து கிழக்கே ஒரு மைலில் உள்ள புறவார் பனங்காட்டூர்த் தலத்தைக் கண்டு வணங்கி, அங்கிருந்து கிழக்கே எட்டுக் கல் கடந்து கூனிச்சம்பட்டியையும், அங்கிருந்து வடக்கே ஒரு கல்லில் உள்ள கொடுக்கூரையும் கடந்து அரை கல் நடந்தால் இத் தலத்தை அடையலாம். புதுச்சேரிப் பாதை வழியே சென்றால் திருஅரசிலி, திருஇரும்பை மாகாளம், மைலம் ஆகிய தலங்களையும் தரிசிக்கலாம்.

திருஞானசம்பந்தர் இப் பதிகத்தில் தாம் பெற்ற இன்பத்தை மக்கள் எல்லோரும் பெறவேண்டும் என்னும் கருத்தில்,

> "வக்கரையில் உறைபவன் எங்கள்பிரான்
> ஒலியார்கழல் உள்குதுமே
> வக்கரையில், தேய்ந்திள வெண்பிறைசேர்
> சடையான் அடி செப்புதுமே"

என்று பாடி யாவரையும் அழைத்து உபதேசம் செய்துள்ளார்.

இத் தலத்தின் இயற்கை அழகைச் சம்பந்தர், 'வான் அணவும் பொழில்சூழ் திருவக்கரை" என்றும், "பிறைதோய் வண்பொழில் சூழ்ந்து அழகார் இறைவன் உறை வக்கரை' என்றும் பாடியுள்ளனர்.

---

உறைபவன் - வாழ்பவன். ஆர் - பொருந்திய. கழல் - வீரத்தண்டை அணிந்த திருவடி. உள்குவம் - நினைப்போமாக. வான்-ஆகாயத்தை, அணவும் - தொடும். பொழில் - சோலை.

இராவணனைச் சம்பந்தர் இப் பதிகத்தில் "எழில் பெற்ற இராவணன்" என்று கூறி இருப்பது புகழ்வது போல இகழ்வதாகும். எழிலாவது அழகு.

இறைவர் மன்மதனை எரித்துச் சாம்பராக்கி விட்டனர். இதனைப் பொறுக்க மாட்டாத இரதி இறைவரிடம் முறையிட்டுக் கொண்டனள். இம் முறையீட்டுக்கு உளம் இளகிய இறைவர் அவளுக்குத் திருவருள் புரிந்தனர். இதனை ஆளுடைய பிள்ளையார்,

"காமனை ஈடழித்திட் டவன்காதலி சென்றிரப்பச்
சேமமே உன்தனக் கென்றருள் செய்தவன்"

என்று பாடி உணர்த்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தம்மை "சண்பையர் தம் தலைவன் தமிழ் ஞானசம்பந்தன்" என்று கூறிக் கொள்கின்றார். இப் பதிகத்தைப் பாடுவார் பெறும் பயனைக் கூறுகையில், "பண்புனை பாடல் வல்லார் அவர்தம்வினை பற்றறுமே" என்று செப்பியுள்ளனர். சண்பையர் தம் தலைவராம் புகலி வேந்தர் பாடல், பண்ணோடு கூடியது என்னும் குறிப்பு "பண்புனை பாடல்" என்னும் தொடரில் தோன்றுதல் காண்க.

"காமனை ஈடழித் திட்டவன் காதலி சென்றிரப்பச்
சேமமே உன்தனக் கென் றருள் செய்தவன் தேவர்பிரான்
சாமவெண் தாமரைமேல் அயனும் தரணிஅளந்த
வாமன னும்அறியா வகையானிடம் வக்கரையே"

—மூன்றாவது திருமுறை.

---

எழில் - அழகு. காமன் - மன்மதன். ஈடு - வலிமை. காதலி - இரதி. இரப்ப - கணவன் உயிரைத் தர வேண்ட. சண்பை என்பது சீர்காழிக்கு மற்றொரு பெயர். பண் - இசை. புகலி வேந்தர்-சீர்காழிக்குத் தலைவராகிய திருஞானசம்பந்தர். சாமம் - சாம வேதம். அயன் - பிரமன். தரணி - உலகு. வாமனன் - குட்டை வடிவெடுத்த திருமால்.

இத் தலத்து முருகப் பெருமான் மீது அருணகிரி நாதர் பாடியுள்ள திருப்புகழ் இரண்டு. அவற்றுள் ஒன்று,

கலகலெ னச்சில கலைகள் பிதற்றுவ
தொழிவ துனைச்சிறி துரையாதே
கருவழி தத்திய மடுவ தனிற்புகு
கடுநர குக்கிடை யிடைவீழா
உலகு தணிற்பல பிறவி தரித்தற
உழல்வது விட்டினி அடிநாயேன்
உனதடி மைத்திரள் அதனினும் உள்பட
வுபய மலர்ப்பதம் அருள்வாயே
குலகிரி பொட்டெழ அலைகடல் வற்றிட
நிசிசர னைப்பொரு மயில்வீரா
குணதர வித்தக குமர புனத்திடை
குறமக ளைப்புணர் மணிமார்பா
அலைபுன லில்தவழ் வளைநில வைத்தரு
மணிதிரு வக்கரை உறைவோனே
அடியவர் இச்சையில் எவைஎவை உற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே

—திருப்புகழ்.

திருமைலம் என்பது, மைலம் இரயில் அடியிலிருந்து மூன்று கல். இது முருகன் தலம். இங்கு நடைபெறும் வழிபாட்டு (அர்ச்சனை) நடைமுறையை ஒவ்வொரு வரும் நேரில் பார்த்து மகிழ வேண்டும். இங்கு ஒவ்வொரு மந்திரமும் நிறுத்தி,

---

கலைகள் - சாத்திரங்கள். குலகிரி - மேன்மையான கலைகள். பொரு - போரிடும். மணி - அழகிய. வளை - சங்கு. உறைவோன் - வாழ்பவன். உபய மலர்ப்பதம் - மலர்போன்ற இரண்டு திருவடிகள். நிசிசரன் - அரக்கன். (இரவில் திரிபவன்) புனல் - நீர்.

திதானமாகச் சொல்லப்பட்டு முருகன் திருவடியில் மலர் இடப்படும். இவ்வாறு எந்தத் தலத்திலும் நடப்பதில்லை. இத் தலத்துப் பங்குனி உத்தரத் தேர்விழா மிக்க சிறப்புடையது. தேர் மலைமீதே ஓட்டப்படும். ஒவ்வொரு மாதக் கிருத்திகையின் மக்கள் திரள் திரளாக வந்து முருகனை வழிபடுவர்.

இங்கு ஒரு மடமும் உளது. இதற்கு இதுபோது தலைவராய் இருப்பவர், திருக்கயிலாயப் பரம்பரைப் பொம்மையபாளையம் பெரியமடம் திருமயிலம் தேவத் தான ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவம் 19ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலாயசுவாமிகள் ஆவார்.

மயிலம் முருகன்மீது அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் ஒன்றே உளது.

" கொலைகொண்ட போர்விழி கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ எனுமானார்
குயில்தங்கு மாமொழி யாலே நேரே
யிழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நாண விதமாகி
உலைகொண்ட மாமெழு காயே மோகா
யலையம்பு ராசியி னூடே மூழ்கா
உடல்பஞ்ச பாதக மாயா நோயால் அழிவேனோ
உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடு நாள்நீ மீதாள் அருள்வாயே

---

குழை - காது அணி. மானார் - பெண்கள். அம்புராசி - கடல். மூழ்கா - மூழ்கி. பஞ்சபாதகங்கள் - கொலை, பொய், களவு, கள்ளுண், குருநிந்தை, காமம். நமனார்-யமதூதர்கள்.

அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
என நின்று வாய்விட வேநீள் மாசூர்
அணியஞ்ச ராசனம் வேறாய் நீறாய் இடவேதான்
அவிர்கின்ற சோதிய வாராள் நீள்சீர்
அனல்அங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி
மலைகொண்ட வேடுவர் கானூ டேபோய்
நூறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாய்அவள் தாள்மீ தேவீழ் குமரேசா
மதிமிஞ்சு போதக மேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே.

—திருப்புகழ்.

---

## 31. திருஅரசிலி

இத்தலம் இதுபோது ஒழிந்தியாப்பட்டு என்று வழங்கப்படுகிறது. இறைவர் அரசமரத்தையே தமக்கு இல்லமாகக் கொண்டு வாழ்வதனால் இஃது அரசிலி என்று பெயர்பெற்றது. இது வாமன தேவர் பூசித்த தலம்.

இத் தலத்து இறைவர் அரசிலி நாதர், ஆலால சுந்தரர் என்றும், இறைவியார் பெரிய நாயகி என்றும் அழைக்கப் பெறுவர். இங்குள்ள தீர்த்தம் அரசடி தீர்த்தம். இங்குள்ள குளம் பெரியது. இத்தலத்தைப் புதுச்சேரியிலிருந்து வடகிழக்கே ஐந்து கல் சென்று திருஇரும்பை மாகாளத்தை அடைந்து, அங்கிருந்து

---

வாரிதி - கடல். சூரன் - சூரபத்மன். சராசனம் - வில்லுகள். அருமந்த - அருமையான. மாலாயே - மதிமயங்கி.

வடமேற்கே இரண்டு கல் சென்றால் அடையலாம். பஸ் போக்கு வரவு உண்டு.

இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் நாம் அறிவன: ஆலாலசுந்தரனார், திருஅரசிலி உடையார் என்னும் பெயர்களும் இத்தலத்துப் பெருமானுக்கு உண்டு என்பது கல்வெட்டால் அறியப்படுகிறது. அரசிலி ஓய்மா நாட்டைச் சார்ந்தது. ஓய்மா நாட்டின் தலைவன் நல்லியக் கோடன். இவனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற் றுப் படையுள் பாடியுள்ளனர். இவன் பெரிய வள்ளல்.

இத்தலத்துக்குரிய பதிகம் ஒன்றே. அது திரு ஞானசம்பந்தரால் பாடப்பட்டது. இஃது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இதன் இலக்கணம் முன்பே கூறப்பட்டது. இதன் பண் பியந்தைக் காந்தாரம். இதனை இக்காலத்துச் சங்கராபரணத்தின் ஜன்னிய ராகமான நவரோசு அம்சத்தைச் சார்ந்தது என்பர்.

இப்பதிகத்தில் இறைவரது பண்பைப் புகலும் போது, "சங்கையாய்த் திரியாமே தன் அடியார்க்கருள் செய்து, அங்கையால் அனல் ஏந்தும் அடிகள்" என்றும், "வான் அஞ்சும்பெருவிடத்தை உண்டவன்" என்றும்,

> "கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
> அரிய ஆர்அமு தாக்கும் அடிகள்"

> "பொன்னடி வணங்கும் அருளை ஆர்தர நல்கும் அடிகள்"

என்றும் புகழ்ந்துள்ளார். அரசிலி "அல்லி நீள்வயல் சூழ்ந்த அரசிலி" எனப் புகழப்பட்டுள்ளது.

---

சங்கையாய் - சந்தேகமாக. அங்கை - அழகிய உள்ளங்கை (அகம் - கை) அடிகள் - இறைவர். வான் - வானவர் (தேவர்). நஞ்சு - விடம். அல்லி - அல்லிமலர்.

திருஞானசம்பந்தர் இங்குத் தம்மை நல்ல ஞான சம்பந்தன் என்றும், இப்பதிகத்தை நற்றமிழ்பத்து என்றும் கூறிக் கொள்கின்றார். இப் பதிகத்தை ஓதுபவர்கள் பெறும் பேற்றைக் கூறும்போது,

"சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தமரர் தொழு தேத்த
வல்ல வானுல கெய்தி வைகலும் மகிழ்ந்திருப் பாரே"

என்று பாடியுள்ளார்.

இப்பதிகத்தில் உபதேச அமைப்பில் இருப்பது,

"குருளை எய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளைக் கையில் உண் பவரும் தேரரும் சொல்லிய தேறேல்"

என்பதாகும்.

"வண்ணமால்வரை தன்னை மறித்திடல் உற்றவல் அரக்கன்
கண்ணும் தோளும்நல் வாயும் நெரிதரக் கால்விரல் ஊன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பால் பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாய்அருள் செய்த அடிகளுக் கிடம்அர சிலியே"

—இரண்டாம் திருமுறை.

---

அமரர்-தேவர். ஏத்த-போற்ற. வைகலும் நாள்தோறும். குருளை - இளமை. குஞ்சியை - தலைமயிரை. திரள் - சோற்றுருண்டை. கையில் உண்பவர் - சமணர்கள். தேரர் - பௌத்தர். தேறேல் - மொழிகளைக் கேட்டுத் தெளிவுறாதீர். வண்ணம் - அழகிய. மால் - பெரிய. வரை - கைலை மலை. மறித்திடல் - அசைத்திடல். அரக்கன் - இராவணன். அண்ணலாய் - பெருமையில் சிறந்தவனாய்.

# 32. திருஇரும்பைமாகாளம்

இத் தலம் இரும்பை என்றும் கூறப்பெறும். இரும்பை என்பது ஊரின் பெயர். மாகளம் என்பது கோயிலின் பெயர். ஆகவே இஃது இரும்பைமாகாளம் என்னும் பெயரைப் பெற்றது. மாகாளர் பூசித்த காரணத்தால் கோயில் மாகாளம் எனப்பட்டது. கோயில்முன் பெரிய இலுப்பைத் தோப்பு உளது. மூலத்தானத்தின் பின் முருகர் கோயில் இருக்கிறது. ஊர் சிறியது. இத்தலத்து இறைவர் மாகாளேசுவரர் என்றும், தேவியார் குயில்மொழி அம்மை என்றும் அழைக்கப் பெறுவர். இங்குள்ள தீர்த்தம் மாகாள தீர்த்தம்.

கல்வெட்டு மூலம் அறிவன: இறைவர் திருமாகாளம் உடைய நாயனர் திருஇரும்பை யுடையார் எனப் பொறித்துள்ளனர். இக்கோயிலுக்கும் அரசிலி கோயிலுக்கும் விக்கரம பாண்டியன் நிலம் விட்டுள்ளனன். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் இருஞ்சேரி அழகிய மணவாளர் பெருமாள் இத் திருக்கோயிலைக் கல் கோயில் ஆக்கினர்.

இத் தலம் புதுச்சேரியிலிருந்து வடகிழக்கே ஐந்து கல் தொலைவில் உளது.

இத் தலத்தைப் பற்றிய பதிகம் ஒன்றே உளது. அப் பதிகத்தைப் பாடியவர் திருஞானசம்பந்தர். இது தரவு கொச்சகயாப்பால் ஆனது. இதன் பண் செவ்வழி. இஃது இக்காலத்து யதுகுலகாம்போதி போன்றது என்பர். சமணர் பவுத்தர்களைப் பற்றிய குறிப்பு இப் பதிகத்தில் இல்லை.

இத் தலத்தின் சிறப்பு,

"எண்திசையும் புகழ்போய் விளங்கும் இரும்பை"

"ஏதவித்தா யின தீர்க் கும்இடம் இரும்பை"

"மா தவத்தோர் மறையோர் தொழநின்ற மாகாளம்"

---

எண் திசை - எட்டுத் திசை. ஏதவித்து - துன்ப விதை. மா - சிறந்த. மறையோர் - வேதம் வல்ல பிராமணர்கள்.

"எஞ்சல்இல்லாப் புகழ்போய் விளங்கும் இரும்பை"
"மாசிலோர்கள் மலர்கொண் டணிகின்ற மாகாளம்"
"மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளம்"
"வட்டம்சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கும் மாகாளம்"
"மருவி வானோர் மறையோர் தொழுகின்ற மாகாளம்"

என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

இத் தலத்து இயற்கை எழில்,

"வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளம்"
"எழில்கொள் சோலை இரும்பைதனுள்"
"கந்தமாய பலவின்கனிகள் கமழும் பொழில்"
"மந்திஏறிக் கொணர்ந்துண் டுகள்கின்ற மாகாளம்"
"மஞ்சில்ஓங்கும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளம்"
"மங்குல்தோயும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளம்"
"மட்டுஆர்ந்த பொழில்சூழ்ந் தெழில் ஆரும் மாகாளம்"
"குரவம்ஆரும் பொழில்குயில்கள் சேரும் இரும்பை"
"எழில்கொள் சோலை இரும்பை"
"மந்தமாய பொழில்சூழ்ந் தழகாரும் மாகாளம்"

என்று பாடப்பட்டுள்ளது.

இறைவனது தன்மை "வினை பறைவதாக்கும் பரமன்" எனப்பட்டுள்ளது. பறைவதாக்குவது என்பதன் பொருள், நீக்குவது என்பது.

"வெந்தநீறும் எலும்பும் அணிந்த விடைஊர்தியான்
எந்தைபெம்மான் இடம்எழில் கொள்சோலை இரும்பைதனுள்
கந்தமாய பலவின் கனிகள் கமழும்பொழில்
மந்திஏறிக் கொணர்ந்துண் டுகள்கின்ற மாகாளமே"

—இரண்டாம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

---

எஞ்சல்-குறைவு. மாசு-குற்றம். பிணி-நோய். மருவி-ஒன்று சேர்ந்து. வானோர் - தேவர். முரல் - ஒலிக்கின்ற. பொழில் - சோலை. சுலாய் - சூழ்ந்து. எழில் - அழகு கந்தம் - வாசனை. மந்தி - பெண் குரங்கு உகள்கின்ற துள்ளுகின்ற. நீறு - சாம்பல், விடை - இரடபம், ஊர்தியான் ஏறி நடத்துபவன்.

# இந்நூலாசிரியர் எழுதியுள்ள நூல்களுள் சில

1. நால்வர் கூறிய நல்லுபதேசங்கள்
2. திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி உரையும் கட்டுரைகளும்
3. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் விரிவுரையும் கட்டுரைகளும்
4. தமிழ் மந்திர உரையும் கட்டுரைகளும்
5. திரு ஈங்கோய்மலை எழுபது உரையும் கட்டுரைகளும்
6. திருவருள் முறையீடு உரை
7. வடிவுடை மாணிக்க மாலை உரை
8. இங்கித மாலை உரை
9. தமிழ் இலக்கிய அகராதி
10. தமிழ் நூல் வரலாறு
11. பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற சிவ தலங்கள்
12. கந்தர்சஷ்டி சொற்பொழிவுகள்
13. பொய்யடிமை இல்லாத புலவர் யார்?
14. திருமணம்
15. மாண்புடைய மங்கையர்
16. கவிச் சுவையும் நகைச் சுவையும்
17. திருக்குறள்—அறத்துப்பால் வசனம்
18. திருவள்ளுவர் கண்ட நாடு
19. கட்டுரைக் கதம்பம்
20. கட்டுரைக் கொத்து
21. தமிழ்ப் புதையல்
22. மாணவர் தமிழ்க் கட்டுரை
23. கல்லூரி மாணவர் தமிழ் இலக்கண விளக்கம்
24. தமிழர் போர்முறை
25. சங்கச் சான்றோர்
26. சீவகன் வரலாறு
27. கவிபாடிய காவலர்
28. ஜான்சன் வாழ்க்கை வரலாறு
29. தொழிலும் புலமையும்
30. இலக்கியத் தூதர்கள்

கையெழுத்துப் பிரதிகளாக உள்ளவை.

1. திருமால் கோவில் திறவுகோல்
2. பெரிய புராணப் பாயிர விருத்தி

Jacket Printed at Neo Art Press, Madras - 2